# THE BOOK WAS DRENCHED

UNIVERSAL
LIBRARY
OU_208081
UNIVERSAL
LIBRARY

OUP—67—11-1-68—5,000

**OSMANIA UNIVERSITY LIBRARY**

Call No. Tm 894.8111/G785 Accession No. PG Tm 1344

Author Govindhan, K

Title Sanga tamil pulavar varisai.

1954

This book should be returned on or before the date last marked below

கழக வெளியீடு: எஉஙூ

# சங்கத் தமிழ்ப்புலவர் வரிசை

## பகுதி - கூ



புலவர், கா. கோவிந்தன், எம்.ஏ.
எழுதியது



திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: August, 1954.

# Sangath Thamizh Pulavar Varisai

## Part - VI

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., 1/140, BROADWAY, MADRAS-1.

*Head Office:*

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras - 1.—C. 620.

# பதிப்புரை



அறம இதுவென உலகுக்கே உணர்த்தியவர் தமிழா, அவரிற் சிறநதோர் சங்ககாலப் புலவர் பெரு மகக்ள். இவர்கள் பாக்கள் நெஞ்சை அள்ளும் சிறப் புடையன; அறிவுக்கு நுணுக்கம் வழஙகும் கொடைமை யுடையன, மடமையை ஒழிக்கும் வன்மையுடைடன; மெல்லிய இனிய மேவரு தகுநவாகச செப்பமபெற இலகுந்தன்மையன

இததகைப் புலவா பெருமக்களுள **தட்டுவன்** கண்ணனர் முதல், **பெருமருதன்** இளநாகனர் ஈறக எண்பதின்மரும், **பேயனர்** முதல், **வேளாதத்தர்** ஈறக முப்பத்தொன்பதின்மரும் **ஆக** நூற்றுப்பத்தொணப தின்மர் வரலாறுகள் இதில் அடஙகியுள்ளன.

இவைகளையும தம் அரிய ஆன்ற புலமை வலலல **புலவர் திரு. கா கோவிந்தன்** அவாகள வரைநதுதவி யுள்ளாராகள் இவைகளை நூலுருவாக்கிச சஙகத் தமிழப் புலவா வரிசையில் **ஈறும்** தொகுதியாக வெளியிட் டுள்ளோம்.

செநதமிழநாட்டுச செல்வரும் அறிஞரும் மாண வரும் ஆசிரியாகளும் இதனையும் இரிதோடு தொடாநது வரும் ஏனைய சங்கத தமிழப்புலவர் வரிசை நூல்களை யும் வாஙகிககற்று அறிவும் திருவும் அடைவாராகளென நம்புகின்றோம்.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# உள்ளுறை



பக்கம்

க. குட்டுவன் கண்ணனார்
முதலிய அ0 புலவர்கள் 1—164

உ. பேயனார் முதலிய
கூக புலவர்கள் 1—144

# குட்டுவன் கண்ணனார்

- முதலிய 40 புலவர்கள் -



ஆசிரியர்:

புலவர், கா. கோவிந்தன், எம். ஏ.

தமிழக வெளியீடு: எசசு

சங்கத் தமிழ்ப்புலவர் வரிசை - கரு

# குட்டுவன் கண்ணனார்
## முதலிய அம புலவர்கள்

புலவர், கா. கோவிந்தன், எம். ஏ.,
எழுதியது

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Aug., 1954.

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.
1/140, BROADWAY, MADRAS-1

*Head Office*:

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1—C. 1250

# பதிப்புரை



காலம் இடையீடில்லா நுணபொருள. அது, நல்லன அல்லன யாவும் செயயவல்லது ; நல்லன செய்தது பழையதான சஙககாலம் ; அக்காலநதந்த நறுமணமலர்கள் பல , அம்மலாகளே சஙககாலதிய பொஙகருட் புலமையாளா.

இவர்கள் செவவிய சிரிய கூரிய சிஞசொல் வளன் நிறைந்த செநதமிழச செயயுளாம சிகதேன தந்து அறிவுப்பசியாற்றிய அருந்திறலினராவர்

இப்பெரியாா வரிசைகளுள், **'தூட்டுவன் கணணனார்'** முதலவராக **'பெருமருதன் இளநாகனார்'** ாற்றினராக எணபதின்மராவா. இவாதம வரலாறு கூறும தூலுக குக குட்டுவன் கணணனா எனப் பெயா சூட்டிச சஙக காலப் புலவாகள் வரிசையில கரு ஆவதாக வெளியிட் டுள்ளோம். இதனை அவாகளின பாவின் நய ஆயவோடு கெழும ஆக்கிதநதவா **திரு. புலவர், கா. கோவிநதன்** அவர்கள்.

தமிழக நன் மாநதாகள இதனையும், இதறகுத் தொடாநது வெளிவரும் எனைய சஙகத தமிழப் புலவா வரிசை நூல்களையும் வாஙகிக் கறறு அறிவுத்துறையாம பணணப்பணைத்த பெருஞ் செலவதனைப் பெற்று இன் புறுவார்களென நம்புகினறோம்

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | தோற்றுவாய் | 1 |
| க. | குட்டுவன் கண்ணனூர் | 3 |
| உ. | குட்டுவன் கீரனூர் | 5 |
| ங. | குடபுலவியனூர் | 7 |
| ச. | குன்றுகண் பாலியாதனூர் | 13 |
| ஞ. | குழற்றத்தனூர் | 17 |
| சு. | குளம்பந்தாயனூர் | 18 |
| ள. | குறுங் கீரனூர் | 19 |
| அ. | குன்றம் பூதனூர் | 21 |
| கூ. | குன்றியனூர் | 26 |
| க0. | கூற்றங் குமரனூர் | 30 |
| கக. | கேசவனூர் | 32 |
| கஉ. | கொல்லன் அழிசி | 34 |
| கங. | கொல்லிக் கண்ணன் | 37 |
| கச. | கொள்ளம்பக்கனூர் | 39 |
| கஞ. | கொற்றனூர் | 41 |
| கசு. | கோண்மா நெடுங்கோட்டனூர் | 45 |
| கள. | கோவதத்தனூர் | 46 |
| கஅ. | கோவேங்கைப் பெருங்கதழ்வர் | 48 |
| கங. | கோழிக் கொற்றனூர் | 50 |
| உ0. | சங்கவருணரென்னும் நாகரையர் | 52 |
| உக. | சத்திநாதனூர் | 54 |
| உஉ. | சாகலாசனூர் | 56 |
| உங. | சாத்தந்தையார் | 58 |
| உச. | சாத்தன் | 63 |
| உஞ. | சிறு மோலிகனூர் | 65 |

| | | பக்கம் |
|---|---|---|
| உசு. | கள்ளம் போதனார் | 66 |
| உஎ | செங்கண்ணனார் | 67 |
| உஅ. | செம்பியனார் | 70 |
| உகூ. | சேந்தன் கண்ணனார் | 72 |
| ஙஐ. | சேந்தன் கீரனார் | 74 |
| ஙக. | தத்தங் கண்ணனார் | 75 |
| ஙஉ. | திருத்தாமனார் | 76 |
| ஙஙி. | தீன்மிதி நாகனார் | 79 |
| ஙச. | துறைக்குறுமாவிற் பாலங்கொற்றனார் | 81 |
| ஙஞ. | தூங்கலோரியார் | 83 |
| ஙசு. | தேவனார் | 87 |
| ஙஎ. | தேவகுலத்தார் | 90 |
| ஙஅ. | தொல்கபிலர் | 91 |
| ஙகூ. | நப்பண்ணனார் | 95 |
| சஐ. | நப்பாலத்தனார் | 98 |
| சக. | நரைமுடி நெட்டையார் | 99 |
| சஉ. | நல்லச்சுதனார் | 102 |
| சஙி. | நல்லழிசியார் | 104 |
| சச. | நல்லிறையனார் | 106 |
| சஞ. | நல்லெழுனியார் | 107 |
| சசு. | நல்வெள்ளியார் | 108 |
| சஎ. | நற்றங் கொற்றனார் | 109 |
| சஅ. | நற்றமனார் | 111 |
| சகூ. | நாகம்போத்தனார் | 112 |
| ஞஐ. | நாமலார் மகன் இளங்கண்ணன் | 113 |
| ஞக. | நெடும்பல்லியத்தை | 114 |
| ஞஉ. | நெய்தற் கார்க்கியன் | 116 |
| ஞஙி. | பக்குடுக்கை நன்கணியார் | 117 |

| | | பக்கம் |
|---|---|---|
| நிச. | படைமங்க மன்னியார் | 120 |
| நிநி | பதுமனார் | 121 |
| நிசு. | பராயனார் | 122 |
| நிள | பறநாட்டுப் பெருங்கொற்றனார் | 123 |
| நிஅ | பனம்பாரனார் | 124 |
| நிகூ. | பண்டரங்கண்ணனார் | 125 |
| சுo. | பார்காப்பான் | 127 |
| சுக. | பாலாசிரியர் நப்பாலனார் | 128 |
| சுஉ. | பாலாசிரியர் நற்றமனார் | 129 |
| சுஙூ. | பாலைக் கொட்டிலார் | 130 |
| சுச. | பிரமசாரி | 132 |
| சுநி. | பிரமனார் | 133 |
| சுசு. | பிரான் சாத்தனார் | 135 |
| சுள. | புல்லங் கண்ணனார் | 136 |
| சுஅ. | புறத்திணை நன்னாகனார் | 137 |
| சுகூ. | பூங்கண்ணன் | 145 |
| எo. | பூதங்கண்ணனார் | 147 |
| எக. | பூதனார் | 149 |
| எஉ. | பூதன் இளநாகனார் | 150 |
| எஙூ. | பூதன் தேவனார் | 151 |
| எச. | பூவண்டல் நாகன் வேட்டனார் | 154 |
| எநி. | பெருங்கண்ணனார் | 155 |
| எசு. | பெருஞ்சாத்தனார் | 157 |
| எள. | பெருந்தேவனார் | 158 |
| எஅ | பெரும்பதுமனார் | 159 |
| எகூ. | பெருமருதனார் | 162 |
| அo. | பெருமருதன் இளநாகனார் | 163 |

# குட்டுவன் கண்ணனார்



## தோற்றுவாய்

தமிழ், உலக மொழிகள அனைதினும், உயர்தனிச் செம்மொழியாம சிறபபினைப் பெறற சிரிய மொழியாம. மக்கள், தம் உளளம உணர்நத ஒரு பொருளைத தாம் உணாநதவாறே பிறரும் உணரும் வகை உணாத்த மேற் கொணட பலவேறு வழிகளுள், மொழியும ஒனறும்; இன்று மக்கள வழஙகும மொழி, இன்றுள்ள நிலையினை, அது தோனறிய காலததிலேயே பெறறுவிடவில்லை, இந நிலை உறுதற்கு முன்னா அஃது அடைநத மாறுதல்கள், அமமம்ம! சொலலி முடியாது.

மக்கள் வாழ்வின் பண்பாட்டிற் கேற்பவே, அம் மக்கள் வழங்கும மொழியும் பண்பாடுற்று விளஙகும்; மக்கள் இன்று பெற்றுள இநநாகரிக நிலையினை, அவர் தோன்றிய அக்காலததிலேயே பெறறிருநதாரல்லர். உண வைத் தேடவேணடும், அதை அறுசுவையுடையதாக ஆக்க வேண்டும் என்ற அறிவினை அவாகள் அன்று பெற்றிருநதா ரல்லா; கிடைதத காயையும், கிழங்கையும், கனியையும், காட்டு விலங்குகளின் இறைச்சியையும தின்று காலங் கழிக்கவே கறறிருந்தனா; அழகிய மெல்லிய ஆடைகளை இன்று அணியும் இவாகள், அன்று ஆடை கட்டவேண்டும் எனும அறிவுதானும் பெற்றிருந்தாரல்லர்; இன்று அடுக் கிய மாடிகளில் மகிழ்ந்துறையும் மக்கள், அன்று, மரஙகளை யும், மலைக்குகைகளையுமே தம் வாழ்விடமாக வகுதது கொண்டிருந்தனர்.

இவ்வாறு, இன்றுள்ள நிலைக்கும், அன்றிருந்த நிலைக்கும் இடையே மக்கள வாழ்வில எத்தனை வேறுபாடுண்டோ, அத்தனை வேறுபாடு அன்று அவர்கள் வழங்கிய மொழிகளும், இன்று வழங்கும மொழிகளும இடையில் உண்டாம. அன்று வழங்கிய மொழி, தன திருந்தாநிலை ஒழிதது, இன்றுள்ள இசசீரிய செம்மை நிலையினை பெறுதறகு, அது எத்தனையோ நூற்றாண்டுகளைக் கடநது வந்துள்ளது. இவவாறு பன்னிரண்டு காலம கழிதலே பெறலாகும அபபண்பாட்டினை, தமிழ்மொழி, இன்று நேற்றுப் பெற்றுவிடவில்லை. இன்று நாகரிகத்தின் பிறப்பிடமாம் எனப போறறப்பெறும நாட்டினெலலாம காட்டுமிராண்டி வாழவினராய் வாழ்நத அக்காலததிலேயே பெற்றுவிட்டது எனின் தமிழ்மொழியின் பழமையும, பெருமையுமதான் என்னே!

இவ்வாறு சிறப்பளிக்கும் செந்தமிழ்மொழிகுச் சிறப்பளிதது நிற்கும நூல்களாய பததுபபாட்டு, எடுதத தொகை முதலாம பழநதமிழ் நூலகளைப படிதது பயனுறல் மக்கள கடன் என அறிநது, அநநூலை ஆக்கிததந்த ஆசிரியப் பெருமக்களின் வரலாற்றினை விரித்துரைக்கத தொடஙகிய தொண்டில், இநநூல் பதினெநதாவதாம இதற்குமுன், காரிலர், பரணர, நகநீர், ஔவையார, பொன் பாற்புலவர்கள், உலையாற் பெயர் பெறறோர், காவல பாலர்கள், கிழார்ப்பெயர் பெறறோர், வினைகிற புலவாகள, மாநகாப் புலவாகள 1, 2, 3; உறுப்பாலும் சிறப்பாலும பெயர பெற்றோர், அதியன் விண்ணத்தனர எனற பல்வேறு தலைப்பினகீழப் பல புலவர்களின் வரலாறு விரிதது உரைக்கபபட்டுள்ளன; இந்நூற்கண், குட்டுவன் கண்ணனார முதல்வராக எண்பதின்மர வரலாறு விளக்க முனவந்து, முதலில நிறகும் அக்குட்டுவன் கண்ணனார் பெயரையே நூறபெயராக அமைத்துள்ளோம்.

## க. குட்டுவன் கண்ணனார்

குட்டுவன் என்பது, சேரர் குடிப்பெயர்களுள் ஒன்று; தம் நாட்டின் ஒரு பகுதியாய குட்ட நாட்டிலும் தம் கோலோச்ச ஆளும் சிறப்பால், சேரர், குட்டுவர் என அழைக்கப் பெறுவர் சேர ஆணவரும அப்பெயரால் அழைக்கப் பெறுதலோடு, அப்பெயரைத் தம் பெயரோடு சேர்த்து வழங்கிச் சிறப்புறுதலும் உண்டு. குட்டுவன் கோதை, சேரன செங்குட்டுவன, பல்யாணை செல்கெழு குட்டுவன் என்பார் பெயர்களை நோக்குக குட்டநாடு, கொங்குதமிழ்நாட்டைச் சேர்ந்த பணிரு நாடுகளுள ஒன்று; மேலைக் கடற்கரையினைச சார்ந்து கின்ற அந்நாட்டார், தாயைத் தளைவ எனப் பெயரிட்டு அழைப்பர் என உரையாசிரியர்களால் உணர்கிறோம அந்நாட்டிற பிறந்தமையாலோ அன்றி, அந்நாடாளும் உரிமையுரிமையாய சேரர் குடியில் வந்தமையாலோ, அன்றி, அந்நாடடினின்றும் போந்தார் குடியிற் பிறந்தமையாலோ, கண்ணனார் எனும் இயற்பெயர உடையராய நமபுலவர், குட்டுவன கண்ணனார் என அழைக்கபபெறலானார் புலவர பாடிய பாட்டாகக், குறுந்தொகைக்கண ஒரு செய்யுள காணபபடுகிறது.

மக்கள அணுகலாகா அருவலை உளிடத்தைத் தேனிறால் தொங்கும் அத்தேனிறால் கிழிந்து பாழ்படுமாறு உயர்ந்து வளரும மூங்கில், அம்மூங்கில அழியுமாறு, அதன முளை பிணைத் தின்று உயிர்வாழும் யானை, யானையால் பாழான மூங்கிற் காடுகளுக்கிடையே அமைந்த கிடக்கும கானவர் தம் சிற்றூர் எனக் காட்டின இயற்கை வளத்தையும், கானவர்க்குரிய அக்காட்டில பிற நிலத்தார் வந்து வேட்டை யாடலும் உண்டு. அவ்வாறு வேட்டம புரிந்தார, உடன் வரும நாயும் தாமும் இளைத்த நிலையில, வேற்று நிலத்தினின்றும் வந்து வேட்டம் புரிந்தனரே என அவர்மீது சினம கொளல் ஒழிந்து, அவரை அணுகி "ஐய! வந்த தும் தொழில் முடிந்துவிட்டதாயினும், நீவிரும இளைத்தைக் காணுகின்றீர்: தும் பின்வரும் நாய்களும் இளைத்துவிட்

டன; பொழுதும் போய்விட்டது; ஆகவே, இன்று நும் ஊர் செல்வதொழிந்து, எம் ஊரில் தங்கிச் செல்வீராக!" என்று வேண்டி நிற்கும் அன்புடையராவர் அக்கானக நாட்டார் எனக் கானவர்தம் வாழ்வியலையும் வனப்புறக் காட்டும் பாட்டொன்று புலவர்க்குப் பெருமையளித்துத் திகழ்கிறது.

"கல்லென் கானத்துக் கடமா ஆட்டி,
எல்லும் எல்லின்று; ஞமலியும் இளைத்தன;
செல்லல்; ஐய! உது எம்ஊரே;
ஓங்குவரை அடுகைத்துத் தீந்தேன் இழிதரு
குவையுடைப் பசுங்கழை தின்ற கயவாய்ப்
பேதை யானை சுவைத்த
கூழை மூங்கில் குவட்டிடை யதுவே." (குறுந்: 64)

## உ. குட்டுவன் கீரனார்

குட்ட நாடோடு தொடர்புடைய புலவர்களுள் கீரனாரும் ஒருவராவர்; "அறவிலை வணிகன் அல்லன" எனப் பாராட்டப் பெறும் பெருமை வாய்ந்த ஆய் அண்டிரன் இறந்தமை அறிந்து இரங்கிப் பாடிய இவர் பாட்டு ஒன்று புறத்தில் இடம் பெற்றுளது. தமிழக மலைகளுள் தலைசிறந்த பொதியமலையினை இடையிற்கொண்டு, சேரர் குட்ட நாட்டிற்கும், பாண்டியர் தென்பாண்டி நாட்டிற்கும் இடைப்பட்ட ஆய்நாட்டினை ஆண்டோன் ஆய் அண்டிரன்; ஆய், அமர் கடந்து சிறக்கும் ஆண்மையாளன்; தமிழகத்தே புகுந்து பெருந்தொலைவு விளைத்து வந்த கொங்கர் என்ற நாடோடிப் போர்வீரர் கூட்டத்தை மேலைக் கடற்கரை வரை துரத்திச்சென்று வென்ற அவன் வில்லாண்மையினை வியந்து பாராட்டியுளளனர் புலவர். நாகம் ஒன்று தனக்கு அளித்த நல்லாடையினை ஆலமா நீலகண்டனுக்குத் தான் அளித்தது மகிழ்ந்தான் என்ற வரலாறு அவன் வள்ளன்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு. தன்பால் வந்து இரப்பார்க்கு, அவர் தகுதி நோக்காமே, களிறும் தேரும் கணக்கின்றி ஈவன அவன் கொடைப்பொருள்களுள் யானையையே மிகுதியாகக் காணும் புலவர், "ஆய்! நின் நாட்டு யானைகள், ஒருமுறை கருவுறுமுன, பதுக்கன்று களைப் பெற்றுத் தருமோ?" என வினவி வியந்து பாராட்டுவர். இவ்வாறு பாடிய புலவர் பல்லோருள்ளும், இவ்வாறு பல்லாற்றானும் பாராட்டிப் பாடிய புலவர், உறையூர் ஏணிச்சேரி முடமோசியாராவர், மோசி பாடிய பெருமையுடையவன் ஆய் என்பதை "மோசி பாடிய ஆய்" என அவனுக்குச் சிறப்பளித்துப் பாராட்டினர் பிற புலவர்களும்.

பெருங்கொடையும், அருந்திறலும் உடையானைய ஆய் இறந்துவிட்டானெனக் குறித்து அழுது பாடிய புலவர் நம் குட்டுவன் கீரனார், ஆய் நாட்டிற்கு அண்மை நாடாகிய

குட்ட நாட்டினராய நம் புலவர், பாடி வருவார்க்குப் பரிசிற் பொருளகளாகக் களிறும, தேரும, புரவியும அளிப்ப தோடு, நாடும, ஊரும நலகும் ஆயின் கொடைக் குணத் தைக் காட்டியும், அவ்ள இறந்ததோடு, அவனைப் பிரிந்து வாழ எண்ணுது அவனோடு உயிர் நீதத அவன் உரிமை மகளிரும் இறந்தமையினைக் கண்டும, ஆய் அளிததன பெறறு அக மகிழ்ந்து வாழ்ந்த இரவலர், அவன் இறந்தா னெகத, தமமைப பேணுவாரைப் பெறாராகி, வறுமை வாட்ட, வேற்றுப் புல நாடிச்செல்லும் கொடுமையினைக் கண்டும் கணணீர்விட்டுக் கசிந்து உருகிப் பாடியுள்ளார்.

"ஆடுநடைப் புரவியும் . களிறும், தேரும்,
வாடா யாணா நாடும, ஊரும்
பாடுநாக்கு அருகா ஆய அண்டிரன்
கோடேந்து அல்குல் குறுந்தொடி மகளிரொடு
காலன் என்னும் கணணிலி உயப்ப
மேலோர் உலகம் எய்தினன் .. . ...
.. ..... . ... ..... . .. .. .. ..... .
புல்லென் கணணர் புரவலாக காணுது
கல்லென சுறறமொடு கைஅழிந்து புலவர்,
வாடிய பசியராகிப் பிறா
நாடுபடு செலவினராயினா இனியே" (புறம் : உகம)

## ங. குடபுலவியனார்

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலங்களுள், குட்ட நாட்டை அடுத்து வழங்கப்பெறும் நாடு குடநாடு, குட நாடு, குடபுலம எனவும் வழங்கப்பெறும், குடநாட்டிற் குரியராய சேரவேந்தர், "குடவர் கோவே" எனவும், "குடபுலம காவலர்" எனவும, நூல்களான் அழைக்கப் பெறுதல் காண்க குடபுலம என வழங்கபபெறும் குட நாட்டகததே பிறந்தமையான, புலவர குடபுலவியனார் என அழைக்கப்பெற்றுளார, இனி, புலவியன் என்பது இவரது இயறபெயர; குடநாட்டவராதலால், குடபுலவிய னார் எனபபடடார, புலவியன் என்ற சொல், விரிநத அறிவுடையவன் எனப் பொருள்படவரும் தமிழச்சொல; இதைப் புலததியன் என்னும வடசொற்றிரிபு எனல் மடமை எனக் கூறுவாருமுளர், குடபுலததே பிறந்தமை யான, குடபுலவியனார எனப்பட்டார என இயலபாகக் கொள்வதைவிடதது, மேற்கூறியவாறு கொணடு இடரப் படுவது அததனமை பொருதமுடைததன்று, குடபுலவிய னார பாடிய பாக்கள் இரண்டு புறநானூறறின்கண் இடம பெற்றுள்ளன, அவை இரண்டும, தலையாலங்கானத்துச் செருவெனற நெடுஞசெழியன் புகழ்பாடவே வந்துள்ளன; அவறறுள ஒன்று, அவன் பேராண்மையினை பாராட்டுவ தோடு, புலவாதம் போர்க்களம பாடவல்ல பெருமை யினையும புலப்படுததுகிறது, ஏனையது, அவனுக்கு அரிய ஓர் அறவுரையினை அறிவுறுபபதோடு, புலவாதம உழவின் உயாவு உணர் அறிவினையும உணர்த்தி நிற்கிறது

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், சஙககாலப் பாண்டிய மன்னாகளுள் தலைசிறந்தோனவன்; புலவர் பலரின் பாராட்டைப்பெற்றவன் இவன், அவவாறு பாராட்டப்பெறுதற்குக் காரணமாயது, இவன் தலையாலங் கானம எனும இடத்தே பெற்ற பெரு வெற்றியேயாம்; நெடுஞ்செழியன் அரசுகட்டில் ஏறுங்கால் நனிமிக இளைய

னவன்; அக்காலைப் பாண்டிநாடு, பொதியமலை வளமும், கொற்கைத்துறை முத்தும்பெற்று, பெருஞ் செல்வத்தால் சிறப்புற்று விளங்கிற்று; இதைக் கண்ணுற்றனர் அவன் பகைவர்கள்; யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும் பொறையும், ஒருசோழனும், திதியன், எழினி, எருமை யூரன், இருங்கோவேண்மான், பொருநன் ஆய குறுநிலத் தலைவாகளும் இவன் பகைவராயினர், இவர்கள எழுவரும, "செழியனே கடிதிளையன், அவனை வென்று பெறும பொருளோ மிகப்பல" என்று எண்ணி, அனைவரும் ஒன்றுகூடி, செழியனை எதிர்த்தனர், செழியன் இளஞனே னினும, ஈடிலாத திறனுடையனகலின், தனவாயில் வந்தெதிர்த்த அவாகளோடு அருமபோா ஆற்றினன்; இவன் போவன்மைககு ஆற்றாது அரசாகள தோறறனர், தோறறோடும அவாகளைத தராதிசசென்று, அபபகை யரசாகளுள ஒருவனைய சோழனுக்குரிய தஞ்சைமாவட்டத் துத் தலையாலங்கானம எனும இடததே மடகக்கி கடும போரிட்டு, அவர் குடை முரசு எல்லாம கொண்டு வெற்றி பெற்றனன், எதிர்தத ஏழரசர்களையும் இளமைகாலததி லேயே வென்ற சிறபபறிந்த புலவரும் பிறரும், அவவெற்றிச் சிறப்பினை இவன பெயரோடு இணைதது பாராட்டினா.

தலையாலங்கானததே, செழியன் ஆற்றிய அருந்திறற் காட்சியைக் கண்டுகளிததாருள புலவா குடபுலவியனாரும் ஒருவர். பகையரசா எழுவாக்குரிய பெரும்படை அனைத் தையும், தான் ஒருவனகவே நினறு அழித்த செழியன் செயல, புலவர் உளததே, உயிர்ப்பன்மைகள அனைததை யும், தான் ஒருவனகவே அழிககும கூற்றுவன் செயலை நினைவூட்டி உவமைகாணத் தூண்டிற்று. வெற்றிபெற்று வீறெயதினின்ற அவன் மார்பைத்தழுவி மகிழ்நதா புலவர். காட்டு வாழ்க்கையினராய வேட்டுவர், புலி முதலாம் கொடுவிலங்குகளினின்றும் தப்பி வாழ்வதற்குத் துணை புரியும் கல்லடாா எனும கல்லணைகளே, அக்கொடு விலஙகு களை அகப்படுதது அழிக்கவும் துணைபுரிதலைப்போன்றதே, தம்போலும் புலவர்க்குத் தழுவ மகிழ்ச்சிதரும் அவன்

மார்பு, அவன் பகைவரைப் பாழ்படுத்தும் கொடுமை யுடையதாதலைக்கண்டு பாராட்டினார்:

"இமிழ்கடல் வளைஇய ஈண்டகன் கிடக்கைத்
தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து
மன்னுயிர்ப் பன்மையும், கூற்றத்து ஒருமையும்
நின்னெடு தூக்கிய வென்வேற் செழிய!
இரும்புலி வேட்டுவன் பொறியறிந்து மாட்டிய
பெருங்கல் அடாரும் போன்மென விரும்பி
முயங்கினென் அல்லனே யானே; .. ..
.. .. .. . . . ..... .....
கூற்றுக்கண்ணேடிய வெருவரு பறந்தலை
எழுவர் நல்வலம் கடந்தோய்! நின்
கழுஉ விளங்கு ஆரம் கவைஇய மார்பே"

(புறம்: ஈஈ)

புலவர் குடபுலவியனார், உயிர்களை உய்விக்கும் உழவுத் தொழிலின் உயர்வினையும், அத்தொழில்பற்றிய துண்ணுணர்வினையும் உணர்ந்த உயர் பேரறிவாளராவர்; நெடுஞ் செழியன் நெஞ்சுகொள்ளுமாறு நீண்ட பாட்டொன்றின் வழியே, உழவினைப்போற்றும் உரவோன், விழுமிய வேந்தனுவன் என்ற அறவுரையினை ஆற்றும் திறம் அறிந்து பாராட்டற்குரியதாம்.

அரசர்தம் ஆசைக்கு அளவில்லை என்ப; அவர்கள், இம்மை மறுமை ஆகிய இரு நிலைகளிலும், இடையிலாப் பேரின்பம் பெற விரும்பும் பேராசை உடையராவர்; இவ் வாசை நெடுஞ்செழியன்பாலும், நின்று நிலைபெறும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை என்பதை உணர்ந்த புலவர், அவனை அணுகி, "அரசே! உலக அரசர் உரனெல் லாம் ஒடுங்க, அவர் அனைவரையும் வென்று, உலகனைத்தை யும் நின் ஒரு குடைக்கீழ்க் கொணர்ந்து ஆளுதல்வேண்டும்; சிறந்த நல்லிசை நின்பாலே நிற்றல்வேண்டும்; போகமும், புகழுமபெற்று இம்மைபிற் சிறக்கும் நீ, மறுமையிலும் மாறாப் பேரின்பம் உடையையாதல் வேண்டும்; இஃது

என் பேரவா; இவ்வாசை நினக்கும் உண்டாதல் இயல்பே; இவ்வாசைகள் அனைத்தும் நிறைவேறவேண்டுமேல், நீ மறவாது மேற்கொள்ளவேண்டும் கடமைகள சில உள; கடல்சூழ்ந்து பரந்துவிளங்கும், இப் பேருலகனைத்தையும் தம் தாளாண்மையால வென்று, தாம ஒருவராகவே நின்று ஆண்டு, அரிய புகழ்பெற்று வாழ்ந்தா வழிவந்தவன் நீ என்பதையும், நீரின்கண் மிகுதாழாத காஞ்சிமரத்தின் மணம் நிறை மலர்களைக் கவரும வாளை, நிண்ணிய ஆரல், பருத்த வரால், நிறம விளங்கு கெடிறு முதலாம் பலவேறு மீனினங்களை நிறையக்கொண்ட ஆழ்ந்த அகழியினையும், வானளாவும் உயாநத மதிலினையும் உடைத்தாய, வளமும், வன்மையும நிறைநதது நின்நாடு எனபதையும் யான் அறிவேன். நின்குடிதரு பெருமையும, நின்நாட்டு வளமும், வனமையுமே, நின் ஆசைகள மூனறையும ஆக்கித்தந்து விடா, அவைபெற, இவை துணைபுரியவல்லன அலல; அதற்குரிய வழி வேறுளது. அதனை யான அறிவேன்; கூறக்கேட்பாயாக; மக்கள உடல், நீர இனறேல் நிலையா தென்பது உண்மையே ஆயினும், அவ்வுடல உணவின் பிண்டம்—சோற்றாலடித்த சுவர் எனறெல்லாம் வழஙகப் பெறுதலை நோக்கின், அது, நீரைக்காட்டினும், உண வினையே மிகமிக இன்றியமையாது வேண்டி நிற்கிறது என்பது தெளிவாம்; ஆகவே, உணவளித்து உடலைப் பேணுவார், உயிா அளித்தது உயாநத உயர்வுடையார் எனப் போற்றப்படுவோராவர், உயிர் எனப போற்றப்படும் உணவு, நிலதோடு நீர் கூடிய வழியே உண்டாம, ஆகவே, அந்நிலமும, நீரும ஒன்றுகலநது ஒருவழி நிறக வகை செய்வார், உணவளிப்பது உறுதியாதலின, உடலையும், உயிரையும் ஒன்று கூட்டிய உயா பேராருளுடையாராவர்; உயிர் அளிக்கும், அவ்வுணவு வேண்டிநிற்பார், நீர் குறைவற நிறைந்த நிலங்களை ஆக்குதல வேண்டுமெ, விதைதத பயிர், விளைந்து பயன்தரத் துணைபுரியும தண்ணீர்க் கு மழையையே எதிர்நோக்கி நிற்கும் நிலங்கள் பயன்தருவன அல்ல; அத்தகைய நிலங்கள் வேலி வேலியாகப் பரந்து கிடப்பினும் பயன் இன்றும்; அத்தகைய நிலமே நிறைந்த

நாட்டில் வாழ் மக்களும், அந்நாட்டாள் அரசரும் ஆக்கம் பெறுது அழிவர்; நோகத இடங்களிலெல்லாம் நீர்நிலை பல காணின், நிலம் நிறைய விளைகது பயன் பல உண்டாம்; அதனுல் ஆம் உணவால், உயிர் வாழ்க்கை வளமபெறும்; ஆகவே, அவ்வாறு நீர்நிலை பல கணடவரே, இவ்வுலகில் இசைமுதலாயின இறவாது நிற்க நெடிது வாழ்ந்தோராவா அவை காணுதா, வேறு சிறப்புக்கள் எததுணை உடையராயினும, அவரெல்லாம, பிறந்தும பிறவாதாரேயாவர்; அவர பெயர்தாமும, அறியபபடாது அழியும்; நீர்நிலை காணுமை இசசெயல, நிலைதத புகழைத தருதலால் இசையும நிறைநத நீரபெறு நிலம, நிறைய விளைதலால், உலகெலாம ஆளும் அரசவாழ்வும, அந்நீர உணமையால் உண்டாம உணவு, உயிர, உடலோடு கலநதுவாழ உறுதுணை புரிதலால் உண்டாம அறததால மறுமைப் பேறும் உளவாம ஆகவே, செழிய! நீ, அமமூன்றையும குறைவறப் பெற வேணடுவையேல, நீநிலை பல காணிலை விரைநது மேற்கொள்வாயாக!" என்று அறவுறை கூறி அமைந்தார்:

"முழங்கு முந்நீர முழுவதும் வளைஇப்
பரநதுபட்ட வியன ஞாலம,
தாளின் தந்து, தமபுகழ நிறீஇ,
ஒருதாம ஆகிய உரவோர உமபல்!
ஒன்றுபத்து அடுக்கிய கோடிகடை இறீஇய
பெருமைததாக நின் ஆயுள் தானே;
நீர்ததாழந்த குறுங்காஞ்சிப்
பூக்கணும் இனவாளை,
நுண் ஆரல், பருவரால்,
குரூஉக் கெடிற்ற குண்டகழி,
வான் உட்கும் வடிநீண் மதில்
மல்லலமூதூர வய வேந்தே!
செல்லும உலகதது செல்வம் வேண்டினும்,
ஞாலம் காவலர் தோள்வலி முருக்கி
ஒருநீ யாகல் வேண்டினும், சிறந்த
நல்லிசை நிறுத்தல் வேண்டினும் மற்றதன்

தகுதி கேள் இனி மிகுதியாள!
நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர், உயிர்கொடுத் தோரே,
உண்டி முதற்றே உணவின் பிண்டம்,
உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே;
நீரும், நிலனும் புணரியோர், ஈண்டு
உடம்பும், உயிரும் படைத்திசி னோரே;
வித்தி வான்நோக்கும் புன்புலம், கணைகன்
வைப்பிற்று ஆயினும் நண்ணி ஆளும்
இறைவன் தாட்கு உதவாதே; அதனால்
அடுபோர்ச செழிய! இகழாது, வலனே
நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோர், அம்ம! இவண தட்டோரே;
தள்ளாதோர், இவண தள்ளா தோரே."

(புறம் : கஅ.)

புலவர் குடபுலவியனார், அன்று நெடுஞ்செழியனுக்கு உரைத்த இவ் வறவுரை, இன்று உலகாளும் உயர்ந்தோரும் உணர்ந்து மேற்கொளள வேண்டிய அருமையுடையதாதலை அறிந்து அவரைப் போறறிப புகழ்வோமாக!

## ச. குன்றுகண்பாலியாதனர்

ஆதன் என்ற பெயர், இள்ளி என்ற பெயர் சோழர் களையும், வழுதி என்ற பெயர் பாண்டியர்களையும் குறிக்க வழங்கப்பெறுதலேபோல், சேர அரசர்களைக் குறிக்க வழங்கும் பெயர்களுள் ஒன்றும்; இவர் பிறந்த ஊர் பாலி; அப் பாலிநகர், குன்றின்கண் அமைந்து கிடந்தமையால், அது குன்றுகண்பாலி என்றே வழங்கப்பெற்றது; மலையாள மாவட்டம் கோழிக்கோட்டுப் பகுதிக்கண், பாலிக்குன்று என இன்று திரிந்து வழங்கப்பெறும் ஊரே அக்குன்று கண்பாலியாம். குன்றுகண்பாலியில் பிறந்து, ஆதன் எனும் இயற்பெயர் பூண்டமையால புலவர், குன்றுகண் பாலியாதனர் என வழங்கபபெறுநர்; இக் குன்றுகண் பாலியாதனர் எனும பெயர் நாள் ஆக ஆகக் குன்டுகண் பாலியாதனர் என ஆகிவிடவே, புலவர் ஆதனர், ஆழ்ந்த கண்களை உடையராவர் எனவும ஊரார் வழங்கலாயினர்; உண்மை அஃதன்று, சேரராகுரிய பாலிநகர்க்கண் பிறந்து, அவாதம குடிக்குரிய இயற்பெயர்பூண்ட நம் புலவர், அச்சேரவேந்தருள் ஒருவனையே பாராட்டியிருப் பது, அவாதம குடிப்பற்றினை அறியச்செய்கிறது.

பாலியாதனர் பாராட்டிய சேரவேந்தன், சிக்கற் பள்ளித்துஞ்சிய செல்வக்கடுங்கோ வாழியாதனுவன்; செல்வக் கடுங்கோவாழியாதன், சேரர் குடியில், இரும் பொறை மரபினருள வருதோனுவன், அந்துவஞ்சேரல்இரும் பொறை இவன் தநதை, இவன மனைவி, இமயவரமபன் நெடுஞ்சேரலாதன் மனைவியின் உடன்பிறந்தாளாவள்; தக நீர் எறிநத பெருஞ்சேரல் இரும்பொறை என்ற வீரமகனைத் தவமகனுகக் கொண்டவன் செல்வக்கடுங்கோ; செல்வக் கடுங்கோ, கொற்றமும், கொடையும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற ஒப்பற்ற குணக்குன்று; பாரிக்குப்பின், செல்வக் கடுங்கோவே, எனக் கபிலர் கருதினர் எனின், இவன் பெருமையினைக் கூறல் வேண்டாவன்றே? "ஈத்தது

இரங்கான், ஈத்தொறும் மகிழ்வான்; ஈத்தொறும் மாவள்ளியன்" எனச் சான்றோர் இவனைப் பாராட்டுவர் எனக் கபிலர் பாடியுள்ளார். சேரமான், நகையினும் பொய்யா வாய்மையும், புறஞ்சொற்கேளாப் பெருமையும் உடையவன்; ஒரு முற்றுகையில், இருபெரு வேந்தரை வெல்லும் ஆண்மையும், ஆற்றுது அடிபணியும் பகைவர் பால் அருள்செய்யும ஊராண்மையும ஒருங்கே உடையவன்; இன்னபல தன் புகழெலாம தோன்றப் பாடிய புலவர் கபிலர்க்குச் சிறுபுறம் என நூறாயிரம் காணம கொடுத்து, நன்றே என்னும் குன்றேறி நினறு தன் கண்ணிற் கண்ட நாடெல்லாம காட்டிககொடுதத கொடைச்சிறப்புடையவன் செல்வக்கடுங்கோ, தன் வாழ்நாள இறுதிக் காலத்தே, சிக்கற்பளளி எனும் இடததே கிடந்து உயிர்துறநதமை யால், சிக்கற்பள்ளித் துஞசிய செல்வக்கடுங்கோ என அழைக்கப்பெற்றுளான்.

வாழியாதனை வாழ்ததிய நம் புலவர், அவன் பகை வரை வென்று அவர் பணிநது தநத திறையைக் கொணர்ந்து தன் நண்பர்க்கும், பரிசிலர்க்கும் பங்கிநதளிக்கும் பெருமை யினையும், வந்து தன்னைப் பாடுவார தம் இழிநிலை குறியாது, தன் பெருமைக்கேற்ப அவர்க்கும் பெருமபொருளைக் கரும் தகுதியினையும் பாராட்டி, அவன் நாடு நோக்கிவரும் இரவலர், இடையில் வேற்று வேநதரைக் காணின், யாம் செல்வக்கடுங்கோவாற் சிறபபிக்கப்பெறும் இரவலரேம் எனின், அவ்வேந்தர், தம் குடை தாழ்த்திப் பணிந்து போவர் எனக்கூறி அவன் பேராண்மைத் திறதனையும் பாடியுள்ளார். செல்வக்கடுங்கோ இவ்வாறு சிறந்த பல பண்புடையனதல் அறிந்து பாராட்டிய புலவர், அவன் பொருநையாற்று மணலினும் பல்லாண்டு வாழ்க! அவன் நாட்டைச் சூழஉள்ள நஞசைநிலம் அனைத்தினும் வினையும் நெல்லினும் பல்லாண்டு நிலைபெற்று வாழ்க! எனவும் வாழ்த்தி, தம் உள்ள வேட்கையின் உயர்வையும், அவன் நாட்டு நெல்வளச் சிறப்பையும் ஒருங்கே உணரவைத் துள்ளார்:

"பகைப்புல மன்னர் பணிதிறை தந்துநின்
நகைப்புல வாணர் நல்குரவு அகற்றி
மிகப் பொலியர்தன் சேவடியத்தை என்று
யாஅன் இசைப்பின் நனிநன்று எனப்
பலபிற வாழ்த்த இருந்தோர் தம்கோன்;"
... ..... .....

"என்றுறுமையின் இழித்து நோக்கான்;
தன் பெருமையின் தகவு நோக்கிக்
குன்று உறழ்தக களிறு என்கோ,
கொய் உளைய மா என்கோ,
மன்று நிறையும் நிரை என்கோ,
மனைக களமொடு களம் என்கோ,
ஆங்கவை, கனவென மருளவல்லே, நனவின்
நல்கி யோனே நகைசால் தோன்றல்."

"செல்வக் கடுங்கோ வாழியாதன
என்னுது, தெவவர் உயாகுடை பணித்து இவண்
விடுவா மாதோ."

"ஊழி வாழி பூழியர் பெருமகன்
... .. .. .....
கல்லென் பொருகை மணலினும், ஆங்கண்
பல்லூர் சுற்றிய கழனி
எல்லாம் வீளையும் நெல்லினும் பலவே." (புறம்: கூஅஎ)

தலைவன் ஒருவனுக்குத தலைவியை நேர்ந்து அவன் குறை முடிக்கத துணிதத தோழி, தலைவியிபாற் சென்று, "தோழி! தலைவன் ஊர்ந்தவரும், மடல்மாவை ஈர்த்து வரும் சிறுவர், நும் ஊா யாது என்பார்க்கு உரிய விடை தரமாட்டாது, விழாநிகழ் ஊரேம் யாங்கள் எனக்கூறும் அறிவுத் தெளிவுடையராவா சான்றோர்போல் பலபல கூறும் அவர்கள், உலகியலறியா அறிவின்மை உடைமை யால், தலைவியும், தோழியும் வேறுகார் என உணரமாட் டாது, இதோ செல்லும் இததோழி, இத்தலைவன் விரும்பும் தலைவியின் வேறுபட்டாளாவள் என என்னை நோக்கிக்

கூறுகின்றனர்" என அச்சிறுவர்தம் அறியாமை கண்டு நகைப்பாள்போல், தலைவன் மடலூர முன்வந்துளான்; அதை ஊர்ச்சிறுவர்களே அறிந்துள்ளனர்; ஊரில் உள்ளார் பிறர் அறியின் ஏதம் உண்டாம்; அது நிகழாவண்ணம் அவனே ஏற்றுக்கொள்க எனக் கூறிய திறம் அமைந்த பாட்டொன்று புலவர் பாடியதாக நற்றிணைக்கண் காணப்படுகிறது.

"உண்ணை நன்மாப் பண்ணி, எம்முடன்
மறுகுடன் திரிதரும் சிறுகுறு மாக்கள்,
பெரிதும் சான்றீர் மன்ற! விசிபிணி
முழவுக் கண்புலரா விழவடை யாங்கண
ஊரேம் என்னும் இப்பேரே மூறுநா
தாமே ஒப்புரவு அறியின், தேமொழிக்,
கயலேர் உண்கண் குறுமகட்கு
அயலோராகல் என்று எம்மொடு படலே."

(நற்: ஊ0)

# ரு. குழற்றத்தனார்

குழற்றத்தனார் எனும் இத் தொகைச்சொல், குழல், தத்தனார் எனப்பிரிந்து, குழலில் இசை எழுப்பிப் பாட வல்ல தத்தனார் எனப் பொருள்தரும். ஆகவே, தத்தனார் என்பது நம் புலவர் பெயர், அவர் குழலிசை வல்லவராவர் எனக் கொள்க.

மணந்து கணவன் மனைபுகுந்த தன் மகள், ஆண்டுக் கணவனுடன கலந்து நடாததும் இலறை மாண்பினைக் காணசசென்ற செவிலி, தலைவன், தன் மகள்மாட்டுக் கொண்டுளள பேரன்பினையும, அப்பேரன்புண்மையால், அவளை இணைச்சிறுபொழுதும் பிரிந்துவாழ எண்ணு அருமையினையும, அதற்கேறப அவன் வாழவும பிரிந்து செல்ல வேண்டாப் பெருவளம உடையதாதலையும், ஒரோவொரு கால், அரச ஆணை அவனைப் பிரியுமாறு செய்ய, அரச ஆணைகடததல் அறமன்று என அறிந்து, அவவொரோ வொருகால் பிரிந்துசெல்லும் அவன, விரைவில வினை முடித்து, ஆண்டு ஒருபொழுதம தங்காது வந்துசேரலையும் கண்டு களிததாள்; தான் ஆங்குக் கண்டுகளித்த அவற்றை நற்றாய்க்கு உரைக்கும் உரை அமைநத புலவர் பாட்டொன்று குறுந்தொகைக்கண் காணப்படுகிறது:

"நீறாரோளே மடந்தை; வேறா
வேந்துவிடு தொழிலொடு செலினும்
சேநதுவரல் அறியாது செம்மல் தேரே."

(குறுந்: உசஉ)

---

## கூ. குளம்பந்தாயனர்

குளம்பன் என்பார்க்கு மகனாய்ப் பிறந்து, தாயனர் எனும் இயற்பெயர் பூண்டு வாழ்ந்தமையான் புலவர் குளம்பந்தாயனர் என அழைக்கப்பெற்றுளார்; காட்டிடை நடந்த கடும் போர்க்களத்தே கணவனை இழந்த காரிகை கண்ணீர் கசிந்து புலம்பும் முதுபாலைத்துறை தழுவிவந்த பாட்டொன்று புலவர் பெயரால் புறநானூற்றின்கண் இடம் பெற்றுளது.

களத்தே கணவன் இறந்தான் என்ற செய்தி அறிந்து ஆண்டுச் சென்று அவன் உடலைக்கண்ட அவன் மனைவி, அவ்வுடலருகே அமர்ந்து, அவ்வுடலை உயிருடைக் கணவனாகவே கருதி, "ஐய! என்னெடு களம புகுந்த போர்வீரர் எலாம, அமர்மேற் கொள்ளவும், யான் மட்டும இறந்து போனேன், இனி, என்னைப் பிரிந்தறியா இப்பெண்ணினல்லாள் எங்ஙனம் உயிர்வாழ்வள?" என என்பொருட்டுக் கவலை கொள்ளற்க! வளையணிந்த வனப்புற்ற விளங்கிய என் கை, வளைகழலப் பெற்றமையால், மூங்கிற் பட்டை கழன்றுக, வெளுத்தற்குக் காணப்பெறும் மூங்கிலைபோல், வெளுத்து வனப்பிழந்ததாக, யானும உயிர்விடுதலல்லது வேறு இறந்த செய்தியை இன்னார்க்குக கொண்டு செல்லேன்" எனக்கூறி அழுதாள் என்ற அப்பாட்டு, கணவனை இழந்து வாழ எண்ணுக்கலினுறு மகளிர் மாண்பு புலப்பட வந்துளது.

"என் திறத்து அவலம் கொள்ளல் இனியே;
வல்வா ணிளையர் தில்லப்ப
நகாஅல் எனவந்த மாறே; எழாநெல்
பைங்கழை பொதி களைந்தன்ன வினாப்பின்
வளையில் வறுங்கை ஓசிச்
சிலையுள் ஒய்வலோ? கூறுமின் உரையே." (புறம்: உருக)

## எ. குறுங்கீரனார்

குறுமை, சிறுமை எனும் பொருளுடைத்து; உடலின் குறுமை குறித்து, தமிழ் வளர்த்த பெருமுனியும், பாண்டியன் ஒருவனும் முறையே குறுமுனி, குறுவழுதி என வழங்கபபெற்றுற்போல், கீரனார் எனும இயற்பெயரினராய இவரும் குறுகீரன் என அழைக்கப்பெற்றுளார். இவர் பெயரால் இன்று காணப்படுவது, குறுந்தொகைக்கண் வந்துள்ளதொரு செய்யுளே.

கார்ப்பருவத் தொடக்கததே வந்து சேர்வன்; கவலற்க எனக் கூறிச் சென்றான் தலைவன், அவன் சொல் தேறி ஆற்றியிருந்தாள் தலைவியும்; காகாலம தொடங்கலாகிவிட்டது; மழைபெய்தது, முல்லைகொடி தழைத்துப் படர்ந்து அரும்புவிட்டு மலர்ந்து மணமகமழ்ந்தது; அம் மலாமணம், செமமுலலை மணததொடு கலநது எங்கும் பரநதது, காகாலத்து இககாட்சியைக் கண்ணுற்றுள தலைவி, கலஙகிற்று அவள உள்ளம, தலைவன வந்து தலையளி செய்யபபெறுமல தனிதது நோயாறுகின்றேன் எனத் தன் நோயாகருதியன்று அவள கொண்ட கவலை, கார் காலதைத வருவன எனக கூறிசசென்ற அவா வநதிலரே; அவா கூறிய வாய்மொழி பொய்ததுவிட்டதே, அதனால் அவாக்கு ஏதம் உண்டாயின் என்னை எண்றே கவன்றாள்; தலைவியின் கலக்கமும, அக கலக்கத்திற்காம காரணமும் தோழி உணர்ந்தாள, அவள் கவலைபோகவேண்டுமாயின், தலைவன் உரை பொய்த்திலது என்பதை அவள் உள்ளம் கொள்ளல்வேண்டும ஆனால், இங்கிலையில அது, அதைக் கொள்ளாது, முல்லை மணம கொளளத் தடைபுரியும்; ஆகவே, கார்காலம தொடங்கிவிட்டது எனக் கூறும் மலர்களின் மணமும், அம்மணம தோன்றத் துணைபுரிந்த மழையும பொய்ம்மையுடைத்தேயன்றித் தலைவர் பொய்யலர் என்பதை அவள் உணரச்செய்தல் வேண்டும் எனக் கொண்டாள். உடனே, "தோழி! தலைவர் பொய் கூறார்

என்பதை நீ அறிவை; அவரோ, கார்காலத் தொடக்கத்தே வருவேன் எனக் கூறிச் சென்றுளார்; அவர் அக்காலத்தே நிலலாது வருவர்; நீ காணும் இக்காட்சிகள், காகாலதுக் காட்சிகளாயின், அவர் வந்திருத்தல் வேண்டும். ஆனல் அவர் வந்திலா, அவர் வாராமுன் வந்து தோன்றும இக் காட்சி, காகாலதது அன்று, கார்காலக் காட்சிபோல் தோன்றும் பொய்க்காட்சியே, பொய்க்காட்சி கண்டு புலம் பல் ஒழிக" எனக் கூறித் தேற்றினள். தோழியின் இக் கூற்றமைந்த பாடலபபாடி, தம கணவர் பொய்யறியா வாய்மொழியராவா என்னும உறுதியும், அவர் அவவுரை பொய்யின் வருந்தும உளமும்கொண்ட உயர்ந்த பண்பினராய பண்டைத தமிழப்பெண்களின பெருமையினைப் பாராட்டியுள்ளார புலவர.

"தண்துளிகசு ஏற்ற பைங்கொடி முல்லை
முகைதலை திறந்த நாற்றம், புதலமிசைப்
பூமலி தளவமொடு தேம்கமழ்பு கஞல,
வம்புப் பெய்யுமால மழையே; வம்பன்று
காஇது பருவமாயின்,
வாரா ரோஎம் காத லோரே." (குறுந் · கூஅஉ)

# அ. குன்றம்பூதனார்

ஊர் என்ற பொதுச்சொல்லால் சிறப்பித்து உரைக்கப்படுவது உறையூர் என்ப, "ஊரெனப்படுவது உறையூர்." அதைப்போலவே, தமிழகத்தே குன்றுகள் பலவின்று தோன்றினும், முருகன் உறையும சிறப்புடைய திருப்பரங்குன்றம ஒன்றையே, குன்று என்ற பொதுச் சொல்லால் புலவர்கள் வழங்குவா, பூதனர் எனும் இயற் பெயருடைய இப்புலவர், இருபெரும பரிபாடற் பாக்களால் அக்குன்றினையும, அகுன்றிலுள்ள சோலை, சுனை, அருவி முதலாயினவற்றையும பாராட்டியுள்ளமையான் குன்றம் பூதனர் எனக குறிக்கபபெற்றுளார.

புலவர் குன்றம்பூதனர், புலவரைப் போற்றும புலவராவர். புலவராவார், நான்மறைப் பொருள்களை நன்கு தேர்ந்து, தாம தேர்ந்த அந நானமறைகளின் நற்புகழை நாடறிய நன்கு நாட்டவல்ல நலறிவுடையவர்: அவர்தம் நாக்கள, வாய்மொழி அன்றி வேறு பொயமமொழி யறியாப பெருமை வாய்ந்தனவாம என்று கூறிப புலவர் தம பெருமையினைப் போற்றுமுகத்தான், புலவர்க்காம் இலக்கணம இஃது எனவும கூறும் திறம அறிந்துகோடற்கு உரிததாம்.

"நான்மறை விரிதது, நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர!" (பரிபாடல் · கூ, கஉ - கங)

குன்றம்பூதனர் பாட்டு, அவர் தமிழின் பெருமை யறிந்து போற்றும் தமிழ் உள்ளம உடையராவர் என்பதை உணர்த்தி நிற்கிறது "யாம்அறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணேம்" எனப் போற்றுதற்குக் காரணமாய் அமைந்தது, தமிழ் அது பொருள இலக்கணமபெற்ற பெருமையுடையதே; அப் பொருள இலக்கணம் காணப்பெறுமையால் கலங்கிஞன் ஒரு பாண்டியன்; அவன் கலக்கம் போகப், பொருள் இலக்கணம் உரைக்கும் பெருநூல் ஒன்றைத் தாமே ஆக்கித்தந்தார்.

ஆலவாயுறை யெம்மான் என்ற வரலாறு பொருள் இலக்கணப் பெருமையினையும், அதனைக்கொண்டுள்ளமையால் தமிழ் மொழிக்கு உண்டாம சிறப்பினையும எடுத்து உரைத்தல் காண்க. மக்கள்தம அகப்புற ஒழுக்கங்களை உலகறிய உணர்த்தி, அவர்தம வாழ்க்கையினை வளமாக்க உதவும் பொருள் இலக்கணம, பிறமொழிகள் எதுவும அறியாப் பெருமைவாய்ந்ததாம, அதைபபெற்ற பெருமை தமிழ் மொழிக்கு ஒனறே உரிதது, தமிழ்மொழிக்கே உரிய இச் சிறபபினை எடுததோதிய, பொருள்இலக்கணத்தின் மாட்டும், அதையுடைய தமிழ்மொழி மாட்டும தமக்குளள பற்றினைப் புலவர் குனறமபூதனார் தெளிய உணர்த்தியுள்ளார

"தள்ளாப் பொருள இயல்பின் தண்தமிழ்."

(பரிபாடல்: க-உகு)

அகவொழுக்கம, களவு, கற்பு எனும் இரு பிரிவுகளை உடைதது, அறிவு, உருவு, திருவான் உயாநத ஓர ஆணும், ஒரு பெண்ணும, பிறர் அறியாவாறு கண்டு, காதல் கொண்டு வாழும ஒழுக்கத்தினை உணர்தலுவது களவு; அவ்வாறு களவொழுகக மேற்கொண்ட அவாகள், ஊரார் அறிய மணநது மேற்கொள்ளும இல்லற இயல்பினைக் கூறுவது கற்பு: இவ்விரு வொழுகக்களிற் கற்பினும் களவே சிறபபுடைதது என்று கூறும் புலவர் குனறம் பூதனார, தாம கூறுமம அக்கூற்றினை நாட்டவல்ல நலல காரணங்களை நிரலே எடுததுக்கூறியுளளார.

களவுக காலதது க காதல் ஒழுக்கதே, முன் மெய்யுறு புணாசசி யறியாதார இருவர், உளளம ஒன்றுபட, இயறகை வழிகூட்ட மெய்யுறுதலால ஆம அவ இன்பத்தினை முதறகண் பெறுதலால், அவ் இனபம், முன அறியாப் பேரின்பமாம், அககாலததே அவர் பெறும் அவ்வின்பத்தினைப் பின்னா எக்காலததும் பெறுதல இயலாது. கற்புக் காலத்துக் காதல் ஒழுக்கதிற்குப் புலவி இன்றியமையாது வேண்டப்படும், புலவி உண்மையினாலேயே, அக்காலத்து இன்பம் சிறப்படைகிறது. "உப்பமைந்தற்றால்

புலவி;" "துனியும், புலவியும் இல்லாயின், காமம், கனியும், கருக்காயும் அற்று" எனப் பிறரும் கூறுவர். புலவியாவது, தலைவன் தவறிழைத்தான் எனக்கொண்டு, தலைவி சிறிது வெறுப்புள்ளம் கொள்ள, அவள் கொள்ளும் அச்சினம் நீங்கத் தலைமகன் அவளை வேண்டலும், தலைமகன் வேண்டுவது கண்டு, அவனை அவள் ஏற்றுக் கூடலும் ஆய இந்நிகழ்ச்சியே புலவி எனப்படும். ஆக, புலவி வேண்டும் கற்பொழுக்கத்தை தலைவன் தவற்றொழுக்கம் உடையனாதல்வேண்டும்; மேலும், தலைவன் பரத்தையர் வீடு புகுந்து, ஆங்கேயே இருந்துவிட்டானாக, தான் பூப் புற்றதை அவனுக்கு உணர்த்த விரும்பிய தலைவி, தோழிக் குச செவ்வணி அணிவித்து அவன்பால் போக்க, அது கண்டு அவன் வந்தானைப் பரத்தை அவ்விருவர் செயலை யும பழிகுமு பழியையும் உடையது கற்பொழுக்கம்; கற்புக்காலத்தே, ஊடலின வழிதந்தான்றும் புணர்ச்சியே இன்பம தரும், ஊடல் இனிதல, ஆங்கு இன்பம இல்லை; "ஊடுதல காமத்திற்கு இன்பம" எனப. ஆகவே, கற்புக் காலத்து இனபம, அவ்வூடல தோன்றற்கேற்ப, தலைவன் பிரிந்து வாழ்தலையும வேண்டி நிற்கிறது. இக்குறை பாடுகள எதுவும, களவுகாலத்து இன்பத்திற்கு இன்று; ஆகவே, கற்பினும களவே சிறந்தது, புலவர் காட்டும் காரணங்கள, நனி மிகப பொருந்தி, அவர் நாட்டும் கொள்கையினை உறுதிசெய்தல காண்க.

"காதற் காமம், காமத்துச் சிறந்தது,
விருப்போர் ஒத்து மெய்யுறு புணர்ச்சி,
புலத்தலிற் சிறந்தது கற்பே, அதுதான்
இரத்தலும், ஈதலும இவை உள்ளீடாப்
பரத்தை யுள்ளதுவே, பண்புறு கழறல்,
தோள்புதிது உண்ட பரத்தையிற் சிவப்புற
நாளணிந் துவகையும் சுணங்கறை யதுவே,
கேளணங்குற மனைக் கிளந்துள சுணங்கறை;
சுணங்கறைப் பயனும் ஊடலுள்ளதுவே; அதனால்
அகறல் அறியா அணியிழை நல்லார
இகறலைக் கொண்டு துனிக்கும் தவறிலர்."

(பரிபாடல்: கூ: கச - உச)

"ஆண்டவன் அடிபணிதலால் உண்டாம் இன்பமே, பேரின்பமாம்; தாம் வாழும் தம் ஊர் அடைந்தார், இன்னலின் நீங்கி, ஈடிலாப் பேரின்பம் உறுவர் என்ப; நின் அடியுறுதலால உண்டாம இன்பம், தம ஊர் அடைந்தார் உறும இன்பமே போன்றுளது எமக்கு; அததகைய பேரின்பம, எமக்கே யன்றி, எம சுற்றத்தினர்க்கும உண்டாகுமாக! அவ்வாறு, யாமும், எம சுற்றமும, நின் அடிக்கீழ் வாழும் அவவாழ்வும, அவ்வாழ்வால் உண்டாம் பயனும பேரின்பமும், நாளதொறும், நாளதொறும நனி மிகச சிறந்து எமகது வாய்க்குமாக!" எனப புலவர் முருகனை நோக்கி வேண்டும் அவ்வேண்டுகோள, புலவர் தம், இறையடியடையும பெருவிருப்பினைப் புலபபடுத்துகிறது.

"செல்வ! நின் அடியுறை
உரிதினின் உறைபதிச சோநதாங்குப்
பிரியாதிருக்க எம்சுற்ற மோடுடனே."

"வாழத்தினேம், பரவுதும், தாழ்த்துத தலைநினையா,
நயதலிற் சிறந்த எம்அடியுறை
பயத்தலிற் சிறகக நாடொறும் பொலிந்தே."

(பரிபாடல்: கஅ: நிச-நிசு; கூ: அஉ-அநி)

பரங்குன்றக் காட்சிகளைப் பாராட்டிப் பாடும புலவர் பூதனார், ஒளிகாலும மணிபோலும் புளளிகளையுடைய மயிலொன்று, தன அழகிய தோகையினை விரித்து ஆடி நிற்பதைக் கண்டு மகிழ்ந்து மயங்கி நின்றான் ஒரு கானவன்; அவனை அங்கிலையிற் கண்டாள் அவன் மனைவி, இவன், என்னினும, இமமயிலையே பெரிதும காதலிகினறான்; என் அழகினும, இதன் அழகையே பெரிதும பாராட்டுகின்றான் எனக்கொண்டு சினநதாள; அவனை அடைநது, "எம்மை இகழ்ந்து, இதனைப் பாராட்டுவதனை யான் உணர்நதேன்; நின் உளளத்தே நினைப்பது யாது?" என வெகுண்டு வினவி நின்றாள்; அவ்வாறு கூறி ஊடுவாளை நோக்கி, "காதலாய்! நின்சாயல், இம்மயிலால் கொள்

ளற்கு அரிது; அது அரிது என்பதைத் தன் மகிழ்ச்சியால் மறந்த இமமயில், அதைக் களவு கொள்ள எண்ணி அதைப் பெறமாட்டாமையால வருந்தும் இம்மயிலின் வருத்தத் தினே எண்ணியிருந்தேனல்லது, வேறு எண்ணிலேனுகவும், நீ சினப்பது ஏனே?'' எனகூறி அவள் சினம் போக் கினுன், என்ற ஓர் அழகிய காட்சியினைக் காட்டி மகிழ்விக் கும் திறம் பாராட்டற்குரியதாம்

''ஒள்ளொளி மணிப்பொறி ஆல்மஞ்ஞை நோக்கித்தன்
உள்ளத்து நினேப்பானேக கண்டனள் திருநுதலும்
'உள்ளியது உணர்ந்தேன், அஃதுரை, இனி,நீ எம்மை
எள்ளுதல் மறைத்தல் ஓம்பு' என்பாளேப் பெயர்த்தது அவண்
'காதலாய்! நின்இயல் களவெண்ணிக் களிமகிழ்
பேதுற்ற இதனேக் கண்டியான் நோக்க, நீஎம்மை
ஏதிலா நோக்குதி' என்றுங்கு உணர்ப்பித்தல்
ஆய்தோான் குன்ற இயல்பு.'' (பரிபாடல்: கஅ: எ - கசு)

## கூ. குன்றியனார்

குன்றியனார் என இவர்க்குப் பெயரிட்டு வழங்கற்காம் காரணம் இது என அறிந்து கூறற்கு இயலவில்லை. இவர், மேலைக் கடற்கரைக் கண்ணதாய், சேரநாட்டுச் சிறப்புடை நகரங்களுள் ஒன்றாய், நெல்வளம் நிறைந்து காணப்படும் தொண்டிநகரைப் பெருமையினைப் பாராட்டியிருப்பதால், அச்சேரநாட்டைச் சேர்ந்த புலவருள் ஒருவராவர் என்று கூறுவது தவிர, இவர் வரலாறாக வேறு எதையும் கூறுதற் கில்லை; தொண்டிநகர் வாழ் மகளிர், வயிரம பொருந்திக் கருநிறம் பெற்ற மரத்தாலாய உலக்கையால், அவலிடித்து முடிதது, அவ்வுலக்கையை, நெற்கதிர் நிறைந்த வயலினது வரப்பிலே வைத்துவிட்டு, வண்டல அயாந்து மகிழ்வர்; அத்தகை வளமும், வனப்பும் நிறைந்தது தொண்டிநகர் எனக் கூறியுள்ளார் புலவர்:

> "பாசவல் இடித்த கருங்காழ் உலக்கை
> ஆய்கதிர் நெலலின் வரம்பணைத் துயிற்றி
> ஒண்டொடி மகளிர், வண்டல் அயரும்
> தொண்டி அன்ன என் நலம்" (குறுந்: உகஅ)

புலவர்தம் பாக்களைப் பயின்றார்க்குப், புலவர் அரிய அறவுரைகளை அழகாக எடுத்துரைக்க வல்ல ஆற்றல் வாய்ந்தவர் என்பது புலனும்; தம தலைவரைப் பெறுது தனிதிருக்கும் தலைவன தலைவியர்க்குத துயர்தரும இயல் புடையது மாலைகாலம். அதனைய மாலைக்காலததே, தன் காதலனைப பெறமாட்டாமையால வருந்தினுள் ஒரு காதலி; அதனால் அவள உடலமெலிந்தது; அவள மெலிவு கண்ட தாய், அது தலைவன வாராமையால வந்தது என அறியமாட்டாது, அது முருகன அணங்கியதால் வந்தது எனப பிறழக கொண்டாள்; அஃதறிந்த அதனலை, "தவறு தலைவனுடையதாகவும், தாய் அணங்கினது எனக் கொளகின்றாள்; இவ்வாறு ஒருவர பழியை ஒருவர்மேல் ஏற்றிக் கூறும் தாயின் செயலகண்டு நனிமிக வருந்து

கிறேன்; தாய் செய்யும் தவற்றினைத் திருத்தமாட்டாது வருந்தி வாழ்வதினும உயிர்விடுதலே நன்றும்" என்று கூறி வருந்தினாள எனப் பாடிய பழிதரு செயலை ஒருவர் புரிந்தாராக, அதைப் பிறிதொருவாமே லேற்றிக் கூறல் அறமன்று; அவ்வறமல்லன நிகழக் காண்டலினும், உயிர் வாழாமை உயர்நதோாககு உயர்வுதரும் என்ற ஓர் உண்மை யினை உணர்ததியுளளார

"புலம்பொடு வந்த புன்கண் மாலை
அன்னா உன்னூர் கழியின், பன்னாள்
வாழலேன், வாழி தோழி! என்கண்
பிணி, பிறிதாகக கூறுவா;
பழி பிறிதாகல் பண்புமா ரன்றே" (நற்: ககள)

ஒரு தலைவன் பரதகதையர் ஒழுக்கம மேற்கொண்டிருந் தான்; அவன செயல்கண்டு வருநதினாள் அவன் மனைவி; அவ்வருதத மிகுதியால் வாடிறறு அவள் உடல்; அவனோடு கூடி வாழ்ந்த காலததே அவள கையொடு பொருநதி யிருநத வளைகள, இபபோது அவள தோள் மெலிநது விட்டமையான் கழனறுவிட்டன, அவள கைகள் வளை யிழநது வனப்பிழந்து தோனறலாயின, இவ்வாறு தலைவி வருநத தவற்றொழுக்கம மிக்காஞயினும், அவன் ஊர் நீர்த் துறைமட்டும தன பொற்பு இழககாதே இருப்பது அறிந் தாள தலைவி "இவ்வாறு நமமைவருததும அவன் ஊர் நீர்த் துறை, நம்மைபபோல நலனிழந்து போகாமல், மருதமும் புன்னையும் மலர்நது மணக்க மாட்சியுற்றுத் தோனறுகின் றதே! இஃது என்னே!" எனக்கூறி வருநதினாள எனப் பாடிய பாட்டில், பிழைசெய்தார பெருகவாழ்தல் இயலாது; ஆகவே பெருவாழ்வு வேண்டுவார் பிழை புரியாமை வேண்டும் எனும அறம் குறிப்பான் உணரவைத்துள்ளார் புலவர்.

"ஐவி அன்ன சிறுவீ ஞாழல்,
செவ்வீ மருதின் செம்மலொடு தாஅய்த்
துறையணிநதன்று, அவர் ஊரே. இறை இறந்து
இலஙகு வளை நெகிழச சாஅயப்
புலம பணிந்தன்று அவர் மணந்த தோளே."(குறுந்: ஙo)

பொருள் தேடிப் புறநாடு புகுந்த தலைவன், வாடை வீசும் காலம் வருதற்கு முன்பே வருது சேர்வன்; வருந் தற்க எனக்கூறிச் சென்றான். சென்றவன், அக்காலம் வந்துவிட்டதாகவும் வந்திலன்; அவன் வாராமையால், நனிமிக வருந்தினள் அவன் மனைவி, வருந்தினளாயினும், வளமான உளமுடையளாதலின், வாராமை குறித்து அவனை வெறுத்திலள், வெறுக்காமை மட்டுமன்று; வெறுத்தல் பண்பன்று என்றும் கூறுவாளாகி, "வாடையும் அக்காலத்து மாலையும வருத்த வருந்திய நம நெஞ்சம், மேலும் வருந்துமாறு வாராது கொடுமை செய்தாராயினும், அவர் நட்பு நமமைவிட்டு நீங்காது நிற்குமாக! அவர் மார்புதரு இன்பமே எண்ணிநிற்கும நம நெஞ்சம், அவர் நம்மாட்டு அன்புகொண்டிலா எனபதை அறிந்தும் அவரை மறவாது அவரோடே இருக்குமாக" என்று கூறினள் எனப்பாடி, நண்பர் நல்லது செய்யமாட்டாராயினும், அவ ரோடு கொண்ட நட்பினை மறத்தல் கூடாது; மறத்தல் நன்றன்று என்ற நல்லறிவினை நமக்கு நல்கியுள்ளார்.

"கழிபடர்க்
காமர் நெஞ்சம் கையறுபு இனையத்
துயரம் செய்து நம் அருளாராயினும்,
அரு அலியரோ அவருடைக கேண்மை;
அளிஇன்மையின், அவண உறை முனை இ
வாரற்க தில்ல... . .. ..... ..
..... .. .. .. .. . ...துறைவன்
இன்துயில் மார்பில் சென்றஎன் நெஞ்சே."

(அகம் : ஈ0)

கடல் முழங்க, கடற்கரைச் சோலைகள் மலர, கழிநீர் எல்லைகடந்து ஏறிப் பரவ, நெய்தல் கூம்ப, பறவை தம் கூடடைய, ஞாயிறு சிவந்து தோன்றி மலைபுகுந்து மறைய, ஒளி மழுங்க, தனித்திருப்பார்க்குத் துயர் பெருக வந்தது மாலை எனப் புலவர் கூறும் மாலைக்காட்சி மகிழ்ச்சியூட்டு வதாம்.

"பெருங்கடல் முழங்கக், கானல மலர,
இருங்கழி ஓதம் இல்இறந்து மலிர,
வள்ளிதழ் நெய்தல் கூம்பப், புள்ளுடன்
கமழ்பூம் பொதும்பர்க கட்சி சேரச,
செல்சுடர் மழுங்கச, சிவந்து வாங்கு மண்டிலம்
கல்சேர்பு நணைப் படரடைபு நடுங்கப்
புலமபொடு வநத புன்கண் மாலை." (நற்: ககள)

களவொழுக்க இன்பமே சிறநததாம் எனக் கொண்ட ஒரு தலைவன், தான காதலிகும ஒரு தலைவியை விரைந்து வரைநதுகொள்ளாணுயினன்; அதனால தாயா மிகக கொணடாள தலைவி; தலைவியின தாயர் அறிநத தோழி, "தலைவா, வரைந்துகொள்ளாது இவவாறு ஒழுகுதல் அச்சந்தரு வதாம், இஙஙனம நம உளளததே அசசம மிக, வநது செல்வதிறும் வாராமையே நனறும" எனறு கூறினள. அதுகேடட தலைவி, "அவா அஙஙனம வாராராயின், என் வருததம மிகும, வருததம மிகுநதால உடல வாடும; உடல வாடின வளகழலும, வளகழலக் காணின் ஊரார அலா தூறறுவா, அஙனமலையினை எவவாறு ஆற்றுவேன்" என்றுகூறி வருநதினள அதறகுத தோழி, கைவளை யற்றிருபபக காணினன்றே ஊரார அலா உரைபபர்? வளகழலும மெலிவைப பிறா உணராவாறு மறைததலும கூடும; கை மெலியுந்தொறும, மெலியுநதொறும அம மெலிவு புலனுகாவாறு அணிநதுகொள்ளுதற்கேற்ற சின்னஞ்சிறு வளைகளும உள்ளன, அவற்றை அணிநது அம் மெலிவு தோன்றுவாறு மறைததிவிடலும கூடும" எனக் கூறித் தேற்றினள எனபபாடடம புலவர், பெணணுள்ளம் கொள்ளும பெருந்துயர் நிலையினையும, தாம்உறு துயரைப் பிறர் உணராவாறு பேணிக்காததல் கடமையாம் எனக் கொள்ளும் அவர்தம் அறிவின் பெருமையினையும் பாராட்டியுள்ளமை உணர்ந்து மகிழ்வோமாக.

"துறைவன்,
வாராது அமையினும் அமைக!
சிறியவும்உள ஈண்டு வினைஞர் கைவளையே."
(குறுந்: ககள)

## கo. கூற்றங்குமரனார்

நம் புலவர்தம் இயற்பெயர் குமரனார்; அப்பெய ருடைப் பிறரின் வேறு அறிதற்குக் கூற்றங்குமரனார் எனப் பட்டார்; கூற்றன் என்ற அச்சிறப்பு, அவர் தந்தை பெயரைக் குறிக்க வந்ததாம என்ப; சில ஏடுகளில் இவர் பெயர் கூத்தங்குமரனார் என எழுதபபட்டிருப்பது கொண்டு, நம புலவர், புலமையோடு கூதாடவலலவரு மாவர் எனக் கொள்வாரும் உளர். இவர பெயருடைப் பாட்டொன்று நற்றிணைக்கண் இடமபெற்றுளது

களவொழுக்க இன்பமே கவின்மிக உடைததாம் எனும் உளம் உடையனைப் வரைதலே நினையாது ஒழுகும் தலைமகன், இடையே சிலபொழுது வாராமையால் வருநதினை தலைவி; அக்கவலையால் அவள அழகும அழிநதது; இந்நிலை மேலும் நீட்டித்தல் நன்றனறு; அவன் விரைந்து வரது தன்னை வரைந்து கோடலே விருமபினை தலைவி; ஆயினும் அதைத் தானே செய்து கோடல் இயலாது; ஒன்று தலைவன் வரைவு வேண்டி வரது வரைந்துகொளளுதல் வேண்டும்; அல்லது, தமா, தம மகளதம கருததறிநது தலைமகனுககு மணஞசெய்து தரலவேண்டும், அவர்கள் அதை மேற்கொள்ளுமாறு செயதலும தன்னால் இயலாது; அதைச் செய்வாள தோழியே; அழியும் தன் அழகைக் கண்டும் அவள் அதைச செய்திலள; அதனால், உலகில் உள்ளார் அனைவரினும் அவளே கொடுமையுடையாள்போல் தோன்றினறு; ஒருநாள், அவளை அழைதது, அவள் குறிததுத் தன் உள்ளம் கொண்டுளள எண்ணத்தை எடுத்தும் கூறிவிட்டாள், அவ்வாறு கூறிய தலைவியின் கூற்றே பொருளாகப் பாடிய அப்பாட்டில், தலைவியின் மேனி அழகு, அசோகின் அந்தளிர் போன்றது; தலைவன் மலைச்சாரல் மழைமிகப் பெற்று மணம் நாறும் மாண் புடையது; ஆண்டுறை வண்டுகள் மலர்தோறும் சென்று மதுவுண்ணுங்கால் எழுப்பும் இனிய ஓசையினை, அசுணம்

எனும் இசையறி பறவை, யாழின் இன்னிசையோ எனக் கொண்டு காதுகொடுத்து கேட்கும் என்ற செய்திகளையும் அறிவித்துள்ளார் புலவர்; அசுணம் என்பது ஒரு பறவை; இசைகளின் கூறுபாட்டினை அறிவதில் சிறந்தது; அது இன்னிசை கேட்டால் மகிழும்; பறையொலியோசையும் கொடிய ஓசைகேட்பின் மயங்கி உயிர்விடும் மாண்புடையது; அதைப் பிடிக்க விரும்புவார், அவையுறை இடத்தே சென்று முதற்கண் இனிய இசையினை எழுப்புவர்; அது கேட்டு அகமகிழ்ந்திருக்கும் அந்நிலையே, பறையினை முழக்குவர்; அவ்வொலிகேட்டு மாண்டுவிழும் அவற்றைக் கொண்டு செல்வர்; அத்தகைய மாண்புகளை பறவையின் பண்பினைப் புலவரும பாராட்டியுளளார்:

"விழுந்த மாரிப் பெருநகண் சாரல்
கூதிர்க் கூதளத்து அலரி நாறும்
மாதா வண்டின் நயவரும் தீங்குரல்
மணம் நாறு சிலம்பின் அசுணம் ஓர்க்கும்
உயா மலை நாடற்கு உரைத்தல் ஒன்றோ,
துயா மருங்கறியா அன்னைககு இந்நோய்
தணியுமாறு இதுவென உரைத்தல் ஒன்றோ
செய்யாய் ஆதலின் கொடியை; தோழி!" (நற்: உசசு)

## ௬௬. கேசவனார்

பரிபாடலில், பதினான்காவது பாடலாகிய, முருகனுக்குரிய பாடலைப் பாடிப் பண்ணும் அமைத்த புலவர் கேசவனார்; திருமாலுக்குரிய பெயர்களுள் ஒன்றாகிய கேசவனார் எனும் இயற்பெயர் கொண்ட இவர், முருகனைப் பாடியுள்ளது, புலவர்தம உள்ளத்தே நிலவிய சமரசசமய உணர்விற்குச் சான்றளிப்பதாகும. கார்காலத்தே, மழை மிக்குப் பெய்யும்; நீர்நிலைகள் நிறையும்; சுனைகள் பன்னிற மலர்களால் மாண்புறும்; கடம்பு மலர, அமமலர் நிறை தேன் குடிக்க வண்டுகள வரும்; மலையடுக்கத்தே மகளிர் தோள்போலும் மூங்கில்கள வளரும்; மயில்கள் தோகை விரித்து ஆடி, அகமகிழ்ந்து அகவும்; கொன்றை மலரும்; வேங்கை அரும்பு அவிழும், காந்தளுமு, தோன்றியும் கனிவுற மலர்ந்து மணம் நாறும்; இந்நிகழ்ச்சிகளோடு கூடிய கார்காலம தோன்றிற்று என்பதைக் கூறவந்த புலவர், பெருமழை பெய்தலால் நிறைந்த சுனைகளில் மலர்கள் மலர்ந்தன; கடம்பமலர்தாதூதும் வண்டின்குரல், பண்போல் பாடுறும்; மலைவளர் மூங்கில்கள், மகளிர்தம் தோள்போல் தோன்றின, மயில்கள் கூவும் குரல்ஒலி, தலைவியரைத் தனிவிட்டுப் பிரிந்துறை தலைவர் தமமை, "தலைவர்கள்,இனியும் தாமதம செய்யன்மின், விரைந்துவந் தெய்துக!" எனக் கூவி அழைப்பதுபோலும்; கொன்றை மலர்கள் பொற்காசு போன்றன; தம் மகளிர்தம் அழுகை யினைப் போக்க விரும்பும் அன்னைமார், அவர் வேண்டும் மலர் தருவான் வேண்டிப் புலி புலி எனக் கூவுமாறு வேங்கைகள் மலர்ந்தன; காந்தள் மலர்ந்தன; மலர்ந்த காந்தளின் மணம்நிறை இதழ்கள் எங்கும் பரந்து எழில் நிறைவுற்றன; இவ்வாறு பரங்குன்று, கார்காலத் தன்மை பெற்றது என்றெல்லாம் பாடிக்காட்டுவது, அவர்தம் புலமையின் அருமையினை அறிவிப்பதாகும்.

முருகன், ஆறுமுகம் உடையான்; ஆறிரு தோள் உடையான்; வள்ளிபால் சென்ற விழைவுடையான்; பாடு

வார் பாட்டின் பயனுவான்; எவரும் அஞ்சும் சடிலா ஆற்றலைப் பிறந்த அன்றே பெற்ற ஆண்மையாளன்; அந்தணர் உரைக்கும் அறநெறி நின்ற அழகுடையான் என, முருகனும் முழுமுதற் கடவுள்பால் காணலாம் பல் வேறு பண்புகளைப் பாராட்டிப பணியும் பேரன்புடையார் புலவர் கேசவனார், ஆண்டவன்பால் அன்புடையார், அவனைப் பணிந்து, போற்றி வழிபடுதல், அன்பினால், அவ்வழிபாட்டுநெறி தம்மினின்றும் நீங்காமை நிற்றற் பொருட்டே யன்றி, அவ்வாண்டவன்பால் பொன்போலும் பொருள் பெறலாம் எனும் எண்ணத்தாலன்று; "கூடும் அன்பிற் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கினர்" என அவ்வன்புடையாரைப் பாராட்டுவர் சேக்கிழாரும், (பெரிய: திருக்கூட்டச்: அ), புலவர் கேசவனாரும், "முருக! நின்னை யாங்கள் வழிபடுவதன் பயன், அவ்வழிபாடுகள் மேலும், மேலும் நின் புகழினும் பலவாகுக!" என வேண்டுதல், உண்மை வழிபாடு யாது என அறிவார்க்குத் துணை புரியுமாக!

"நின்னைத் துன்னித் துன்னி வழிபடுவதன் பயம்
இன்னும், இன்னும் அவையாகுக
தொன்முதிர் மரபின்நின் புகழினும் பலவே."

(பரிபாடல்: கச: உகூ-ஙச.)

---

## கஉ. கொல்லன் அழிசி

அழிசி என்பது இவர் இயற்பெயர்; அக்கால அரசரும், மக்களும் ஒக்க மேற்கோண்ட இயற்பெயர்களுள் அழிசி என்பதும் ஒன்று; சேந்தன் எனும் சிறந்தாளுக்குத் தந்தையாய், ஆர்க்காடாண்டிருந்தான் ஒரு அரசன், அழிசி எனும் பெயர் கொண்டிருந்தான் என நூல்கள் கூறுகின்றன. இருபாலும் பொருள்களே ஆக்கும் கொல்லர் குடியிற் பிறந்த சிறந்த புலவர்களுள் இவரும் ஒருவராதலின் கொல்லன் அழிசி எனக் குறிப்பிடப்பெற்றுளார். கொண்கான நாட்டில உள்ளதும், நன்னன் என்பானுக் குரியதும் ஆய ஏழில் எனும் மலையைப் பெயர்கூறிப் பாராட்டியிருப்பதால், புலவர், அம்மலையோடு ஒருவாற்றான் தொடர்புடையவராவர் எனக் கொள்ளலாம்.

"எம்மில் அயலது ஏழில் உம்பர்." (குறுந்: கஙஅ)

புலவர் பாடியனவாகக் குறுந்தொகைக்கண் காணப் பெறும் பாக்கள் நான்கும், தலைவன் பிரிந்தானுக, அவன் பிரிவைப்பொறாது வருந்தும் தலைவியின் துயரே பொருளாக வந்துள்ளன.

"தலைவனைப் பிரிந்து தனித்து நிற்கும் என் துயர் பெருக, அவளாயும் முல்லை மலரும் மாலைக்காலம் ஒன்றே போதுமாக, அமமாலையொடு, வாடையும் கலந்து வந்து வருத்தத் தொடங்குகிறது, மாலையும், வாடையும் விளைக்கும் வருத்தத்தை, அவர் நாட்டு மலையைக்கண்டு நிற்பதால் உண்டாம் இன்பம் ஓரளவு தணித்து நின்றது; அதுவும் இப்போது இன்றையிற்று; மலையைக் காணுவாறு இருள்வந்து சூழ்ந்துகொண்டது; இனி யெங்ஙனம வாழ் வேன்?" என்றும், "ஊர் எல்லாம் உறங்கும் நள்ளிரவினும், யான்மட்டும் உறங்காது உழல்கின்றேன்" என்றும், "தலைவன் பிரியத் தனித்துத் துயருற்றுப் பாயல்பெறாது படுதுயர் நோக்கியும், 'உறங்காது உழல்வது ஏனை?' எனக் கேட்டலும் செய்யாது இனிது உறங்கும் இரக்க

மற்றுரைக் கொண்டிருப்பதோடு, விரைந்து விடியாது, நீண்டபெரும் இரவினையும் கொண்டுள்ள இவ்வூர் எம்போல் துயருறுவார் வாழ்தற்கமையா வன்கண்மையுடைத்து; சண்டு உயிர்மேற்கொண்டு வாழ்தலினும், மாண்டு மடிதலே நன்றும்" என்றும், "தலைவனைப் பெற்று மகிழ்ந்து வாழ மாட்டாமையால், என் பேரழகு, பசலையால் பாழுறுகிறது; அப்பேரழகைப் பெற்றுள்ள எனக்கோ அதைப் பயன் கொள்ளும் என் தலைவர்க்கோ பயன்படாதொழிகிறது; அந்தோ! என் செய்வேன்?" என்றும் கூறிக்கூறி வருந்தினாள் தலைமகள் எனப் பாடிய அப்பாக்கள், மகளிர், தம்மை மணந்த கணவன்மார், தம்மைவிட்டுப் பிரிந்து சென்ற காலத்தே எத்தனைக் கொடிய துன்பத்தில் ஆழ்வர் என்பதைத் தெளிய உணர்த்தியுள்ளமை உணர்ந்து பாராட்டுவோமாக!

இவ்வாறு பாடிய பாக்களிடையே புலவர் அமைத்துள்ள அரிய உவமைகள், அப்பாக்கள் அளிக்கும் பொருட் சிறப்பிற்கு மேலும் பொலிவு அளித்து நிற்கின்றன; அவரை மலர், கிளிமூக்குப் போலும்; மணம் நிறை முல்லை அரும்பு, காட்டுப்பூனையின் கூரிய பல்போலும்; இருளில் மறையும் மலை, ஆழத்தால் இருண்ட கடலில் ஆழும கலம் போலும் என்ற இவ்வுவமைகள் புலவர்தம் புலமைக்குப் பொன்னுப் புகழளிப்பனவாம்;

தலைவி, தான்பெற்ற அழகு, தலைவன் பிரிந்து உறைவதால், தனக்கும் பயன்தாராது, தலைவனுலும் நுகரப்பெறுது அழிதற்கு, பசுதரும் பால், அப்பசுவின் கன்றுலும் உண்ணப்பெறுது, கறக்கும கலத்துட் சேர்ந்து பிறர்க்குப் பயன்தாராது, மண்ணிற் சிந்தி மாண்பிழத்தலை உவமை காட்டி ஞளாகப் பாடியுள்ள புலமை, அம்மம்ம! அரிது! அரிது! கன்று உண்டபின், கலத்திலும் நிறைந்து நிறைய வேண்டிய பால்போல், தலைவியின் அழகு, தலைவிக்கும் பயன்பட்டுத் தலைவனுக்கும் தன்னேரில்லாப் பேரின்பத்தைத் தரவல்லதாம்; அத்தகைய பேரழகு பயனுறுது கெடுதல் கொடுமையினும் கொடுமையேயாம்; தமக்கும்,

தம் கணவர்க்கும் பயன்பெறுதல் இன்றி, மகளிர் அழகு கெடுதலின் கொடுமையினை வள்ளுவப் பெருந்தகையாரும் உணர்ந்துள்ளார் என்பதை, "அற்றார்க்கு ஒன்று ஆற்றே தான் செல்வம், மிக நலம்பெற்றாள் தமியள் மூத்தற்று" என்ற அவர் குறட்பா குறித்தளது காண்க. அத்தகைய இன்பக்கேட்டின் கொடுமையினைப் புலவர் காட்டிய, பாலினது கேட்டின் கொடுமை குன்றின்மேல் இட்ட விளக்கென விளக்கி நிற்றலை உணர்ந்து புலவரை வியந்து பாராட்டுவோமாக.

இத்தகு பெரும் பொருளெலாம் தோன்றப் பாடிய புலவரின் பாக்களைப் படித்துப் பயனுறுவோமாக!

"கன்றும் உண்ணுது, கலத்தினும் படாது
நல்லான் தீம்பால் நிலத்து உக்காங்கு,
எனக்கும் ஆகாது, என்னைக்கும் உதவாது
பசலை உணீஇயர் வேண்டும்
திதலை அல்குல் என் மாமைக் கவினே."

"கொன்னூர் துஞ்சினும், யாம் துஞ்சலமே."

"உறைபதி அன்று, இத்துறை கெழு சிறுகுடி;
கானலம் சேர்ப்பன் கொடுமை எற்றி,
ஆனாத் துயரமொடு வருந்திப் பானாள்
துஞ்சாது உறைநரொடு உசாவாத்
துயிற்கண் மாக்களொடு நெட்டிரா உடைத்தே."

"பனிப்புதல் இவர்ந்த பைங்கொடி அவரைக்
கிளிவாய் ஒப்பின் ஒளிவிடு பன்மலர்
வெருக்குப் பல் உருவின் முல்லையொடு கலைய
கண்டிசின் வாழி! தோழி! தெண்திரைக்
கடல்ஆழ் கலத்தில் தோன்றி
மாலை மறையும் அவர் மணிநெடுங் குன்றே."

(குறுந்: உஎ, கஉஅ, கசடு, உசஅ)

## கஉ. கொல்லிக்கண்ணன்

கண்ணன் எனும இயற்பெயரினராய இவர், சேரர்க் குரிய கொல்லிமலையைச சூழஇருந்த நாட்டினராதல் பற்றிக் கொலலிககண்ணன் என அழைக்கப்பெற்றுளார். இவா குட்டுவனையும், அவனுக்குரிய கடற்கரை நகராகிய மரந்தை யினையும பாராட்டியிருததலும், சேரநாட்டோடு அவருக் கிருந்த தொடர்பினை விளக்கி நிற்கிறது. குட்டுவன் மரநதைநகரைச சார்நதுள்ள கடற்கரைக்கண் வாழும் வண்டாழ்ங்குருகு என வழங்கப்பெறும், யானையின் குரல் போலும குரலுடையவாய யானையங்குருகுகள், போர்க் களம் வென்ற வீராகள் தம வெற்றிகண்டு செய்யும் ஆர வாரம் கேட்டு அஞசும் எனக் கூறியுள்ளார்.

"முனஅது, யானையங்குருகின் கானலம் பெருந்தோடு
அட்டமள்ளர் ஆர்ப்பிசை வெரூஉம்
குட்டுவன் மரந்தை" (குறுந்: உச)

தலைவியைக் காதலிக்கும் தலைமகனே வரைவொடு வந்துளான்; அவனுக்கே தமரும் வரைவுகேர்ந்தார் என்ப தறிந்த தோழி, தலைவிபடும் துயா எல்லாம ஒழிந்தன எனக்கொண்டு மகிழ்நத துறையமைய வநதுள்ள அப் பாட்டில், வரைவிறகு முற்பட்டதாய களவுக்காலததே தலைமகள் படும் துயர்களை எல்லாம தொகுத்துக் கூறி யுள்ளார் புலவர்.

தலைவியின் வேறுபாடு காணும் செவிலி முதலானோர், "இத்தகைய வேறுபாடு நீ உறுதறகுக் காரணம யாது" எனக் கேட்டும், "பினி, நீ இலஇறநது செல்லற்க" எனத் தடுத்தும் துயர் விளைப்பர்; அததுயரினைத் தாங்குதல் வேண்டும் தலைவி; "அவர் வந்து மணப்பரோ? அன்றி மறந்தேபோவரோ?" எனத் தலைமகள் ஐயம் உற, "அவர் மறவார்; மறவாது வந்து மணப்பர்" எனத் தோழியர் தேற்றவும் தேறுளாய் வருந்தலும் நிகழும். ஊர் எல்லாம்

உறங்கும் நள்ளிரவில் தலைவிமட்டும் தனித்துத் துயிலா திருந்து துயா உறுவாள்; அங்ஙிலையில் தன்னை யாரேனும் காணின் கேடாம் என அஞ்சிப் படுக்கையறையிற்கிடந்து பொய்யே உறங்குவாள்போல் இருந்து துயருறுவள். இத்தகைய துயரம் எல்லாம் ஒழிய, "நினக்குத் திருமணம்; நீ விரும்பிய அவரே நினக்குக் கணவர்" என்ற இனிய சொல்லைக் கேட்டு மகிழும நாள வந்துற்றது கண்டு மகிழ்வதில் தவறுண்டோ?

"ஒறுப்ப ஓவலர், மறுப்பத் தேறலர்;
தமியர் உறங்கும் கௌவை இன்றாய்
இனியது கேட்டு இன்புறுக இவ்வூரே,
... ..... . .. .. .. .. .. .. ..... .. .. .
எம்குழல் விளங்கு ஆயந்தற் கிழவனும் அவனே."

(குறுந்: 52)

## கசு. கொள்ளம் பக்கனார்

இவர் இயற்பெயர் பக்கன் என்பது; கொள்ளம் என்ற பெயருடைய ஊரினராதலின் கொள்ளம்பக்கன் என அழைக்கப்பெற்றுளார். அக் கொள்ளம் என்றவூர் யாண் டுளது? இவர்க்குப் பக்கன் எனும் பெயர் இயற்பெயரா? காரணப் பெயரா? இவை போன்றன குறித்து ஒன்றும் கூறுதற்கியலவில்லை இவர் பாடிய பாட்டொன்று நற்றி ணைக்கண் இடம் பெற்றுளது.

தான் காதலித்த ஒரு தலைவியை விரைந்து வரைந்து கொள்ளக் கருதாது, களவொழுக்கமே விரும்பி வாழும் ஒரு தலைவன் அவளை வரைந்து கொள்வதை விரை வில் மேற்கோடல் வேண்டும் என விரும்பிய தோழி, அவன் உளத்தே, அவனையே எப்பொழும் நினைந்திருக்கும் அன்புடையாள் தலைவி; தலைவியின் களவொழுக்கம் அறியின் கடுஞ்சினம் கொண்டு, இற்செறித்துக் துயர் உறுத்தும் கொடியள் அன்னை; இவ்வொழுக்கத்தை அவ ளறியாவாறு நீட்டித்து மேற்கோடல் அரிதினும் அரிது என்ற உண்மைகளை உணர்விக்க விரும்பினள்; ஒருநாள், அவன் அவர் மனைப்புறத்தே வந்திருந்தானாக, அவன் கேட்குமாறு தலைவியை விளித்து, "தோழி! தாய் நின்னை அழைத்து, என் இனிய மகளே! கிளிகள் கதிர்களைக் கொய்யுமாறு விட்டுவிட்டு நீ யாண்டுச் சென்றிருந்தனை?" என்று கேட்டாளாக, அக்கேள்வியால் அச்சமுற்ற நீ நின் அறிவை இழந்து, "அம்மா! நான் அம் மலைநாடனைக் காதாற் கேட்டறிதலும் செய்யேன், கண்டதும் இலன்; அவனொடு கூடி மலர் பறித்தும், சுனை பாய்ந்தும் மகிழ்ந்து ஆடலும் புரிந்திலன்" என்றெல்லாம் நினைப்பிழைத்து கூறி உண்மையினை உரைத்துவிட்டனை; அதுகேட்ட அன்னை, ஆற்றொணாச் சினங்கொண்டு குடிப்பழி உண்டாமோ என்ற எண்ணத்தால் வெட்கித் தலைகுனிந்து சென்றாள்; "இனி, நீ தினைப்புனம் போதலும் இயலாது, மேலும் என் னென்ன விளையுமோ அறியேன்; இத்தினை அறியாமை

யுடைய நீ வாழ்வதெப்படியோ?'' என்றெல்லாம் கூறினாள். தாய்க்கும் மகளுக்குமே இடையில் இத்தகையதொரு நிகழ்ச்சி எதும் நடந்திலது ஆயினும், இவளே விரைவில் வரைந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவன் உளத்தே உண்டாக்கற்கு இவ்வாறு பொய் கூறலன்றி வழி வேறில்லை என்ற துணிவால் துணிந்து பொய்கூறினாள்; புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின், பொய்ம்மையும் வாய்மையிடத்தவாமன்றே?

தோழியின் படைத்து மொழிகிளவி அமைந்த பாட்டில், அச்சம் முன்னிறக்கால், அறிவிழந்து தாம் செய்த தவறைத் தாமே உரைத்துவிடும் மக்கள்தம் மன இயல்பு, நகைச்சுவை தோன்ற காட்டப்பட்டிருப்பது புலவர்தம் புலமைக்குப் பெருமையளிப்பதாம்.

''யாங்கு காகுவமோ? அணிறுதற் குறுமகள்!
'தேம்படு சாரல், சிறுதினைப் பெருங்குரல்
செவ்வாய்ப் பைங்கிளி கவர, நீ மற்று
எவ்வாய்ச் சென்றனை அவண்?' எனக் கூறி
அன்னை ஆஞள் கழற, முன்னின்று,
'அருவி ஆகுமும் பெருவரை நாடனை
அறியலும் அறியேன்; காண்டலும் இலனே,
வெதிர்புனை தட்டையேன் மலர்பூக் கொய்து
சுனைபாய்ந்து ஆடிற்றும் இலன்' என நினைவிலை
பொய்யல் அந்தோ! வாய்த்தனை; அது கேட்டுத்
தலையிறைஞ் சினளே அன்னை;
செலவொழிந் தனையால் அளியை நீ புனத்தே.''

(நற்· கபிள)

## கரு. கொற்றனார்

நக்கீரர் கண்ட இறையனாரகப்பொருள் நல்லுரையினை, அவர் கூற முதற்கண் கேட்டார் அவர மகனாகிய கொற்றனார் என அகபபொருள் உரை கூறும் கொற்றனார் இக் கொற்றனாரே, ஆகவே, இவர் நக்கீரர் புதல்வராவர்; கீரங் கொற்றன எனவும் வழங்கபபெறுவர் என்று இவர்பற்றிக் கூறுவாருமு உளர். இவ்வரலாறறிஞக கொளளுதற்கோ, தள்ளுதற்கோ ஏற்ற வலியுடைச் சான்று எதுவும கிடைத்திலது; இவர் பாடிய பாக்கள இரண்டு குறுநதொகைக்கண் இடமபெற்றுள.

புலவர் பாடிய பாக்கள் இரண்டும், கல்வி, பொருள், காவல் இவற்றுள் யாதேனும் ஒன்று குறித்துத் தலைமகன் பிரிந்து சென்றனாக, சென்றவன் செலலுங்கால் வருவேன் எனக் குறித்துச்சென்ற காலத்தே வாரானாதல் அறிந்து தலைமகள் வருந்தினாள் என்ற முல்லைத்திணைப்பொருள் குறித்தே வந்துள்ளன; அவ்விரண்டு பாட்டிலேயே, தலைவன், தலைவி, தோழி ஆகிய மூவர் கூற்றும் தோன்றுமாறு பாடியுள்ளார் புலவர், பிரியக் கருதிய தலைவன், தன் பிரிவாலாம தன்மையினைத தாங்கமாட்டாது வருந்தும் தலைவி, அவ்வருத்த மிகுதியால், அணிந்துள வளை முதலாம் அணிகள் தாமே கழன்றுகுமளவு உடல்மெலிந்து போதலைக் கண்டும், கடமையிற் றவறமாட்டாமையான், "அன்பே! இவ்வாறு நின் உடல்மெலிய, கண்ணீர் கசிந்து, தலைவர் சென்ற நாள் இன்றோடு இத்தனை எனச் சுவரினிடத்துக் கோடிட்டு எண்ணிக் கலங்கிநிற்கும் நின் வருத்தம் எல்லாம் விரைவில் நீங்குமாறு கார்காலம் தொடங்கிய அநனிலையிலேயே வந்துசேர்வன்" எனக் கூறிப் பிரிந்தான்;

> "வீங்கிழை நெகிழ விம்மி, ஈங்கே
> எறிகண் பேதுறல்; ஆய்கோ டிட்டுச
> சுவர்வாய் பற்றும் நின்படர் சேண்நீங்க
> வருவேம்." (குறுந்: 58அ)

பிரிந்துசென்ற தலைவன் வந்திலன்; அவன் குறித்துச் சென்ற பருவமும் வந்திலது; ஆயினும், அவனே இமைப் பொழுதும் பிரிந்தறியாப் பேரன்பினளாய தலைவிக்கு, அவன் பிரிந்து நெடுங்காலம் ஆய்விட்டது போன்ற உணர்ச்சி உண்டாகிவிட்டது; அவனையே எண்ணியிருக் கும் உளத்தே, அவர் பிழையலர்; அவர் குறித்த காலம் இன்னமும் வந்திலது என்ற நிலையினை உணரும ஆற்றல் இலதாயிற்று; ஆகவே, அவர் வந்திலர்; அவர் நம்மை மறந்து ஆண்டே நிலையாக நின்றுவிட்டார் என்றே எண்ணி விட்டாள்; உடனே அவள் உளத்தே ஒரு பெரும வெறுப்பு உயிர்பெற்று எழுந்தது. அவர் இன்றேல், யான் இல்லை; என் உயிர்க்கு உயிர்போன்றவர் அவர, தன்னை இன்றி ஓர் இமைப்பொழுதும் வாழேன் என்பதை உணர்ந்தவர் அவர்; அத்தகையார் என்னை மறந்து சென்ற இடத்திலேயே சேண்நெடுங்காலம் நிற்கும வன்மையுடையராகிவிட்டனர் எனின், அவர்க்கு என்பால் உள்ள அன்பு அகன்றுவிட் டது என்றே கொள்ளுதல் வேண்டும், என்பால் அன்பு அற்றூர் நல்வாழ்வில், நான்மட்டும் ஏன் கருத்தினைச் செலுத்துதல் வேண்டுமெ, சென்றவர், சிறக்க மீள்க என நான் இதுகாறும மேற்கொண்ட அருள் அறங்களை இன் றேடே மறந்தேன்; இனி மலையுறை மகளாம் தூக்கைக்குப் பலியும் இடேன்; கையிற் காப்புநூலும் கட்டேன்; நிமித்த மும நாடேன்; நற்சொற் கேட்டலும் செய்யேன்; இறுதி யாக அவரை நெஞ்சால் நினைத்தலும் செய்யேன்" என் றெல்லாம் கூறி வருந்தினள்.

"விடாமுகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்
கடனும் பூணும்; கைந்நூல் யாவாம,
புள்ளும் ஓராம்; விரிச்சியும் நில்லாம்,
உள்ளலும் உள்ளா மன்றே? தோழி!
உயிர்க்குயி ரன்னர் ஆதலின் தம்மின்று
இமைப்புவரை அமையா நம்வயின்
மறந்துஆண்டு அமைதல் வல்லியோர் மாட்டே."

(குறுந்: உகஅ)

வருந்தும் தலைவியின் நிலையினைக் கண்டாள் தோழி; தனியே இருப்பாரைக் கார்காலமும், அக்காலத்து மாலையும் பெரிதும் வருத்தும் என்பதை உணர்வாள அவள்; ஆயினும் ஆற்றியிருத்தலே அறமாம் என எண்ணினாள்; மேலும் காகாலம தொடங்கிவிட்டது என உறுதியாகத துணிதற்கில்லை, முல்லை, காணும் இடம எங்கும் மலரும் காலமே கார்காலம்; அது அவ்வாறு மலர்ந்துவிடவில்லை; காட்டில், அங்கும இங்குமாக, இப்போதுதான் மலரத தொடங்கியுளளது; காட்டில் ஆனிரை மேய்த்துவரும் கோவலர் தலையில் மட்டுமே அது காணப்படுகிறது. ஆகவே, அக்காலம் கார்காலதிற்கு மிக அணுகிய காலமே அன்றிக் கார்காலம் அன்று; இந்த உண்மையைத் தலைவிக்கு உணர்த்தி அவளைத்தேற்ற எண்ணினாள்; அவர் வரும் வழி மேல் விழிவைத்து நின்றுகொண்டிருக்கும் அவள்பால் மெல்லசசென்று, "தோழி! அவர் கார்காலத தொடக்கத்தே அன்றே வருவதாகக் கூறிச் சென்றுளார்; அவர் வாய்மொழி தவறுதவர்; அக்காலத்தே நில்லாது வருவர்; அவர் கூறிச்சென்ற கார்காலம் இன்னமும் வந்திலது என்பதை மறந்துவிடாது, கார்காலத் தொடக்கத்தை அறிவிக்க முல்லை காணுமிடமெங்கும் மலர்ந்துவிடவில்லை என்பதையும், அம்மலர், ஊரில் உள்ளார் ஒவ்வொருவர் தலையிலும் காணப்பெறுமையாலும், காடு சென்று திரும்பும் கோவலர் தலையில்மட்டுமே காணப்பெறுவதையும் நோக்குவாயாக; ஆகவே, அது இப்போதுதான் மலரத் தொடங்கியுளது; அதனால், இது கார்காலம் அன்று, அதற்கு அணுகிய முற்காலமே என்பதை உணர்ந்து உளந் தேறுவாயாக" என்று கூறித் தேற்றினாள்.

"வருவேம் என்ற பருவம் உதுக்காண்
தனியோர் இரங்கும் பனிகூர மாலைப்
பல்லான் கோவலர் கண்ணிச
சொல்லுப அன்ன முல்லைமென் முகையே,"

(குறுந்: கூடுஅ)

மூவர் உள்ளமும், உரையும் புலப்படப் பாடிய இப் பாக்களில், தலைவியின் துயர்நிலை கண்டும் பிரியும் தலைவன்

கடமையிற்றவறுக் கருத்துடைமையினையும், உயிர்க்கு உயிர் போன்றனும், இமைப்பொழுதும் பிரிதற்கு இயலாதானும் ஆய அவன் பிரியவும், இல்லத்திற்கு ஆக்கம் கருதிப் பிரிந்தளான் என்ற எண்ணத்தால் துயர் பொறுத்து ஆற்றியிருக்கும் தலைவியின் கடமையிற்றவறுக் கடப்பாட்டினையும புலவர் நன்கு காட்டியுள்ளார். அக்கால மக்கள் ஆண்டவனைப் போற்றும் முறையும், அவரிடத்தே காணப்பெறும் சமயநிலையும், அவர் பாட்டில் ஓரளவு வெளியாதல், அக்காலத தமிழகதனை அறிய விரும்புவார்க்கு அருந்துணையாம்.

## ௧௬. கோண்மா நெடுங்கோட்டனார்

இவரைப்பற்றி யாதும் விளங்கவில்லை. யானையின் நெடுங்கோட்டை கோண்மாநெடுங்கோடு எனச் சிறப்பித் தமையான், இவர்க்கு இப்பெயர் உண்டாயிற்று எனக் கொள்ளலாம். இப்போது கிடைத்துள்ள இவர் பாட்டில், இதுபோன்ற சொற்றொடர் காணப்படவில்லை. இவர் பாடிய பாட்டு இஃது ஒன்றே எனத் துணிதல் கூடாது; இதுபோன்ற பல பாக்களை அவர் பாடியிருத்தலும் கூடும்; நமமால் இப்போது காணப்பெறு அப்பாக்கள ஒன்றில் இச் சொற்றொடர் அமைந்திருத்தலும் கூடும். எதையும் துணிந்து கூறுதற்கு இல்லை.

பரத்தை வீட்டில் வாழும் தலைமகன், தனக்கு மகன் பிறந்தான் எனக் கேட்டுத் தன் வீடு வருவோன், நள்ளிர வில், ஊரில் உள்ளார் எவரும காணுவாறு, கள்வனைப் போல வந்தான் என்று கூறி, மகனுக்குத் தந்தையாம் தகுதியுடையராய தாம், தவறி ஒழுகுதல் தகுதியுடையது அன்று என்ற எண்ணத்தை இயல்பாகவே பெற்றுத் திருந்திய நெறியினராவர் அக்கால ஆண்மக்கள் என்ற அரிய செய்தியை அறிவித்துள்ளார் புலவர்.

> "நள்ளென் கங்குல் கள்வன் போல
> அகன்றுறை ஊரனும் வந்தனன்
> சிறந்தோன் பெயரன் பிறந்த மாறே." (நற்: ௧0)

இப்பாட்டில் மகப்பேறு பெற்ற ஆண்மகனுக்குரிய தந்தையைச் சிறந்தோன் என்றும், பிறந்தமகனை, அச்சிறந் தோன் பெயரன் என்றும் பெயரிட்டுப் பாடியுள்ளமை பாராட்டும் தன்மையவாம்.

## கஎ. கோவதத்தனார்

கத்தனார் எனும் பெயருடைய இப்புலவர், கோவலர் குடியிற் பிறந்தமையாற் போலும், கோவதத்தனார் என அழைக்கப்பெற்றுளார்; இவர் கோவலர் குடியிற் பிறந் திருத்தலும் கூடும் என்பது, இவர் பாடிய பாக்கள் இரண்டும், ஆயர்குடியிருப்பாம் முல்லைநில ஒழுக்கமே பொருளாகப் பாடப்பட்டுள்ளமையானும் தெளியப்படும். சில ஏடுகளில், இவர் பெயர் கோவத்தன் என்றும் எழுதப் பட்டுளது.

கார்காலத் தொடக்கத்தே நில்லாது மீள்வன் என உறுதியுரைத்துப் பிரிந்து சென்றுளான் தலைவன்; அவன் அக்காலத்தே தவறுது வந்து சேர்வன் என்ற உறுதியால் உளநோதலியுள்ளாள் தலைவி; ஒருநாள் மேகம் வலமாக எழுந்து, மின்னி இடிக்கத் தொடங்கிவிட்டதையும், அம் மேகத்தின் எழுச்சி கண்ட மயிலினங்கள் தம் தோகை விரித்து ஆடி ஆரவாரிப்பதையும் கண்டாள்; அந்நிகழ்ச்சி கள் கார்காலம தொடங்கிவிட்டதை உறுதி செய்யும் என்பதை உணர்ந்த தலைவி, அக்காலம் வரவும், அவர் வாராமை கண்டு வருந்தினள்; வருந்திய தலைவி, தன் உள்ளம் உணர்வழிந்து வாடுவதைத் தன் தோழிக்கு உரைத்தாளாகப் பொருளமைத்துப் பாடியுள்ளார் ஒரு பாட்டில்,

> "என்னெனப் படுங்கொல்? தோழி! மின்னுபு
> வான்எர்பு இரங்கும் ஒன்றோ; அதன்எதிர்,
> கானமஞ்ஞை கடிய எங்கும்;
> ஏதில கலந்த இரண்டற்கு என்
> பேதை நெஞ்சம் பெருமலக் குறுமே." (குறுந்: ககச)

கார்காலம் வந்துற்றது அறிந்து வருந்துகிறாள் தலைவி; அவள் துயர்போக்கித் துணைபுரியும் கடப்பாடுடையளாய தோழி, அவளைத் தேற்றும் வழி யாது எனப் பலகால் எண்ணிப் பார்த்தாள்; யாது கூறினும் அவள் உளம்

தேறுள்; கார்காலத் தொடக்கத்தே வருவேன் என்றவன், அக்காலம் தொடங்கவும் வாராஞகவே, அவள், அவன் சொல் பிழைபட்டமை ஒன்றற்கே வருந்துகிறுள்; ஆகவே, அவன் சொல் பிழைபட்டிலது என்பதை அவள் ஏற்குமாறு ஏற்றது செய்யினல்லது அவள் துயர் ஒழியாது; அவன் சொல்பிழையாமை வேண்டின், இது கார்காலம் அன்றுதல் வேண்டும்; ஆனல், இது கார்காலமே; கார்காலத்து மழையும் பெய்துவிட்டது; அக்காலத்து மலரும் கொன்றையும் மலர்ந்துவிட்டது; இங்கிலையில் அவளேத தேற்றுதல்வேண்டின், பொய் கூறுதலன்றி வேறு வழியில்லை; வந்த மழை, கார்காலத்து மழையன்று; இது காலமல்லாக் காலத்து மழை; மழைபெய்யக் கண்ட கொன்றை, அது வம்ப மழை என்பதை அறியும் அறிவின்மையால், பூக்கத்தொடங்கி விட்டது; ஆகவே இது கார்கால மன்று; அவர் குறித்த பருவம் இன்னும் வந்திலது; அக்காலம்வரின், அவர் நில்லாது வருவர் எனப் பொய்கூறித் தேற்றினுள்; "பொய்ம்மையும வாய்மை இடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்" என்ற பொருளுரை உணர்ந்தாள்போல், பொய்கூறித் தலைவியின் துயாபோக்கிய தோழியின் கூற்றினை மற்றொரு பாட்டில் அமைத்துப் பாடியுள்ளார் புலவர் :

" மடவ மன்ற; தடவுநிலைக் கொன்றை;
கல்பிறங்கு அத்தம் சென்றோர் கூறிய
பருவம் வாரா அளவை, நெரிதரக்
கொம்புசேர் கொடியினர் ஊழ்த்த
வம்ப மாரியைக் கார்என மதிததே." (குறுந்: ஈஈ)

## கஅ. கோவேங்கைப் பெருங்கதழ்வர்

குறியபல கற்களிடையே பருத்து வளர்ந்துளது உயர்ந்த ஒரு வேங்கைமரம்; மரம் நிற்கும் இடத்தருகே, ஒடிவருகிறது, மலையுச்சியினின்றும் விரைந்து விழும் ஓர் அருவி; வீழும் அருவியின் விரைவால் தெறித்து விழும் கற்களால் தாக்குண்டு, மலர்கள் எல்லாம் உதிர்ந்துவிடுவ தால் வெறுஞ்சினை உடையவாகிறது அவ்வேங்கை; அவ் வாறு வந்த அவ்வருவி, குறும்பொறைகள் இடையிடையே குறுக்கிடுவதால் வளைந்து வளைந்து செல்லும் காட்சி, பாம்பு செல்வதுபோல் தோன்றிக் கண்ணை அளிக்கிறது. இவ்வாறு காட்டும் ஒரு காட்சியில், புலவர், வேங்கையின் சிறப்பையும், அருவியின் விரைவையும் சிறப்பித்துப் பாடி யுள்ளமையால், கோ வேங்கைப் பெருங்கதழ்வர் எனப் பெயரிட்டுப் பாராட்டப்பெற்றுளார்.

ஒரு தலைவன் வரைந்து கொள்ளுதற்கு வேண்டும் பொருளதேடிக் கொணர்வான்வேண்டிப் பிரிந்தான்; அவன் பிரிவாற்றாது வருந்தினள் அவன் தலைவி; அவ்வாறு வருந்துவாளை நோக்கி, "தலைவர் மணமுயற்சி மேற் கொண்டன்றே பிரிந்துளார்; அத்தகையார் நட்பைப் பெற்ற நீ வருந்துதல் அழகன்று" என்று கூறித் தேற்ற முயன்றாள் அவள் தோழி. அதுகேட்ட தலைவி "தோழி! அருவி நிலத்தில் பாய்ந்து வளந்தந்து பயன் தருவதாயினும், இடையில், கல்லை உருட்டலும், மலர்களைச் சிதைத்தலும், அரவுபோல் தோன்றலும் ஆய தன்பந்தரும் செயலையும் உடையதாதலைப்போன்றே, தலைவன் நட்பு, இறுதியில் இன்பமே தரும் என்றாலும், இடையில் பிரிந்து செல்வதால் பெருந்துயர் தாராநின்றது; யான் வேண்டுவது இத்தகைய நட்பை அன்று; பிரியாப் பெரு நட்பைப்பெறவே என் னுள்ளம் நாடுகிறது; அந் நட்பைப் பெறமாட்டாமையால் வருந்துகின்றேன்" என்று கூறினள். தலைவிக்கும் தோழிக்கும் நிகழ்ந்த இச்சொல்லாடல்கள், வெளிப்படை

யாகவும், உவமைவாயிலாகக் குறிப்பாகவும் விளங்குமாறு புலவர், கோவேங்கைப் பெருங்கதழ்வர் பாடிய பாட்டு குறுந்தொகைப் பாக்களுள் ஒன்றாக நின்று காட்சியளிக்கிறது :

"அம்ம ! வாழி தோழி ! நம்மொடு
பிரிவின்றாயின், நன்றுமன் ; தில்ல
குறும்பொறைத தடைஇய நெடுந்தாள் வேங்கைப்
பூவுடை அலங்குசினை புலம்பத் தாக்கிக
கல்பொருது இரங்கும் கதழ்வீழ் அருவி
நிலமகள் பாம்பின் இழிதரும்
விலங்குமலை நாடனொடு கலந்த நட்பே."

(குறுந் : கஉச)

## கஉ. கோழிக் கொற்றனர்

கோழி என்பது உறையூர்க்கு ஒருபெயர்; "முற் காலத்து ஒரு கோழி, யானையைப போர்தொலைத்தலான், அந்நிலத்திற்செய்த நகர்க்குக் கோழி என்பது பெயரா யிற்று" எனபா அடியார்க்குநல்லார்; "முறஞ்செவிவாரணம் முன்சமம் முருக்கிய புறஞ்சிறைவாரணம்" என்பது சிலப்பதிகாரம் அநநகரிற் பிறந்து வாழ்நதமையால் புலவர் கோழிக்கொற்றனர் என அழைக்கபபெற்றுளார். இவர் பெயர் கூழிக்கொற்றன் எனவும, கூளிக்கொற்றன் எனவும சில ஏடுகளில் காணப்படுகிறது

தலைவன் ஒருவன், ஒரு தலைவியை அவள் தோழியும் அறியாநிலையில கண்டு காதலித்தான், அவள் விருமபும் வண்ணம, பைஞ்சாய்க்கோரையால் பாவை பண்ணி அளித் தான்; அவள மாபிலும், தோளிலும் தொய்யில் எழுதி மகிழ்ந்தான், இததகைய இன்பவாழ்வு, தோழியின் துணைபெறின் எளிதிற்கிடைக்கும் எனக் கருதினன்; தோழிபால்சென்று தன் குறை கூறினன்; தோழியோ, அவாதம் நட்பை அறியாளபோன்று, தலைவி இளையள; பெறுதற்கு அரியள என்றெலலாம கூறிப் போக்கிவிட் டாள; அதனால் வருநதிய அவன், எனக்கும் அவட்கும் உண்டாம் அன்பு உறவினை அறியமாட்டாத இவர், அவளை எனக்களிக்க மறுக்கின்றனர், அவளைக் காப்போர்தாம் முறையற்றவரேயன்றி, இவ்வூராள் அரசனும் முறையிலா னல்லன், அவனுக்குரிய அறங்கூறு அவையிடததே சென்று, ஆண்டுவாழ் ஆன்றோர்பால் எம் இருவர் நிலையினை யும் கூறி அவளைப் பெறுவேன; ஆண்டும் வந்து மறுக்கும் ஆற்றல் இவர்க்கு உண்டாமோ? என்று கூறினன். அவ் வாறு கூறுவதுகேட்ட தோழி, தலைவிபால் அன்புடையா ளாதலே அன்றி, அவளோடு தொடர்பும் உடைய இவனைத் தடைசெய்யின், மடலேறி மன்றம்படர்தலும் செய்வன் என அஞ்சி அவனுக்கு அவளை நேர உடன்படுவள் எனத் தலைவனின் கூற்றமையப் பாடிய இப்பாட்டில், புலவர்

கொற்றனர், நாட்டுமக்கள்பால் நலன் அல்லன தோன்றின், அந்நாட்டு ஆன்றோர், அல்லன நீக்கி நல்லன நாடும் நற்பண்புடையராதல முறையுடையரசன் ஆளும் நாட்டிலேயே ஆம் என்ற அரசியல் உண்மையினையும் உணர்த்தியுள்ளார்.

"பணைத்தோள் குறுமகள் பாவை தைஇயும்,
பஞ்சாய்ப் பள்ளம் சூழாதும், மற்று இவள்
உருதெழு வனமுலை ஒளிபெற எழுதிய
தொய்யில காப்போர் அறிதலும் அறியார்;
முறையுடை அரசன் செங்கோல் அவையத்து
யான் தற்கடவின், யாங்காவது கொல்?
பெரிதும் பேதை மன்ற,
அளிதோ தானே இவ அழுங்கல் ஊரே."

(குறுந்: உஎசு)

## உ0. சங்கவருணரென்னும் நாகரையர்

நாகரையர் எனும் இயற்பெயர் பூண்ட இவர், அக்கால மக்களால் சங்கவருணர் என்றும் அழைக்கப் பெற்றுளார். சங்கவருணன் என்பதற்கு வளைவணன் என்பது தமிழ் மொழிபெயர்ப்பு ; வளைவணன் என்றொரு நாகநாட்டரசன் மணிமேகலையிற் கூறப்பட்டுள்ளான்; இவர், நாகரையர் என்ற பெயருடைமை நோக்கின், இவர் நாகநாட்டில் அரசகுடியிற் பிறந்து, தமிழகம் போந்து, தமிழறிந்த ராவர் என்று கொள்ளல் பொருந்தும் சோழவேந்தர்க்குப் பிறவாள் என்பாள் மணம்செய்துதந்த வளைவணனே, மூடிவில் தமிழறிவு அறிந்த சான்றோனுய்த்தமிழகமடைந்து வாழ்ந்தான் ; அவன் வரலாறு விளங்கவே, மக்கள் அவனைச் சங்கவருணர் என்னும் நாகரையர் என வழங்கினர் எனக் கொள்வாரும் உளர்.

நாகரையர், தந்துமாறன் எனும் குறுநிலத் தலைவன் ஒருவனை அடைந்து கூறிய அறவுரை அரசலெல்லாம் அறிந்து பின்பற்றவேண்டிய பெருமை வாய்ந்ததாம் ; "பெரிது உண்ணின், நோய் அளவின்றிப்படும்" என்ப ஆதலின், நோயற்ற வாழ்வு வேண்டும்; அரசர் மீதூண் விரும்புதல் கூடாது ; சினம், சேர்ந்தாரைச் கொல்லும் கொடுமை உடைத்து; ஆதலின், அரசர்பால் அது இருத்தல் ஆகாது ; பெரும்பொருளைச் சில சொல்லால் விளக்குவோரே பேரறிஞராவர்; ஆதலின் அரசர் சில சொல் கூறும் ஆற்றல் உடையராதல் வேண்டும் ; துணுக்கிய கேள்வி உடையாரே, வணங்கியவாயினராதல் இயலும் ஆதலின், வேந்தராவார், அறிவன அறிந்த ஆன்றோர்பால் கேள்வி பல கேட்கும் செம்மையுடையராதல் வேண்டும் ; அரசர் எப்பொருளையும் துணுகி அறியும் அறிவினராதல் ஆக்கம் பெருகும் வழியாம் ஆதலின் அவர்பால் அத் துணுக்கறிவு அமைதல் இன்றியமையாததாம்; அரசர் அடைந்தாரை ஆதரிக்கும் அருள் உள்ளம் உடையராதல் வேண்டும் ; வருந்தி வருவார்க்கு உண்டற்கினிய உணவும்,

பருகற்கினிய நீரும் அளிக்கும் கொடைக்குணம் பொருந்தி நிற்றல் பெருந்திருவளிகரும். எல்லார்க்கும நன்றும பணிதல் ஆதலின், பணிவுடைமையுப, கேட்டார்ப் பிணிக்கும சொல்வன்மையும், அரசாக்கு அரணும ஆதலின் அப்பண்புகளையும் அவா உடையராதல் வேணடும்; அரசர், தமக்கென வாழாப் பிறர்கருரியராம் பண்புடையராதல், எல்லாப் பணபுகளிலும இறபப உயாந்த பண்பாம், அது அவர்பால் நிற்றல்வேண்டும. இத்தகைய பண்புகள எல்லாம ஒருங்கே வாய்ககபபெற்றவரே உயர்ந்த அரசராவா; ஆனல், அரசர்தம பண்பு இஃது என அறிந்த அரசர் உலகில் மிகமிகச் சிலராவர்; இப்பண்பு அறியா அரசரே மிகப்பலராவர்; இதுவே உலகியல்; அறியாதார் செல்வம் நிலையற்றுப்போம், ஆகவே, தந்தமாற! நாடோறும் நினைக்குரிய ஒழுக்கததிற் குன்றுதொழிக! நின்பால் பொருள் நச்சிவருவார்க்கு வேண்டும பொருளை நிரம்ப நல்குவாயாக!" என்று கூறும புலவர்தம் பொருளுரை நாடாளும் அரசர்க்கேயன்றி நம்போலும் மக்களுக்கும் வழிகாட்டியாதல் காண்க.

"பெரிது ஆராச், சிறுசினத்தர்;
சிலசொல்லால், பல கேள்வியர்;
நுண் ணுணர்விஞல், பெருங்கொடையர்;
கலுழ் நனையால், தண் தேறலர்;
கனிருய்யால், கொழுந் துவையர்;
தாழ்உவந்து, தழூஉ மொழியர்;
பயன் உறுப்ப பலர்க்கு ஆற்றி,
ஏம மாக இந்நிலம் ஆண்டோர்
சிலரே; பெரும! கேள்இனி, நாளும்
பலரே தெய்ய அஃது அறியாதோரே;
அன்னேர் செல்வமும் மன்னி நில்லாது;
இன்னும் அற்று அதன்பண்பே; அதனுல்:
நிச்சமும் ஒழுக்கம் முட்டிலை: பரிசில்
நச்சுவர நிரப்பல் ஓம்புமதி" (புறம்: நூசு0)

## உக. சத்திநாதனார்

இவர் பெயர் சில ஏடுகளில் சததிநாகனர் எனவும் காணப்படுகிறது ; ஒரு பெண்ணைக் கண்டு, பெருங்காதல் கொண்டுவந்த ஓர் ஆண்மகன, அவள்பால் கொண்ட காதற் பெருமையால கலங்குகின்ற நிலையினைக் கண்ட அவன் நணபன், இவ்வாறு வருநதற்காம் காரணம யாது என வினவ, "தோழ! நாணல முளைபோலும, ஒளிவீசும் பற்களையும், வளையணிந்த கைகளையும உடையாள் ஒரு இளையாள என்னை இவ்வாறு வருதலினள்" என்று கூறினன் என்ற கூற்றமைநத இவர் பாடடு ஒன்று குறுந தொகைப பாக்களிடையே காணபபடுகிறது.

பேரறிவும், பேராற்றலும் உடைய தன்னை ஓர் இளைய மகள் வருத்திய நிகழ்ச்சிக்குப் பேருருவும, பேராண்மையும் நிறைந்த காட்டியாளை ஒன்றைப பாமபின் சிறு குட்டியொன்று வருதலிய நிகழ்ச்சியை உவமை கூறியதாகப் பாடிய பாட்டில், பாம்பின் இளமை, தலைவியின் இளமைக்கும், அதன் வளைநதவரிகள, அவள வளைநத கைவளைக்கும், அதன் கூரிய பற்கள, அவள் ஒளிவீசும் பற்களுக்கும் உவமையாகப் பாடிய பண்பு பாராட்டற் குரியதாம்.

காண்டறகுக் கவின்மிக்குத தோன்றும் பாம்பு, செயலால் கொடுமை விளைதததலேபோல், பார்ப்பதற்குப் பேரழகுடையளாய தலைவி, செயலால், கொடுமை விளைத்து விட்டாள்; பாம்பு தன் பற்களால் கடித்துத துயர்தருதலே போல், இவள் தன் பல்லைக் காட்டியே துயாதந்துவிட்டாள்; எவர்க்கும் அடங்காத யானை, அரவின் சிறு குட்டியால் அணங்குற்றதேபோல், எவர்க்கும தோலா யான், இச்சிறு பெண்ணல் பேதுற்றேன் என உவமை உரைக்குந் தொறும் விரிந்து பொருள் காட்டுமாறு பாடிய பெருமையே பெருமை!

செயலால், பாம்பும இவளும் ஒப்புமை உடையரே ஆயினும், செயல்முறையால், பாமபினும் கொடியாள் இவள என்பதையும கூறியுள்ளார், பாமபு, யானையைத் தீண்டிக் கடித்தாலன்றித் தீங்குவிளைத்தல் இயலாது; இவளோ, அணுகவாராது அகன்று நின்று பார்த்த அளவி லேயே பெருநதுயர்தரும பேராற்றல் உடையவள் என்று கூறுவதையும் நோக்குக

"உருவுகண்டு எள்ளாமை வேண்டும், உருள்பெருந் தேர்க்கு அசசாணி அன்னர் உடைத்து" என்ப ஆகலின், பாம்பு, இவ்யாள் இவர்தம சிறுமையும், யானை, தலைவன் இவர்தம் பெருமையும் கண்டு மயங்குதல் கூடாது என்ற பொருளும தோன்றப் பாடிய புலமை கலம் பாராட்டற் குரித்து; இதனுணைப் பெரும பொருள் எல்லாம் ஒருங்கே அமையவந்த அவர் பாட்டும நான்கடியே கொண்ட சிறிய பாட்டாதல் அவர் பெருமைககு ஓர் எடுத்துக் காட்டாம:

"சிறுவெள் அரவின் அவ்வரிக் குருளை
கான யானை அணுகி யாஅங்கு,
இளையள், முளைவாள் எயிற்றள்,
வளையுடைக் கையள் எம்அணுங்கி யோளே."

(குறுந் : ககக)

## ஊ. சாகலாசனார்

இவரைப்பற்றி ஒன்றும தெரிந்திலது; இவர் தாம் பாடிய பாட்டொன்றில், குட்டுவன் என்பானையும், அவன் தேர்ப்படை, குதிரைப் படைகளையும், அவனுக்குரிய கழுமலநகர்ச் சிறப்பினையும், அவன்பால் அமைந்து விளங்கும் கொடைக் குணத்தையும் எடுத்துக் கூறிப் பாராட்டி இருப்பதால், இவர், சேரநாட்டினர்; குட்டுவன் பால் பேரன்பினர் என்று கொள்ளலாம்:

"கொய்சுவற் புரவிக் கைவண் கோமான்
நற்றேர்க் குட்டுவன் கழுமலம்." (அகம் · உஎ0)

பரத்தை வீடுசென்று வந்த ஒருவன், தன் தவறு கண்டு ஒறுக்கும் மனைவிபால், நீ கூறுவதுபோல் யான் யாரையும் அறியேன் என்று கூறினன்; அதற்கு அவள், "ஐய! ஒரு நாள், குற்றமற்ற கைகளையும், பவளம்போல் சிவந்த வாயினையும், நாக்கு பயின்று அறியாமையால் வெளிப்போதரும் மழலைமொழிகளையும், யாவராலும் விரும்பப்பெறும் பண்பாட்டினையுமுடைய நம் மகன் தெருவில் நடைதேர் உருட்டிக்கொண்டிருந்தான்; அந்நிலையில் அழகிய அணிபல அணிந்த ஒரு பெண் ஆண்டு வந்தாள்; வந்தவள், ஆடும் நம்மகன் நின்னையே ஒத்திருத்தலைக் கண்டாள்; உடனே, ஆங்கே யாரும் இன்மை அறிந்து அவனை எடுத்து மார்போடு அணைத்து மகிழ்ந்து நின்றாள்; அந்நிலையில் "இளையவளே! ஏனை இவ்வச்சம்; நீயும இவனுக்குத் தாயே" என்று கூறிக்கொண்டே ஆண்டுச் சென்று, அவளை அணைத்துக்கொண்டனை; களவு செய்தார், தம் களவுப்பொருளோடு தம்மைக கைப்பற்றினரைக் கண்டக்கால், முகம்கவிழ்ந்து நிற்றலைப்போல், நிலத்தைக் கால்விரல்கீறி, நாணிநிற்பாளாயினள்; அந்நிலையில் நின்மகனுக்குத் தாயாம் தன்மை அவள்பாலும் இருத்தலை அறிந்து அவளை விரும்பினேன். இஃது இவ்வாறுகவும், யாரையும் அறியேன் எனப் பொய்வழங்குதல்

அழகாமோ?'' என இடித்துக் கூறினாள். தமிழகத்து மனை யொன்றில் நிகழ்ந்த மாண்புமிகு இக்காட்சியைப் பாட்டிற் படமாக்கி அகத்தில் மாட்டி அகமகிழ்ந்துள்ளார் புலவர்

" மாசில் அங்கை, மணிமருள் அவ்வாய்
நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்,
யாவரும் விழையும் பொலந்தொடிப் புதலவனைத்
தேர்வழங்கு தெருவில் தமியோற் கண்டே
கூர்எயிற்று அரிவை குறுகினள் : யாவரும்
காணுநர் இன்மையின், செத்தனள் பேணிப்
பொலங்கலம் சுமந்த பூண்தாங்கு இளமுலை
" வருகமாள என்உயிர்" எனப் பெரிதுவந்து
கொண்டனள் நின்மோள் கண்டு நிலைச்செல்லேன்
"மாசில் குறுமகள் ! எவன் பேதுற்றனை?
நீயும் தாயை இவற்கு "என யான்தன்
கரையவந்து விரைவனென் கவைஇக்
களவு உடம்படுநரில் கவிழ்ந்து நிலங்கிளையா
நாணி நின்மோள் நிலைகண்டு யானும்
பேணினென் அல்லனோ? மகிழ்ந !"

(அகம் : கசு)

---

## உங. சாத்தந்தையார்

சாத்தந்தையார் என்ற இச்சொல் சாத்தன் தந்தை யார் எனப பொருள்படுமாதலின், புலவர், சாத்தன் என் பார்க்குத தந்தையாம தகுதியுடையராவர் என்ப; ஆயினும் அப்பெயருடைய மகன் புலவர்க்கு இருந்ததாகக் கூறும் சான்று எதுவும் கிடைத்திலது. அதற்கு மாறுக, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றுகிய திணை மொழி ஐம்பது பாடிய கண்ணன் சேந்தனர், நம் புலவரின் மகனுவர் என்ற வரலாறே வழக்கில் உளது. புலவர், போரவைக் கோப்பெருநற்கிள்ளி என்ற சோழர்குல இள வரசன் ஒருவனேப் பலபடப் பாடியுள்ளமையான், இவர் சோணுட்டினராவர் எனக்கோடல் பொருந்தும்.

போரவைக் கோப்பெருநற்கிள்ளி, தித்தன் என் பானின் மகனுவன்; தந்தையின் செயலிடத்தே வெறுப் புற்ற கிள்ளி, அவனூரின் நீங்கி வேறூர் ஊரில் வாழ்ந்து வந்தான்; கிள்ளி பெருங்குணமும், நற்பண்புகளும் நிறைந்த பெருந்தகையாவன் என்பதை அவன் பெயராலே அறிய லாம்; போரவை கூட்டி மற்போர், விற்போர் முதலிய போர்களேச் செய்து மேம்படும் இயல்பினன் ஆதலின், போரவைக்கோ எனச் சிறப்பிக்கப் பெற்றுளான். இவன் தன்காலத்தே காவிரியின் வடகரைக்கண்ணதாய முக் காவல்நாட்டு ஆமூரில் சிறந்து விளங்கிய மல்லன் ஒருவ னுடு போர்செய்து வென்று சிறப்புற்றான் போரவைக் கோவின் ஆண்மை, அழகு, பண்பு முதலாயின கண்டு அவன்பால் காதல்கொண்டார் பெருங்கோழி நாய்கன் மகளாகிய நக்கண்ணையார் எனும் நல்லிசைப்புலமை மெல் லியலாரும் எனின், இவன் பெருமையினே மேலும் எடுத்துக் கூறல் வேண்டா புலவர் சாத்தந்தையார் கிள்ளி, ஆமூர் மல்லனுடு ஆறறிய மற்போரை நேர்நின்று கண்டு பாராட்டியுள்ளார்.

மற்போர் நிகழும் களம் நோக்கிச் செல்லும் புலவர், ஆங்குக் கிள்ளியின் படையாளர் கடல் ஒலிபோல் களித்து

மகிழ்வதையும், அவன் யானைகள் இடியொலிபோல் முழங்கி நிற்பதையும கண்டார், அந்தோ, கிள்ளியொடு எதிர்ந்து, அவன் கையகப்பட்டு வருந்துவார் யாரோ? அவர அவனுல இறததல் உறுதியாதலின அவர் மிகவும் இரங்கததகாராவா எனக்கூறி வருநதினர்.

"ஆர்ப்பு, எழுகடலினும் பெரிது, அவன் களிறே,
கார்ப்பெயல் உருமின் முழஙகல் ஆனவே,
யார்கொல் அளியர்தாமே, ஆர்நார்ச
செறியத் தொடுத்த கண்ணிக்
கவிகை மள்ளன் கைப்பட்டோரே." (புறம் : அக)

போரவைக் கோபபெருநற்கிளளியும், ஆமூர் மல்லனும் ஆற்றும் மற்போரைக் கணடார், மறபோரில் மல்லனைப் பற்றி வெல்லத் துடிக்கும் கிளளியின கைகளின் விரை வினைக் கண்டார்; ஊரில விழா நிகழினும, மனவி பிளளைப் பேறுப் பருவநோயால் வருநதினும, அவ்வீரிடததும் சென்று உதவுதலைக் கடமையாகக்கொண்ட புலமகன் ஒருவன், தான செய்யத் தொடங்கிய கட்டிலை முடித்துச் செல்ல விருமபிய நிலையில, ஞாயிறும மறைந்துபோதலை அறியின், அவன் கைபபற்றிய, வாரைப் பிணிக்கும் ஊசி எதத்தனை விரைவும, பரபரபபும் கொளளுமோ அததனை விரைவும், பரபரப்பும் கிள்ளியின் கைகளிடத்தே அமையக் கண்ட புலவர் அக்கைகளைப் பாராட்டி மகிழ்நதார்:

"சாறுதலைக் கொண்டெனப், பெணணாற்று உற்றெனப்
பட்ட மாரி ஞான்ற ஞாயிற்றுக
கட்டில் நிணக்கும் இழிசினன் கையது
போழ்தூண்டு ஊசியின் விரைந்தன்று மாதோ
ஊர்கொள வந்த பொருநரெஞடு
ஆர்புனை தெரியல் நெடுந்தகை போரே." (புறம் : அஉ)

மறபோரில் கிளளியின் கைவண்ணம் கண்டு களித்த புலவர், அவன் கால்வண்ணம் கண்டு கழிபேருவகை கொள்வாராயினர்; கிள்ளியின ஒருகால், ஆமூர் மல்லனின் ஆற்றல் எல்லாம் ஒருங்கே அடங்குமாறு அவன் மார்பிலே

மண்டியாக மடிந்து கிடந்ததாக, மற்றொருகால், அம் மல்லன், அந்நிலையினின்றும தப்பி எழுதற்காகவேண்டி மேற்கொள்ளும் முயற்சிகளைக் கெடுத்து அவன் பின் புறத்தே வளைந்து கிடந்தது இவ்வாறு மல்லனை மடக்கிப் போட்ட கிள்ளி, இறுதியில் பகைத்த யானை பச்சிளம மூங்கிலை முறிக்குமாறுபோல், மல்லனின் தலையும காலும முறிய மோதிக்கொன்று வென்றான்; வெற்றி பெற்று வீறெய்தி நின்ற அவனைக் கண்டு பாராட்டிய புலவர், இத்தகைய பெருவீரனை அவன் தந்தையாகிய நித்தன் காணல் வேண்டும; கண்டால் முன்னைய வெறுப்பு ஒழிய விருப்பம் மிக்கு வியந்து பாராட்டலும் கூடும். வெறுப்பு ஒழியானுயின், இத்தகைய பேராற்றல் உடையானைப் பகைத்தல் பாழ்தரும் என அஞ்சுதலாவது செய்வன்; ஆகவே, அவன் வந்து காண்பானாக என விரும்பினர் புலவர்.

"இன்கடுங் கள்ளின் ஆமூர் ஆங்கண்
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
ஒருகால் மார்பு ஒதுங்கின்றே; ஒருகால்
வருதார் தாங்கிப் பின்னொதுங் கின்றே;
நல்லினும், நல்காளையினும், வெல்போர்ப்
போரருந் தித்தன் காண்கதில் அம்ம!
பகைத்துப் பணைமுயலும் யானைபோல
இருதலை ஒசிய எற்றிக்
கனம்புகு மல்லற் கடந்தடு நிலையே." (புறம்: அ0)

கிள்ளியும், மல்லனும் ஆற்றிய மற்போர் கண்டு பாராட்டிய புலவர், இயற்கையிலேயே போர்க்குணமும் வாய்க்கப்பெற்றவராவர்; புறத்தில் நெடுமொழிந்துறைப் பொருள் அமையப் பாடிய அவர் பாட்டு, அவாதம் போர் வேட்கையினை விளக்கி நிற்கிறது. கார்காலத்துப் பெரு மழைத் தாரைபோல அம்புகள வந்து தைப்பினும், வயல் களிற் பிறழும் கெண்டை மீன்களைப்போலும வேல் பல வந்து பாயினும, யானைகள பல சூழவந்து தம்கோடுகளின் கூரிய முனையினை நாட்டிக் குத்தினும், களம் விடுத்து

ஓடக் கருதாமை, படையாளர்க்குப் பீடும் பெருமையும் தருவதாம் என்றும், போர்க்களத்தே வென்று, களம் வென்ற சிறப்பறிந்து, வேந்தர் அளிக்கும் வளம் நிறைந்த ஊர்களைப் பெற்று வாழும் வாழ்வினும், இறந்து விண்ணுலகடைந்து, இறவாப் பேரின்பம் பெற்று வாழும் வாழ்வே பல்லாற்றானும் சிறந்ததாம் என்றும் கூறும் புலவர்தம் பொன்னுரைகள் போற்றற்குரியனவாமன்றே.

"காலமாரியின் அம்பு தைப்பினும்,
வயற் கெண்டையின் வேல் பிறழினும்,
பொலம்பூண் ஓடை அண்ணல் யானை
இலங்குவான் மருப்பின் நுதிமடுத்து ஊன்றினும்
ஓடல் செல்லாப் பீடுடை யாளர்,
நெடுநீர்ப் பொய்கைப் பிறழிய வாளை
நெல்லுடை நெடுநகர்க் கூட்டுமுதற் புரளும்
தண்ணடை பெறுதல் யாவது? படிநே,
மாசில் மகளிர் மன்றல் நன்றும்
உயர்நிலை உலகத்து நுகர்ப." (புறம் : உஅள)

புறத்தொழுக்காம் போர்க்களம் பாடவல்ல புலவர் சாத்தந்தையார், அகத்தொழுக்காம் இல்லறப் பண்பும் பாடவல்லராவர்; அகத்துறை தழுவிய அவர் பாட்டொன்று நற்றிணைக்கண் இடம் பெற்றுள்ளது. பிறந்தகத்துப் பெரு வாழ்வினும், புகுந்தகத்து வறுமை வாழ்வே வனப்பும் வளமும் உடையதாம் எனக்கொள்வது தமிழ்க்குல மகளிர் தம் மாண்பு. அத்தகைய மாண்புடையாளொரு பெண் மகிலேபோல் உயர்ந்த பல நெற்கூடுகளை உடைய தன் தாய் மனை மறந்து, வெய்யிற் கொடுமையால் வெந்து, காயுமை இலையும் கருகி, மூடமபட்ட மரங்களே காணப்படும் கொடிய வழியில் தான் விரும்பிய தலைவனோடு அவன் உள்ளம் உவக்குமாறு உடன்போந்து அவனூரில் அவனை மணந்து வாழ்வாளாயினள். அவர்தம் இன்பவாழ்க்கை இடையறலின்றிச் சென்றது சின்னாள்; ஒருநாள் தலைவன், பொருளகருதிப் பிரிய எண்ணினான்; அதைக் குறிப்பால் அறிந்துகொண்டாள் அப்பெண்; அதனால் வருத்தம்

மிக்கது; வருத்தம் மிகவே உடல் மெலிந்து வாடிற்று; அவள் கைவளை கழன்றுகும் அளவு அவள் மெலிந்துவிட்டாள்; இதைக் கண்டாள் அவள் தோழி; பிரிவான் என எண்ணியபோது இந்நிலையாயின், அவன் பிரிந்துவிடின் இவள் நிலை என்னுமை என எண்ணினாள்; வருத்தம் மிக்கது; விரைந்து தலைவன்பால் சென்றாள் "ஐய! இவள் பிறந்தகத்துப் பெருஞசெல்வத்தை மதியாது வந்தது, நின் அன்பு ஒன்றையே கருதியன்றே? அதனையும் பெறுதவாறு பிரிந்துசெல்லின் இவள் என்னவாள்? உற்றார் உறவினரை மறந்து, உன்பின் வந்த தவற்றிற்குத் தணடனையோ, இன்று இவள் கைவளை கழலுமாறு மெலிந்தது கண்ணீரவிட விட்டுப் பிரிந்து செல்லுதல்? இந்நிலை காணயான் மிகவும் வருந்துகின்றேன" என்றெலாம் கூறிப் போக்கினைப போக்கினாள். இந்நிகழ்ச்சியைப் பாட்டாக ஆக்கிய பழந்தமிழ்ப் பெண்ணெருத்தியின் பேருள்ளம் உணரும் பெறற்கரும் பேற்றினைத் தந்துள்ளார் புலவர்

"நோகோ யானே; நெஞ்சுழந்தன வளையே;
செவ்வி சேர்ந்த புள்ளி வெள்ளரை
வீண்டுப் புரையும் புணர்நிலை நெடுங்கூட்டுப்
பிண்ட நெல்லின் தாய்மனை ஒழிய,
சுடர்முழுது எறிப்பத் திரங்கிச, செழுங்காய்
முடமுதிர் பலவின் அததம், நும்மொடு
கெடுதலை யாகிய தவறே? வையெயிற்றுப்
பொன் பொதிந்தன்ன சுணங்கின்
இருஞ்சுழ் ஓதிப் பெருந்தோ ளாட்கே." (நற்: உசு)

## உசு. சாத்தன்

சாத்தன் எனும தெய்வப் பெயர்பூண்ட புலவர்களுள் இவரும் ஒருவர். குறுந்தொகையில், இவர் பெயரால ஒரு செய்யுள் காணப்படுகிறது ஈதற்சிறபபுணர்ந்தவர் நம் புலவா என்பது அப்பாட்டான் புலனுகிறது வறுமையால் வருந்திய ஒருவா தமபால் வநது இரநதுநின்றக்கால், அவர்க்குப பொருள ஈநது பேணுதி வாழும வாழ்வினும சாதலே சிறந்தது என்ப, "சாதலின் இன்னுதது இல்லை; இனிது அதூஉம் ஈதல் இயையாக்கடை" என்று வள்ளுவப் பெருநதகையாரும வழங்குவது காண்க. வந்து இரபபாககு வழஙகாது வாழ்வதே, இறததலினும இன்னுமை உடைத்து என்றல், தம்பால் வநது இரந்தார்க்கு ஒரு பொருளை வழங்கியவரே, பின்னொருகால, அபபொருளை தாளன மீண்டும கேட்டுப் பெறல் மிகமிகக் கொடுமை நிறைந்த தாம். இவ்வுண்மையினைப் புலவா இனிதெடுத்துக் கூறி யுள்ளார்.

ஒரு தலைவன் பரத்தையர் ஒழுக்கம் மேற்கொண்டு விட்டான்: அதனால் வருநதிய தலைவியின் வனப்பு இழந்தது: வாடிய மேனிகண்டு வருந்திய அவள தோழி, தலைவனைக் கண்டு, "தலைவி வருநதப பிரிநதுறை வாழ்க்கை மேற்கொண்ட நீ கவர்நதுகொணடு தலைவியின நலத்தினைத் தந்து செல்வாயாக" எனக் கேட்க விருமபினுள்; தோழியின் கருததறிந்த தலைவி, தோழிபால் "அன்புடை யாய்! நீ கூறியவாறு அவன் கவர்நத நலததினை வேண்டிப் பெறலாம், ஆயினுமம அஃது அறமன்று; தம் வறுமை கண்டு அஞ்சி இரந்தார்க்கு அளித்த ஒரு பொருளைக் கொடுத்தவரே அபபொருளை தருக என்று கூறுவதைக் காட்டினும் உயிரை இழத்தலே நன்றும், அவ்வாறு கூறுதல், உயிர் இழப்பினும் இன்னுதாம்; ஆகவே, நம் இன்னுயிர் கழிவதாயினுமம, அவர் கவர நாம அளித்த நம் நலனை அவாபால் வேண்டல் விரும்பத் தக்கதன்று"

என்று கூறினாள் எனப் பாடி ஈதற்சிறப்பினை எடுத்தோதி உள்ளமை உணர்க.

தலைவன் தவறு செய்தக்கால், அவன் தவற்றினை, அன்புமுறையால் கடிந்து போக்குதலைக் கடமையாகக் கொண்டவள் தலைவி ஆதலின், தோழிபால், அவன் தவறு கண்டு அவனைக் கடிதல அறமன்று என்பாள்போல் கூறினாளாயினும், தலைவன் தன் இல்லத்தார் வருந்தப் பிறஇடத்தே இன்பங்காணும் இழிகுணமுடையான் என்பதை, அவன், மீன்உண் பறவை, தான் அமர்ந்திருக்கும் அடும்பின் மலர் அழிய மீன் உண்ணும் கொடுமை நிறைந்த நாடுடையவன் என, அவன் நாட்டின்மீது ஏற்றிக் கூறிப் பழித்துள்ள பண்பு பாராட்டற்குரியது.

"அடும்பவிழ் அணிமலர் சிதைஇ மீன்அருந்தும்
தடந்தாள் நாரை இருக்கும் எக்கர்த்
தண்ணந் துறைவன் தொடுத்து நம்நலம்
கொள்வாம் என்றி தோழி! கொள்வாம்;
இடுக்கண் அஞ்சி இரந்தோர் வேண்டிய
கொடுத்தலை தாவென் சொல்லினும்
இன்னுதோ நம் இன்உயிர் இழப்பே."

(குறுந் : ஙூசுஙூ)

———

## உரு. சிறு மோலிகனார்

புலவர்க்கு, இப்பெயர் வருதற்காம் காரணம் இது என்பது புலப்படவில்லை. இவர் பாடிய பாட்டொன்று சற்றிணைக்கண் இடம்பெற்றுளது. தலைவன் அன்பினை இடையறாது பெற இயலாமையால் வருந்திய தலைவி, இரவெல்லாம துயல்கொள்வதின்றி, அம்புபட்ட மான்போல், படுக்கையில் புரண்டு புரண்டு பெருமூச்செறிந்து கிடந்தாளாக, அந்நிலையில் ஆண்டுவந்த அவள தாய், அவள் துயரை அறிந்தாள்போல், "அன்பு மகளே நீ தூங்குவாயல்லையோ" என வினவினுட்குக் கூறுவன பிறர்காதுட் புகா மெல்லிய குரலால், "கானகநாடனை எண்ணிக் கருத்தழிவார்க்கு உறக்கமும உண்டாமோ" என்று கூறி, அவ்வாறு நிகழ்ந்த அநுகிழ்ச்சியைத் தன் தோழிக்கு உரைத்தாள் எனப் பாடிய பாடற்பொருள் பாராட்டற் குரியதாம்.

"கேளாய் எல்ல தோழி! அல்கல்
வேணவா நலிய வெய்ய உயிரா
ஏமான் பிணையின் வருந்தினே னுகத்
துயர் மருங்கறிந்தனள் போல அன்னை
தஞ்சாயோ என் குறுமகள் என்றலின்
சொல்வெளிப் படாமை மெல்ல என்நெஞ்சில்
..... ..... ..... ..... .....
கான்கெழு நாடற் படர்ந் தோர்க்குக்
கண்ணும் படுமோ என்றிசின் யானே."

(நற் : சுக.)

---

## உசு. சுள்ளம்போதனார்

சுள்ளம்போது என்பது ஓர் ஊர்; அவ்வூரினராய இவர் மதுரை புக்கு வாழ்ந்தமையால் மதுரைச் சுள்ளம் போதனார் என அழைக்கப்பெற்றார். இவர் நெய்தல் நில இயல்பினை நன்கு விளங்கப் பாடியுள்ளார்.

மகளிர் விளக்கேற்றி மலர்தூவி மாலையை வரவேற்றல் நம் பழந்தமிழ்ப் பண்பாடாம்; இதைக்கூறும் நம் புலவர், கையில் வளை ஒலிக்க, விளக்குகளை எடுத்து, அவற்றுள் மீனினின்றும் கொண்ட கொழுப்பாகிய எண்ணெய் ஊற்றி ஏற்றிய ஒளியினால் தங்கள் வீடெல்லாம் விளக்கம்பெறச் செய்து மாலையை வரவேற்பர் என்று கூறுகிறார்; மீன்களினின்றும் எண்ணெய் எடுக்கும் இக்காலத்தைப் போன்றே அக்கால மக்களும் மீன் கொழுப்பினின்றும் எண்ணெய் எடுத்துப் பயன்பெற்றனர் எனவும் கூறுகிறார்.

"மாலை, இலங்குவளை மகளிர், வியன்நகர் அயர
மீன்நிணம் தொகுத்த ஊன்நெய் ஒண்சுடர்."

வலைகொண்டு வேட்டமேற் சென்ற பரதவர், கடலில் தாம் விரித்த வலையுட் புகுந்து, அதைக் கிழித்துச் சென்றது சுறாமீன் என அறிந்து, அச்சுறாவினைக் கைக் கொண்டன்றி வீடுதிரும்போம் என உறுதிபூண்டு அவ் வாறே முயன்று கைப்பற்றித் திரும்புவர் எனப் பரதவர் களின் கடல் வாழ்க்கையினையும் விளக்கியுள்ளார்:

"கொடுமுடி அவ்வலை பரியப் போகிய
கோட்சுறாக் குறித்த முன்பொடு
வேட்டம் வாயாது எமர் வாரலரே." (நற்: உகஞ)

## உஎ. செங்கண்ணனூர்

செங்கண்ணனூர் என்ற இப்பெயர், புலவர்க்கு உறுப்புப் பற்றிவந்த பெயரன்று; செங்கண்ணனூர் என்ற பெயரை அக்கால மக்கள் பலரும் தம் இயற்பெயராகக் கொள்ளும் வழக்கினராவர். இவர் பாடிய பாட்டாக நமக்குக் கிடைத்தது ஒன்றே, அது அகநானூற்றில் வந்துளது.

தலைவன் பொருள்வயிற் பிரியக் கருதினன்; அவ்வாறு அவன் பிரிதல் அறநெறியாம எனவுணர்ந்தும், அவன் பிரிவாலாம் துயர் பொறுக்கமாட்டாது வருந்தினள் தலைவி; வருத்தத்தால் உடல் மெலிய, வளை கழலவும் ஆயின; கண்கள் நீர்காலவும் தொடங்கின; ஆனால் அவன் போகும் காலத்தே தான் இவ்வாறு துயருற்ற காட்சியோடு அவன்முன் நின்று வழி அனுப்புதல நன்றன்று என்று எண்ணிய உள்ளத்தளாய்த் தன் துயரினை மறைக்க முனைகின்றாள்; ஆனால், அஃது அவளால் இயலாதுபோயிற்று. இதனால் தான் வருந்தும வருத்தம் புறத்தே புலனாகாவாறு மறைத்தாவது செல்வேம என்ற நோக்கினளாய், வளைகழலுதல் அறியாவாறு அதை மேலேற்றிச் செறுத்துக்கொண்டாள்; கண்ணீர் தெரியாவாறு தலை கவிழ்த்துக்கொண்டாள்; நிலத்தைக் கால்கள் கீற அவன் முன் அமைதியாக நின்றாள். அவ்வாறு நிற்கும் அவள் நிலையினையும், அவள் மனத்துயரையும் அறியாதவனல்லன் தலைமகன்; அவன் அவள் நெற்றியைத் தடவிக்கொடுத்தும், மயிரைக் கோதிவிட்டும் அன்புரை பல வழங்கி, அவள் உள்ளத்தை ஒருவாறு தேற்றிப் பிரிந்தான். பிரிந்தானேனும், அவன் உள்ளத்தே தன் மனைவியின் துயருறு நிலை நின்று நிலைபெற்றுவிட்டது. ஆகவே உள்ளம் சோர்ந்தான்; உள்ளச்சோர்வால் வழிநடையும் அரிதாயிற்று; தளர்ச்சி நீங்க ஓரிடத்தே சிறிது படுத்தான்; உறங்கியும் விட்டான்; நனவே, கனவாம் என்ப ஆதலின் அவனைப்

பிரிந்தவழிக் கண்ட காட்சி கனவாகத் தோன்றிற்று; அக்காட்சியில் அவளைத் தேற்றிப் பிரியத் தான் வழங்கும் இன்புரைகளால் அவள் தேறினளாகத் தோன்றிய நிலையினைக் காணுங் காலததே கனவு அழிந்தது; மீண்டும் வருத்தம் குடிகொண்டது; இந்த நிலையில் அவன் எவ்வாறே தான் மேற்கொண்டு சென்ற வினையினை முடித்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தான்.

வந்தானைக் கண்டு மகிழ்ந்த தலைவி, தாங்கள் சென்ற வழியில், என்னையும் என் நிலையினையும் எண்ணிப் பார்த்தலையாவது செய்ததுண்டோ? என்று கேட்டாள்; அவன் தன் நினைப்பினனுயின் அவனுல் வினைமுடித்து மீளுதல் இயலாது; அவளை வினைமுடிதது விரைவில் மீண்டனன். ஆகவே, அவன் தன்னை எண்ணியிருத்தல் இயலாது என்ற எண்ணமுடையவளாதலாலும், தன்பால் கொண்ட அன்பின் மிகுதியினுலேயே அவன் அரிதின் முயன்று விரைவில் வினைமுடித்து வந்துளான் என்பதை அறியாளாதலாலும் அவ்வாறு கேட்டாள். அவ்வாறு அவள் கேட்டாளாக, அவன் வழியில் அவள் நினைவால் கனவிலும் வருந்திய வருத்த மிகுதியினை எடுத்துக்கூறி இவ்வாறு இருவர் உள்ளமும் ஒன்றுகவும், வேறுபடுத்திக் கூறுவது நன்றன்று என்றுகூறி மகிழ்வித்தான்; இச் சின்னஞ்சிறு நாடகததைப் புலவர் நன்கு நடித்துள்ளார் தம் பாட்டின்வழி.

இதில் தலைவன் உள்ளம், ஒழித்தது பழிக்கும் உள்ளம் என உயர்த்திக் கூறுவது மிகவும் அழகுடையதாம். உலக நீதிகள் எல்லாம் இவற்றைச் செய்க எனச் சில விதிகளை விதிக்கும்; இவற்றைச் செய்யற்க எனச் சிலவற்றை விலக்கும்; ஒன்றையே வற்புறுத்தற்பொருட்டு இதைச் செய்க எனவும், இதைச் செய்யாது ஒழியற்க எனவும் விதித்தல் வாய்பாடாகவும் விலக்கல் வாய்பாடாகவும் கூறும்; இவற்றுள் செய்யக் கூடாதனவே பலவாம்; ஆதலின் தலைவனைக் கூறுங்கால், உயர்ந்தோர் கூடாதன என ஒழித்தனவற்றைத் தானும் பழிக்கும் பண்புடையவன் என்று கூறிப் பாராட்டினர்.

"ஒழித்தது பழித்த நெஞ்சமொடு, வழிப்படர்ந்து
உள்ளியும் அறிதிரோ எம்? என, யாழநின்
முள்ளெயிற்றுத் துவர்வாய் முறுவல் அழுங்க
நோய் மூத்துறுத்து, நொதுமல் மொழியல்; நின்
ஆய்நலம் மறப்பெனே?
..... ..... ..
கட்படர் ஓதி! நிற்படர்ந்து உள்ளி
அருஞ்செலவு ஆற்ற ஆரிடை, ஒருசேரெனப்
பரந்துபடு பாயல், நவலி பட்டென
இலங்கு வளைசெறியா, இருத்த நோக்கமொடு
நிலங்கிளை நினைவினை நின்ற நிற்கண்டு
இன்னகை இனையமாகவும், எம்வயின்
ஊடல் யாங்குவந் தன்றென யாழநின்
கோடேந்து புருவமொடு, குவவுநுதல் நீவி
நறுங்கதுப்பு உளரிய நன்னா அமையத்து
வறுங்கை காட்டிய வாயல் கனவின்
எற்று எக்கற்று உலமரல்
போற்றாய் ஆகலின், புலத்தியால் எம்மே." (அகம்: ஙூ)

## உஅ. செம்பியனார்

செம்பியன் என்ற சொல், கிள்ளி, வளவன் என்ற சொற்களைப்போன்றே, சோழரைக் குறிக்க வழங்கும் பெயராம்; அது சிபியின் வழிவந்தவன் எனப் பொருள் படும் என வரலாற்று நூலாசிரியர்கள் கூறுவதால், புலவர் செம்பியனார், சோழர் குடியோடு தொடர்புடையராவர் என்பது தெளிவாம். கிளைவிடுதூது அமைந்த அழகிய பாட்டொன்று இவர் பெயரால் நற்றிணைக்கண் இடம் பெற்றுளது.

இரவினும், பகலினும் இடையறாது வந்து தலையளி செய்யும் தலைமகன், இடையே சின்னாள் வாராதொழவே வருந்திய தலைவி, தன் திணைப்புனத்துப் படிந்து கதிர்களைக் கொய்துசெல்லும் கிளிகளை விளித்தது, "என் புனத்துக் கதிர்களைக் கொய்துபோகின்ற செவ்வாய்ப் பசுங்கிளளாய்! இக்கதிர்களைக் கொய்யுமுன்னே யாரேனும் அச்சுறுத்துவர் கொல்லோ என அஞ்சுவது ஒழிக! வேண்டிய உணவையெல்லாம் பெற்று நின்குறையெல்லாம் முடித்த பின்னர், ஒழிவு எய்தியகாலத்தே என் குறையினைக் கேட்டுப் போகித் தினைபுரிய வேண்டுகிறேன்; இதைச் செய்து தருமாறு நின்னை என் இரு கைகளையும குவித்துத் தொழுது இரந்து வேண்டிக்கொள்கிறேன்; பலாமரங்கள் பழுத்துப் பயன்தரும எம தலைவர் நாட்டுறை நின் சுற்றத்தினிடத்து நீ ஒருபொழுது செல்லுவையாயின், ஆண்டுறை எம தலைவர்பால், ஈங்கே இக்கானவர் மகளாகிய யான், மீண்டும் தினைப்புனக்காவல் மேற்கொண்டுளதை அறிவிப்பாயாக! இஃதொன்றே நின்னை யான் வேண்டுவது," எனக் கூறினள் எனப் பாடிய அப்பாட்டு படித்து இன்புறற் குரியதாம்.

கிளியின் உள்ளம் தன் வேண்டுகோடலை ஏற்றுக் கோடற்பொருட்டு, அது விரும்பும உணவைப்பெற அனுமதித்ததும், அவ்வேண்டுகோடலை ஏற்றுக்கொள்வதால் அதன் தொழில் கெடாமை குறித்து, அதன் தொழில்

எல்லாம் முடிந்தபின்னர், அது தன் இனம் தேடிச் செல்லின், அக்காலை அவ்வினை முடிக்கவேண்டியும், ஆண்டுச்செல்லும் விருப்பம் அதன் உளத்தே உண்டாமாறு அவர் உறைநாடு நின் இனம் உறைநாடு மட்டுமன்று, நீ விரும்பி உண்ணும் பலா முதலாம் பழங்களும் நிறைந்தது என்று உரைத்தும் தன் குறை முடிக்க வேண்டினாள் தலைவி எனப்பாடிய புலவர்தம் புலமைநலத்தினைப் போற்றுவோமாக.

"கொடுங்குரல் குறைத்த செவ்வாய்ப் பைங்கிளி !
அஞ்சல் ஓம்பி, ஆர்பதம் கொண்டு
நின்குறை முடிதத பின்றை, என்குறை
செய்தல் வேண்டுமால், கைதொழுது இரப்பல்;
பல்கோட் பலவின் சாரல் அவர்நாட்டு
நின்னினும் மருங்கிற் சேறி யாயின்,
அம்மலை கிழவோர்கு உரைமதி, இம்மலை
கானக் குறவர் மடமகள்
எனல் காவல் ஆயினள் எனவே." (நற்: கo2)

## உஉ. சேந்தன் கண்ணனூர்

சேந்தன் என்பார்க்கு மகனுய்க், கண்ணனூர் எனும் இயற்பெயர் பூண்டு பிறந்தமையான் இப்புலவர் சேந்தன் கண்ணனூர் என அழைக்கப்பெற்றுளார்; இப்பெயர், சேந்தன் எனும் தந்தை பெயரின் ஈற்று அன்கெட ஆண்டு அம் எனும் சாரியை வந்துநிற்க சேந்தங்கண்ணனூர் எனும் வடிவிலும் வழங்கப்பெறும். புலவர் சேந்தங்கண்ணனூர், பாடிய இருபாக்களும் நெய்தல்நிலத்தையே பாராட்டியிருப்பதாலும், பெரிய கடலிடையே புகுந்து, ஆண்டு உலாவும் சுறுமீன்களுக்கு அஞ்சாது மூழ்கி, வலம்புரி முத்துக்களே வாரிக்கொணரும் பரதவர், மாலைக்காலத்தே, சங்கு முழங்கும் கொற்கைத் துறையிடத்தே, கரையில் உள்ளார் மகிழ்ந்து ஆரவாரம் செய்து வரவேற்கக் கரை சேர்வர் எனக் கொற்கைத்துறையினையும், ஆண்டுநிகழ் முத்துக்குளியல் தொழிலையும் சிறப்பித்துப் பாடியுள்ளமையாலும், இவர், பாண்டிநாட்டில் கொற்கைத் துறையினைச் சேர்ந்த நெய்தல்நிலத்தவராவர் எனக் கோடல் பொருந்தும்.

"இலங்கிரும் பரப்பின் எறிசுறா வீக்கி,
வலம்புரி மூழ்கிய வான்திமில் பரதவர்
ஒலிதலைப் பணிலம் ஆர்ப்பக் கல்லெனக்
கலிகெழு கொற்கை எதிர்கொள இழிதரும்."
(அகம் : ஈடுO.)

தன்னைக் கண்டு காதலித்து அன்புகாட்டிய தலைவன் வாராதொழியக் கண்டு வருந்திய நெய்தல் நிலப்பெண் ஒருத்தி, "கரிய கால்களையுடைய வெளிய நாராய்! நீ, நின் சுற்றத்தோடு சென்று வளைந்த நீர்ப்பரப்பிலுள்ள இரையை அருந்திப் பறந்து வருதலையே விரும்பினையாயினும், நின் இனத்தோடு சிறிது பொழுது ஈண்டு இருந்து, யான் கூறும் சில சொற்களைக் கேட்பாயாக! தலைவன் பிரியத் தனித் துறையும் எனக்கு இம்மாலைக்காலம் பெரிதும் வருத்தம் தருவதாயுளது; என்மாட்டுப் பேரன்புடைய நீ, இதை

அறிவையாயின், மனவேறுபடாமலும், மறக்காமலும், என் நிலை இது என்பதை, தழை உடுப்பார் தமக்கு வேண்டும் தழைகளைக் கொய்தற்பொருட்டுத் தழைத்து விளங்கும் ஞாழல், கடல்அலைகள் அலைத்துநிற்கும் கண்டல் மரங்கள் நிறைந்த உன் கடற்கரைக்குரியான்பால், அவன் உணரு மாறு உணர்த்துவாயாக," எனக் கூறிவிடும் நாரைவிடுதூது, நயம்மிகச் செறிந்து, புலவர்தம் நாவன்மைக்கு நற்சான்று அளித்து நிற்கிறது.

"வளைநீர் மேய்ந்து கிளைமுதல் செலீஇ
வாப்பறை விரும்பினை ஆயினும், தாசிறை
இரும்புலா அருந்தும் நின்கிளையொடு சிறிதுஇருந்து
கருங்கால் வெண்குருகு! எனவ கேண்மதி;
பெரும்புலம் பின்றே சிறுபுன் மாலை;
அதுநீ அறியின், அன்புமார் உடையை,
நொதுமல் நெஞ்சம் கொள்ளாது, என்குறை
இற்றுஇங்கு உணர உரைமதி! தழையோர்
கொய்குழை அரும்பிய குமரி ஞாழல்
தெண்திரை மணிப்புறம் தைவரும்
கண்டல் வேலிநும் துறைகிழ வோற்கே."

(நற் : 6ச.)

## ங0. சேந்தன் கீரனூர்

கீரனூர் எனும் இயற்பெயருடைய இவர், சேந்தன் என்பார்தம் மகனுய்ப் பிறந்த மாண்புடைமையால், சேந்தன்கீரனூர் என அழைக்கப்பெற்றுளார்; இவர் பாடிய அகத்திணைப் பாட்டொன்று குறுந்தொகைக்கண் இடம் பெற்றுளது.

தனக்கும் தலைவற்கும் இடையே உண்டாம் காதலொழுக்கம ஊராரான் அறியப்பெற்று அலராய்ப் பழிக்கப் படலாயிற்று. ஆகவே, தலைவன் விரைந்து வரைந்து கொள்ளும் முயற்சியுடையோனுகுக என்பதை அத்தலைவனுக்கு உணர்த்த விரும்பிய ஒரு தலைவி, ஒரு நாள் அவன் தன் மனைப்புறத்து மதிலைச் சார்ந்து நின்றுனுதல் கண்டு, தோழியிடம கூறுவாள்போல், அவன் கேட்குமாறு, "தோழி! தலைவன் ஏறிவரும தேரொலி எங்கே பிறர்க்குக் கேட்டுவிடுமோ என அஞ்சிய பாகன், ஒலி எழாவாறு மெல்லச் செல்லுமாறு அடக்கவும, குதிரைகள அடங்காது சென்றதாக, அதனுல் எழுந்த ஒலியால், தலைவன் நம் மனைப்புறம் வந்து சேரலை, இரவில் மலர் கொய்யச் சென்ற நம் ஆயத்தார் அனைவரும் அறிந்துவிட்டனர், நம் தோழி மாருள் ஒருத்தி அறிந்தவழியே, ஊரெல்லாம் அலர் எழும் என்ப; அவர்கள் அனைவரும் ஒருங்கறிந்த இந்நிலையில் அலர் ஒய்தல் அரிதினும் அரிதாம; இதற்கு யான் என் செய்வேன்?" என்று கூறினுள எனப் பாடிய பாட்டு பெண்ணுள்ளம் தோன்றப் பாடிய பெருமையுடைத்தாதல் காண்க.

"அலர்யாங்கு ஒழிவ? தோழி! பெருங்கடல்
புலவுநாறு அகன்துறை வலவன் தாங்கவும்
நில்லாது கழிந்த கல்லென் கடுந்தேர்
யான் கண்டனனே இலனே; பானுள்
ஓங்கல் வெண்மணல் தாழாத புன்னைத்
தாதுசேர் நிகர்மலர் கொய்யும்
ஆயம் எல்லாம் உடன்கண் டன்றே." (குறுந் : ங0ச)

## ங. தத்தங் கண்ணனார்

இவர் இயற்பெயர் கண்ணன்; இவர் தந்தை பெயர் தத்தன்; மதுரைப் புலவர்களுள் இவரும் ஒருவர். இவர் இயற்றிய ஒரு செய்யுள் நெடுந்தொகை, நித்திலக் கோவைக்கண் இடம் பெற்றுளது. அருள், பொருள் ஆகிய இரண்டின் இயல்பினை நன்குணர்ந்தவர் இவர்.

"அருள் என்னும் அன்பின் குழவி, பொருள் என்னும் செல்வச் செவிலியால் உண்டு," என்று கூறுகிறார் திருவள்ளுவனார். அன்பின் வழியே அருள் பிறந்ததாயின், அவ்வருள் பொருளின் துணைகொண் டன்றி வாழ்தலோ, வளர்தலோ இயலாது; அருள் உள்ளம் உடையார், பொருளையும் பெற்ற வழியே, தம் அருள் நிறைவேறப் பெறுவர், பொருளைபெறாது, அருள் மட்டும் பெற்றவர், தமமால் அருள் செய்யப் பெற்ற உயிர்களின் உறுதுயர் போக்கித் துணைபுரிதல் இயலா தாம். ஆகவே அருளுடையார் பொருளையும் உடன் பெற்றிருத்தல் வேண்டும். இந்த அரிய உண்மையை— அருளினும் பொருளே சிறப்புடையதாம் என்பதை - தலை மகன் ஒருவன் வாயில் வைத்துக் கூறியுள்ளார் நம்புலவர்.

> "இருள்படு நெஞ்சத்து இடும்பை தீர்க்கும்
> அருள் நன்கு உடையராயினும், ஈதல்
> பொருள் இல்லோர்க்கு அஃது இயையாதாகுதல்
> யானும் அறிவேன்மன்."

(அகம்: ஙஙஙி)

இப்பாட்டில் கழுகின் குலையினை விளங்கக் கூறிப் பாராட்டும் பண்பு படித்து இன்புறற்குரியதாம்.

---

## ஈஉ. திருத்தாமனார்

தாமன் என்பது இவரது இயற்பெயர்; திரு என்பது அவரது சிறப்பைக் குறித்து நிற்கிறது. இவர், சேரமான் வஞ்சன் என்பானையும். அவனுக்குரிய பாயல் மலையையும் பாராட்டிப் பாடியுள்ளார் என்பதல்லது பிற எதுவும் தெரிந்திலது.

தாமனார் பாராட்டிய வஞ்சன், சேர வேந்தருள் மிகவும் பழையோனவன்; "சேரரது வஞ்சிக்களம், அஞ்சைக்களம் என்றாற்போல, வஞ்சன் பெயரும் பிற்காலத்தே அஞ்சன் என்றாயிற்று; வஞ்சனது பாயல்நாடு, பின்னர் வயனாடென்றாகி, இப்போது வைநாடு (Introduction of B. L. Rice to Coorg Inscriptions Vol. I. P. 3.) என வழங்குகிறது; பாயல்மலைப் பகுதியில் வஞ்சனுக்குரியதாயிருந்த குன்று, அஞ்சன் குன்று என்றிருந்து, இப்போது அஞ்சுகுன்னு என்ற பெயருடன் வைநாடு தாலுக்காவில் உளது. இவனது ஆட்சியின் கீழிருந்த நாடு, வடக்கே பாயல் நாட்டிலிருந்து தெற்கே திருவிதாங்கூர் அரசைச் சேர்ந்த அஞ்சனாடு முடிய இருந்தது; வட பகுதியில் அவன் பெயர் மறைந்ததாயினும், தெற்கில் அப் பெயர் மறையாது அஞ்சனாடு என்றே இப்போதும் வழங்குகிறது. இப்போதுள்ள நீலகிரி ஜில்லாவும் வயனாட்டோடு சேர்ந்திருந்து கி. பி. 1887ல் தான் பிரிந்தது. இது நீலகிரி எனப்படுவதும், இடைக்காலக் கல்வெட்டு அஞ்சனகிரி என்பதும் நோக்கின், இந் நீலகிரி ஒரு காலத்தே சேரமான் வஞ்சனுக்கு உரியதாயிருந்தது தெரிகிறது," என்று ஆராய்ந்து கூறுகிறார் திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள்.

வஞ்சனுக்குரிய பெரும் பெயர் மூதூர்க்கண், நண்பரானோர் செல்லுதல் இயலுமே யன்றிப் பகைவர் எவரும் புகுதல் இயலாது; அந்நகர் அத்துணைக் காவலையுடையது; அவனும் அத்துணைப் பேராற்றல் உடையவன்; அம்மூதூர்

மன்றம், வஞ்சனைப்பாடிப் பரிசில்பெறும் உளத்தோடு வந்து குவியும் பாணர் முதலாம் இரவலர் என்றும் பிரியாது வாழும் பெரும் பந்தலை உடைத்து; வஞ்சனும் வருவார் தம் வரிசையறிந்து வழங்கும் வண்மையாள னுவன்; வாய்மொழியால் சிறந்தவன்; இரப்பார் சில சொல் கூறுமுன்னரே, அவர் உளம் அறிந்து அளிக்கும் அறிவுடையான்; தன் நாடு நோக்கி வருவார் தம் வறுமை யும் வாட்டமும் ஒழிய, வளமும வனப்பும் மிக, வருவாரை அகமும் முகமும் மலர வரவேற்று, அவர் தம இழிந்த ஆடைகளை அகற்றி, புகை பரந்தது போலும் மெல்லிய நல்லாடை நல்கி, கள்ளும் கறியும் கனிமிகு சோறும அளித்து, ஆரமும் மணியும் அணிவித்து விடுக்கும் அருட்கொடை உடையவன். வஞ்சனுக்குரிய இவ்வசையில் புகழ்களை யெல்லாம் எடுத்துக் கூறி வாயாரப் புகழ்கிறார், புலவர் திருததாமனார்.

"பரிசிலா வரையா வீரைசெய் பந்தர்
வரிசையின் நிறுதத வாய்மொழி வஞ்சன்
நகைவா குறுகினல்லது பகைவர்க்கும்
புலியினம் மடிந்த கல்லளை போலத்
துன்னல் போகிய பெரும் பெயர் மூதூர்."

"சிறிதிற்குப் பெரிதுவந்து
விரும்பிய முகத்தனாகி, என் அரைத்
தரும்புபடு சிதாஅ நீக்கித் தன் அரைப்
புகை விரிந்தன்ன பொங்குதுகில் உடீஇ
அழல்கான்றன்ன அரும் பெறல் மண்டை
நிழல்காண் தேறல் நிறைய வாக்கி
யான் உண அருளல் அன்றியும், தான் உண்
மண்டைய கண்ட மான்வரைக் கருனை
கொக்குகிர் நிமிரல் ஒக்கல் ஆர
வரையுறழ் மார்பின் வையகம் விளக்கும்
விரவுமணி ஒளிர்வரும் அரவுஉறழ் ஆரமொடு
புரையோன் மேனிப் பூத்துகிற் கலிங்கம்
உரை செல அருளி யோனே."

புலவர் திருத்தாமனார், இயற்கையின் நலங்களே எழில் பெறப் பாடவல்லவராவர்; அவர் காட்டும் வைகறைக் காட்சி காணக் கவின் சிறந்து விளங்குகிறது; இரவெல்லாம் பேரொளி தந்த வெண்ணிலா மறைகிறது; வெள்ளி சிறிது சிறிதாக உயர்கிறது; கோழிகள் நாழிகை அறிந்து கூவத் தொடங்கின; பொய்கைகளில், தாமரை முதலாம் மலர்கள் மலர்ந்து மணங்கமழலாயின; பாணர், தம் கையில் யாழ் இசைத்து பண் பாடலாயினர்; இங்கிலையில் இரவு கழிய வந்தற்றது வைகறை எனக் காட்டும் காட்சியினைக் கண்டு களிப்போமாக:

"மதிநிலாக் கரப்ப, வெள்ளி ஏர்தர,
வகைமாண் நல்லில்.....
பொறிவயிர வாரணம் பொழுது அறிந்து இயம்பப்,
பொய்கைப் பூ முகை மலரப், பாணர்
கைவல் சீறியாழ் கடன் அறிந்து இயக்க
இரவுப்புறம் பெற்றது எம வைகறை."

(புறம் : ஊஊஅ)

## ஈஈ. தீன்மிதி நாகனார்.

இவர் பெயர், தீன்மிதிநாகன் எனவும், தீன்மதிநாகன் எனவும், தீமிதிநாகன் எனவும் பல்வேறு வகையாக எழுதப்பட்டுள்ளன; நாகன் என்ற இவர் பெயர், இவர் குறிஞ்சி நிலத் தொடர்புடையராவர் என்பதை உணர்த்துகிறது; இவர் பாடிய பாட்டொன்றும், அக்குறிஞ்சி நில ஒழுக்கமே தழுவி வந்திருப்பது மேற்கொண்ட முடிபை உறுதி செய்கிறது.

தன்னைக் காதலித்த தலைவன் வரைந்துகொள்ள எண்ணுது, களவொழுக்கமே விரும்பி ஒழுகுவதால் உண்டாம் துயரெண்ணி வருந்திய ஒரு தலைமகள், அவ்வருத்த மிகுதியால், உடல் வனப்பிழந்து வாடினாள்; தன் மகளைப் பேணிக்காக்கும்பேரன்பினளாய தாய், அவள் வாட்டத்திற் காம் காரணம் இது என்பதை எளிதில் அறிந்து கொள்ளும் ஆற்றலுடையளாவள்; அவள் அஃதறியின், தலைவியின் ஒழுக்கத்திற்குக் கேடுண்டாம்; அவள் அறியா வண்ணம் காத்தலோ அரிது; இதை உணர்ந்தாள் தலைவியின் தோழி; தலைவியின் கற்பொழுக்கம் கெடாமைக் காத்தலைக் கடமையாக உடையவள் அவள்; இதற்கு வழி, தலைவன் அவளை விரைவில் வரைந்து கொள்வதே என உணர்ந்தாள்; உணர்ந்ததனைத் தலைவனுக்கு உணர்த்த விரும்பினாள்; ஒரு நாள், தலைவன், அவர்கள் வீட்டின் புறத்தே வந்து, அவர்கள் வருகையினை எதிர்நோக்கி நின்றிருந்தான், இதை உணர்ந்த தோழி, அவன் கேட்குமாறு, தலைவியை நோக்கி, "தோழி! நின்வாடிய தோள், வனப்பிழத்தற்குக் காரணம், இது என்பதை நம் தாய் எளிதில் உணர்வள்; ஒரோ வழி, அவள் அஃது அறியாளாய், அதற்காம் காரணம் யாது என வேலனைக் கேட்பின், அவன், முருகனால் வந்தது; ஆகவே வெறியெடுக்க என்றே கூறுவன்; நம் தாயும் அவன் கூறியதை உண்மையென்றே கொள்ளின் நம் வீட்டில் வெறியாட்டு நிகழ்தலோ உறுதி; மகளுற்ற நோய், மன நோய் என

அறியும் மாண்பிழந்து நம் தமர் மேற்கொள்ளும் அறிவி லாச் செயலைக் காண நம் தலைவர் ஆண்டு வருவாராக! என்று கூறினாள். தாயின் அறியாமை கண்டு நகைப்பாள் போல், தலைவன் வரைந்து கொள்ளாமையால், தலைவிபடும் துயரம் இது; அதைத் தாயும் அறிந்துளாள்; அவள் அத்துயர்க்காம் காரணம் இஃது என அறியின் ஏதம் உண்டாம்; அவள் அஃதறியா முன்னர் வரைந்து கொள்வது தலைவன் விரைந்து மேற்கொள்ள வேண்டிய கடமையாம் என்பதை அறிவுறுத்திய தோழியின் அறிவாற்றல் புலப்படப் பாடிய புலவர், தலைவிக்குண்டான நோய், ஆராய்ந்து காண்பார்க்கே தலைவன் தந்த நோய் எனப் புலப்படும்; ஆராயும் அறிவின்றிக் காண்பார்க்கு, அது முருகனால் வந்தது என்றே புலப்படும்; அத்தகைய நோய் தரும் ஆற்றல் உடையவன் தலைவன் என்பதைத் தலைவன், வாளா நோக்குவார்க்கு, கைகரந்த பிடி போன்ற தோற்றத்தையும், ஆய்ந்து அறிவார்க்குத் தன் உண்மைத் தோற்றத்தையும தரும் துறுகல் நிறைந்த நாடுடையவன் என்று கூறுவதால் விளங்க வைக்கும் புலமைத்திறம் பாராட்டற்குரியதாம்.

"மென்தோள் நெகிழ்த்த செல்லல், வேலன்
வென்றி நெடுவேள் என்னும்; அன்னையும்
அது என உணருமாயின், ஆயிடைக்,
கூழை இரும்பிடிக் கைகரந்தன்ன
கேழிருந் துறுகல் கெழுமலை நாடன்
வல்லே வருக தோழி! நம்
இல்லோர் பெருநகை காணிய சிறிதே."

(குறுந்: ௪௪௫)

## ஈசு. துறைக்குறுமாவிற் பாலங்கொற்றனார்

கொற்றனார் எனும் இயற்பெயரினராய நம்புலவர், தம் பெயர்க்கு முன்னே, சிறப்பளிக்கும் சொற்கள் பலவற்றைப் பெற்றுளராயினும, அவற்றுள் எதுவும அவர் வரலாறு உணர்த்தும நெறியில், துணை புரியும் ஆற்றலுடையதாய்க் காணப்பெறவில்லை. பொருள்வயிற் பிரிவே பொருளாகப் பாடியுள்ளமையானும், அழகிய காதணி ஒன்றை உவமையாகக் கூறியுள்ளமையானும், புலவர், வணிகர்குலத்தவந்தவரோ எனக் கோடற்கும் இடமுண்டாம் என்ப; இவர் பெயரால் நற்றிணைக்கண் ஒரு பாட்டு உளது.

தலைவன், கொடிய மலைவழிகளைக் கடந்து சென்றுளான்; அவன் பிரிவால் தானுறுதுயரினையும், அவன் சென்ற மலைவழியின் கொடுமையினையும் எண்ணி எண்ணி வருந்தினாள் தலைவி; அவரை, அம்மலைநெறியிற் போக்கிவிட்டு வாழ்வதினும, என் உயிர் வாழாமையே நன்றும்என்று கூறி விம்மி, விமமி அழத் தொடங்கிவிட்டாள்; அவள வருத்தமிகுதியால், அவள் உடல் வாட, அவள் உடலிற் பொருந்தியிருந்த வளைமுதலாம் அணிகள் நெகிழ்ந்துவிழுவாயின; தலைவியின் துயர்நிலை கண்டாள் தோழி; தலைவர் பொருள்தேடப் போயுள்ளார்; பொருள்தேடித் தந்தாலன்றி இல்லறம் இனிது நடவாது; இல்லறம் மேற்கொள்வது உற்றார், உறவினர், உயிர்போலும் நண்பர்கள் இவரை வாழ்விக்கவும், தாமும் பிறர்போற்றும் வாழ்வு பெறவுமேயாம்; அவ்வாழ்வு வாழப் பொருள் மிகமிகத் தேவை; இதை மறந்தமையினாலேயே தலைவி வருந்துகிறாள்; கடமை மறந்த அவள் உள்ளத்தே காதல் இடம் பெற்றுளது; கடமையினை நினைவூட்டின், தன் காதற் பெருமையினை மறப்பள் என உணர்ந்தாள்; உடனே, அவள்பாற் சென்று, "அன்புடையாய்! தலைவர், பிரிந்து சென்றது, நண்பர்கள் நல்வாழ்வு வாழவும், நீ அணிபல அணிந்து சிறக்கவும் துணை புரியும் பொருள்தேடிக் கொணர்தற்கு அன்றே? இல்லறம் நல்லறமாதற்கு, நாடு

கடந்து சென்றுள்ள, கடமையிற் பிறழா, அவர் இயல்பினை உணர்ந்தாவது, அவர் வரும்வரை ஆற்றியிருத்தல் நின் கடனும் என்பதை உணர்வாயாக! உணர்வுகொண்டு, அவர் வாராமையால் வருந்தும் நீ, அவ்வருத்தம் ஒழிவாயாக" எனக்கூறி அறிவுறுத்தினள்; தோழியின் இவ் அறிவுரை அமைய வந்துளது புலவர் பாடிய பாட்டு;

"புல்லென் குன்றம்
சென்றோர் மன்ற; செலீஇயர் என்உயிர் எனப்
பூஎயிழை நெகிழவிம்மி, நொந்து நொந்து
இனைதல் ஆன்றிசின் ஆயிழை! நினையின்,
நட்டோர் ஆக்கம் வேண்டியும், ஒட்டிய
நின்தோள் அணிபெற வரற்கும்
அன்றோ தோழி! அவர்சென்ற திறமே.?"

(நற் : உஅசு)

## ஈரு. தூங்கலோரியார்

தூங்கலோரியார், தூங்கல் எனவும் அழைக்கப் பெறுவர்; ஓரி என்பது, அக்கால அரசரும், பிறரும் விரும்பி மேற்கொண்ட பெயர்களுள் ஒன்றும்; வல்வில் ஓரி என்பது, ஒரு வள்ளலின் பெயராய் வந்துளதும் காண்க; ஓரி, வல்வில் ஓரிஎன வழங்கப்பெற்றுளதே போல், நம்புலவரும தூங்கல் ஓரியார் என அழைக்கப் பெற்றுளார்; ஆகவே, இவா இயற்பெயர் ஓரி என்பதே; தூங்கல் என்பது, அவர் பெற்றுள யாதோ ஓர் சிறப்புக் குறிக்க வந்துளது என்று கொள்க. தூங்கலோரியார் புலவரும் போற்றும் புலமை வாய்ந்தவராவர், தமிழ்ச் சங்கப்புலவர்களுள் தலைமைசால் சிறப்புடையவர் எனப் போற்றப்பெறும் நக்கீரர், நம்புலவரைப் பாராட்டியுள்ளார்; ஊணூர்த்தழும்பன் என்பானைப் பாராட்டிய புலவா நக்கீரர், அவன் தூங்கல் ஓரியார் பாராட்டிய பெருமபுகழ் உடையவனுவன் எனப் பாராட்டு முகத்தான், தூங்கலோரி யாரின் பாடற் பெருமையினைப் பாராட்டியுள்ளார்.

> "தூங்கல் பாடிய ஓங்குபெரு நல்லிசைப்
> பிடிமிதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன்."
>
> (அகம் : உஉஎ)

ஊணூர்த்தழும்பனைப் பாடியுள்ளார் புலவர் தூங்கலோரி யார் என நக்கீரனுர் கூறியுள்ளாராயினும், அவனை அவர் பாராட்டிய பாட்டு இப்போது கிடைத்திலது.

புலவர் பாக்கள், பழந்தமிழகத்தைப் பார்க்க எண்ணு வார்க்குப் பெருந்துணைபுரிய வல்லனவே எனினும், அக் கால மக்கள்தம அரசியல்நிலை, வாணிபநிலை, பொருள் மதிப்பீட்டு முறைபோன்றனவற்றைத் தெளிய உணர்த்து வனவல்ல: புலவர் தூங்கலோரியார், அக்கால மக்க ளிடையே நிலவிய பொருள் மதிப்பீட்டு முறையிது என் பதை ஓரளவு உணரத் துணைபுரிந்துள்ளார்.

ஒரு தலைவன், அழகிய ஆடை உடுத்தும், மணம்நிறை மாலைதொடுத்தும், அணிபல அணிந்தும், தலையிற் செருகுவன செருகிக்கொண்டும் விழாக்காணச் சென்று, ஆண்டுப் பரத்தையரோடு பழகிவந்தான்; இவ்வாறு சிறப்புற அணிந்து, ஆடல்பாடல் நுகர்ந்து வருவானைக் கண்ட தோழி "ஐய! நீ, இவ்வாறு செல்வச் சிறப்புத் தோன்ற வருவது காணும் இவ்வூரார், "'ஒரே பசுவைக்கொண்டு பெறலாம் சிறுபொருளால் நடந்த, இவன்தன் சீரிலா வாழ்வு, பெருநலம் உடைய பெண்ணினல்லாளாகிய இவள் வந்தபின்னர், வளம் பலவும் நிறைந்து விளங்கலாயிற்று' எனக் கூறுகின்றனர்; இவ்வாறு, இன்றைய நின் செல்வ வாழ்விற்கு வழிசெய்தாளாய, இவள் வருந்தப் பிரிந்து பரத்தையர் ஒழுக்கம் மேற்கொள்ளுதல் பழியுடைத்து" என்று கூறித் தெருட்டினள். தோழியின் இக்கூற்றமைய வந்த இப்பாட்டின் வழியே, அக்கால மக்கள், ஒருவர் பெற்றுள ஆனிரைகளின் எண்ணிக்கையினைக் கொண்டே அவர்தம் செல்வ அளவினை மதிப்பிட்டனர் என்பதை அறியவைத் துள்ளமை உணர்க; அதேபாட்டில், செல்வத்திற் சிறந்தார், உடுத்தும், தொடுத்தும், பூண்டும், சேரீஇயும வாழும் செல்வ வாழ்வும் சிறக்க உரைக்கப்பட்டுளதையும் உணர்க:

"உடுத்தும், தொடுத்தும், பூண்டும், சேரீஇயும்
தழையணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி
விழவொடு வருதிரீயே, 'இஃதோ,
ஓர்ஆன் வல்சிச் சீரில் வாழ்க்கை,
பெருநலக் குறுமகள் வந்தென,
இனி விழாவாயிற்று' என்னும் இவ்வூரே."

(குறுந் : ஒகூடி)

பொருளற்றவன் வாழ்வு, வறண்ட பாலைபோல் வளமும், வனப்பும் இழந்து தோன்றும்; பொருளிலான் இளமையும், பொலிவு இழந்துபோய்விடும் என்ற எண்ணம் உந்த, பொருள்தேடத் துணிந்தான் ஒரு தலைமகன்; அத்துணிவு, சுற்றுகளுக்கிடையே அமைந்த சிறுவழி, செல்லுதற்கு அருமையுடையது என்பதை மறக்கச் செய்தது;

ஆனால், செல்லச் சின்னாள் இருப்பதற்குமுன், செல்வந் தேடிவந்த பின்னராம் வாழ்வின் நிலையினை வரைந்து காணத் தூண்டிற்று அவன் உள்ளம்; செல்வந்தேடி வருதல் சிறந்ததோர் இன்பத்தினைப் பெறுதற்பொருட் டன்றே; செல்வந்தேடிச் செல்வா, விரைவில் மீளுதல் ஆகாது; அவர் சென்று, ஆங்குப பொருள் தேடிவரும் காலம்வரை, அவா இளமையோடிருப்பர் என்பது அரி தினும் அரிதாம்; இளமை அவர்பால் நில்லாது கழிந்து விடும்; வாழ்வில் இன்பம் துய்த்தற்கு ஏற்றகாலம் இளமையே; இளமைகழிந்த பின்னர் இன்பம் துய்த்தல் இயலாது; அந்நிலையில், அவர்க்கு எப்பொருளிடத்தும் இன்பநினைவு எழாது; "இறந்தசெய் பொருளும் இன்பம் தரும் எனின், இளமையிற் சிறந்த வளமையும் இல்லை; இளமைகழிந்த பின்றை, வளமை காமம் தருதலும் இன்றே" என்ப. ஆகவே, இன்பம் துய்க்கவேண்டிய இவ் இளமைக் காலத்தே, மறத்தற்கரிய பேரழகும், பெருங் காதலும் உடைய மனைவியைப் பிரிந்து, பொருள்தேடிப் போதல், நம் இளமைப் பருவத்திற்கும், அக்கால இன்பத் திற்கும் அழிவுதரும் செயலேயாம; என்னே இக் கொடுமை!" என்றெல்லாம் எண்ணி வருந்தினன் எனப் பாடிய பாட்டில், பழந்தமிழர், பொருள்தேடிப் பெரு வாழ்வு வாழ்ந்து பிறர்க்குப பயன்பட வாழும் வாழ்வே வாழ்வாம்; அவ்வாழ்வுபெறத் தம இளமையும், இன்பமும் கழியினும் கேடின்று என எண்ணும் உயரிய உள்ள மூடையராவர் என்பதை அழகாக எடுத்துக் கூறியுள்ளமை உணர்க.

"குன்றுகெழு சிறுகுடி அரிய என்னது
மறப்பருங் காதலி ஒழிய
இறப்பல் என்பது, ஈண்டுஇளமைகு முடிவே."
(குறுந்: கநிக)

தூங்கலோரியார் பாடிய நற்றிணைப் பாட்டொன்று பழந்தமிழகத்தே உழவர் பெற்றிருந்த செல்வ வாழ்வினையும், அவ்வுழவர் தம் தொழில்மேற் செல்லும் முறை

யினையும் உணரத் துணைபுரிந்து நிற்கிறது. உழவர் வீடு தோறும் மலைபோல் உயர்ந்த நெற்கூடுகள் பல நிற்கும்; நெற்கூடு நிறைய நெல் அளந்து கொட்டப்பெறும்; தொழில்மேற் செல்லும் உழவர், வெயிலேறின் உழவெருமைகள் மயங்கும் என்பது அறிந்து விடியற்காலையிலேயே செல்வர்; அவ்வாறு விடியலிலேயே செல்லவேண்டியிருப்பதாலும், தம தொழிற்குத் துணைபுரிவாரை ஒன்றுசேர்க்க வேண்டியிருப்பதாலும, அவர் இரவெல்லாம் உறங்காதே இருப்பர்; செல்வார் செல்வதற்குமுன் வரால் மீனைத் தடிந்து உடனிட்டு ஆக்கிய சோற்றை வயிறார உண்டு மகிழ்வர்; வயலிலே சென்று எல்லோரும் ஒன்றுகூடிச் சேற்றில் இறங்கி, நாற்று நடுதற்குமுன் நிலத்தைப் பண்படுத்துவான் வேண்டி, ஆங்கு வளர்ந்துள கோரைகளையும், நெய்தல்களையும் களைந்து எறிவர். சங்ககாலத்திற்கும், இக்காலத்திற்கும் இடையே எத்தனையோ மாறுதல்கள் நிகழவும, அக்காலததே அவர் மேற்கொண்ட உழவுமுதலாம் தொழில்முறைமட்டும் இன்றும் மாறாமல் இருப்பது, தமிழர்கள் மாற்றவொண்ணா, மாற்றவேண்டாத தொழில் முறைகளை அன்றே அறிந்த அறிவினராவர் என்பதைப் புலப்படுத்தி நிற்கிறது:

> "மலைகண்டன்ன நிலைபுணர் நிவப்பின்,
> பெருநெல் பல்கூட்டு எருமை உழவ!
> கண்படை பெறாது, தண்புலர் விடியல்,
> கருங்கண் வராஅல் பெருந்தடி மிளிர்வையொடு
> புகாவை அரிசிப் பொம்மற் பெருஞ்சோறு
> கவர்படு கையை கழும மாந்தி
> நீருறு செறுவில் நாறுமுடி அழுத்தநின்
> நடுநரோடுநீ சேறியாயின், வண்
> சாயும், நெய்தலும் ஓம்புமதி." (நற். கூ0)

## ஈசு. தேவனூர்

நாகன், பூதன் என்ற பெயர்களைப் போன்றே தேவன் என்ற பெயரையும் பண்டைத தமிழமக்கள் தம் இயற் பெயராகப் பயிலமேற்கொண்டிருந்தனர்; பண்டவாணிகன் இளந்தேவன், தமிழ்க்கூத்தன் நாகன்தேவன், பாரதம் பாடிய பெருந்தேவன், ஈழத்துப்பூதன் தேவன், வாயிலான் தேவன், கடுகு பெருந்தேவன் போன்ற பெயர்களை நோக்குக தேவனூர், சோணாட்டுச் சிறப்புடை ஊர்களுள் ஒன்றாய ஆர்க்காட்டினை அறிந்து பாராட்டியுள்ளமையால், இவரை அநநாட்டினராகக் கொள்ளுதல் பொருந்தும். "ஆர்காடு, சோழர்க்கு உரியது; அச்சோழர் ஒலிக்கும் மணிகளை இருபாலும் நாலிடக்கொண்ட யானைகளையும் பொன்னாலாய பேரணிகளையும உடையவராவர். ஆர்காட்டுத் தெருக்கள் ஆடும் கொடிகளால் அழகுற்றுத் தோன்றும்; அத்தெருக்கள கள்விற்கும கடைகளையும் கொண்டிருக்கும, ஓயாது ஒடும் தேரொலி, அத்தெரு வெலாம் முழங்கும்" எனச் சோழரைப் பற்றியும், அவர்க் குரிய சோணாட்டினையும சிறப்பித்துப் பாடியுள்ளார்:

"படுமணி யானைப் பசும்பூட் சோழர்
கொடிநுடங்கு மறுகின் ஆர்கைகாட் டாங்கண்
கள்ளுடைத் தடவிற் புள்ளொலித தோவாத்
தேர் வழங்கு தெருவு." (நற்: உஉள)

தக்க இன்ன, தகாதன இன்னவென்று ஒக்கவுணரும் உணர்வும, உள்ளத்தை அது சென்றவழிச் செல்லவிடாது, நிதொரீஇ, நன்றின்பால் உய்க்கும் ஆறறலும உடையவரே அறிவுடையராவர், 'தக்க இன்ன, தகாதன இன்ன என அறிநது அவ்வழி நடப்பதே அறமாம் ஆகவே அறிவும, அறமும் பிரிக்கலாகாப் பண்புடையனவாம் எனல் பொருந்தும்; எங்கே அறிவுண்டோ, அங்கே அறம் உண்டு; எங்கே அறம் உண்டோ அங்கே அறிவுண்டு; அறவுணர்வு இலாதவர் அறிவிலாதவராவர்; அறிவு அற்றவர், அறம் அற்ற

வராவர்; அறிவிற்கும் அறத்திற்கும் இடையே உண்டாம் இவ்வுறவினை, "அறனறிந்து மூத்த அறிவு" என்ற அருந் தொடர் வழியே அறிவுறுத்தியுள்ளார் ஆசிரியர் வள்ளுவப் பெருந்தகையாரும். இவ்வுண்மையினைப் புலவர் தேவனார் தெளிய உணர்த்தியுள்ளார் ஒரு பாட்டில்.

தான் காதலித்த ஒரு பெண்ணை மணம் செய்துகொள் ளாது களவுப் புணர்ச்சியே கருதுதலையனுய் ஒழுகலா யினன்; அதனால் தலைவியின் துயர் பெருகிற்று; அவள் துயர் போக்கிக தன்னை புரிய விரும்பினாள் தோழி, உடனே தலைவன்பால் சென்றாள்; "ஐய! தலைவியும் நீயும் களவில் காதலுடையராய் வாழ்தல் ஊரில் அலராகிப் பரவிவிட்டது; 'தலைவன் அறன் உடையனல்லன்; அவன் களவையே பெரிதும் விரும்புகின்றான்; களவு நீது என்பதை அறிவு உடையார் ஒவ்வொருவரும் உணர்வர்; அதை இவன் உணர்ந் திலன்; ஆகவே தலைவன் அறிவற்றவனுவன்; அறிவில்லா இடத்தே அறனும இன்றும், ஆகவே தலைவன் அறனும் அற்றவனுவன' என்றெல்லாம கூறி அலர் எழுப்புகின் றனர், அவ்வாறு எழுமை அலருரை இவள காதிலும் விழுந்துவிட்டது; தன்னால் அன்பு செய்யப்பட்டாரைப் பிறர் பழித்துரைப்பது காணப்பொறாது இவள் உள்ளம; அவ்வல ருரையால், இவள் நல்லுயிர் நில்லாது கழியினும் கழியும்; அலர் எழுதற்குக் காரணமாய நீயே, இவள் உயிர் கழிதற்கும காரணமாகுவை; ஆகவே, இவளை வரைந்து கொள் முயற்சியினை விரைந்து மேற்கொள்வாயாக!" என்று கூறினாள்

தோழியின் இக்கூற்றமையப் பாடிய இப்பாட்டில், அறிவு—அறம ஆயவற்றிற்கிடையே உண்டாம் உறவினை எடுத்துக்காட்டியதோடு உண்மை அன்பும், உயர்ந்த உள் ளமும் உடைய மனைவியாவாள், தன் கணவனைப் பிறர் பழித்து உரைக்கும் உரைகேட்டு வாழா உள்ளவரம் உடையவளே; அத்தகைய உரவுள்ளம் உடையார் பழந் தமிழ்க் காலத்தே மிகப் பலராவர் என்ற செய்தியையும் தெளியத் தெரிவித்துள்ளார்:

"அறிந்தோர் அறனிலர் என்றலர், சிறந்த
இன்னுயிர் கழியினும் நனி இன்னாதே ;
புன்னெயங் கானல் புணர்குறி வாய்த்த
பின்னீ ஒதி என் தோழிக்கு, அன்னே!
பலமணி யானைப் பசும்பூட் சோழர்
கொடிநுடங்கு மறுகின் ஆர்க்காட்டு ஆங்கண்
கள்ளுடைத் தடவிற் புள்ளொலித்து ஓவாத்
தேர்வழங்கு தெருவின் அன்ன
கௌவை யாகின்றது ஐய! நின் அருளே."

(நற் : உஉஎ)

## ங. தேவகுலத்தார்

தேவகுலம் எனும் சொல், இறைவன் உறையும் கோயில் எனும் பொருள் உடையது; "ஊராளுநர் தேவ குலம்" எனும் தொடரையும காண்க. தேவகுலத்தார் எனும் புலவாதம பெயரும், அவர் பாடிய பாட்டு, குறுந் தொகைக்கண், இறையனர் பாடிய "கொங்கு தேர் வாழ்க்கை" எனும் செய்யுளை அடுத்து வைக்கப்பெற்றிருப் பதும் மதுரைத் திருக்கோயிலோடு இவர் கொண்டிருந்த யாதோ ஒரு தொடர்பு குறித்தேயாம் எனக் கூறுவர் சிலர்.

தலைவன் ஒருவனோடு தான் கொண்ட நட்பின் பெருமை இத்தன்மைத்து எனப் பாராட்டிக் கூறுவாள், "அந்நட்பு, பரப்பால் நிலம்கொள்ளும் பெருமையினும், அது பெரிது; உயர்வால் வானம் பெறும் பெருமையினும் பெருமையுடைத்து; ஆழத்தால் கடல்பெறும் பெருமை யினும் பெருமை உடைத்து" என்று கூறினள் எனப் பாடித் தலைவன் தலைவியர்க்கிடையே உண்டாம் நட்பின் இயல்பு இத்தன்மைத்தாதல் வேண்டும் என விளங்கவைத் துள்ளார்.

"நிலத்தினும் பெரிதே, வானினும் உயர்ந்தன்று;
நீரினும் ஆர்அளவின்றே; சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும நாடனொடு நட்பே."

(குறுந்: ங)

## ஈஅ. தொல் கபிலர்

பரணரையும், பாரியையும் பழகிய நட்பினராகக் கொண்டு வாழ்ந்த கபிலர் வேறு; இவர் வேறு என்பதை அறிவித்தற்கே இவர் தொல் கபிலர் என அழைக்கப்பெற்றுளார்; இக் கபிலர் அக் கபிலரினும் தொன்மை வாய்ந்த வராதலின், இவர் தொல்கபிலர் எனப்பட்டார் என்ப சிலர்; சிலர், இவர் ஆற்று வெள்ளத்தால் பல்லாண்டுகளாக மோதப்பெற்றும அழியாதுநிற்கும பெருமை வாய்ந்த கான்யாற்றுக் கரைபினைத 'தொல்கரை' என்ற தொடரால் சிறப்பித்தமை குறித்து, "தொல்கரை பொருதிரை நிவப் பின்வரும் யாறு" (நற்: ககசு) இவர் அவ்வாறு அழைக் கப்பெற்றுளார் என்ப. இவர் பாடிய பாக்கள், நற்றிணை, குறுந்தொகை, நெடுந்தொகை ஆகிய மூன்று நூலினும் இடம் பெற்றுள்ளன. குறிஞ்சிநிலக் காட்சிகளையும், அக் காட்டுறை மக்கள் வாழ்வியலையும், அவர்தம் பண்பாட்டி னையும் பாடவல்லவராவர் என்பது அவர் பாக்களைப பயின் றார்க்குப் புலனும்.

கோரைக்கிழங்குபோலும் தன் உணவினைப பெறல் வேண்டிப் பன்றி நிலத்தைப பறிக்க, ஆங்குக் கிடந்து வெளிப்போந்த மாணிக்கக் கற்களின ஒளியில், தன் பிடி, தான் ஈன்ற கன்றோடு இனிது உறங்க, அவற்றிற்கு ஊறொன்றும் நேராவண்ணம், களிறு நின்று காக்கும் காட்சியொன்றைக் கண்முன் கொணர்ந்து காட்டியுள்ளார்:

> "கேழல் கெண்டிய
> நிலவரை நிவந்த பலவுறு திருமணி,
> ஒளிதிகழ விளக்கத்து ஈன்ற மடப்பிடி
> களிறுபுறம் காப்பக் கன்றொடு வதியும்."
>
> (நற்: ஙஉஙக)

மலைநாட்டகத்தே, மண்ணுக்கடியில் கிழங்குகளும், மரங்கள்தோறும் தேனடைகளும் கிடந்து வளங்கொழிக் கும்; ஆண்டுள்ளார், சிற்சிலவே விதைக்கப் பற்பல தினை

களை உதவும் வளம் செறிந்தது அந்நிலத்து மண் எனக் குறிஞ்சிநிலத்து நலத்தினைப் பாராட்டியுள்ளார் ஒரு பாட்டில் ;

"இழங்கு கீழ்வீழ்ந்து, தேன்மேல் தூங்கிச
சிற்சில வித்திப் பற்பல விளைந்து
தினைகிளி கடியும் பெருங்கல் நாடு." (நற் : 58அ)

வேட்டை மேற் செல்லும் கானவர், எதிரிகளைத் தப்பாது கொள்ள வல்ல நாய்கள் பின் தொடர, கொம்பை ஊதி ஒலி செய்துகொண்டே செல்வர் என்றும், ஆண்டு, தன் வில்லாற்றல் காட்டிக் கொன்ற யானையின் கோட்டைக் கொண்டு, அந்நிலத்து மலையகத்தே மண்டிக் கிடக்கும் பொன்பெற அகழ்வுழி, பொன்னுடன், பேரொளி வீசும் மணிகளும் வெளிப் போதரல் கண்டு வியந்து நிற்க, தன் கையுறை யானைக் கோடு, அகழ்ந்ததால் ஒடிய, அதினின்றும் முத்துக்கள் உதிர, மணி, பொன், முத்து ஆகிய அம்மூன்றையும அளவின்றிப் பெற்று, அவற்றை சந்தனக் கொம்பையே காவும கோலாகக்கொண்டு சுமந்து கொணர்வன் என்றும், கானவர்தம செல்வவாழ்வினைச் சிறக்கப் பாடியுள்ளார் :

"கோடு துவையாக் கோள்வாய் நாயொடு
காடுதேர் நசையிய வயமான் வேட்டுவன்."
(நற் : 248சு)

"பெருமலைச சிலம்பின் வேட்டம் போகிய
செறிமடை அம்பின் வல்வில் கானவன்,
பொருது தொலையானை வெண்கோடு கொண்டு,
நீர்நிகழ் சிலம்பின் நன்பொன் அகழ்வோன்,
கண்பொருது இமைக்கும் திண்மணி கிளர்ப்ப
வைந்நுதி வான்மருப்பு ஒடிய உக்க
தெண்ணீர்ஆலி கடுக்கும் முத்தமொடு
மூவேறு தாரமும் ஒருங்குடன் கொண்டு
சாந்தம் பொறை மரமாக நறைநார்
வேங்கைக் கண்ணியன் இழிதரும்." (அகம் : 248உ)

பகற்குறி வந்து நீங்கும் தலைவனை நோக்கி, "ஐய! யாம் குறவர் பெறுமகளிராவோம்; இக்குன்றுறை வாழ்வினரேம்; தினைக்காவல் புரிவோர், காவல் கருதி அமைத்த பரணிடத்தே மயில் சென்று வாழும் மலைகளின் இடையே அதோ தெரிவது எம் ஊர்; இரவிற் செல்லாது, ஆண்டு வரின், நீ விரும்பும் தேன் உண்டு மகிழ்தலோடு, வேங்கையடியில், எம்மவர் நிகழ்த்தும் குரவைக் கூத்தினைக் கண்டு களித்தலும் உண்டாம; ஆகவே தங்கிச் செல்வாயாக" என வேண்டினாள் தோழி, எனப் பாடிக் கானவர்தம் விருந்தேற்றுப்போற்றும் பண்பினைப் பாராட்டியுள்ளமை உணர்க.

"குறவர் மகளிரேம்; குன்றுகெழு கொடிச்சியேம்;
சேணோன் இழைத்த நெடுங்காற் கழுதில்
கான மஞ்ஞை கட்சி சேக்கும்
கல்லகத்தது எம்ஊரே, செல்லாது
சேர்ந்தனை சென்மதி நீயே; பெருமலை
வாங்கமை பழுனிய நறவுண்டு
வேங்கமை முன்றில் குரவையும் கண்டே." (நற்: உஎசு)

தலைவி விரும்பிய தலைவனுக்கே அவளை மணம் செய்து தர விரும்பினர், அவள் உற்றார் என்பதை, "நம் தந்தையும், நின்னை அவனுக்கே கொடுக்க இசைந்தனன்; ஊரில் உள்ளாரும் நின் பெயரை, அவன் பெயரோடு கூட்டியே வழங்குகின்றனர்; நம் தாயும், நின் தோளுக்கேற்ற தோழனை அவனையே எண்ணுவள்" என்று கூறுமுகத்தான் உறுதி செய்துவிட்டு, "இனி இம்மணம் நிகழுமோ எனும் அச்சம் ஒழிந்து, அம்மணம் நிகழ்நாள் விரைவில் வந்துறுமாக என நம் இல்லுறை கடவுளரை, நாம் கைகூப்பித் தொழுவோமாக," என்று விரும்பினாள் தோழி எனப்பாடிய பாட்டின்வழியே, தாம் விரும்பும் காதலரையே தாம் பெற்றவிடத்தும், தம் இல்லுறை தெய்வங்களை மறவாது போற்றும் மகளிர்தம் உள்ள மாண்பினை உணர்த்தியுள்ளார்:

"நாடற்கு
இன்றீம் பலவின் ஏர்கெழு செல்வத்து
எந்தையும் எதிர்ந்தனன் கொடையே; அலர்வாய்
அம்பல் ஊரும் அவலெடும் மொழியும்;
சாயிறைத் திரண்ட தோள் பாராட்டி
யாயும் அவனே என்னும்; யாமும்
'வல்லே வருக வரைந்தநாள்' என
நல்லிறை மெல்விரல் கூப்பி
இல்லுறை கடவுட்கு ஒக்குதும் பலியே." (அகம். உஅஉ)

பண்டைக்காலத்துக் கூத்தாடு மகளிர், தம் ஆடற் றொழில் கண்டு மகிழ்ந்த மக்கள், விலையுயர்ந்த நன்கலன் பல நல்கின் பெறுவளேயன்றி, எண்ணெயும், துணியும் அளிப்பராயின், பெறவிரும்பாள் என்ற செய்தியைத் தெரிவித்து அக்கால மக்கள்தம் மனவுயர்வின் மாண்பினைப் புலப்படுத்தியுள்ளார் புலவர் :

"எண்பிழி நெய்யொடு, வெண்கிழி வேண்டாது,
சாந்துதலைக் கொண்ட ஓங்குபெருஞ் சாரல்
விலங்கு மலையடுக்கத் தானும்
கலம்பெறு விறலி யாடும் இவ்வூரே." (நற் : கூஉஅ)

## ங. நப்பண்ணனூர்

பண்ணன் எனும் இயற்பெயருடைய நம் புலவர், பெரும்புலமை உடையராதல் அறிந்த அவர்கால மக்கள், சிறப்புணர்த்தும் 'ந' கர இடைச்சொல்லையும், உயர்வுணர்த்தும் 'ஆர்' விகுதியையும் முறையே அவர் பெயர்க்கு முன்னும் பின்னும் சேர்த்து வழங்கிப் போற்றுவாராயினர். நப்பண்ணனூர் பரிபாடல் பாடிய புலவர்களுள் ஒருவராவர்; பாண்டிநாட்டிற் பிறந்தவர்; தாம பிறந்த பாண்டிநாட்டின் கண்ணதாய பரங்குன்றினையும், அக்குன்றுறை குமரவேளினையும் பாராட்டிய பணிவதோடு, அந்நாட்டுத் தலைநகராம் கூடன்மாநகரையும், அந்நாட்டு அரசனையும், அவனைச்சூழ இருக்கும் அமைச்சர் முதலாயினரையும் பாராட்டி மகிழும் பெரும்பற்றும் உடையராவர். தாம் பாடிய பரிபாடற் கண், பாண்டிநாட்டுத் தலைநகராம் கூடலை, உலகத்துள்ளார் அனைவரையும் ஒருங்கே வெல்லவல்ல பேராற்றலும், பேரறிவும் உடையாராவாழ் கூடல் என்றும், பாண்டியனை அறிவானமைந்த அழகுடைப் பாண்டியன் என்றும், அவன் அமைச்சரைக் கடனறிந்த கண்போலும் அமைச்சர் என்றும் பாராட்டியுள்ளமை யுணர்க.

"புலத்தினும், போரினும் போர்தோலாக் கூடல்."

"புலமாண் வழுதி."

"கடனறி காரியக் கண்ணவர்."

(பரி: ஙக: அ, உ0, உஉ)

புலவர் நப்பண்ணனூர், தாம் பாடிய பரிபாடற்கண், திருப்பரங்குன்றத்தே நிகழும திருவிழாக் காட்சிகளையும், அவ்விழாக் காணச்செல்லும் மக்களின் மனநிலையினையும் நன்கு எடுத்துக்காட்டியுள்ளார். பொருள்தேடிப் பெற்ற பாண்டிநாட்டு மக்கள், அப்பொருளால் பெறலாம் பேரின்பம்பெற வேண்டி, பரங்குன்றத்தே நிகழும் பெருவிழாக் காணச்செல்லும் செயல், அறம் செய்தார் அவ்வறத்தாலாம் பயன் பெறல்வேண்டி அறக்கம் புகுதலோடொக்கும் என உவமை காட்டியுள்ளார் புலவர்:

"அறம் பெரிதாற்றி அதன்பயன் கொண்மார்
சிறந்தோர் உலகம் படருநர் போல." (பரி : கக : க0-கக)

விழாக்காண வருவார்தம் இன்பத்தினைப் பெருக்கு தற்காம் காட்சிகள் பல, ஆங்காங்கே அமைந்திருப்பதை அழகுறக் கூறிவரும் புலவர், ஆங்குள்ள ஓர் ஓவியச்சாலை யின் உயர்வினையும் பாராட்டியுள்ளார் அவ் வோவியச் சாலையின் உள்புக்காருட் சிலர், துருவ சக்கரத்தைப் பொருந்திச்சுழன் றுவரும் ஞாயிறு முதலாம் கோள்களின் இயல்பினை எழுதிக்காட்டும் ஓவியத்தைக் கண்டு நின்றனர்; இரதியும், காமனும் எழுதிய படத்தருகே நின்று சிலர், இவள் இரதி; இவன் காமன் என விளக்கங்காட்ட வியந்து நின்றனர் சிலர்; பூனை உருவுற்ற இந்திரன் இவன்; இவள் அகலிகை; இருவரும் உள்வழிப் புக்க கௌதமன் இவன்; இது, அவனால் அகலிகை பெற்ற கல்லுருவைக் காட்சியைக் காட்டி நிற்பர் சிலர் எனப் புலவர் கூறும் பகுதி, பழங்கால ஓவியக்கலையின் உயர்வினையுள்ளவாறு உணர்த்துவதாம்.

"என்றாழ் உறவரும் இருசுடர் நேமி
ஒன்றிய சுடர்நிலை உள்படு வோரும்:
இரதி, காமன் இவள் இவன் எனஅ
விரகியர் வினவ விளஇறப் போரும்,
இந்திரன் பூசை, இவள் அகலிகை, இவன்
சென்ற கவுதமன், சினனுறக் கல்லுரு
ஒன்றிய படியிது என்று உரை செய்வோரும்
இன்ன பலபல எழுத்துநிலை மண்டபம்."

(பரி : கக : சசு-ஙக)

விழாக்காணச் சென்றருள் பேதைப் பருவத்தா ளொருத்தி, தன் தமரினின்றும் பிரிந்து வழிதவறிவிட் டாள்; பிறகு அவர்களை அடையவேண்டி, ஆங்குள்ள கற்களின் இடையிடையே புகுந்து புகுந்து, "ஏஎ" என் றும், "ஓஒ" என்றும் கூவி அழைத்தாள்; அவள் எழுப்பிய அவ்வொலிகளையே, அங்குள்ள குன்றுகளும் எதிரொலித் தன; எதிரெழும் அவ்வொலிகள், குன்றுகள் எதிரொ

லித்ததன் ஒலியே என அறியாது, அவ்வொலி தன்னைப் போன்றே தன் தமர் தன்னை அழைக்கும் ஒலியாம் எனக் கொண்டாள்; அதனால் அவ்வொலி எழுந்த இடந்தோறும் சென்று சென்று கண்டு, ஆங்குத் தன் தமரைக் காண மாட்டாது கண்ணீர்விட்டுக் கலங்கினாள் எனப் புலவர் காட்டும் காட்சி கவின்மிக வுடைத்தாம்:

"பிறந்த தமரிற் பெயர்ந்தொரு பேதை
பிறங்கல் இடை இடைப்புகுப் பிறழ்ந்து யான்
வந்த நெறியும் மறந்தேன், சிறந்தவா
ஏஎ, ஓஒ என விளியேறபிக்க
ஏஎ, ஓஒ என்று ஏலா அவவினி
அவவிசை முழையேற்று அழைப்ப அழைத்துழிச
செல்குவள் ஆங்குத தமாக்காணுமை
மீட்சியும் கூஉக்கூஉம் மேவும் மடமைத்தே."

(பரி: ககூ · நிஅ-சுஇ)

---

## ச0. நப்பாலத்தனார்

யாப்பருங்கல உரையாசிரியர்களால், நப்பாலத்தனார் சூத்திரம் எனச் சில சூத்திரங்கள் மேற்கோளாகக் காட்டப்படுதலின், நப்பாலத்தனார் யாப்பிலக்கணமும் செய்துள்ளார்போலும். நப்பாலத்தனார், கொல்லி மலையாண்ட வல்வில் ஓரியின் அவையகத்தே வாழ்ந்து, அவன் ஆற்றலும் அருளும் அறிந்து பாராட்டியவராவர்; தலைவியைப் பிரிந்து தனியே சென்று தேடிப் பெறும்பொருள், கொடிய போர் வல்ல வீரர் கூட்டுத் தலைவனும், பெருவள்ளலும் ஆய ஓரி என்பான், தன்னைப் பாடிவருவார்க்கு வாரி வழங்கும் பெரும்பொருள்போலும் பெருமைத்தே ஆயினும், அவனைப் பிரிந்துவந்து பெறவேண்டியிருப்பதால், அது அத்துணைப் பெருமையுடையதன்று என்று கூறினன் ஒரு தலைவன் எனப்பாடிய பாட்டின் வழியே, ஓரியின் உயர்வினைப் புகழ்ந்து பாடியுள்ளமை யுணர்க :

"வெம்போர்
மழவர் பெருமகன் மாவள் ஓரி
கைவளம் இயைவ தாயினும்
ஐதேகம்ம இயைந்து செய் பொருளே." (நற் · 182)

தலைமகளைத் தனியே விட்டுத் தலைமகன் செல்லும் பாலைப் பெருநிலம், போதற்காகாப் பெரும்பாழ் உடையது என்பதை உணர்த்தும் தலைவனும், தலைவியும் அவ்வழியினை அத்துணைக் கொடுமையுடையதாக ஆக்கிய உலகுபடைத்தோன், அவ்வழியில் தானே சென்று தனித்து நடந்து பெருந் துன்புறுவானாக எனக் கூறினர் எனப் பாடிய புலமை பாராட்டற்குரியதாமன்றே !

"ஐதஏகம்ம இவ்வுலகு படைத்தோனே." (நற்: 250)

## சக. நரைமுடி நெட்டையார்

நரைமுடி நெட்டையார் எனும் இப்பெயர், புலவர்க்கு யாதோ ஒரு காரணம்பற்றி வந்த பெயரேயாம் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை எனினும், அக்காரணம் யாது என அறிந்து காணல் இப்போது அரிதாகிவிட்டது. புலவர் நரைமுடி நெட்டிமையார், காதற் சிறப்பும், கடமையின் உயர்வும ஒருங்கே உணர்ந்த உயர் பேராளராவர். கடமையிற் கருத்தூடையார், உலகத்து அரியராவர்; ஆள்வினை மேற்கோடல் ஆடவர்க்கு அறனும எனும் உணர்வு, உள்ளதே உரனுடையார்க் கன்றி உண்டாகாது; அவ்வுணர்வு உண்டாதல், பொதுவாகவே அரிது எனின், காதலிற் கன்றிய உள்ளம் உடையார்பால், அக்கடமையுணர்வு உண்டாதல் அரிதினும் அரிதாம்; காதல் உடையார், கடமையுடையராதலும், கடமையுணர்வுடையரா, காதல் உள்ளமுடையராதலும் அரிது; கடமையுணர்வுடையார்பால், காதல் உள்ளம் உண்டாகாது; காதல் உள்ளம் உடையார்பால், கடமையுள்ளம் உண்டாகாது; இவ்விரண்டையும் ஒருங்கே உடையார் உலகத்தில் அரியராவர்; மூற்றிலும் முரண்பட்ட இவ்விரண்டினையும் ஒருங்கே உடையார், மீளாதுயருற்று மாள்வர்; அவர் உறும் துயரத்திற்கு எல்லை காணலும் அரிதாம்; என்றாலும, அவ்விரண்டினையும் ஒருங்கே உடையாரையே உலகத்தார், உயர்ந்தோர் எனப் போற்றுவர். செயற்கரிய செய்வாரன்றே பெரியார்? இதை உணர்ந்தவர் நம்புலவர்; காதல், கடமை ஆய இரண்டினும் தவறுத் தலைமகன் ஒருவன், ஆள்வினை மேற்கோடல் ஆடவர் கடன் எனும் எண்ணம், தன்னைப் பொருள் தேடிப் போமாறு பின்னின்று தூண்ட, காதலிபால் சென்ற தன் அன்புள்ளம், 'இத்தகையாளை, இப்போது பிரிந்து போதல் அறிவுடைமையன்று; ஆகவே பிரியற்க' என முன்னின்று தடுப்ப, செய்வதறியாது திகைத்து நின்றான். அவன் கையில், உள்ளே தேனொருந்திய ஒரு மூங்கில், இரு பாலும் நீப்பற்றி எரிய, அதன் உள்ளே அகப்பட்ட எறும் பொன்று, எப்பாலும் போகமாட்டாது இருந்து வருந்து

வது போலாம் என்று பாடிக் காதலிற் பிறழாக் கடமை யுள்ளம் உடையார்தம் நிலையினை உள்ளவாறு உணர்த்தி யுள்ளார் புலவர் :

> " ஆள்வினைக்கு எழுந்த அசைவில் உள்ளத்து
> ஆண்மை வாங்கக், காமம் தட்பக்
> கலைபடு நெஞ்சம், கட்கண் அகைய
> இருதலைக் கொள்ளி இடை நின்று வருந்தி
> ஒருதலைப் படாஅ உறவி போன்றனம்."
>
> (அகம் : ௫௫)

உடல் இயங்க, உயிர் துணை புரிகிறது ; உயிர் நிற்க, உடல் துணை புரிகிறது, உடலையின்றி உயிர்நிலைபெறு தலோ, உயிரையின்றி உடல்வாழ்தலோ இயலாது ; நட் புடையார் இருவர், உடலும் உயிரும், ஒன்றையின்றி ஒன்று வாழ மாட்டா ஒற்றுமையுடைய வாதலைப்போன்றே, ஒரு வரையின்றி ஒருவர் உயிர்வாழ மாட்டா ஒன்றியவுள்ளம உடையராதல் வேண்டும் ; அதுவே நட்புடைமையின் நற் பண்பாம் எனத் தாம் உணர்ந்த உணர்வினைத் தன் மனைவி, உடலோடு உயிர் ஒன்றினு லொத்த நட்புடையாள் எனக் கூறிப் பாராட்டினுன் ஒருதலைமகன் எனப்பாடிப் புலப் படுத்தியுள்ளார் புலவர்.

தலைவியோடு கூடிவாழும் வாழ்வு, உயிர், உடலோடு கூடி வாழ்ந்தக்கால் உண்டாம் பேரின்பம் போலும்பேரின் பம் தருவதாம் ; தலைவியைப் பிரிந்து தனித்துறை வாழ்வு, உயிர், உடலை விட்டுப்பிரிந்தக்கால் உண்டாம் பெருந் துயர் போலும் பெருந்துயர் தருவதாம் எனக் கூறினுன் அத்தலைமகன் என்றும் பாடி, பிரிதல் அறியாப் பெரு வாழ்வு வாழும் பேறுடையார்தம் பெருமையினையும் பாராட்டியுள்ளார் புலவர் :

> " நோங்கொல் அளியள்தானே : யாக்கைக்கு
> உயிரியைந்தன்ன நட்பின் அவ்வுயிர்
> வாழ்தல் அன்ன காதல்
> சாதல் அன்ன பிரிவரியோளே." (அகம் : ௫௫)

தேர் ஆழி ஓடிய வழியில் நீர் விரைந்து ஓடும் காட்சி, விரைந்தோடும் பாம்பு போலும் எனவும, பயற்றுச் செடியில் முற்றிய காய்கள், கொத்தாக நிற்கும் காட்சி, ஒன்றை யொன்று ஒட்டுதலின்றிக் குவிந்து நிற்கும் கைவிரல்கள் போலும் எனவும் கூறிய உவமைகள் புலவர் தம புலமைக்குப் பெருமையளிப்பனவாம்:

"வீங்குவிசைப் பிணித்த விரைபரி நெடுந்தேர்
நோன்கதிர் சுமந்த ஆழி ஆழ் மருங்கில்
பாம்பென முடுகுநீர் ஓடக், கூம்பிப்
பற்றுவிடு வீரலிற் பயறுகாழ் ஊழ்ப்ப.'

(அகம்: 56)

## ஈஉ. நல்லச்சுதனார்

அச்சுதன் என்பது திருமாலின் திருப்பெயர்களுள் ஒன்று; அப்பெயருடைய இவர், வைணவ சமயமே விளங்கிய சமயமாம் எனும் குறுகிய உள்ளமிலராய், சைவசமயச் சார்புடைய செவ்வேளைப்பாடும் பெரும் நன்மையுடையராய்க் காணப்பட்டமையின், நல்லச்சுதனார் எனச் சிறப்பிக்கப் பெற்றுளார். பரிபாடலில், முருகனுக்குரிய இருபத்தோராவது பாடல் இவர் பாடியதாம்; பரிபாடலில் வரும், 16, 17, 18, 20-ஆம் பாடல்களுக்கும் இசை வகுத்தவரும் இவரே.

நல்லச்சுதனார், தாம் பாடிய பரிபாடற் றொடக்கத்தே, முருகன் ஊரும யானை, பூண்ட காற்செருப்பு, ஏந்திய வேல், அணிந்த கடப்பந்தார், அமர்ந்திருக்கும் பரங்குன்று ஆகியவற்றின் இயல்புகளை அழகுறப் பாடியுள்ளார்.

ஆடும் விறலி, அவள் ஆடல்கண்டு மயங்கும் ஒரு தலைவன், அவன் செயல்கண்டு சினக்கும் அவன் மனைவி, தன் கணவன் பிறரை நோக்காது, தன்னையே நோக்குமாறு விரும்பி அவள் மேற்கொள்ளும் ஒப்பனை ஆகியவற்றையும் பாடியுள்ளார் புலவர்.

மேகம் ஒலிக்க ஆடும் மயிலின் விரிந்த தோகைகள், சாந்தாற்றும் சிவிறிகள் போலும்; தும்பிகள் மலர்களிற் படிந்து ஊதுங்கால் எழும் ஒலி குழலோசை போலும்; வண்டோசை, யாழோசை போலும், அருவி விழுதலால் எழும் ஒலி, முழவொலி போலும் எனப் புலவர் கூறுவன, அவர்தம் இசையறி உணர்வினை உணர்த்துவனவாம்

மைந்தர் மகிழ்ந்து மார்பிற் பூசிய சந்தனத்தைத் தடவிப் புலர்த்திமீளும காற்றும், மகளிர் தாது உதிரச் சூடியபூ நிறைந்த கூந்தலினூடே நுழைந்துவரும் காற்றும், முருகனை வழிபடல் குறித்துக் காட்டிய தூபப் புகையினைத் தழுவிவரும் காற்றும் கலந்து மணக்கும் மாண்புடையது திருப்பரங்குன்றம் என்றும் பாடி மகிழ்கிறார் புலவர்.

இவ்வாறு பரங்குன்றையும், அக்குன்றுறை பெரு மாணியும் பாடிப் பரவிய புலவர், அவன்பால் பொன்னும், பொருளும், போகமும் வேண்டாது,

"குன்றத்து அடியுறை இயைக்கெனப் பரவுதும்
வென்றிக் கொடியணி செல்வ! நிற்றொழுதும்."

"நன்றமர் ஆயமோடு ஒருங்குநின் அடியுறை
இன்று போல் இயைகெனப் பரவுதும
ஒன்றார்த தேய்த்த செல்வ நிற்றொழுதே"

(பரிபாடல். உக: கசு-எ; சுஅ-எ0)

அவன் அடியுறை வாழ்வு ஒன்றே வேண்டி நிற்பது, புலவர் தம் திருந்திய உளததிற்கோர் உயர்ந்த எடுத்துக் காட்டாகும்.

## ச.க. நல்லழிசியார்

அழிசி எனும் பெயருடையார் பலராவர்; அழிசிநச் சாத்தன் எனும் புலவர் ஒருவரும், ஊர்க்காட்டு அழிசி எனும் வீரன் ஒருவனும் பண்டைக்காலத்தே வாழ்ந்திருந் தனர்என, அக்காலப் பாக்கள் அறிவிக்கின்றன அழிசியார், நல்லவர், பெருந்தகையாளர் என அறிந்த அந்நாள் மக்கள், அவரை நல்லழிசியார் என அழைத்துப் பெருமை செய்த னர். நல்லழிசியார், வையை ஆற்றையும், பரங்குன்றுறை செவ்வேளையும் பாராட்டிப் பாடியுள்ளார்; அவர் தம் மூடைய பாக்களிடையே, பாண்டியர் தலைநகராம் கூடலைப் பாராட்டிப் போற்றியுள்ளமையானும், அப்பாண்டி நாட் டின்கண்ணதாய பரங்குன்றைப் பாடியுளளமையானும், புலவர் நல்லழிசியார், பாண்டிநாட்டிற் பிறந்தவராவர் எனக் கொள்க.

வையை யாறு, மலைபடுபொருளாம் மிளகுக்கொடி, சந்தனம் முதலாயினவற்றைக் கரைக்கண் கொணர்ந்து குவிப்பது, கொடைத் தொழிலாற் சிறந்த வள்ளல் ஒருவன், பாடிவருவார்க்குப் பொருள்களை வாரி வழங்குவது போலாம் எனவும், அக்கரைக்கண வந்து குவியும் நுரைத் திரள், மத்தாற் கடைந்த வழி எழும் தயிர்த்திரள்போலும் எனவும் கூறும் உவமைகள் நயஞ்செறிந்து விளங்கு கின்றன :

> "கரையே, கைவண் தோன்றல் ஈகை போன்மென
> மைபடு சிலம்பிற் கறியொடும், சாந்தொடும்
> நெய்குடை தயிரின் நுரை யொடும், பிறவொடும்
> எவ்வயினுனும் மீதுமீது அழியும்."
>
> (பரிபாடல் : ஈசு : க-ச.)

ஒருபால் எழும் பாணர்தம் யாழோசைக்கு எதிராக வண்டின் இன்னிசை எழலும், ஒருபால் எழும் குழலோ சைக்கு எதிராகத் தும்பியின் மூரல் ஒலி எழலும், ஒரு பால் எழும் முழவொலிக்கு எதிராக, அருவிநீர் ஒலி எழ

லும், ஒருபால் ஆடும் மகளிர் ஆடலுக்கு எதிராகக் கொடிகள் ஆடத் தொடங்கலும், ஒருபால் பாடும் மகளிர் தம்மிடற்றுப் பாடலுக்கெதிராக, ஆடும் மயில்கள் தம் அழகிய குரல் எழலும், கல்வி கேள்விகளான் வென்றி பெற விருமபியவர்கள், தம் ஆற்றலைக் காட்ட மாறுமாறாக முயன்ற செயலோடொக்கும் எனப் புலவர் கூறும் காட்சி புதுமை நலம் பெற்றுப் புகழ்ந்து நிற்பதாம்.

"ஒருதிறம், பாணர் யாழின் தீங்குரல் எழ,
ஒருதிறம், யாணர் வண்டின் இமிரிசை எழ,
ஒருதிறம், கணணுர் குழலின் கரைபு எழ,
ஒருதிறம், பண்ணுர் தும்பி பரந்திசை யூத,
ஒருதிறம், மண்ணா முழவின் இசை எழ,
ஒருதிறம், அண்ணல் நெடுவரை அருவிநீர் ததும்ப,
ஒருதிறம், பாடல் நல்விறலியர் ஒல்குபு நுடங்க,
ஒருதிறம், வாடை உளர்வயின் பூங்கொடி நுடங்க,
ஒருதிறம், பாடினி முரலும் பாலையங் குரலின்,
நீடுகிளர் கிழமை நிறைகுறை தோன்ற,
ஒருதிறம், ஆடுசீர் மருளை அரிகுரல் தோன்ற,
மாறுமாறு உற்றன போல் மாறெதிர் கோடல்
மாறட்டான் குன்றம் உடைத்து"

(பரிபாடல் : கஎ : கூ-உக)

## சசு. நல்லிறையனார்

"கொங்குதேர் வாழ்க்கை" எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாட்டைப் பாடிய இறையனார் வேறு; இவர் வேறு; நல்லிறையனார், குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடிய புலவர்களுள் ஒருவராவர்; பாடற் குரிய பண்பாடு பல பெற்றவன் கிள்ளிவளவன்; தன் நிலத்திற்கு அரசிறையாகத் தரவேண்டிய பொருளைத் தர இயலாமை உண்டாய காலத்தே அரசனை வந்து, இயலாமையினை எடுத்துக் கூறிய புலவர் ஒருவர்க்கு, அவாதர வேண்டிய நிலவரியினை நீக்கியதோடு, பெரும் பொருளும் கொடுத்தளித்த பெருந்தகையாளன்; புலவர் ஒருவர் வேண்டினர் என்பதற்காகவே, கொல்லும் கருத்துடன் தன் யானையின் காற்கீழிட்ட பகையரசன் மக்கள் இருவரையும் உயிரோடு போகவிடுத்த உயர்பேராளன், பெரும் புலவனும் ஆவன். அத்தகையானைப் பாடிப் பெருமை பெற்றார் நம்புலவர் நல்லிறையனாரும்.

புலவர்தம் வறுமை போக்கி வாழ்வளித்தல் தம் கடனும் எனக் கொள்ளும் அறிவுடையார் எவரும் இல்லாத காலத்தும் அவ்வறிவுடையனாய், அருள்செய்ய வல்லான் கிள்ளிவளவனே என உணர்ந்து அவனை அடைந்து பாடிய புலவர், தாம் பாடிய அப்பாட்டில், அவனுக்குரிய காவிரியைப் புகழுங்கால், அதுவும் அவன் இயல்பே உடையது என்று கூறுவார், அது, "ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அக்காலத்தும் ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்" உயர்வுடையது; அக்காவிரி பாயும் நாட்டையுடைய அவனும், அவ்வருள் அறம் உடையனவன் என்று கூறும் பகுதி பாராட்டற் குரியதாமன்றே?

"கோடை ஆயினும், கோடா வொழுக்கத்துக்
காவிரி புரக்கும் நன்னாட்டுப் பொருந!"

(புறம் : ஙகஙக.)

## சரு. நல்லெழுனியார்

தகடூர் ஆண்ட அதிகமான் நெடுமானஞ்சியின் வழி வந்தார், 'எழுனி' என அழைக்கப்பெறுவர்; நல்லெழுனி யாரும் அவன் வழிவந்தவராதல் வேண்டும். திருமாலைப் பாராட்டி இவர் பாடிய பாட்டொன்று பரிபாடற்கண் இடம் பெற்றுளது.

கார்ப்பருவம் வந்துற்றதாக, கருத்து எழுந்த பெரிய மேகத்தைத், திங்களும் ஞாயிறும் இருபாலும் இருந்து அணிசெய்வதேபோல, சங்கும் சக்கரமும் இருபுறமும் விளங்க ஏந்திய கைகளையுடைய திருமால், எனப் புலவர் காட்டும் திருமால் காட்சி, சிலபபதிகாரத்தே அடியார்க்கு நல்லார் காட்டும்,

> விரிகதிர் ஞாயிறும், திங்களும் விளங்கி
> இருமருங்கு ஓங்கிய இடைநிலைத் தானத்து
> மின்னுக் கோடி யுடுத்து, விளங்குவில் பூண்டு
> நன்னிற மேகம் நின்றது போலப்
> பகையணங்கு ஆழியும், பால்வெண் சங்கமும்
> தகைபெறு தாமரைக் கையின் ஏந்தி
> நலங்கிளர் ஆரம் மார்பிற் பூண்டு
> பொலம் பூவாடையிற் பொலிந்து தோன்றிய
> செங்கண் நெடியோன்" (சிலம்பு : கக : சரு -இக)

காட்சியோடொத்து கவின்சிறந்து தோன்றுதல் காண்க.

> "பருவம் வாய்த்தலின் இருவிசும்பு அணிந்த
> இருவேறு மண்டிலத்து இலக்கம் போல
> நேமியும் வலையும் ஏந்திய கையால்
> கருவி மின் அவிர் இலங்கும் பொலம்பூண்
> அருவி உருவின் ஆரமொடணிந்த நின்
> திருவரை அகலம்." (பரிபாடல் : கரு · எ - கஉ)

---

*

## ௪௯. நல்வெள்ளியார்

இவர் பெயர், நல்வெள்ளியார் எனவும், மதுரை நல் வெள்ளியார் எனவும, நல்லெளியார் எனவும் பலவாறு காணப்படும். வெள்ளியார் என்ற பெயரை நோக்கி, இவரைப் பெண்பாற் புலவர் என்று சிலர் கருதுவர்; சுக்கிரனுக்கு வெள்ளி எனபதும் பெயராம் என்பதை நோக்கின், இவரைப் பெண்பாலர் என்றே கொள்வது அத்துணைப் பொருந்தாது என்பது விளங்கும். இவர் பாடியனவாக, நற்றிணையில் இரண்டு பாடல்களும், குறுந் தொகையில் ஒன்றும், அகதத்தில் ஒன்றுமாக நான்கு பாடல்கள் உள்ளன

தலைவர் சென்ற காட்டில், வானம் இன்னே பெய்ய மின்னும்; ஆதலின் வருவர் எனத் தலைமகளைத தேற்றும் தோழி கூற்றும், அன்னை வெறியாடினுள் எனத் தலைவற்குக் கூறி வரைவொடு வரவேண்டுவோமாக எனத் தலைமகன் கேட்கத் தோழிகூறும் கூற்றும், நீ வருநதுணையும் வருந்தி வாடினுள் தலைவி எனும் தோழி கூற்றும், அறத்தொடு நிற்கும் தலைமகள் கூற்றும் தோன்ற அவர் பாடிய பாடல் கள் படித்தற் கினியனவாம்.

"எல்லார்க்கும் நன்றும் பணிதல்; அவருளுள்ளும் செல்வர்க்கே செல்வந்தகைத்து" என்றதை உட்கொண்டு, தலைவன்பால் தோன்றிய பணிவுடைமையினைப், "புரவலண் போலும் தோற்றம் உறழ்கொள, இரவல் மாக்களிற் பணி மொழி பயிற்றி" (அகம். ௩௨) எனக் கூறுவதும், அன்பால் உருகும் உள்ளத்திற்கு மழைபெய்யக் கரைந்த மண்ணை உவமையாக்கி, "இடுபெயல் மண்ணின்ஞெகிழ்பு அஞர் உற்ற என்உள்" எனக் கூறுவதும் நயம் செறிந்து காணப்படும். (அகம்: ௩௨.)

## ௪௬. நற்றங்கொற்றனார்

குறிஞ்சித்திணை தழுவிய நற்றிணைப் பாட்டொன்று, நற்றங்கொற்றனார் பாடியதாகக் காணப்படுகிறது என்ப தல்லது இவர் வரலாறுகப் பிற எதுவும அறிதற்கில்லை. களவொழுக்கம் மேற்கொண்டு ஒழுகும் தலைவன், இடை யிடையே பிரிந்துபோவதால், தான் வருந்துவதையும், அவ்வருத்தத்தால் தன் நலம் கெடுவதையும், அவனுக்கு உணர்த்தி, விரைந்து வந்து வரைந்துகொள்ள விரும்பும் தன் விருப்பத்தினை அவனுக்கு அறிவிக்க விருமபிய தலைவி, ஒருநாள் அவன் தன் வீட்டினபுறத்தே வந்துளான் என்ப தறிந்து, அவன் கேட்குமாறு, தன் தோழியை முன்னிலைப் படுத்தி, "தோழி! அழகிய வேலைபபாடமைந்த தோள்வளை வேண்டி, அது பெறுமையால் அழுதேனுக, நம் தந்தை, நம தலைவன், நமமைவிட்டு இடையிடையே பிரிநதுபோய் விடுதலை அறிநதான்போல, யான் வெறுத்தக கழற் றினலும் கழலாததும, சிறிது நெகிழினும, தான் நிற்க வேண்டும் இடமவிட்டு நீஙகாததுமாய மிகச சிறிய வளை யினைச் செய்து, செறிதது, தலைவன் பிரிவால் உண்டாம் நம் தோளின் துவட்சி, பிறர்க்குப் புலனுகாவாறு செய்து விட்டான்," என்று கூறினள் எனப் பாடிய பாட்டு, பொருள் இன்பம் பயந்து பொலிவுற்று விளஙகுகிறது.

புலவர் பாடிய பாட்டு, அவர் ஒரு கைதேர்ந்த மருத்துவர்; மருத்துவத் தொழிலை மாசறக் கற்றவர் என்பதையும் நமக்குப் புலனுக்குகிறது, "நோய் நாடி, நோய் முதல்நாடி, அது தணிக்குமவாய்நாடி வாய்ப்பச் செயல்;" "உற்றுன் அளவும், பிணி அளவும், காலமும் கற்றுன் கருதிச் செயல்." இவை வள்ளுவர் கண்ட மருத்துவ முறை; இம்முறையினை நன்கு அறிந்தவர் நம் புலவர்; தீர்தற்கரிய நோயுடையான் ஒருவன், அதைத் தீர்க்கவல்ல மருத்துவன் ஒருவன்பால் சென்று, "ஐயா! எனக்கு வந்துள்ள நோய்இது; ஆயினும், நான் வேண்டும் நன் மருந்து இது; ஆகவே அதைத் தருக!" என வேண்

டின், மருத்துவன், அவன் வேண்டும் மருந்தை அளிக்காது, அவன் நோயறிந்து, அந்நோய் போதற்காம் அரிய மருந்து எது என ஆராய்ந்து அம்மருந்தினையே கொடுப்பன்; கொடுத்தல் வேண்டும்; அவ்வாறு கொடுப்போனே நல்ல மருத்துவனுவன்; மருத்துவத் தொழிலின் இன்றியமையாச் சிறப்புடைய இவ்வுண்மையினைப் புலவர் நன்கு அறிந்துள்ளார்; தன் மகள், அழகிய தோள்வளை வேண்டினளாயினும், அதைத் தராது, அவட்கு அப்போது வேண்டுவது அவள் கையினின்றும் கழலாச் சிறுவளைகளே என அறிந்து அவற்றை அளித்த தந்தை செயல், நன் மருத்துவன் செயல் போலாம் என உவமை காட்டியதிறம், புலவர்தம் புலமைக்கும், அவர்தம் உலகியல் அறிவிற்கும் பெருமை யளித்து நிற்கிறது:

"திருந்துகோல் எல்வளை வேண்டி யான் அழவும்,
அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாது,
மருந்துஆய்ந்து கொடுத்த அறவோன் போல,
என்னை வாழிய பலவே! பன்னிய
மலைகெழு நாடனொடு நம்மிடைச் சிறிய
தலைப்பிரிவுண்மை அறிவான் போல
நீப்ப நீங்காது, வரின் வரை அமைந்து,
தோட்பழி மறைக்கும் உதவிப்
போக்கில் பொலந்தொடி செறீஇயோனே."

(நற்: கருசு)

## சஅ. நற்றமனார்

நற்றமனார் பாடிய பாட்டொன்று நற்றிணைக்கண் இடம்பெற்றுளது. மணம்புரிதற்காம் பொருள்வேண்டிப் பிரிந்துசென்ற தலைமகன் விரைந்து வந்திலன்; அதனால் வருந்தினாள் தலைவி; கைவளை கழன்று போமாறு தோள்கள் மெலிந்துவிட்டன; கண்கள் ஒளிகுன்றி அழகிழந்துவிட்டன; நெற்றியில் பசலையும் பாய்ந்துவிட்டது; தலைமகளின் இயல்பறிந்த ஊரார், அலர்தூற்றிப் பழிக்கவும் தொடங்கிவிட்டனர்; அவர் அலர்கேட்டுப் பெரிதும் வருந்தினாள் தலைவி; அவள் துயர் துடைக்க விரும்பிய தோழி, பிரிந்துசென்ற நம் தலைவர், நம்மாட்டுப் பேரன்புடையர்; ஆகவே, அவர், நாம் வருந்த நெடிதுநாள் நில்லார்; விரைவில் வந்தருள்வர்; வருந்தற்க எனக் கூறினாள்; தோழியின் இவ் அன்புரை, தலைவியின் உளத்துயரை ஓரளவு போக்கிற்று; அதனால் சிறிது மகிழ்ந்த தலைவி, "தோழி! தலைவர் வருவர் எனக் கூறிய நின் சொல், வெப்பம் மிக்க உலையில், கொல்லன், பணைமடல்கொண்டு தெளித்த சிலவாயநீர், அவ்வுலை நெருப்பை அடிபோடு அழிக்காது எனினும், சிறிதாவது அழித்தலைப்போல், என் துயரை ஓரளவு குறைத்தது; நீ வாழ்க!" எனக் கூறி வாழ்த்தினாள். தலைவியின் இக்கூற்றினைப் புலவர் மிகவும் சிறம்படப் பாடியுள்ளார்.

"தோளே தொடி கொட்பு ஆஞ; கண்ணே
வாளீர் வடியின் வடிவிழந்தனவே;
நுதலும் பசலை பாயின்று...என்று
வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை தூற்ற
நாமுறு துயரம் செய்யலர் என்னும்
காமுறு தோழி! காதலங் கிளவி,
இரும்புசெய் கொல்லன் வெவ்வுலைத் தெளித்த
தோய்மடற் சின்னீர் போல
நோய்மலி நெஞ்சிற்கு ஏமமாம் சிறிதே." (நற்: கஉங)

## ௪௯. நாகம்போத்தனார்

போத்தன் என்பது புலவர்தம் இயற்பெயர்; நாகன், அவர் தந்தை பெயர்; போத்தனூர் எனும் பெயருடைய ஒரூர், கோவை மாவட்டத்தில் உளது. புலவர் பாடிய பாட்டொன்று குறுந்தொகைக்கண் இடம் பெற்றுளது. வினைமேற்கொண்டு பிரியக் கருதிய தலைமகன் ஒருவன், கார்காலத் தொடக்கத்தே வருவன் எனக் கூறிச்சென்றான். அவன் சொல்லைத் தேறி ஆற்றியிருந்தாள் தலைவி; கார் காலம் தொடங்கிவிட்டது; செம்மண் புழுதி நிறைந்த மேட்டு நிலத்தே வளர்ந்து, காற்றால் அலைப்புண்டு கிடக்கும் வரகின் இலையை, நாட்காலதேதே வந்த மான் குட்டியொன்று கடிததுத தின்பதைக் கண்டாள்; அதனால் கார்காலம் வந்துவிட்டது என்பதைக் கண்டு கலங்கினாள்; தலைவியின் கலக்கம் கண்ட தோழி, அவளை அடுத்து, "தோழி! நீ காணும் இக்கார்காலக் காட்சி, தலைவர் சென்ற நாட்டின் கண்ணும் உண்டு; அவற்றைக் காணும் அவர், 'இக்காட்சியைக் காணும் தலைவியின் கைவளை கழன்று உகாமையோ அரிது' என எண்ணுவர்; ஆகவே, அவர் இல்லாது வருவர்; வருந்தற்க," எனக் கூறித தேற்றினாள். தோழியின் கூற்றினைப பாட்டாக்கித தந்துள்ளார் புலவர்:

"செவ்விகொள் வரகின் செஞ்சுவல் கலித்த
கௌவை நாற்றின் கார்இருள் ஓர்இலை
கவ்வி நாண்மறி கவ்விக் கடன்கழிக்கும்
காரெதிர் தண்புனம் காணின் கைவளை
..... ..... .....
சோர்குவ அல்ல அன்பர்கொல் நமரே."

(குறுந். உஅஉ)

## (50. நாமலார் மகன் இளங்கண்ணன்

நம் புலவர், நாமலார் என்பார்தம் மகனார்; இளங் கண்ணன் எனும் இயற்பெயரினர் என அவர் பெயர் அறி விக்கும் வரலாறன்றி வேறு எதையும் அறிதற்கு இல்லை.

சென்ற வினைமுடித்து வீடுநோக்கி வரும் தலைமகன் தன் மனையகத்தே உறையும் தன் மனைவியையும், ஆழ்ந்த நீரில் ஒன்றையொன்று முரணிநிற்கும இரு கயல்மீன் களைப்போலும் கண்களையும, இனிய சொற்களையும் உடைய அவள் அழகையும், தான் இல்லாமையால் வருந்தும் அவள் துயர்நிலையினையும் எண்ணினான்; உடனே அவள் இருக்கும் இடத்தை விரைந்தடைய விரும்பினான்; மாலைக்காலம் வரு வதற்குமுன் ஆங்குச் சென்றடையானாயின், இடைவழியில் ஆணும் பெண்ணுமாய மானினங்கள் மகிழ்ந்து ஆடும் காட்சியைக் கண்டு தானும் வருந்தவேண்டிவரும் என உணர்ந்தான், உடனே பாகனை விளித்து, "பாகனே! நம் தேரிற்பூட்டிய குதிரைகள் காற்றெனக் கடிதுசெல்லும் இயல்புடையன என்பதை அறிவேன்; அவை அவ்வாறு செல்லுமாறு செலுத்த வேண்டுவது நின் கடன், மாலை வாராமுன் மனையடையுமாறு கடவுவாயாக" என வேண்டி னான். தலைவன் வேட்கை விளங்கும் புலவா பாட்டொன்று குறுந்தொகைக்கண் வந்துளது:

"பரல் அவல்படு நீர்மாந்தித துணையோடு
இரலை நன்மான் நெறிமுதல் உகளும்
மாலைவாரா அளவைக் கால்இயல்
கடுமாக் கடவுமதி பாக! நெடுநீப்
பொருகயல் முரணிய உண்கண்
தெரிதீங் கிளவி தெருமரல் உயவே." (குறுந்: 130)

தனித்துக் கிடக்கும் தலைவி, நீர்ததும்பும் கண்ண ளாய்க் கலங்கி நிற்கின்றாள் என்பதைப் பாகனுக்கு உணர்த் தும் தலைவன், அவள் கண்களுக்கு ஆழ்ந்த நீரில் ஒன்றோ டொன்று முரணிநிற்கும் கயல்மீன்களை உவமைகூறி, அம் மீன்களைப்போன்றே அவள் கண்களும் கண்ணீர் வெள் ளத்துள் ஆழ்ந்து கிடக்கின்றன என்பதை அறியவைத் தான் எனப் பாடிய பாடல் பாராட்டற்கு உரித்தாம்.

---

## நெ. நெடும்பல்லியத்தை

நெடும்பல்லியத்தனார் எனும் பெயருடைப் புலவர் ஒருவர் உளர்; அவர் தாம் பாடிய பாட்டொன்றில், யாழ், ஆகுளி, பதலிபோலும் பல இசைக் கருவிகளோத தொகுத்துக்கூறிச் சிறப்பித்துள்ளமையால் அப்பெயர் பெற்றார் என்ப. அக்காரணம் நம் புலவர்க்கும் பொருந்தும் எனக் கோடற்கு இடமின்று. நெடும்பல்லியதத்தையார், நல்லிசைப் புலமை மெல்லியலாருள் ஒருவராவர். அழகிய பாட்டொன்று இவர் பெயரால குறுந்தொகைக்கண் இடம் பெற்றுளது.

தலைவனும், தலைவியும் மணம் புரிந்துகொண்டு மனையறம் மேற்கொண்டு வாழும் மனைக்குச் சென்றிருந்தாள் தோழி; ஆங்குத் தலைவன், தலைவியைத் தனித்துக் கண்டு அளவளாவ விரும்பும் விரைவினைக் கண்டாள், தலைவனிடத்தே சென்றாள்; "ஐய! தலைவி, நினக்கு மிகவும் எளியளாய், நின் அருகிலேயே இருக்கும் இக்காலத்திலேயே அவளைக் கண்டு அளவளாவ, இவ்வளவு விரைவுகாட்டும் நீ, கார்த்திகைப் பிறைபோல், யாங்கள் காண்டற்கு அரியராகிய களவுக்காலத்தில் இவளைக்கண்டு அளவளாவ, நீ எத்துணை விரைவுற்றனையோ? அதை எண்ணிப்பார்க்கும் என் உள்ளம் மிகவும் வருந்துகிறது," என்று கூறி அவன் அன்பினைப் பாராட்டினாள்.

தோழியின் பாராட்டுரையினைப் பாட்டாக ஆக்கித் தந்த புலவர், தலைவியைத் தன் மனையகத்தே பெற்றுள்ளமையால், வேண்டும்போதெல்லாம் தன் வேட்கையினைப் போக்கிக்கொள்ளும் வாய்ப்புடைய அவன், அதற்காக மிகவும் அல்லற்படுதல் நீரில் இறங்கி, ஆம்பல் போதும் மலர் கொய்வார், நீர் வேட்கையுற்றவழி, அவ்வேட்கை போக்கும் நீரிடையே இருந்தும், வேட்கை நீங்க அல்லலுற்று விரையும் அறியாமை போலாம் என்று கூறிய உவமை உயர்ந்த புலமை வாய்ந்ததாம்.

பிறை தொழும் வழக்கம் பண்டைக்காலத்தினும் உண்டு என்பதையும் புலவர் குறித்துள்ளார் :

"அயிரை பரந்த அந்தண் பழனத்து
எந்தெழில் மலர தாம்புடைத திரள்கால்
ஆம்பல் குறுநர் நீ வேட்டாங்கு இவள்
இடைமுலைக் கிடநதும் நடுங்கலானீர் ;
தொழுதுகாண் பிறையிற் றோன்றி, யாம் நுமககு
அரியம் ஆகிய காலைப்
பெரிய நோன்றனிா, நோகோ யானே."

(குறுந் : களஅ)

## ருஉ. நெய்தற் கார்க்கியன்

கவுதமன் என்பதேபோல், கார்க்கியன் என்பதும் ஒரு முனிவர் பெயராம்; அவர் பெயர், நம் புலவர்க்கும் இடப் பெற்றுளது; தாம் பாடிய பாக்கள் தோறும், குறிஞ்சி ஒழுக்கமே நிகழ, நெய்தற் கருப்பொருள் தந்து பாடிய சிறப்பால் புலவர் நெய்தற் கார்க்கியன் என அழைக்கப் பெற்றுளார்.

தலைவன் குறைமுடிப்பதாக வாக்குறுதி அளித்து வந்த தோழி, தலைவிபாற் சென்று, "தோழி! தலைவன் ஏறிவந்த கொடிஞ்சியொடு கூடிய நெடிய தேர், மணி ஒலிக்க வந்தது நம்மைக்காண; நம்மைக் காணவந்த அத் தேரை, நாம் ஏற்றிப் போற்றியிருத்தல் வேண்டும்; தமமை நோக்கி வருவார்தம் குறையைப் போக்கித் துணைபுரிதல் தகுதியுடையார்தம் தலையாய கடனும்; அதனை யாம் செய்திலேம்; அதனால் நாணம் இழந்தோம் நாம், இன்மை உரைத்தார்க்கு அது நிறைக்கலாற்றுக்கால் தன் மெய் துறத்தலே தலையாய அறமாம, அதையும் நாம் செய்திலேம்; நம் செயல் எனக்கே பெரிதும் வருத்தமாயுளது; நின்பாற்கொண்ட அவன் காமம் அளி பெறுமையான் அழிந்துவிடுமோ எனவும் அஞ்சுகின்றேன்" என்றெல லாம கூறி அவனை ஏற்குமாறு செய்தாள். தோழியின் இக் கூற்றினைப் பாட்டாக ஆக்கியுள்ளார் புலவர்:

"கொண்கன் ஊர்ந்த கொடுஞ்சி நெடுந்தேர்
தெண்கடல் அடைகரைத் தெளிமணி ஒலிப்பக்
காணவந்து நாணப் பெயரும்;
அளிதோ தானே காமம்;
விளிவது மன்ற நோகோ யானே." (குறுந: உகஉ)

தலைவன் வரைந்து கொள்ளாமல் தனித்து வாழும் வாழ்வு தாங்கற்கரிய துயர் உடையது; அவ் வாழ்வில் நெடிதுநாள் வாழலும் இயலாது என்பதைத் தலைவி தன் ஊரின் மேலேற்றிக் கூறினள். எனப் பாடினர்:

"இன்ன உறையுட் டாகும்
சின்னட்டு அம்ம! இசசிறு நல்லூரே" (குறுந: ஙடு)

## நூ. பக்குடுக்கை நன்கணியார்

நன்கணியார் என்பது புலவர்தம் இயற்பெயராம். இவர் பெயர்க்கு முன்வரும் பக்குடுக்கை யெனும் சிறப்பு, புலவர்தம் ஊராப் பெயரைக் குறிப்பதாம என்று கொள்வர் சிலர்; பக்கு என்பது பை எனப் பொருள்படும்; புலவர் மூற்றத் துறந்த முனிவராதலின், பையையே உடையாகக் கொண்டிருந்தனர், அதனால், பக்குடுக்கை எனும் அடை, இவர் பெயர்க்குமுன் கொடுக்கப்பட்டுளது என்று கூறுவர் மற்றும் சிலர்; "ஒருவருக்கு உடுப்பவை இரண்டாக வேண்டியிருப்பவும, ஒன்றையே இரண்டாகப் பகுத்துடுக்கும் காரணத்தில், பக்குடுக்கை நன்கணியர் எனபபட்டார் என்றற்கும், ஒருவரது வறுமைநிலையைப் பக்குடுக்கை யெனச் சிறப்பித்துரைத்த நலங்கண்டு, சான்றோர் இவ்வாறு சிறபபித்துப பாராட்டினா என்றற்கும் இடனுண்டு" என்று எழுதுவாரும் உளர்.

உலகம் தோன்றியநாள் தொடங்கி இன்று வரையிலும், உலகில் போர ஓய்ந்திலது, போர் நிகழாத நாட்டையோ, அது நிகழாத காலதததையோ காணல் அரிது; எங்கும் போர்; எபபொழுதும போர், காரணம் என்ன? மக்களிடையே காணும மன வேற்றுமையே அம்மன வேற்றுமை ஏன் உண்டாயிற்று? அவ் வேற்றுமையை உண்டாக்கி வளர்பபது எது? அதற்கு எத்தனையோ காரணங்களைக் காட்டுவர் அறிஞர், ஆயினும், நாம் வாழும் இவ்வுலகம், பொருளை அடிப்படையாகக் கொண்டு இயங்குவது என்ற அறிவுக்கண்கொண்டு நோக்குவார்க்கு, மக்கள்தம் மனவேற்றுமைக்கு, அம் மக்களிடையே நிலவும் பொருள்வேற்றுமையே தலையாய காரணமாம் என்பது எளிதிற் புலப்படும்; ஒருவன் செல்வத்தில் செழிக்கின்றான்; மற்றொருவன் வறுமையில் வாடுகின்றான்; ஒருவன் மாடிவீட்டில் வாழ்கின்றான்; மற்றொருவன் மண்குடிசையும் பெறமாட்டாமல் மண்ணிற் கிடந்து புரள்கின்றான்; ஒருவன் பட்டாடை புனைகின்றான்; மற்றொருவன் பழங்

கந்தலும் பெறமாட்டாது பரதவிக்கின்றான் ; ஒருவன் வீட்டில் அறுசுவை உண்டி ; மற்றொருவன் கையில், அவன் உண்டு எறிந்த எச்சில் இலை ; இவ் வேறுபாடு, மக்கள் தம் உள்ளத்தே மன வேற்றுமையினை எளிதில் வளர்த்து விடுகிறது ; அதனால், அம் மக்களிடையே போரும், குழப்பமும் புகுந்துவிடுகின்றன ; இந்நிலை மேலும் வீட்டிக்க விடுதல் நன்றன்று, இந்நிலையினை மாற்றவேண்டுவது அறிவுடையார் கடனும் ; உலகின் நிலையினையும், அந்நிலைக்காம் காரணத்தையும் உள்ளவாறுணர்ந்த உயர்ந்தோர், அந்நிலையினை மாற்றி, நிலையான அமைதி நிலவும் அறவழிகளை அறிந்து அறிவித்தல் வேண்டும் ; அதை விடுத்து, இந்நிலை இயற்கையின் விளைவு, அது ஆண்டவன் படைப்பு ; அதை மாற்றுவது நம்மால் இயலாது ; மாற்ற முயல்வதும் பாவம் என்று கூறுவது அறிவுடைமையாகாது.

இவ்வுண்மையினை இரண்டாயிரம ஆண்டுகட்கு முன்பே உணர்ந்தவர் புலவர் பக்குடுக்கை நன்கணியார். “ஒரு வீட்டில் துன்பந்தரும பிணப் பறையும், எதிர் வீட்டில் மகிழ்ச்சியூட்டும் மணப் பறையும ஒலிக்கவும், கணவனொடு கூடிவாழும் கவின்மிகு வாழ்வுடையாளொரு மங்கை மலர்சூடி மகிழவும, கணவனை இழந்தாளொரு காரிகை, கண்ணீர் விட்டுக் கலங்கவும் இயங்கும் உலகச் காட்சிகள், உண்மையில் உறுதியர் தருவதாம் ; படைக்குபோதே, இவ்வாறு இருவேறுநிலை நிலைபெறவே படைத்துவிட்டான் உலகைப் படைத்தோன் என்று கூறுவீராயின், அவ்வாறு படைத்த அவன், உண்மையில் அறிவற்றவனேயாவன் ; படைத்த அவன், அக்கருத்தோடு படைத்தானல்லன் ; அவ்வேற்றுமையை உண்டாக்கியவரும், அதை வளர்ப்பவரும் நாமே ; ஆகவே, உலகின் இயல்புணர்ந்த உயர்ந்தோர், இவ் இன்னுமை ஒழித்து, இனிது தலைதூக்குமாறு உலகின் இயல்பினை மாற்றி அமைக்க முன்வருவாராக,” என்று கூறும் புலவர்தம் பொருளுரை, உலகில் அமைதி காணவே அமைக்கப்பட்டது எனப் பறை சாற்றப்படும் உலக மக்கள் மன்றத்தே சென்று ஒலிக்குமாக.

"ஓர் இல் நெய்தல் கறங்க, ஓரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்,
புணர்ந்தோர் பூவணி அணியப், பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார்பு உறைப்பப்,
படைத்தோன் மன்ற அப் பண்பிலாளன் ;
இன்ஞதம்ம இவ்வுலகம் !
இனிய காண்க இதன் இயல்புணர்ந்தோரே."

(புறம் : ௧௧௨)

இருவேறு நிலைநிற்க இவ்வுலகைப் படைத்தவன் பண்பிலாதவனுவன் எனக் கூறும் புலவர்தம் பொருளுரை. 'இரந்தும் உயிர்வாழும் இழிநிலை உண்டாகவே படைத்தானன், உலகைப் படைப்போன்' எனக் கூறுவீராயின், அவ்வாறு படைத்த அவன் பரந்து கெடுக—"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின், பரந்து கெடுக உலகியற்றியான்" எனக் கூறும் வள்ளுவர் வாக்கோடு ஒற்றுமை கொண்டு உயர்ந்து தோன்றுவது காண்க.

## ருசு. படைமங்க மன்னியார்

படைமங்க மன்னியார் என்பது இவர் இயற் பெயரா? அல்லது காரணப் பெயரா? இது காரணப பெயராயின், இது ஏன் அவருக்குப் பெயராயிற்று? அவர் இயற்பெயர் என்னையிற்று? இவ்வினுக்களுக்கு விளங்க விடையளித்தற்கு இல்லை. அவர இயற்பெயர் மறைந்துவிட்டது; இது அவர் காரணப் பெயர், தன்படைமுழுதும் கெட்டவிடத்தும், தளராது நினறு போராற்றி வென்ற வீரன ஒருவனைப் படைமங்க மன்னியான் எனப் பாராட்டிய சிறப்பால், இவர்க்கு இப்பெயர் உண்டாயிற்று எனக் கூறுவர் சிலர். இவர் பாடிய மகட்பாற் காஞ்சி மகிழ்தற்குரியது

நாரைகள், மருதமரக்கிளைகளில் வாழ்வதை வெறுப்பின், காஞ்சிமரக்கிளைகளில் சென்று தங்கும என்று கூறி, நாரை வாழ்தற்காம நீர்வளமும், மரமபல வளர்தற்காம மண்வளமும் உடையது எனத தோன்றசசெய்யும் திறங் கண்டு மகிழ்க.

> "தெண்ணீர்ப், பொய்கைமேய்ந்த செவவரி நாரை
> தேங்கொள் மருதின் பூஞ்சினை முனையின்,
> காமரு காஞ்சித் துஞ்சும்." (புறம். கூடுக)

வருவார்க்கு வரையாது வழங்கும் எயினன் என்ற வள்ளல் ஒருவனையும், நலம்பல பெற்றுச் சிறந்த வாகை என்ற பெயருடைய அவன் ஊரையும் புலவர் தம் பாட்டில் பாராட்டியுள்ளார்:

> "என்றும் வண்கை எயினன் வாகை அன்ன
> இவள் நலம்." (புறம்: கூடுக)

## நரு. பதுமனர்

பதுமனர், பெரும்பதுமனர், மீளிப் பெருமதனர் எனவரும் புலவா தம பெயாகளில் வரும் பதுமனர் எனும் சொல், அப்பெயருடைப் புலவர்கள், சைனசமயத தொடர் புடையராவர் என்பதை உணர்த்தும என்ப.

தலைவன் பிரிவுத்துயரால் வருந்தி உறக்கம் ஒழிந் திருந்த ஒரு தலைவி, இரவெல்லாம் கண்விழித்துக் காத் திருப்பவள், இடை இரவு மிக்க இருளை உடையதாக உளது; என்துயர் அறிந்து போகக வேண்டிய தாயும், தமரும் அக்கவலை இலராய் இனிது உறங்குகின்றனர்; உலகத்து உயிர்கள் எல்லாம் தம உணர்வு இழந்து ஒருங்கே உறங்குகின்றன; என் உயிர் போன்றுளாய தோழியும் உறங்கி விட்டாள்; இங்கிலையில் உறங்கா திருப்பவள், உறுதி யாகக் கூறுகிறேன், யான் ஒருத்தியே என்று கூறி வருந் தினள் எனப் பொருளமையப பாடிய புலவா பாட்டு, சிறுசிறு சொற்றொடரான் ஆக்கபபெற்று அழகுற்று அமைந்துளது.

> "நள்ளென் றன்றே யாமம், சொல்லவிந் து
> இனிது அடங்கினரே மாகக்கள், முனிவின்று
> நனந்தலை உலகமும் துஞ்சும்,
> ஓர்யான் மன்ற துஞ்சா தேனே."

(குறுந்: சு)

## நகூ. பராயனர்

பராயனர் பாடிய பாட்டொன்று நற்றிணைக்கண் இடம் பெற்றுளது. தன்னைக் காதலிக்கப் பட்டாளொரு பெண், தனியே, கடற்கரைச் சோலைக்கண் நின்றாளை நோக்கி, "பார்க்கப் பார்க்க குறையாப் பேரழகுடையாய்! தோழியரொடு கூடி ஆடி மகிழ்தலும் செய்யாது, நெய்தல் மலர்கொய்து மகிழ்ந்து சூட்டிக் கோடலும் புரியாது நண்டு நிற்பாய் யாரையோ நீ; கடலகத்தே வாழும் கடற்றெய்வமோ? கழியருகே நிற்பாளொரு காரிகையோ? விரைந்து விடைதருவாயாக; நின்னைப் பணிந்து வேண்டுகிறேன்," என்று கூறினளாக, அவன் கூற்று அவட்கு உள்ளமகிழ்ச்சியை உண்டாக்க, அம்மகிழ்ச்சி, வாயகத்தே தோன்றிய சிறுநகை வழியாகவும், பெரிய கண்வழியாகவும் புலப்படக் கண்டு களிமகிழ் வெய்தினன் இங்ஙகழ்ச்சியை அழகிய பாட்டாக ஆக்கித் தந்துள்ளார் புலவர்.

"ஒள்ளிழை மகளிரொடு ஓரையும் ஆடாய்;
வள்ளிதழ் நெய்தல் தொடலையும் புனையாய்;
விரிபூங் கானல் ஒருசிறை நின்றோய்
யாரையோ? நிற்றொழுதனம் வினவுதும்;
கண்டோர் தண்டா நலத்தை, தெண்திரைப்
பெருங்கடல் பரப்பின் அமாந்துறை அணங்கோ?
இருங்கழி மருங்கு நிலைபெற்றனையோ?
சொல் இனி மடந்தை! என்ற னென்; அதன் எதிர்
முள்ளெயிற்று முறுவலும் திறந்தன;
பல்லிதழுண்கணும் பாடுதவாற் பனியே."

(நற்: கடுகி)

## நெ. பறநாட்டுப் பெருங்கொற்றனார்

பெருங்கொற்றனார் எனப் பெருமையாக அழைக்கப் பெறும் புலவர்க்குரிய நாடாகக் கூறப்படும் பறநாடு குறித்து எதுவும தெரிந்திலது; இவர் பாடிய பாட் டொன்று நெடுந்தொகை நித்திலக்கோவையில் இடம் பெற்றுளது.

கார்காலத் தொடக்கததே வருவேன் என உறுதி கூறிச் சென்ற தலைவன் விரைவில் வந்திலனே என வருந்தி நின்ற தலைவியின் வருத்தததினைப போக்க எண்ணிய தோழி, வேனிலின் இறுதிக்காலத்தே, கார்மேகம் கால் வீழத்தொடங்குவதைக் காட்டிக், காகாலம் தொடங்கும் காலம் அண்மையில் உளது; ஆகவே அவர் விரைவில் வந்துவிடுவர்; வருந்தற்க என்று கூறுவாள், கணவன் வரும்வரை ஆற்றியிருப்பதே கற்புடை மனைவியர்க்குக் கடனும் என்பதை அவட்கு அறிவூட்டுவான் வேண்டி, அவளைக் "கற்பான் மேம்பட்ட தலைவியே!" என விளிதது, "பலாவும், மூங்கிலும் செறிந்த மலைச்சாரல் களில், யானைகள் கூட்டமாகச் செல்வதைப் போல், ஞாயிறு மறையுமாறு பரவி எழுந்து, பாம்பின் படம் அழிய இடிதது, ஆலியும் அழிதுளியும் கொண்டு, நின் புயல்போல் கறுதத மேகம் கால் இறங்கிவிட்டது; இனி, இவ்வூரார் கூறும் அலருரை அடங்குமாறு காதலர் வந்து சேரு வர்; மெல்ல நடந்துவந்து, கால் இறங்கிய மேகக் காட்சி யினைக் காண்பாயாக," என்று கூறினள் என்ற கருத் தமைய வந்துளது புலவர் பாடிய அப்பாட்டு. (அகம்: ஈஉஈ)

## நஅ. பனம்பாரனார்

ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்திற்குப் பாயிரம் அளித்த பெருமை உடையவரும், "வடவேங் கடம், தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்" எனத் தமிழகத்திற்கு எல்லைவகுத்துக் காட்டியவருமாய பனம்பாரனார் ஒருவர் உளர், அவர் அகத்தியனார் மாண வருள் ஒருவராவர், தொல்காப்பியனாரோடு ஒருங்கிருந்து கற்றவர் என்றெல்லாம கூறப்பெறுவர்; அவருமம, குறுந் தொகை ஐம்பத்திரண்டாம் செய்யுளைப் பாடிய புலவர் பனம்பாரனாருமம ஒருவரோ? வேறோ? உறுதியாகக் கூறு தற்கில்லை.

தலைவன் வரைவு வேண்டிவர, அவனைத் தமர் ஏற்றுக் கொண்டதை அறிந்து மகிழ்ந்த தலைவிபால், "தோழி! இன்றைய இம்மகிழ்ச்சிக்கு யானே காரணம், ஊரார் கூறும் அலா உரையினைக் கேட்டுமம, அன்னை, இற்செறித் தும் வெறியாட்டெடுத்தும் கொடுமை செய்வது கண்டு, அணங்கால் வருந்தியவளைப்போல் நீ வருந்துவது கண்டு, யானும் வருந்தி, சிறிதுசிறிதாக, நம களவொழுக்கம் நம் தமர்க்குப் புலனுமம வண்ணம் அறத்தொடு நின்றேன்; அதன் விளைவே, இன்று, தமர் தலைவனை வரைவேற்றுக் கொண்டது" என்று கூறினாள். துணைபுரிந்த தோழியின் கூற்றினைப் பாட்டாக்கித் தந்துள்ளார் புலவர்:

"ஆர்களிறு மிதித்த நீர்திகழ் சிலம்பில்
சூர் நசைந்தனையயாய் நடுங்கல் கண்டே,
நரந்தம் நாறும் குவையிருங் கூந்தல்
நிரந்திலங்கு வெண்பல் மடந்தை
பரிந்தனென் அல்லனே இறை இறையானே."

(குறுந்: ஙஉ)

## ருகூ. பாண்டரங்கண்ணனார்

பாண்டரங்கண்ணனார், இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியைப் பாடிய புலவர்களுள் ஒருவர்; இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, சேரமான் மாரிவெண்கோ, பாண்டியன் கானப்பேரெயில் தந்த உக்கிரப்பெருவழுதி ஆய இரு வேந்தர்களோடும் நட்புப் பூண்டு விளங்கிய நல்லரசனுவன்; ஒளவையாராற் பாராட்டப்பெற்ற பெருமை உடையவன்; தேர்வண்மலையனைப் படைத்துணையாகக்கொண்டு பகைவரை வென்றவன். இவன் படையால் பாழான பகைவர் நாடுகளைக் கண்ட புலவர், வருந்தி, அழிவுத் தொழிலை அவன் மேலும மேற்கொள்ளாவாறு அறிவூட்ட விரும்பினர்.

"கொன்றபின் அன்றே முதலினின்றழும்?" என்ப, ஆத்திரத்தில் அறிவிழந்து நிற்பார்க்கு அறிவூட்டல் ஆகாது. அந்நிலையில் அறிவூட்ட முற்படுதல் அறிவுடைமையுமாகாது; அவர் ஆதிரம் அடங்கிய பின்னர், அவர் அருகில் அமர்ந்து, அவர் ஆத்திரத்தால் உண்டான அழிவின் பெருமையினை அடுக்கிக் கூறியக்கால், என் ஆத்திரத்தின் விளைவா இத்தனைக் கேடும்? என்ற எண்ணம் எளிதில் தோன்றலும் கூடும, மக்கள்தம் இம்மன இயல்பினை உணர்ந்த புலவர், இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளிபால் சென்று, "கருமபுவளர் கழனியல்லது, பிற காடு எதையும் கண்டறியா வளம்செறிந்த வயல்களால் விளக்கம் உற்ற பகைவர் நாட்டகத்தே பெருந்தீயெழப் பெரும்போர் வென்றனை நீயும், பகைவர்தம் நெலவளம் மிக்க வயல்களைக் கொள்ளையிட்டும், அப்பகைவர்தம் மனையகத்து மரங்களையே விறகாக்கொண்டும், அப்பகைவர் உண்ணுநீர் கொள்ளும் காவற்குளங்களில் களிறுகளைக் குளிப்பாட்டியும், அவர் ஊரகத்தே தீ பரவச்செய்தும் பாழ்செய்து பெருமையுற்றனை நின்படையும்," எனப் பகைவர் நாட்டினைப் பாழ்செய்த அவன் ஆற்றல்,

அவனுக்கு அத்துறையில் துணைபுரிந்த அவன் படைப்பெருமை ஆகியவற்றைப் பாராட்டுவார்போல், அவனுல் அவன் பகைவர் நாட்டகத்தே உண்டாய அழிவுகளை நிரலே காட்டி, அவன் அறிவுக்கண் திறக்கத் துணைபுரிந்துள்ளார் புலவர்; ஒருவரோடொருவர் பகைத்துப் பெரும் போர் புரிதலே பெரும் பணியாம் எனக்கொண்டு வாழ்ந்த வேந்தர்களிடையே பிறந்த பெருநற்கிள்ளி, தம் காலத்தே வாழ்ந்த தம் பகையரசர்களோடு பெருநட்புடையனுய் விளங்கியது புலவர்தம் அறிவுரையால் போலும்! புலவர் தம் தொண்டின் பெருமைதான் என்னே!

"விளைவயல் கவர்பு ஊட்டி,
மனைமரம் விறகாகக்
கடிதுறை நீர்க் களிறு படீஇ
எல்லுப்படவிட்ட சுடுதீ விளக்கம்
செல்சுடர் ஞாயிற்றுச செக்கரிற் ரூன்றப்
புலங்கெட இறுக்கும் வரம்பில்தானை;
.. .. ..... .. .. ..... .....
கரும்பல்லது காடறியாப்
பெருந்தண்பணை பாழாக
ஏம நன்னுடு ஒள்ளெரி ஊட்டினை." (புறம்: கசு)

## ௬0. பார்காப்பான்

உலகநாதன் என்பதேபோல், பார்காப்பான் என்பதும், திருமாலுக்குரிய பெயர்களுள் ஒன்றுபோலும்; அப் பெயருடையாராய நம் புலவர், பாரகாபரன் என்றும், பாரகரபரன் என்றும், பாரகாபான் என்றும் பலவாறு அழைக்கப்பெற்றுளார் என ஏடுகள் எழுதுகின்றன. இவர் பாடிய பாட்டொன்று குறுந்தொகைக்கண் இடம்பெற்றுளது.

"தோழி! கார்காலத் தொடக்கத்தே மலரும் இயல்புடைய கோங்கும் முதல்மலர் மலர்ந்துவிட்டது; பொருள்வயிற்சென்ற தலைவர் வந்துவிட்டார் என அறிவிக்க முன்வரும் தூதுவரும் வந்திலரே! என்னெடுதுயிலுதலையும், துயிலுங்கால் அவர்க்கு அணையாகிப் பயன்தரும் என் கூந்தலையும் அவர் மறந்துவிட்டார் போலும்" எனக் கூறி வருந்தினாள், தலைவனைப் பிரிந்து தனித்துத் துயருறும் ஒரு தலைமகள் எனப் பாடியுள்ளார் புலவர்:

"கோங்கின்
தலையலர் வந்தன; வாரா தோழி!
துயிலின் கங்குல் துயில் அவர் மறந்தனர்;
பயில் நறுங் கதுப்பின் பாயலும் உள்ளார்;
செய்பொருள் தரல் நசைஇச் சென்றோர்
எய்தினரால் எனவரூஉம் தூதே." (குறுந்: உடுச)

---

## கூக. பாலாசிரியர் நப்பாலனார்

பாலனார் என்பது இவரது இயர்பெயர்; ந, சிறப்பு இடைச்சொல்; நப்பாலத்தனார் என்ற பெயருடையார் ஒருவர் உளர், பாலாசிரியர் என்ற சிறப்பு இவர்க்கு ஏன் உண்டாயிற்று என்பது புலனுகவில்லே. இளம்பாலாசிரியர் என்ற சிறப்புடைய புலவர் சிலர் உளர்; அவர்கள் இளம் பால் என்ற ஊரினர் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். இளம்பாலாசிரியர் எனபதே பாலாசிரியர் என வந்ததாகக் கொள்ளின், இவரையும், இளம்பால் என்ற அவ்வூரின ராவர் என்று கொள்ளலாம்.

"இரும்பை உருக்கி வாாத்துச் செய்தாற் போன்ற வலிய கைகளேயுடைய கானவன், யானே வேட்டம் சென்று, வெண்கடம்ப மரத்தின் மறைவிலே இருந்து அவ்வழிவந்த யானேயை, ஆராய்ந்துகொண்ட அம்பு, அதன் மார்பில் தைக்குமாறு ஏவிக் கொன்று, தன் பகையைப் பாழாக்கும் வலிவு அமைந்த அதன் கொம்புகளேக் கொணர்ந்து, புல் வேய்ந்த தன் குடிசையைச் சூழ வேலியாக ஊன்றி, தன் வீட்டு மன்றத்தில் உள்ள பலாவின் பழத்தினின்றும் செய்த மதுவினே உண்டு மகிழ்ந்து, பின்னர்ச் சந்தன விறகால் சமைத்த சோற்றையும, ஊனேயும, தன் சுற்றம் சூழ இருந்து உண்டு வாழவன்," எனக் கூறுமம கானவன் வாழ்க்கை நம் கண்முன் வந்து தோன்றுமாறு செய்துள் ளார்.

"இரும்பு வடித்தன்ன கருங்கைக் கானவன்,
விரிமலர் மராஅம் பொருந்திக், கோல்தெரிந்து,
வரிநுதல் யானே அருநிறத் தழுத்தி,
இகலடு முன்பின் வெண்கோடு கொண்டு,தன்
புல்வேய் குரம்பை புலர ஊன்றி,
முன்றில் நீடிய முழவுறழ் பலவின்
பிழிமகிழ் உவகையன், கிளேயொடு கலிசிறந்து
சாந்த ளெகிழியின் ஊன்புழுக்கு அயரும்."

(அகம் : கஎஉ)

## கூஉ. பாலாசிரியர் நற்றமனார்

நற்றிணைப்புலவர் வரிசையுள், நற்றமனார் என்ற பெயருடையார் ஒருவர் உளர்; அவரின் இவர் வேறு என்பதை அறிவித்தற்கு, இவர் மதுரைப்பாலாசிரியர் நற்றமனார் என அழைக்கப்பெற்றுளார்; இவர் முன்னர்க்கூறிய பாலாசிரியர் நப்பாலனருக்கு உறவினராதலும் கூடும என்பதல்லது, இவர் குறித்து வேறு கூறுதற்கில்லை.

"ஐய! பெருமழை பொழிந்த நள்ளிரவில், குஞ்சரத்தைக் கொன்ற புலி, அவ்வெற்றிக்களிப்பால் முழங்கும் காட்டகத்து வழியில் வருதலை அஞ்சுகின்றோம, ஆகவே, இனி இரவில் வாரற்க" என இரவுக்குறியை மறுத்து, "நாளைமுதல், இவளும், யானும தினைகாக்கச் செலகின்றோம்; ஆதலின், எங்கள் தினைப்புனத்தைச் சார்ந்து ஓடும அருவிக்கரையில் காந்தட் பூ மலர்ந்திருக்கும் இடதிற்கு வந்து பகற்காலத்திலேயே இவளைக் கண்டு செலக" என்று கூறிய பகற்குறி நேர்வாள் போன்று, "அருவியாதலின் நீராட வருவாரும உண்டு; காந்தள் மலரும இடமாதலின், மலாபறிக்க வருவாரும உண்டு, ஆகவே, பகற்குறியும் பயனுறாது என அபபகற்குறியையும் மறுத்து, "இருவகைக் குறியும் இயலாதாகலின் வரைந்து கொள்வதே வழியாம்" என்ற எண்ணம தலைமகன் உளதே தோன்றச் செய்யும் தோழியின் திறம் தெரிவிக்கும செய்யுளொன்று, இவர் பாடியதாக நெடுந்தொகைக்கண் வந்துளது.

மரங்கள் செறிந்து வளர்ந்துள்ளன; அம்மரங்கள் மிக மிக உயர்வுடையன என்று கூற விரும்பிய புலவர், மரங்களில ஏறிஏறி வாழவதையே வழக்கமாகக் கொண்ட குரங்குகளாலும் ஏறமாடடா மரங்கள் "மந்தியும அறியா மரம் பயில் இறுமபு" என்று கூறிய நயம் நயத்தற்குரியதாம். (அகம: கூஉ.)

---

## ரூஉ. பாவைக்கொட்டிலார்

பாவை என்பது இளைய மகளிர் வைத்து விளையாடும் ஆடற்பொருள்களுள ஒன்றாய பதுமை; கொட்டில் என்பது சிறு வீடு. மகளிர் மணலால் மனையமைத்து அதில் பாவையை வைத்து விளையாடினராக, அம் மனையைப் பாவைக் கொட்டில் எனச் சிறப்பித்துப் பாடினமையால் புலவர் இப்பெயர் பெற்றார் போலும்.

வடநாட்டு வாழ்வினராய ஆரிய அரசர்கள், தமிழகத்தைத் தம் ஆட்சிக்கீழ்க் கொண்டுவர அன்றே முயன்றனர்; ஆனாலும், அவர் வெற்றி பெற்றாரல்லர்; இச் செய்திக்குச் சங்கப் பாக்கள் பலவும் சான்று பகர்கின்றன; ஆரியப் படையொன்று, மலையமான் திருமுடிக் காரிக்குரிய முள்ளூரைச் சூழ்ந்துகொண்டது என்றும், அப்படையை அவன் ஒருவனே அடித்துத் துரத்தினன் என்றும் நற்றிணைப் பாட்டொன்று கூறுகிறது:

> "ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்ப்
> பலருடன் கழித்த ஒள்வாள் மலையனது
> ஒருவேற்கு ஓடியாங்கு." (நற்: கஎ0)

இவ்வரலாற்றிற்கு மேலும் சான்றளிக்கும் ஒரு நிகழ்ச்சியைப் புலவர் பாவைக்கொட்டிலாரும் குறிப்பிடுகின்றார்; வில்படை, வேற்படைகளால் பெருமையுற்ற சோழர்க்கு உரியதும், வில்லாணல் சூழப்பெற்றதுமாய வல்லம் எனும் நகரை முற்றி, அதைச் சூழ உள்ள காவற் காட்டகத்தே தங்கிய ஆரியப்படை, தமிழரசன் ஒருவனால் முற்றும் அழிவுற்றது எனக் கூறுகிறது அவர் பாட்டு:

> "வென்வேல்
> மாரி அம்பின் மழைத்தோல் சோழர்
> வில்லீண்டு குறும்பின் வல்லத்துப் புறமிளை
> ஆரியர் படையின் உடைக."  (அகம்: கூருசு)

இவ் வரலாற்று நிகழ்ச்சியோடு, மற்றும் இரு நிகழ்ச்சிகளையும் புலவர் குறிப்பிட்டுள்ளார். மக்களுக்கு அடங்காது

திரியும் விலங்குகளை அடக்கி ஆளும் மக்கள், இறுதியில் அவ்விலங்குகளினுலேயே மாள்வர் என்ப. யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் இயல்புடையது; யானையொடு பழகும் பாகன், இறவாது உயிர் வாழ்தல், அவ்யானை அவனைக் கொல்லாமல் விட்டிருப்பதினுலேயே ஆம் என்றும், நெருஞ்சிப்பூ, ஞாயிறு கீழ்த்திசை யிருப்பின் கிழக்கு நோக்கும்; மேற்றிசைச் செல்லின், மேற்கு நோக்கும்; உச்சி வானத்திலிருப்பின், உச்சியை நோக்கும என்றும் கூறுகிறார் புலவர்:

"பாகன் நெடிது உயிர்வாழ்தல் காய்சினக்
கொல் களிற்றுயானை நல்கல் மாறே."

"சுடரொடு திரிதரும் நெருஞ்சி." (அகம்: ஈஈசு)

## கூசா. பிரமசாரி

வாழ்நாள் முழுதும் மணம் செய்துகொள்ளாமலே, அருளறம் மேற்கொண்டு வாழ்ந்த அறவோருள், இவர் சிறந்தவராதலின், இவர் பிரமசாரி என்றே பெயரிடப்பட்டுள்ளார்; வெறிவிலக்கு அறத்தொடு நிற்கும் துறையமையவந்த பாட்டொன்று புலவர் பெயரால் நற்றிணைக்கண் வந்துளது.

தலைவி யொருத்தி, தன்னைக் காதலிக்கும் தலைவன், தவறுது வந்து தலையளி செய்யுங்கால், அவன் வரும் வழியேதம் கருதியும், அவன் வாராக்கால், தன் தனிமை கருதியும் வருந்தி வாடினுள்; தன் மகள் வாட்டத்திற்காம் காரணம் இஃது என அறியமாட்டா அவள் தாய், வேலனை வேண்ட, அவன் முருகன் அணங்கியதால் உண்டாயது எனக் கூறினன் உடனே, தாய் வெறியாட்டெடுக்கத் தொடங்கிவிட்டாள்; இந்நிலை மேலும் நீட்டிக்க விடுதல் நன்றன்று; உண்மையினை உள்ளவாறு உரைத்து விடுதலே நன்று என உணர்ந்தாள் தோழி; ஆயினும், அதை வெளிறாக உரைத்தல் நாகரிகமன்று எனக் கொண்டாள்; தாய் எடுக்கும் வெறியயாகளத்திற்குச் சென்றுள்; ஆங்கே தாய் கேட்குமாறு, "முருகா! தலைமகளுக்குற்ற நோய் நின்னால் வந்ததன்று என்பதை நீ நன்கு உணர்வை; உணர்ந்தும், அது நின்னால் வந்தது எனக் கூறி, இவ் வேலன் எடுக்கும் இவ் விழாவிற்கு வருதல் தகுதியன்று; தகுதியிலாச் செயல் புரிந்த நீ, கடவுளேயாயினும், அறிவற்றவனே ஆகுவை," எனக் கூறி உண்மையினை யுணர்த்தினள் எனப் பாடியுளளார் புலவர்:

"நாடன், மார்பு தரவந்த படர்மலி அருநோய்
நின்னணங் கன்மை அறிந்தும், அண்ணாந்து
காந்தறுங் கடமபின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்!
கடவு ளாயினும் ஆக,
மடவை மன்ற; வாழிய! முருகே!" (நற்: நூசா)

# கூடலூர் பிரமனூர்

இவர் வரலாறு குறிப்பது ஒன்றும் விளங்கவில்லை; நிலையாமை கூறி அறம் வலியுறுத்தும இவர் செய்யுள் பாராட்டற் குரியதாம.

குன்றுகளும், மலைகளும் மண்டிக்கிடக்கும இம் மண்ணுலகம, தமிழரசர்மூவர்க்கும் ஒப்ப உரிமையுடையதாகும்; அரசர் அனைவர்க்கும பொதுவான இவ் வுலகைப், 'போகம் வேண்டி, பொதுச்சொல் பொறுது,' ஒருவராகவே நின்று ஆண்ட அரசர்களும உளர், அவ்வாறு உலகெலாம ஒரு குடிக்கீழ் வைதது ஆண்ட அரசர்களும் இறவாது நிலை பெற்றாரல்லர்; அவர்தம் வாழ்நாட்களும வற்றிவிட்டன; அததகையாரும் மாண்டு மறைந்தே போயினர்; அவர் ஈட்டிய பெரும பொருளும, அவர் போவுழி, அவர்க்குத் துணையாய்ப போகவில்லை; அப் பெரும் பொருளை இழநதே அவர் சென்றனர், ஆகவே, வாழ்வும் வளமும, செல்வும உயிர்க்கு நல்ல துணையாகா; இப் பிறப்பில் அவரவா செய்யும் அறவினையே, அவ்வுயிர்க்கு உற்ற நற்றுணையாம்; உற்றாரும, உறவினரும கூடி அழப் போம் உயிர், இவ்வுலகை விட்டு, இறவாப் பேரின்பம் நிறைந்த வீட்டுலகை அடைதற்குத தெப்பமாய்த துணை புரிவது அவ் அறவினை யொன்றே, புணையாம் அவ் அறவினையை மறந்து கைவிட்டார், வீட்டுலகை அடைதல் இன்றும்; ஆகவே, "அன்றறிவாம என்னாது அறம் செய்க," என்ற அறவுரையினை அள்ளித்தரும் அழகிய பாட்டைப் பாடியுள்ளார் புலவர்:

"குன்றுதலை மணந்த மலைபிணித்து யாத்த மண
பொதுமை சுட்டிய மூவர் உலகமும்,
பொதுமையின்றி ஆண்டிசி னோர்க்கும்
மாண்ட அன்றே யாண்டுகள்? துணையே
வைத்ததன்றே வெறுக்கை; வித்தும்

அறவினே யன்றே விழுத்துணை ; அத்துணைப்
புணை கைவிட்டோர்க்கு அரிதே ; துணை அழத்
தொக்கு உயிர் வெளவுங்காலை
இக்கரை நின்று இவாந்து உக்கரை கொளலே.''

(புறம் : ஈடுஇ)

தமிழரசர் மூவர் ; அம் மூவர்க்கும் உரியது இத் தமிழகம் என்ற உண்மை புலனுமாறு, ''வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு,'' (தொல் : செய் : எஅ) எனக் கூறும் தொல்காப்பியனார் கூற்றுப்படியே, ''பொதுமை சுட்டிய மூவர் உலகம்,'' எனப் புலவர் கூறுவது குறித்துக் கொளற் பாலதாம்.

## சுசு. பிரான் சாத்தனர்

பெருஞ சாத்தனர், பேரிசாத்தனர் எனச் சாத்தனர் எனும் பெயருடையார் பலராதலின், அவரின் வேறு அறிதற்கு இவர் பிரான் சாத்தனர் என அழைக்கப் பெற் றுளார். தாம் பாடிய நற்றிணைப் பாட்டில், சாத்தனர், நல்ல அறவுரை ஒன்றை அமைத்துப் பாடியுள்ளார்;

"Work while you work, Play while you Play" என்பது ஒரு ஆங்கிலப் பழமொழி; தொழில் ஆற்ற வேண்டிய காலத்தே அது ஆற்றவேண்டும்; ஆடவேண் டிய காலத்தே ஆடி மகிழ்தல் வேண்டும். இளையோர்க்கு இன்பம் தரும் காலம, அவர் ஆடி மகிழும் அக்காலமாம்; ஆடல், பாடல்களால் அவர் கொள்ளும் மகிழ்ச்சி, அவர் உடலையும, உள்ளத்தையும் வளர்ததுத் துணைபுரிகிறது என்ப, உடலும், உள்ளமும் வளரவேண்டிய இளமைக் காலத்தே, அவற்றை வளர்க்கும், ஆடல் பாடலை அவர் கொள்ளாதிருத்தல் அறிவுடைமை யன்று, அவ் அறி யாமை நிகழாவண்ணம் நின்று காத்தல் பெற்றோர்தம் பெருங் கடனும. இளமையில், ஆடிப் பாடி வளராத மக்கள், வாழ்க்கையில், நல்லுடலும, பலவளமும் பெற்று விளங்கல் இயலாது; அவர் அவ்வாறு ஆடிப் பாடி மகிழா வண்ணம அடக்கி வளர்த்தல் அறிவுடைமையும் அன்று; அறமும ஆகாது. இவ் வுண்மையினை உணர்ந்த புலவர், ஆடிப்பாடி அகம மகிழவேண்டிய தன் மகளை, இற்செறித்த தாய்க்கு உணர்த்துவார்போல் உலகத்தார்க்கு உணர்த்தி யுள்ளார்:

"விளையாடு ஆயமொடு ஒரையாடாது
இளையோர் இல்லிடத்து இற்செறிந் திருத்தல்
அறனும் அன்றே; ஆக்கமும் தேயும்." (நற்: சுஅ)

## கூஎ. புல்லங் கண்ணனார்

புல்லன் என்ற சொல், மக்கள் பெயராகவும, அவர் பெயர்க்கு முன்வரும் சிறபபுணர்ததும அடையாகவும் பழநதமிழ்க் காலத்தே பயில வழங்கப்பெற்றுளது. கண்ணமபுல்லன், பூதம் புல்லன், புல்லன்கீரன் என்ற பெயர்களைக் காண்க. பொதுமபில் புல்லாளங கண்ணையார் என்ற பெயருடைய புலவர் ஒருவா உளா, அவர் பெயர்க்கண் காணப்பெறும் புல்லாளம் என்பதை நோக்கியவழி, புல்லன் என்பது புல்லாளன் எனத திரிநததோ, புல்லாளன் என்பது புல்லன் எனத திரிந்ததோ என்ற தெளியலாகா ஐயம் எவர்க்கும் உண்டாதல் இயல்பே. இவர் பாடிய பாட்டொன்று அகநானூறு, மணிமிடை பவளத்தின்கண் வரிசை செய்யப்பெற்றுளது.

பாலை நிலத்தில் பயினறு, அவவழி வருவாரை ஆறலைதது வாழும் அநநில மக்களின் வடிவழகை, "வளைநது வளைந்து சுருள்கொண்ட மயிருடையா, வாரிவிடா மயிர் உடையார்," "வணர்சுரி, வடியாப்பிதத வனகண் ஆடவர்" என எழுதிக் காட்டுவது இயல்பாக அமைந்துளது. வண்டுகள் ஒலிக்கும் மலர்சூடிய, இருணடு தழைதது அடர்ந்த கூந்தல் உடையாள், அழகிய மாமைநிற மேனியுடையாள்; ஆராய்ந்து தொடுதத அணியுடையாள் என அக்கால இளமகள் ஒருத்தியின் அழகினைப் புலவா நம் முன ஓவியம செய்து உணர்த்துகின்றார்:

"சுரும்புஉண ஒலிவரும் இரும் பல் கூநதல்,
அம் மா மேனி, ஆய் இழைக் குறுமகள்."

(அகம்: ககக)

## கூஅ. புறத்திணை நன்னாகனார்

நாகனார் எனும் இயற்பெயருடைய நம்புலவர், புறத்திணை தழுவிய பாக்களைப் பாடும் வன்மையும், பல நல்ல பண்புகளும் கொண்டு விளங்கினமையால், புறத்திணை நன்னாகனார் என அழைக்கப் பெற்றுளார் புறத்திணை நன்னாகனார், ஒய்மான் நல்லியக் கோடன், ஒய்மான் வில்லியாதன், கருங்பனூர் கிழான் ஆய தொண்டை நாட்டுத் தலைவர்களையே பாடியுள்ளமையான், அத தொண்டை நாட்டிற் பிறந்தவராதல் வேண்டும்ம புலவர் ஒய்மான் நல்லியக் கோடனை இரண்டு பாக்களாலும, ஒய்மான் வில்லியாதனை ஒரு பாட்டாலும், கருமபனூர் கிழானை இரண்டு பாக்களாலும பாராட்டியுள்ளார்.

ஒய்மான் நல்லியக் கோடன், ஓவியர் குடியிற் பிறந்தவன், அவனுக்குரிய நாடு, ஒய்மானாடு என்ற பெயரால் வழங்கப்பெறும்; ஓவியா மாநாடு என்பதே ஒய்மானாடு என மருவி வழங்கலாயிற்று தென்னாக்காடு மாவட்டம் திண்டிவனத்தைச சூழஉள்ள நாடே பழநதமிழ்க் காலத்தில் ஒய்மாநாடு என்ற பெயர பெற்றிருந்தது. இநநாட்டில், மாவிலங்கை, வேலூர், எயிற்பட்டினம், கிடங்கில், ஆமூர் என்பனபோலும பேரூர்கள பல இருந்தன; இவற்றுள, அரசியற்றலைநகராம் சிறப்புற்றது மாவிலங்கையாம், வளதகதாற் சிறநதது ஓயமாநாடு; தோழியரொடு கூடி ஆடி மகிழும அநநாட்டு இளமகளிர, கோரைக்கிழங்கு வேண்டிப் பன்றி உழுததால உண்டாய சேற்றினைக் கிளறுவராயின், ஆங்கு, ஆம்பற்கிழங்கொடு, யாமை ஈன்ற முட்டைகளும் அவர்க்கு அகப்படும்; அத்தகைய வளஞ் செறிந்தது அந்நாடு எனப் புலவர் கூறுவர்:

> "ஓரை ஆயத்து ஒண்டொடி மகளிர்
> கேழல் உழுத இருஞ்சேறு கிளைப்பின்
> யாமை ஈன்ற புலவுநாறு முட்டையைத்
> தேன் நாறு ஆம்பல் கிழங்கொடு பெறூஉம்."

(புறம் : களக)

ஓய்மா நாட்டைப்போன்றே, அதன் தலைநகராம் மாவிலங்கையும் வளமைசால் பெருநகராய்ப் போற்றப்படுகிறது; நெல்லறுக்கும உழவர், தம்முடைய கூரிய அரிவாள், மிகுதொழில் மேற்கொண்டமையான், வாய்மழுங்குமாயின், மேலும் மடிந்திராது விரைந்து அரிதல் வேண்டித் தீட்ட எண்ணுவார் அச்சேற்றிற் படிந்துகிடக்கும் ஆமையின் முதுகு ஒட்டைத தீட்டுக கல்லாகப் பிறழக்கொண்டு, அதன்மீது, அதைத் தீட்டுவர்; இத்துணை வளம்செறிந்த அந்நகர், பகைவர் அணுகுதற்கரிய அரணும் உடைத்தாயிருந்தது; அந்நகரைச் சூழ அரிய அரண் அமைய, அவ்வரணைச்சூழ நீண்ட மதில் நிற்க, அம்மதிலைச்சூழ, ஆழ்ந்த அகழி கிடக்கும் என அதன் வளமும், வன்மையும் ஒருங்கே தோன்றப் பாடியுள்ளார்.

"நெல்லரி தொழுவர் கூர்வாள் மழுங்கின்
பின்னை மறத்தொடு அரியக் கல்செத்து
அள்ளல் யாமைக் கூன்புறத்து உரிஞ்சும்
நெல்லமல் புரவின் இலங்கை. .. .. .."

"குறும்படு குண்டகழ் நீண்மதில் ஊரே." (புறம் : ஈஎக)

நல்லியக் கோடன், கொடைநலம் ஒன்றே உடையானல்லன்; அவன் குணங்களால் நிறைந்த குன்றெனப் போற்றத்தகுவன்; அவன் குணநலமும், கொடைநலமும், இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனர் எனும் புலவர், அவனைப் பாராட்டிப் பாடிய சிறுபாணாற்றுப் படைக்கண் காணப்படும், "செய்ந்நன்றி அறிதலும், சிற்றினம் இன்மையும், இன்மூகம் உடைமையும், இனியனுதலும், அஞ்சினர்க்கு அளித்தலும, வெஞ்சினம் இன்மையும், ஆணாணி புகுதலும், அழிபடை தாங்கலும், கருதியது முடித்தலும், காமுறப்படுதலும், ஒருவழிப் படாமையும், ஒடியது உணர்தலும், அரிவையர் ஏத்த அறிவு மடம்படுதலும், அறிவு நன்கு உடைமையும், வரிசையறிதலும், வரையாது கொடுத்தலும்" என்ற தொடர்களில் தோன்றி நிற்றல் காண்க.

இத்துணை நல்லோனுகிய நல்லியக்கோடனைக் காணும் பேறுபெற்ற புலவர், தம்மை அவன்பால் கொண்டு உய்த்த

தம் ஆகுழை அகம் மகிழ்ந்து வாழ்த்தினர், அவன் ஆளும் தொண்டை நாட்டிற் பிறந்து வாழும் பேறுடையராய புலவர், அவன் அழகையும, அருமையையும் எண்ணுந் தோறும், இத்தகை அண்மையனைய இவனைக் காணப் பெறுது அந்தோ! என்வாழ்நாள் பல கொன்னே கழிந்து விட்டனவே! அந்தோ என்னே என் பேதைமை! பாரியின் பறப்புமலைக் கண்ணதாய சுனைநீர், உலக மக்கள் அனைவ ரானும ஒருங்கே விரும்பப்பெறும் சிறப்புடையது என்ப; அச்சுனைநீர், தேடிப்பெற வேண்டுவதின்றித் தம் மூரகத்தே இருந்ததாகவும், அதை விரும்பிச் சென்று வேட்கைதீர உண்டு மகிழாமல் மனத்திடை அதை நினைப்பதும் செய் யாது இகழ்ந்து இருந்தாரைப் போன்றன்றே ஆயினேன் யானும், என் அறியாமை இருந்தவாறு என்னே! என நல்லியக் கோடனைக் காணுது கழிந்த நாட்களுக்காகக் கண் ணீர் விட்டுக் கலங்கியுள்ளார் புலவர்

"நல்லியக் கோடனை
உடையை வாழி! எற்புணர்ந்த பாலே!
பாரி பறம்பின் பனிச்சுனைத் தெண்ணீர்
ஒரூர் உண்மையின் இகந்தோர் போலக்
காணுது கழிந்த வைகல் காணு
வழிநாட்டு இரங்கும் என்நெஞ்சம், அவன்
கழிமென் சாயல் காண்தொறும் நினைந்தே"

(புறம் : கஎசு)

நல்லியக் கோடனின் நல்லியல்புகளை இவ்வாறு நாவா ரப் பாராட்டிய புலவர், அவன், தம் பாராட்டைப் பெற்றுப் பெரும் பொருள் அளிக்கப்பெற்று மகிழ்ந்த பின்னர், அவன் அளித்த அந்நாள தொடங்கி, இனி எந்நாளும் பிறர்பாற்சென்று பொருள்வேண்டி இரவேன் யானும்; வருவார்க்கு வழங்க மறுக்கும் வன்கணுளர்தம் வாயி லிடத்தேயன்றி, வருவார்க்கு வாரிவழங்குதலே வரையாது மேற்கொள்ளும் வள்ளியோர்தம் வாயிலிடத்தும் ஒலித்த லைச் செய்யாது என் கிணைப்பறையும் என அவன் அளித்த

பொருளால் தாம் பெற்ற பெருவாழ்வின் பெருமிதம் தோன்றப் பாராட்டுவாராயினர். இவ்வாறு நல்லியக் கோடனைப் பாராடடும் புலவர், நலலியக் கோடன்போலும நல்லோர் பரிசில் தநது பேணத்தகும் பெருமையுடையரே தாமும் என்பதை உணர்த்துவார, பிறா உளளதேதை உள்ளுவதனை, உளளதால் உய்த்துணருமு உணர்வுத்திறன் உடையேன் யான் என்றும் கூறியுள்ளார்,

"இரவினனே ஏததோன் எந்தை
அன்றை ஞான்றினெனெ இன்றினனகும்
இரப்பச சிந்தியேன்; நிரப்படு புனையின்
உளத்தின் அளக்கும் மிளிர்ந்த தகையேன்,
நிறைக்குளப் புதவின் மகிழந்தனெனெகி
ஒருநாள், இரவலர் வரையா வள்ளியோ கடைத்தலை
ஞாநகர் நெடுமொழி பயிற்றித
தோன்றல செல்லாது என்சிறுகினைக் குரலே."

(புறம் : நடஎசு)

ஓய்மான் நல்லியக்கோடன் வழியில் வில்லியாதன் என்ற பெயருடையாெனரு வளளலும வாழ்ந்திருநதான்; நல்லியககோடனைப் பாடிய புலவா புறத்தினை நன்ஞகனார், வில்லியாதனையும் பாட விரும்பியுள்ளாா, பால்நினைந்தூட்டுமு நற்றாய்பால சென்று பால் உணண ஓடுமு குழவியின் உள்ளம் எவவளவு விரைவுடைதாமோ, அவ்வளவு விரைவு, அவனைப் பாரத்துப் பாராட்டவேண்டுமு என்ற தமு உளத்திற்கும் உண்டாமு எனபு புலவர் கூறுவது, அவன் பெருமையையும் அவனைப் பாராட்ட விருமபும் அவர் வேட்கையினையும் விளக்கிநிற்றல் காண்க. அவன் புகழ்கேட்ட புலவர், உடனே, வாறுற உயர்ந்து விளங்கித் தோன்றும் மலைகள் பலவற்றைக் கடந்து அவன்பால் வந்ததாகக் கூறுகின்றனர். பிறர் மனைசென்று பாட எண்ணேன் எனக் கூறும் புலவரை விரைந்து வரச்செய்யும் அவன் வண்மையின் சிறப்பினை என்னென்பது!

"கேட்டதற் கொண்டெம் வேட்கை தணிந்தாது
விண்தோய் தலைய குன்றம் பின்பட
நடைதர வந்தனென் யானே வடையில்
தாயில் தூஉம் குழவி போல." (புறம் : 158)

அவனைக் கண்டு பழகிய புலவர், தம பாட்டைப் பெறலாம் பீடும பெருமையும் உடையான் அவன் ஒருவனே என்பதையும், அததகையான் அவையிடை அமர்ந்து அவனளிக்கும் சிறப்பினைப் பெறலாம சிறுடையார் தாம் ஒருவரே என்பதையும் உணர்ந்தார், உணர்ந்த அவ்வுண்மையினை உளத்திடையே மறைத்து வைத்திடாது, உரையிடையிட்டு உணர்த்தியும் உளளார

"யானே பெறுக அவன்தாள் நிழல் வாழ்க்கை .
அவனே பெறுக என் நாவிசை நுவறல்." (புறம் · 158)

தொண்டை நாட்டில், வேங்கட மலையைச் சூழக் கொண்ட திருவேங்கடக் கோட்டத்தில் கரும்பனூர் என்றோர் ஊர் உளது ; அது, இகாலத்தே கருமபூர் என வழங்குகிறது அக் கரும்பனூரில் வாழ்திருந்தாரெரு வள்ளல்; அவன் கரும்பனூர்கிழான் என அக்காலத்தவரால் அழைக்கப பெற்றான் , அக் கரும்பனூர் நன்செய், புன்செய்களாலாய நல்ல வளங்களைப் பெற்றிருந்தது ; மென்னிலம் எனப்படும் அந்நாட்டு மருத நிலங்களில், இனத்தோடுகூடி இரைதேடி உண்ணும நாரைகள், வஞ்சிமரக் கிளைகளில் உறங்கி, முற்றிய கரும்பின் வெண்ணிறப் பூவைக் கொழுதி மகிழும ; வன்னிலம் எனப்படும் புன்செய்களில், வரகின் அரிகாலின்கண் வாழும் எலியை அலைதது பிடிக்க முயலும் குறும்பூழ்ப் பறவையின் ஓர வாரங்கேட்ட குறுமுயல் அஞ்சி அவ்விடம்விட்டு ஓடும் ; இருப்பைப்பூ உதிர்ந்து மணக்கும் அவ்வூரிடத்தே, விழாவற்ற காலத்தும், உழவர் உண்கலம், கெடிற்று மீன்கலந்த உணவாலும், உளம விரும்பும் கள்ளாலும் நிறைந்து தோன்றும் எனக் கரும்பனூரின் கவின்மிகு வளத்தினைப் பாடிக் காட்டுவர் புலவர் புறத்திணை நன்னாகனார் :

"மென்பாலான், உடன்அணை இ
வஞ்சிக் கோட்டு உறங்கும் நாரை
அறைக் கரும்பின் பூவருந்தும் ;
வன்பாலான், கருங்கால் வரகின்
அரிகால் கருப்பை அலைகரும் பூழின்
அங்கட் குறுமுயல் வெருவ, அயல
கருங் கோட்டு இருப்பைப் பூவுறைக குந்து ,
விழவின்றியினும், உழவா மண்டை
இருங்கெடிற்று மிசையொடு பூங்கள் வைகுந்து."

(புறம் · கூஅசை)

கரும்பனூர் கிழானைக்கண்டு பாராட்டி அவனால் சிறப் புச் செய்யப்பெற்ற புலவர் நன்னாகனார், "யாம் ஆங்கிருந் தக்கால், இறைச்சியுமை, சோறும் கலந்த உணவை மிக வுண்டு தெவிட்டி வெறுதத நிலையில், பால் கலந்துசெய் தனவும், வெல்லப்பாகு கலந்து செய்தனவுமாய பண்ணியங் களை இது மிக இனிது என்றுகூறி, மெல்ல உண்டு மகிழ்ந்து வாழ்வேம்" என்றும, "கரும்பனூர்கிழான், நிணம் கலந்த நல்ல சோற்றுணவில், நீரினும் மிகுதியாக நெய்யைப் பெய்து எமக்கு அளித்துப் புரந்து, மண்ணவ ரெல்லாம் கண்டு மனம் நாணும்படியாகப் பெரும்புகழ் பெறுவன் ; ஆங்கு வாழ்ந்த அந்நாட்களில், யாம உண வுண்ட உண்ணும் கலங்களில், உண்ணமாட்டாது ஒழித்து விட்ட மிக்க உணவை, அவ்வுண்கலத்திடையே வைத்து மடித்து எறிநதும், தின்னுங்கால், பற்களிடையே சிக்கிக் கொண்ட ஊனைத் தோண்டி எடுத்தும் மகிழுமாறு நிகழ்ந்த நாட்களை அறிவோமேயன்றி, சென்ற நாட்க ளையோ, இனிவரும் நாட்களையோ, எண்ணி அறிந்தோ மில்லை" என்றும, இவ்வாறு அவன் ஊட்ட உண்ணும் மகிழ்ச்சியால், தம் வாழ்நாள்பற்றிய நினைவையும் மறந்து கிடக்கும் புலவர், "கரும்பனூர்க் கிழானின் பேரன்பைப் பெற்ற எமக்குப் பொன்தான் என்ன ஒரு பொருளா ? நெல் முதலாம்பொருள்தான் ஒரு பொருளா ? நறுமணம் தரும் கள்தான் ஒரு பொருளா ? இவற்றையெல்லாம்

யாம் மதிக்கவும் செய்யேம்" என்றும், "கரும்பனூரன் காதலிப்பெற்ற யாங்கள், இனி வறுமை கண்டு வாடவும் செய்யேம்; ஆகவே, உலகில் வறுமையை வாழச்செய்ய வரும் வெள்ளி, எங்கு நிற்கினும் எமக்கு என்?" என்றும் செம்மாந்து கூறிச் சிறப்பிப்பாராயினர்:

"ஊணும் ஊணும் மூனையின் இனிதெனப்
பாலிற் பெய்தவும் பாகிற் கொண்டவும்
அளவுபு கலந்து மெல்லிது பருகி,
விருந்துறுத்து ஆற்றி இருந்தனெம்."

(புறம்: 58அக)

"நிணம் பெருத்த கொழுஞ் சோற்றிடை
மண் நாணப் புகழ் வேட்டு
நீர்நாண நெய்வழங்கிப்
புரந்தோன் எந்தை."

"உண்ட நன்கலம் பெய்து நுடக்கவும்,
தின்ற நண்பல் ஊஉன் தோண்டவும்
வந்த வைகல் அல்லது
சென்ற எல்லைச் செலவறியேனே."

"நெல் என்னும்? பொன் என்னும்?
கனற்றக் கொண்ட நறவு என்னும்?"

"புரந்தோன் எந்தை, யாம் எவன் தொலைவதை?
அன்னோனை உடையேம் என்ப; இனி வறட்கு
யாண்டும் நிற்க வெள்ளி!"

(புறம்: 58அச)

வருவார் எவர்க்கும் வரையாது வழங்கும் வள்ளியோனை கரும்பனூர்கிழானை, நீர்நிலையினைக் கடக்கவருவார் பெரியவராயினும், சிறியவராயினும், அவர் அனைவரையும் இருகரையினும் மாறிமாறிக் கொண்டுபோய்விடும் பொருள் கருதாது, அறமே கருதி உழைக்கும் தெப்பத்தோடு உவமித்துச் சிறப்பிக்கும் புலவர், குலைகுலையாகப் பூத்துக் காய்த்துக் கனிந்து கிடப்பினும் பிறராற் கொள்ளப்படாவாறு

மூட்கள் நிறைந்த கொடிகள் பின்னிக்கிடக்கும் புதரிடை நின்று வற்றும் மரம் நிற்கும் பாழிடத்தே பெய்த மழை போன்றது, ஈயாதார் இடத்தே மண்டிக்கிடக்கும பெருஞ் செல்வம எனக் கொடாமன்னரைப் பழித்துப் பாடியுள்ளார் :

"உறுவரும் சிறுவரும் ஊழ்மா றுய்க்கும்
அறத்துறை அம்பியின் மான, மறப்பின்று
இருங்கோள் ஈராப் பூட்கைக்
கரும்பனூரன் காதன் மகனே"

"துணரியது கொளாஅவாஇப் பழம் ஊழ்த்துப்
பயம் பகர்வறியா மயங்கரில் மூதுபாழ்ப்
பெயல் பெய்தன்ன செல்வத் தாங்கண்
ஈயா மன்னர்" (புறம் : ஈஅக)

## கூசூ. பூங்கண்ணன்

புலவர் பூங்கண்ணனார், காண்பார்க்கினிய கண் பெற்றுள்ளமையான், இப்பெயர் பெற்றார் போலும். இவர் பாடிய பாட்டொன்று குறுந்தொகைக்கண் வந்துள்ளது.

பொருள் தேடிப்போகும் ஆடவர், அவ்வினையைக் குறைவற முடித்தன்றி மீளார்; அவ்வாறு மீளல் அறனும் அன்று; அவர் ஆக்கமும் தேயும், வினைமேற் சென்ற அவர், அவ்வினை முடியுங்காறும, தம் மனைவி மக்களை நினைத்தலும கூடாது; அவர் நினைப்பு உண்டாயின், அவரால் மேற்கொண்ட வினையை விரைவில் முடிப்பது அரிதாகிவிடும், ஆகவே, அந்நிலையில் அவர்க்கு அவர்தம் மனைவி மக்களைப்பற்றி அறிவிப்பதும் கூடாது; அறிவிக்கப் பெறின், இருந்து வினைமுடிப்பதால், விழுமுறுதியே வருவதாயினும, தம மனைவி மக்கள் வருந்தும் அந்நிலையில், அதைப் பெற எண்ணவும் செய்யார்; தம் மனைவி மக்கள்பால் தலையாய அன்புடையராய தமிழகத்து ஆடவர்தம் மன இயல்பினை உணர்ந்த புலவர் தொல்காப்பியனார், "கிழவி நிலையே வினையிடத்து உரையா" என விதி வகுத்துள்ளார்.

பொருள் தேடிப்போன தலைவன் விரைவில் வந்திலன்; அவன் வாராமையால், பயனற்றுக கிடக்கும் பாயலைக் காணுந்தொறும் கண்ணீர்விட்டுக் கலங்குகிறாள் தலைவி; தலைவியின் துயர்நிலை அறிந்த தோழி, அவள்பால் சென்று, "அன்புடையாய்! தலைவர் விரைவில் வந்தெய்துமாறு, அவர்க்கு நின் நிலையினை அறிவிக்கும் தூதுவரை விடுத்தலும் கூடும்; ஆனால், அவர் நின்னிலையினை அறியின், தாம் மேற்கொண்ட வினையினை முடிக்காதே மீண்டுவிடுவர்; அதனால், நம் இல்லறம் இனிது நடத்தற்கு வேண்டும் விழுமுதியினை நாம் இழப்போம்; அந்நிலை உறுதல் அறமாகாது; ஆகவே, அவர்க்குத் தூதனுப்பும் செயலை யான் புரிந்திலேன்; அதனால் அவர் நின்னிலையினை அறியாராயினர்; ஆகவே, அவர் இன்னமும் வந்திலர்; இதை எண்

ணிச் சிறிது ஆற்றியிருத்தலே இனக்கு அறமாம்," என்று கூறினாள். தோழியின் கூற்றமைய வந்துளது புலவர் பாடிய அப் பாட்டு :

"கேளார் ஆகுவர் தோழி ! கேட்பின்
வீழுமிது கழிவதாயினும், நெகிழ்நூல்
பூச்சேர் அணையில் பெருங்கவின் தொலைந்தனின்
நாள்துயர் கெட, பின் நீடலர் மாதோ."

(குறு : உடுங)

இந்தப் பாட்டில், காட்டுவழியே செல்லும் பழந்தமிழ் மக்கள், இராக்காலத்தே தங்கட்குக் காட்டகத்துக் கொடு விலங்குகளால் ஊறு எதுவும் நேராமை கருதி, புலி தங்கிப்போய கற்குகைகளுள் தங்கிச் செல்வதும் உண்டு என்ற செய்தியையும் அறிவித்துள்ளார் :

"புலிபுகா வுறுத்த புலவுநாறு கல்லணை
ஆறுசெல் மாக்கள் சேக்கும்." (குறுந : உடுஉ)

## 170. பூதங்கண்ணனார்

கண்ணனார் எனும் இயற்பெயருடைய நம் புலவர் பூதன் எனும் பெயருடைப் பெரியார ஒருவரைப் பெற்ற தந்தையாக்கொண்ட பெருமையுடையவராதலின், பூதங் கண்ணனார் என அழைக்கபபெற்றுளார். இவர் பெயரால் இப்போது கிடைத்துளது ஒரு பாட்டே; அது நற்றிணைக் கண் இடம் பெற்றுளது.

தம்பால் விருபபின்றி ஒழுகுவார் பின்சென்று பணிந்து வாழ்தலினும வாழாமையே நன்றும் எனும் இறபப உயர்ந்த உளளமுடையாரனெரு தலைவன, தான் விருமபும் ஒரு தலைவி, தன்பால் விருபபமின்றித் தோழியா சூழ்நதுவர ஆடலை விரும்பி அகல்வதைக் கண்டான். ஆடல் உவந்து ஆயம சூழப் பநதொடு செலலும் அவள், தன்பால் விருப்பம இலளாயினும, தான் உற்ற நோயைப் போகுவல்ல மருநதாவாள அவளே; அவளையன்றி வேறு இலலை என்பதை அறிந்த அவன், தன் தகுதியினை நினையானுய், அவள் அருளினும, அருளாளாயினும, அவள் பின் சென்று நிற்றலையே பெரிதும் விரும்புவானுயினன், தன் நெஞசை நோக்கி, "நெஞ்சே! ஒட்டார் பினசெனறு ஒருவன் வாழ்தலின், அந்நிலையே கெட்டான் எனபபடுதல் நன்று எனும் உயர்பேரெண்ணம் உடையை நீ என்பதை அறிவேன, ஆயினும், இவளையின்றி வாழ்தல் என்னல் இயலாது; பின்சென்று பணிந்து நிற்றறகாகாத் தாழ் வுடையள் அல்லள் இவளும்; நெடுந்தேர் வழங்கும நீள் பெருஞ செல்வம் உடையன் இவள் தந்தை; அடுத்து முயன்றல் ஆகாதது இல்லை என்ப; பலகாலும் பின்செல் லின், இவள் அருள் செய்தலும் கூடும்; ஆகவே நெஞ்சே! என்பொருட்டு இவள் பின்சென்று இரந்து நிற்றலை முனி யாது மேற்கொள்ள வேண்டுகின்றேன்," என்று கூறினன்.

தலைவனின் இக்கூற்று அமையப் பாடிய தம் பாட்டில் புலவர் பூதங்கண்ணனார், பின்சென்று இரவாப பேருள்ளம் உடையானே பெரியேனுவன்; அத்தகையான், தான்

காதலியின் பேரன்பைப் பெறவேண்டிப் பலகாலும் பணிந்து நிற்றலைப் பெரிதும் உவப்பனையின், அச்செயல், அவனுக்கு மேலும் பெருமையளிக்கும் பெருஞ்செயலாம் என்ற அரிய உண்மைகளை உரைத்து உலகத்தார்க்கு உயர் வழி காட்டியுள்ளார்.

உயரிய ஒழுக்கநெறி யுணர்த்திய அப்பாட்டிலேயே, மழைபெய்யத் தழைத்து மலர்ந்து மணங்கமழும் சந்தனச் சோலைகளையும், நெடிய தேர் வழங்குவனவும், நிலவு போலும் வெண்மணல் பரந்தனவுமாய முன்னிடங்களை யுடைய மனைகளையும் கொண்ட தமிழகத்தின் தனிச்சிறப் பினையும் காட்டியுள்ளார்.

"கொண்டல் மாமழை குடக்கேர்பு குழைத்த
சிறுகோல் இணர பெருந்தண சாந்தம்
வகைசோ ஐம்பால் தகைபெற வாரிப்
புலர்விடத்து உதிர்ந்த துகள்படு கூழைப்
பெருங்கண் ஆயம் உவப்பத், தந்தை
நெடுந்தேர் வழங்கும் நிலவுமணல் முற்றத்துப்
பந்தொடு பெயரும் பரிவிலாட்டி
அருளினும், அருளாளாயினும், பெரிதழிந்து
பின்னிலை முனியல்; மாநெஞ்சே! என்னதூஉம்
அருந்துயர் அவலம் தீர்க்கும்
மருந்து பிறிதுஇல்லை, யான் உற்ற நோய்க்கே."

(நற். கசo)

## எக. பூதனார்

பூதனார் பாடிய பாட்டொன்று நற்றிணைக்கண் இடம் பெற்றுள்ளது; தாய் வீட்டிலேயே இருப்பின், தான் விரும்பும் காதலனை மணந்து கற்புடையளாதல் இயலாதாம என உணர்ந்த ஒரு பெண், தமர் அறியாவண்ணம், தன் காதலனோடு அவனூர் சென்றுவிட்டாள்; அதை அறிந்தாள் அவள் தாய்; அவளோ அவள்மாட்டுப் பேரன்புடையவள்; பேணி வளர்த்தவள்; தன் மகளை அன்பால் அணைத்துக் கொள்ளுங்கால், அன்பின் பெருக்கால் இறுக அணைத்துக் கொள்ளின் அவள் மார்பகம் வருந்துமோ என எண்ணும் அத்துணைப் பேரன்புடையாள், அவள் மகளோ, அணைத்த கையைத் தாய் சிறிது நெகிழ்த்தினும், தாய்க்குத் தன்பால் அன்பு குறைந்துவிட்டதுபோலும என எண்ணி வருந்தும் அத்துணை அறியாமையுடையாள, அத்தகையாள் ஏதிலான் ஒருவனுடன், கொடிய கோடையில் நிழலற்றதும், புலி வழங்கப்பெறுவதும் ஆய நீண்ட காட்டுவழியே சென்று விட்டமையினை எண்ணி எண்ணி வருந்தினாள். அவ்வாறு வருந்துவாள், மகளை மணக்கும அதற்கேமகன், யான் வருந்த அவளைக் கொண்டுசென்ற கொடுமையுடையனேனும, என் மகள்பால் பேரன்புடையனதேல் அறிந்து ஓரளவு ஆறுதல் கொண்டேன் என்பதை, அவர்கள் செல்லும் காட்டுவழியில் வாழும் ஆண்புலி, வழிப்போவாரைக் கொல்லும் கொடுமை உடையதே ஆயினும், அது சென்று பசித்திருக்கும் தன் பெண்புலிக்கு இரை தேடித்தந்து பேணும் பேரன்புடையதாம என்று கூறுவதால் உணர்த்தினாள். தாயின் இத் தனியன்பு தோன்றப் பாடிப் பாராட்டியுள்ளார் புலவர்: (நற்: உகூ).

## எஉ. பூதன் இளநாகனார்

இவர் மதுரையில் வாழ்ந்தவர்; பூதன் என்பாரின் மகனும் மாண்புடையவர்; இளநாகனார் எனும் இயற்பெயர் உடையவர்; மதுரை மருதன் இளநாகனார் என்று பெயருடைய புலவர் ஒருவர் இருப்பதால், இவர் பூதன் இளநாகனார் எனப் பெயர் பெற்றார். இருதிறப் படைகளும் தன் ஆண்மையினைப் போற்றுமாறு ஒரு வீரன் பெற்ற வெற்றிச் சிறப்பை விரித்துரைக்கும் தானைமலை என்ற துறை தழுவி வந்த பாட்டொன்று, இவர் பாடியதாகப் புறநானூற்றில் இடம் பெற்றுளது.

பகைவர் படை முழுதும் பாழானமைக்கு அவ்வீரன் ஒருவனே காரணமானான், இதை விளக்கு, ஆயர்மகள் ஒருத்தி தெளித்த பிரை, குடத்தில் உள்ள பால் முழுதும் திரிந்து தயிராதற்குக் காரணமாதலைப்போல், அப்பெரும் படை அழிவிற்கு அவன் ஒருவனே காரணமானான் என்று கூறிய உவமை, அவர் புலமையினை உணர்த்துவதாம்; இவ்வாறு, இவன் பெற்ற வெற்றிக்கு இவன் பிறந்த குடியே காரணமாம என்பதை உணர்தத, அவனைப் பெற்ற பெருமைசால் அம்மையார், செம்முதுகுடி வந்த சீசால் புகழுடையா என்று சிறப்பித்தார்; அவள் தன் மகனைத் தன் குடிக்கேற்ற மாண்புடையனுக்குதலில் கருத்துடையளேயன்றித தன்னை ஒப்பனை செய்துகொள்ளும கருத்துடையளல்லள் என்பார், அவள் தன் தலைக்கு நறும் மணம் நாறும் பொருள்பூசி அறியாமையால் நரைதத தலையினளாயினள் என்றும் கூறியுள்ளார்:

> "நறுவிரை துறந்த நரைவெண் கூந்தல்,
> இரங்கா முன்ன திரங்குகண் வறுமுலைச
> செம்முது பெண்டின் காதலஞ் சிறுஅன்,
> மடப்பால் ஆய்மகள் வள்ளுகிர்த் தெறித்த
> குடப்பால் சில்லுறை போலப்
> படைக்கு நோயெல்லாம் தானு யினனே."

(புறம் : உஎசு)

## எங. பூதன் தேவனார்

தெய்வங்களைக் குறிக்க வழங்கும் பெயர்களாகிய பூதன், தேவன் என்பனவற்றை முறையே தந்தை பெயராகவும் தம் பெயராகவும் கொண்டு வாழ்ந்த புலவர் பூதன் தேவனார் பாடிய பாக்கள் இரண்டு ; நற்றிணையில் ஒன்றும், குறுந்தொகையில் ஒன்றுமாக இடம் பெற்றுள்ளன அவ்விரண்டும்.

தன்பால் பேரன்புடையனாய்த் தான் விரும்பும் தழை உடையும், தண்ணறு மாலையும் தந்தானையே மணந்து, மாண்புமிகை கற்புநெறியினைக் கைப்பிடிக்க விரும்பினாள் ஒரு பெண் ; அது நிறைவேறற் பொருட்டுத் தைந்நீராடி நோன்பேற்கவும் துணிந்தாள், உயிரிற் சிறந்ததாம் கற்பினைக் காத்தல் கருதி, நோன்பேற்கும் அந்நிலையிலும் தாயிற் சிறந்ததாம் நாணை நழுவவிட்டாளல்லள் ; நீராடச் செல்வாள் நாணும், நல் தோழியரும் தன்னைச் சூழ்ந்து வரவே சென்றாள், அத்தகையாளொரு தமிழ்மகளைப் புலவர் பூதன் தேவனார் தம் பாட்டிடை வைத்துப் போற்றியுள்ளார் :

> "தழையும் தாரும் தந்தனன் இவன்என
> இழையணி ஆயமொடு தகுநாண் தடைஇத்
> தைஇத் திங்கள் தண்கயம் படியும்
> பெருந்தோட் குறுமகள்." (நற் : அ)

கார்ப்பருவத் தொடக்கத்தே வருவன் ; கவலற்க என, உறுதி உரைத்துப் பொருள்தேடிப் போயிருந்தான் ஒரு தலைவன் ; சென்ற அவன் அப்பருவம் வந்துற்ற பின்னரும் வந்திலன் ; சென்ற தலைவனின் வருகையினை ஒவ்வொரு நாளும் எதிர்நோக்கியிருந்தாள் ; "இன்று காலை வந்திலர் ; ஆயினும், மாலை நில்லாது வருவர்" என்றும், "இன்று மாலை வந்திலர் ; நாளைக் காலை நில்லாது வருவர்" என்றும் அவன் வரும் வழிநோக்கி இருந்து இருந்து ஏமாந்தாள் ; இதனால், அவள் துயர் அளவின்றிப் பெருகலாயிற்று ; இந்நிலையில்,

அவள் வீட்டை வாழிடமாக்கொண்ட புறுக்களுள், ஆண் புறு, தன் அன்பிற்குரிய பெண்புறு தன் அருகிலேயே இருப் பதும் அடங்காது, மேலும் நெருங்க அணைந்து அமருமாறு அதைப் பலகாலும் கூவி அழைத்து இமைப்பொழுதில் பெற்றுப்பேரின்பம் பெறுங் காட்சி, அவள் துயர் மேலும் பெருகத் துணை புரியலாயிற்று. இதனால், பெருந்துய ருறும் அந்நிலையிலும, அவள் அவன்மாட்டுச் சினங்கொண் டாளல்லள்; மாறாக, "அவர் சென்றவழி பெடையொடு பிரியாது உறைந்து பேரின்பம் உறும துணைப்பறவை களைப் பெறுது, உணவுதேடிய திரியும் தனிப்பறவை ஒன்றையே பெற்றுப பாழுற்றிருப்பதேயாம; அவ்வழி, சங்குள்ளன போலும் துணைப்பறவைகளை உடைததாயின், அக்காட்சியினைக காணும் அவர் நில்லாது விரைந்திவண் வந்திருப்பர்" என்றே வருந்தினள்; என்னே அவள்தன் பண்பாடு!

இவ்வாறு கணவன்மாட்டுத் தவறு காணுதாள்போல் கூறினளாயினும், துணையொடு வதியும புறுவைப் பாராட் டியும, தின்பொருள் தேடித்திரியும் தனிபபறவையினைப் பழித்தும் கூறும் முகத்தான், மனைவியோடிருந்து மகிழ்ந் துறைவோரே மாண்புடையார், அவள் வருந்த தனிதுதுச் சென்று பொருள்தேடித்திரிவார் போற்றுதற்குரியராகார் என்ற தன் உட்கருததை உரையாது உரைத்துக் கருத் திலாக் கணவனைக் கண்டித்தும் உள்ளார்; என்னே அவர்தம் அறிவு! இததகையாளொருத்தியைப் படைத் துப் பண்புரைக்கும் புலவர்தம் புலமைதான் என்னே!

"வைகல் வைகல் வைகவும் வாரார்;
எல்லா எல்லை எல்லையும் தோன்றூர்;
யாண்டுளர் கொல்லோ? தோழி! ஈண்டு இவர்
சொல்லிய பருவமோ இதுவே; பல்லூழ்
புன்புறப் பெடையொடு பயிரி இன்புற
இமைக்கண் ஏதா கின்றே! ஞெமைத்தலை
ஊன் தசைஇ ஒருபருந்து இருக்கும்
வானுயர் பிறங்கல் மலையிறந் தோரே." (குறுந்: உஅடு)

கன்று ஈன்ற எருமை நிறையப் பால்தர வேண்டின், அது நிறையப் புல் மேய்தல் வேண்டும்; ஆகவே, அவ் வெருமை, அதை உண்ணுமாறு ஊரில் உள்ள சிறுவர்கள், எருமைக் கன்றுகளைத் தொழுவத்தே விடுத்துவிட்டு, விடியற்காலையிலேயே புல்மேய ஓட்டிச் செல்வர். ஆனிரை ஓம்பும் இத்தொழிற் சிறப்பைப் புலவர் உணர்ந்து உணர்த்தி யுள்ளார் ஒரு பாட்டில்:

"மன்ற எருமை மலர்தலைக் காரா
இன்தீம் பால்பயம் கொண்மார் கன்றுவிட்டு
ஊராகுறு மாக்கள் மேற்கொண்டு கழியும்
பெருமபுலர் விடியல்." (நற் · அ0)

## எசு. பூவண்டல் நாகன் வேட்டனூர்

பூவண்டல் என்பது ஓர் ஊர்; அவ்வூரினராய இவர் மதுரை சென்று வாழ்ந்தமையால், மதுரைப் பூவண்டல் நாகன் வேட்டனூர் என அழைக்கப்பெற்றார்.

வரையாது வந்தாழுகும் தலைவன்பால், "தலைவ! நின்னோடு கொண்ட தொடர்பால் உண்டான தலைவியின் உடல்வேறுபாட்டினைத் தாய் அறிய நேரின், அதன் விளைவு என்னுமோ? அறியேன்; அஞ்சுவல்; ஆகவே விரைவில் வரைந்துகொள்ள வருவாயாக" எனக் கூறும் தோழியின் கூற்றமைந்த செய்யுளில், "தலைவ! எங்கள் தமர், தம் மகளை—நின்னால் விரும்பப்பெற்ற இவளைத் தம்பால் வந்து வேண்டுவார்க்கு மணஞ்செய்துதரும் எண்ணமுடையரா வர்; இதை அறியாத நீ, அவரைக் கேட்டு மணந்து இவள் நலத்தினை நுகரும் நேரிய வழியினை விடுத்து, இவ்வாறு களவில் இவளைக் காணவருகின்றனையே நின் அறியாமையினை என்னென்பது!" எனப் பழிக்க விரும்பி, அதை வெளிப்படக் கூறாது, "தினை முற்றக் கண்டு கொய்துகொண்டு செல்வுழிக் களம்பாடி வரு வார்க்கு வழங்குவதைப் போன்றே ஆங்குக் கூடியிருக்கும் பறவை இனங்கட்கும் தினை அளிததச் செல்வர் எங்கள் தமர்; அதை அறியாது, இத்தினையைத் திருடித் தின்ன வரும் கிளிகளை உடைய நாடு நின்நாடு" என்று அவன் நாட்டுக் கிளிகளின் இயல்பு கூறுவாள்போல் கூறினள் தோழி" எனப் பாடிய புலவன், புலமை போற்றற்குரியதா மன்றோ?

"பைந்தினை
பவளச் செவ்வாய்ப் பைங்கிளி கவரும்
உயர்வரை நாட! நீ நயந்தோள் கேண்மை
அன்னை அறிகுவளாயின், பனிகலந்து
என்னுகுவ கொல்?" (நற்: கூகஎ)

## எடு. பெருங்கண்ணனார்

புலவர் பெருங்கண்ணனார் பாடிய பாக்கள் மூன்று; அவற்றுள் ஒன்று நற்றிணையிலும், ஏனைய குறுந்தொகையிலும் இடம் பெற்றுள்ளன.

பொருள்தேடிப் பிரியவேண்டிய நிலை வந்துற்றது ஒரு தலைவனுக்கு; அந்நிலையில், அவன் மென்மையும், மணமும் நிறைந்த பிடரிவரை தாழும தழைத்த கூந்தலும், பனை போல் பருத்த தோளும், மகளிர்க்கு மாண்புதரும் மடப் பமும் உடைய தன் மனைவிநல்லாளை ஒரு பக்கமும், நீரற் றதும், நீண்டு செல்வதும், நிழலற்றதுமாய தான் செல்ல வேண்டிய வழிக்காட்சியை மற்றொரு பக்கமும் நிறுத்திக் கண்டான்; இத்துணை இனிமையுடையாளைப் பிரிந்து இக் கொடிய காட்டுவழியிற் சென்று கலங்கவேண்டுமாயின், செல்வார், இவளினும் சிறந்த ஒரு பொருளைப் பெறுபவ ராதல் வேண்டும்; ஆனால், இவளினும் சிறந்த ஒரு பொருள் உலகில் இல்லை என்பதை உணர்வான் அவன், ஆகவே, பொருள்விரும்பும தன் உள்ளத்தை விளித்து, "உள்ளமே! இவளை நீண்டுப் பிரிந்து ஆண்டுப் போதது, அத்துயர் தாங்கும் ஆற்றல் இல்லேன யான், ஆகவே, யான் வந்திலன்; அவ்வாற்றல் வாய்க்கப்பெற்ற நீ அவ்வழிச் சென்று, சிறந்தது பெற்றுச் சிறப்புறுவாயாக!" என்று கூறி வாழ்த்துவதோடு, நீ செல்லும் அவ்வழி, வருந்திய தன் பிடிக்கு உணவு தேடித்தந்து இன்புற்று வாழும் களிறுகளை உடையது என்பதை உணர்ந்தால், உடனுறை வாழ்க்கையினை வெறுக்கும் உறுதி உண்டாதல் எவர்க்கும் அரிதாம் என்பதை உணர்வை என்று கூறி, பிரிந்துசேறல் பண்பன்று என அறிவுரையும் கூறினன். இவ்வாறு பொருளினும் பண்புநிறை மனைவியே மாண்புடையாள் எனக் கருதும் தலைவன் கூற்றினைப் பாட்டிடைவைத்துப் பாடியுள்ளார் புலவர்:

"தண்ணிய கமழும் தாழிருங் கூந்தல்
தடமென் பணைத்தோள் மடநல்லோள் வயின்
பிரியச சூழ்ந்தனை யாயின், அரியதொன்று
எய்தினை வாழிய! நெஞ்சே! செவ்வரை
அருவியான்ற நீரில் நீளிடைக்
கயந்தலை மடப்பிடி உயங்குபசி களைஇயர்
பெருங்களிறு தொலைத்த மூடத்தாள் ஓமை
அருஞ்சுரம் செல்வோர்க்கு அல்கு நிழலாகும்
குன்ற வைப்பின் கானம்
சென்றுசேண் அகறல் வல்லிய நீயே.'! (நற்: கஉஎ)

தாம் வாழிடம் திரும்பும் பறவைகளும் ஒலித்தன; மலர்களும் குவிந்தன. கடற்கரைச் சோலையும், வழங்குவாரற்றுத் தனிமையுற்றது; தலைவனைப் பிரிந்து தனித்துத் துயருறும் நம்மைப்போன்றே, வானமும், ஞாயிறுமறைய அழகிழந்துவிட்டது எனத் தலைமகளொருத்தி வாயில் வைத்து நெய்தல் நிலத்து மாலைக் காட்சியை மனம் மகிழ்ந்து பாடியுள்ளார் புலவர்:

"புள்ளும் புலம்பின; பூவும் கூம்பின;
கானலும் புலம்புஞனி உடைத்தே, வானமும்
நம்மே போலும் மம்மர்த் தாகி
எல்லை கழியப் புல்லென் றன்றே.'' (குறுந்: உகO)

## எசு. பெருஞ்சாத்தனர்

சாத்தன், பெருஞ்சாத்தன் என்ற பெயருடையார் பலராவர்; வீரனும மவள்ளலுமாய் விளங்கிய ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் என்பான் ஒருவனும் உளன். அப்பெயர் பூண்ட இப்புலவர் பாடிய பாட்டொன்று குறுந்தொகைக்கண் உளது.

கணவர்த் தொழுதெழும் கற்புடை மகளிர் பிறதெய்வங்களைத் தொழ எண்ணுர், காதல நிறைந்த கணவரைப் பெறமாட்டாமையால கன்னிப பெண்கள் உறும் துயரால் உடல் மெலிந்தாராயின், அதைப் பேயாற்கொள்ளப்பட்டமையால் உண்டாய விளைவு எனக் கோடல் பெரும் பேதைமை, இந்த உண்மைகளை உணர்ந்தவர் நம் புலவர். தான் விரும்பிய தலைவன் விரைந்துவந்து வரைந்துகொள்ளாமையால் வருந்திய தன் உடல வேறுபாட்டினைக் கண்ட தன் தாய், அது பேயாற் கொள்ளபபட்டமையால் உண்டாயது எனப் பிறழக்கொண்டு, அது தீருமாறு ஆட்டை அறுத்தும், தினைப்பலி கொடுத்தும், பல்வேறு இசை ஒலிகளவும், ஆறறிடைக் குறைகளில் வெறியாட்டெடுத்தாளாக, அவள வேண்ட, ஆண்டு வெளிப்படுதலல்லது, தான் உற்ற நோயைப் போக்க இயலாத முருகன்போலும பிற தெய்வங்களையும் வழிபடவேண்டி வந்ததே என வருந்தினள் ஒரு தலைவி எனப் பாடிய அவர் பாட்டின்வழி அவ்வுண்மைகள் புலனுதல் காண்க.

"மறிக்குரல் அறுத்துத், தினைப்பிரப்பு இரீஇச
செல்லாற்றுக் கவலைப் பல்லியம் கறங்கத
தோற்றம் அல்லது நோய்க்கு மருந்தாகா
வேற்றுப் பெருந்தெய்வம் பலவுடன் வாழ்த்திப்
பேஎய்க் கொளீஇயள் இவள்எனப் படுதல்
நோதக்கன்றே." (குறுந்: உசுஉ)

## எஎ. பெருந்தேவனார்

பெருந்தேவனார் என்ற பெயருடைய புலவர் பலராவர்; கடுகு பெருந்தேவன், பாரதம் பாடிய பெருந்தேவன் என் பாரைக் காண்க. புலவர் பெருந்தேவனார் பாடிய நற்றிணைப் பாட்டு நவில்தொறும் நயஞ்செறிந்து விளங்குகிறது.

களவொழுக்கமே விரும்பியொழுகும் தலைவன், ஒரு நாள் இரவு தலைவியின் மனையருகே வந்திருந்தானாக, அஃதறிந்த அத்தலைவி, "எம்முடைய ஊர்முகத்தேயுள்ள அழகிய நீர்த்துறை அருகே வளர்ந்து வானளாவ நீண்டிருக்கும், கடவுள் உறையும் முதிய மரத்தில் அமர்ந்திருக்கும், வளைந்த வாயும், தெளிந்தகண்ணும், கூரிய உகிரும் உடைய வலிமிக்க கூகையே! நின்வாயினின்றும் வெளிவரும் நின் கடிய குரல்ஒலி, பறையோசைபோலப் பிறரை வருத்துவதாகும்; நினக்கு, ஆட்டிறைச்சியோடு நெய்யைக் கலந்து ஆக்கிய வெண்சோறும், வெள்ளெலியின் சூட்டிறைச்சியும் நிரம்பக் கொடுக்கின்றேன்; என்பால் குறையாத அன்புடையராய் வரும் எம் காதலர் வருகையினை எதிர்நோக்கித் துயில் ஒழிந்து கிடக்கும் இராக் காலத்தே, ஊரார் அஞ்சி விழித்துக்கொள்ளுமாறு நின் கடியகுரலைக் காட்டாதிருப்பாயாக" என அவன் கேட்குமாறு கூறி, இரவுக்குறி இடையீடுபடும் என்பதையும், அதனால் தான் வருந்தவேண்டிவரும் என்பதையும் அறிவுறுத்தி, விரைந்து வரைந்துகொள்ள வழிசெய்தாள் எனப் பாடிய அப்பாட்டின் நயம் அறிந்து மகிழ்வோமாக!

"எம்மூர் வாயில் ஒண்துறைத் தடைஇய
கடவுள் முதுமரத்து உடனுறை பழகிய
தேயா வளைவாய்த் தெண்கண் கூருகிர்
வாய்ப்பறை அசாஅம் வலிமுந்து கூகை!
மையூன் தெரிந்த நெய்வெண் புழுக்கல்
எலிவான் சூட்டொடு மலியப் பேணுதும்;
எஞ்சாக் கொள்கை எம்காதலர் வரல் நசைஇத்
துஞ்சாது அலமரும் பொழுதுநின்
அஞ்சுவரக் கடுங்குரல் பயிற்றற்மதீமே." (நற்: அசு)

## எஅ. பெரும்பதுமனார்

பெரும்பதுமனார், அகப்புறப் பாடல்களே அழகாகப் பாடவல்லராவர்; மீளிப் பெரும்பதுமனார் என்பாரொருவர் உளர்; அவர் வேறு; இவர் வேறு.

இரவலரும், புரவலரும் வாழவேண்டிய இவ்வுலகில் அவ்விருவர்க்கிடையே இருக்கவேண்டிய உறவுநிலை இத்தகைத்தாதல் வேண்டும் எனப் புலவர் கூறும் பொருளுரை பொன்னேபோல் போற்றற்குரித்தாம்; நிறையப் பழுத்து நிற்கும் ஆலமரத்தை அடைந்து அதன் பழம் உண்டு மகிழும் பண்பினவாய பறவையினம், இம்மரத்துப் பழத்தை நேற்று உண்டோம்; ஆகவே, இன்றும் அம் மரத்திற்கே செல்லுதல் நன்றன்று என்று எண்ணுமல், காளதோறும் அமமரத்தையே அடைந்து, அதன் பழத்தையே உண்டு மகிழும். அதைப்போலவே, வள்ளியோன் ஒருவனை அடைந்து அவன்தரும் பரிசிற்பொருள் பெற்று வாழும் பாணர், கூத்தர் முதலாம் இரவலர்களும், தம் கைப்பொருள் குறையுந்தொறும், அவன்பாலே சென்று பரிசில் வேண்டிநிற்பர்; அவ்விரவலர் வாழ்வும் வறுமையும் தமக்கெனத் தனியே உடையரல்லர்; தம்மை விரும்பி வரவேற்று வழங்கும் வள்ளியோர் வாழ்வே அவர்கள் வாழ்வாம்; அவ்வள்ளியோர் வறுமையே அவர்கள் வறுமையாம் எனப் புலவா கூறும் பொருளாழம் பாராட்டற்குரியதாம்.

"கடவுள் ஆலத்துத் தடவுச்சினைப் பல்பழம்
நெருநல் உண்டனம் என்னாது, பின்னும்
செலவு ஆனவே களிகொள் புள்ளினம்;
அனையர் வாழியோ! இரவலர்; அவரைப்
புரவெதிர் கொள்ளும் பெருஞ்செய் யாடவர்
உடைமை யாகும் அவர் உடைமை;
அவா இன்மையாகும் அவர் இன்மையே."

(புறம்: ஙஙங)

தமரொடு வாழின், தான் விரும்பும் காதலனைப் பெற்று மகிழ்தல் இயலாது எனத் தலைவி உணர்ந்தாளாக, அவளைத் தன்னூர்க்குக் கொண்டு சென்று மணக்கத் துணிந்து, அவள் தமர் அறியாவாறு தன்னுடன் கொண்டு செல்லலாயினன் தலைவன்; அவர்கள் இருவரும் உடன் செல்வதை வழியிற்கண்டார், "கையில் வில்லும், காலில் வீரக் கழலும் உடையனாய்க் காட்சியளிக்கின்றான் இவன்; கையில் வளையும், காலிற் சிலம்பும் ஒலிக்கச் செல்கிறாள் இவள்; நல்லவராக, நன்னிலை உடையவராகத தோன்றும் இவர்கள யாரோ? இத்தகையார், தம் உற்றார்தம் உறு துணையைப் பெறமாட்டாராய் இவ்வாறு இக்காட்டுவழி வந்து அந்தோ! வருந்துகின்றனரே!" என்றும், "இத் தகைய கொடிய காட்டுவழியில், மிகமிக மெல்லியளாய இந்நல்லாளை அழைத்துச்செல்ல இளகிய நெஞ்சுடையார் எவரும் எண்ணார்; இவளை முன்னே நடக்கவிட்டு அவட்குப் பாதுகாவலாய், அவள் பின்னழகை நோக்கி மகிழ்ந்து பின்செல்லும் இவனிளையாளுள்ளம் உண்மையில் இடி யினும் கொடிதே' என்றும் கூறி வருந்தினர். வழியிடைக் கண்டார், இவ்வாறு வருந்திக்கூறும் கூற்றமைய வந்துள்ள புலவர் பாக்கள் படிக்குந்தொறும் பேரின்பம் தருவனவாம்:

"வில்லோன் காலன கழலே; தொடியோள்
மெல்லடி மேலவும் சிலம்பே; நல்லோர்
யார்கொல்? அளியர்!.....
வேய்பயில் அழுவம் முன்னி யோரே." (குறுந்: எ)

"வையெயிற்று ஐயன் மடந்தை முன்னுற்று
எல்லிடை நீங்கும் இளையோன் உள்ளம்
காலொடு பட்ட மாரி
மால்வரை மிளிர்க்கும் உருமினும் கொடிதே."
(நற்: உ)

தமிழகம், ஆரியரையும் அவர்கள் பழக்க வழக்கங் களையும், மிகப்பழைய காலத்திலேயே அறிந்திருந்தது; தமிழகத்து வாழ்க்கையினை ஆரியர் சங்ககாலத்திற்கு

முன்னரே மேற்கொண்டுவிட்டனர்; அத்தகைய ஆரியருள் ஒருசாரார், கழைநட்டுக் கயிறுகட்டி, அக்கயிற்றின்மேல் நின்று ஆடிக் காட்டுவர்; அவ்வாறு அவர் ஆடும் ஆட்டத்திற்கேற்ப பறையொலித்துக் காட்டுவர். இத்தகைய ஆடலை ஆரியக்கூத்து எனப் பெயரிட்டு அழைப்பர்; இக் கூத்து உண்மையினை, "ஆரியக் கூத்தாடினலும், காரியத்திலே கண்" என்ற பழமொழியும் வலியுறுத்தும். புலவர் பெரும்பதுமனார், ஆரியர் ஆட அடிக்கும் பறையொலி போல், வாகையின் வெண்ணெற்று ஒலிக்கும் என்று கூறி இக் கூத்தண்மையினைப் புலப்படுத்தியுள்ளார்:

"ஆரியர்,
கயிறுடு பறையின், கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணெற்று ஒலிக்கும்." (குறுந்: எ)

---

## எஅ. பெருமருதனர்

மதுரை மருதன் இளநாகனர், மதுரை மருதங்கிழார் என மருதன் பெயருடையார் பலராதலாலும், அவர் எல்லாரினும், இவர் யாதோ ஒருவகையான் பெருமையுற்றிருந்தமையாலும் இவர் மதுரைப் பெருமருதனர் என அழைக்கப்பெற்றுளார். இவருக்கு இளநாகனர் என்ற ஒரு மகனர் உளர்; அவரும் இவரைப்போன்றே ஒரு நல்லிசைப் புலவராவர்; இவர் பாடிய பாட்டொன்று நற்றிணைக்கண் இடம் பெற்றுள்ளது.

வாடைக்காற்று வீசுவதால் கரும்புகள் பூக்கும் எனவும், கரும்புகள், வெண்ணிறப் பூக்கள் வரிசையாக மலர்ந்து தோன்ற விளங்கும் காட்சி, வேந்தர்க்கு வீசும் வெண்கவரி போன்றுளது எனவும், கார்காலத்தே மேகங்கள் குவியல் குவியல்களாய் இயங்குவதால், ஞாயிறு மறைப்புண்டு தோன்றும் காட்சி, அஞ்ஞாயிறு கண்களை மூடிமூடித் திறப்பதுபோலும் எனவும், கார்காலக் கழிவின் கண்தோன்றும் கூதிர்க்காலத்து இடையாமத்தே பனி மிகமிக அதிகமாம் ஆதலின், அக்காலப் பனியினைக் கால் கொண்ட பனி எனவும் புலவர் கூறுவது எத்துணைப் பொருத்தம் உடைத்தாம் என்பதையும், புலவர் அவற்றின் இயல்பினை நன்கு உணர்ந்தே கூறியுள்ளார் என்பதையும் அவற்றின் இயல்பினை அறியும் வாய்ப்புடையார் அனைவரும் உணர்வர்.

> "வளரா வாடை உளர்புனி தீண்டலின்,
> வேழவெண்பூ விரிவன, பலவுடன்
> வேந்துவீசு கவரியின் பூம்புதல் அணிய,
> மழைகழி விசும்பில் மாறி ஞாயிறு
> விழித் திமைப்பதுபோல் வினங்குபு மறைய
> எல்லே போகிய பொழுதின் எல்லுறப்
> பனிக்கால் கொண்ட பையுள் யாமம்." (நற்: உசக)

# அ0. பெருமருதன் இளநாகனார்

இவர் பெருமருதன் என்பாரின் மகனார்; இளநாகனார் என்ற இயற்பெயருடையார்; மருதன் இளநாகனார் என் பாரின் வேறு அறிவித்தற்பொருட்டுப் பெருமருதன் இளநாகனார் என அழைக்கப் பெற்றுளார்.

தலைவன் விரைவில் வரைந்துகொள்ளாளாகவே, தலை விக்கு உள்ளத்துயர் மிக்கது; அதனால் அவள் உடல் நலமும் குன்றிற்று; தன் மகளின் உடல்நலக் குறையறிந்த தாய், அதற்காம் காரணம் யாதென அறிந்து அவள் வரை விற்கு வழிசெய்தல் ஒழிந்து, அவளைப் புறத்தே போகா வாறு இல்லில் அடைத்து, அவள் நோய்தீர வெறியாட் டெடுக்கத் தொடங்கினாள். தாயின் செயலால் தலைமகள் துயர் மிக்கது, தாய்க்கு அறிவுவரச்செய்து தன் மணத் திற்குத் துணைபுரிவாரைத் தேடினாள்; தான் அதுகாறும் காத்த தினை அவள் கண்முன் நின்றது; தினை கதிர்வாங்க வேண்டிய காலத்தே வாங்காது காலம் தாழ்க்குமாயின், தம்மில் தவறு நிகழ்ந்ததாகவும், அதனாலேயே தினை கதிர் விட்டிலது எனவும் உணர்வர் அந்நில மக்கள்; அத்தவறு யாது என ஆராய்ந்து அறிந்து அதைப் போக்குவர். இதையுணர்ந்த தலைவி, அத்தினையை நோக்கி, "தினையே! நின்னை இதுகாறும் கிளி முதலாயின அழிக்காவாறு காத்தேன்; அவ்வாறு காத்து நின்றது, புனங்காவல் கருதி ஆங்கிருப்பதால் தலைவனைக் காணலாம் என்ற எண்ணத் தினாலேயேயாம் என்பதை நீ அறிவாய்; அவ் அன்பிற்கு வழிசெய்யாது அன்னை என்னை இற்செறித்துவிட்டாள்; இச்செயல் அறனன்று என்பதை அறிவாய்; அறிந்த வறியார் நாட்டில் கதிர்விட்டு வளர்தல் நினக்கு முறை யன்று; மேலும் என்னை இற்செறித்துவிட்டமையால் நீயும் நின்னைக் காப்பாரை இழந்துவிட்டனை; அதனால் கிளி முதலாய பறவைகள் நின்னை அழிக்கத் தொடங்கிவிட் டன; இவ்வாறு எனக்குத் துயர்மிகுத்ததோடு நினக்கும் கேடு சூழ்ந்துவிட்டாள் அன்னை; கேடு சூழ்ந்தாரைக்

கதிர்விடாது நின்று கெடுப்பதும் பழியன்று, ஆகவே தினையே! அன்னைக்கு அறிவுவருமாறு, சிறிதுகாலம் கதிர்விடுவதைத தாழ்த்தி வைப்பாயாக! அதனால், நின்னைக் காத்த எனக்குத துணை செய்தாயுமாவாய்; நினக்குக் கேடு சூழ்ந்தாரை ஒறுத்தாயுமாவாய'' என்று கூறி வேண்டினாள இவ்வளவு பொருளகளும் ஒருங்கே தோன்றுமாறு, புலவர் பெருமருதன இளநாகனார பாடிய பாட்டொன்று நற்றிணைக்கண் இடம் பெற்றுளளது

"நன்மலை நாடனை நயவா, யாம் அவன
அளிபே ரன்பின் நின்குரல் ஓப்பி
நிற்புறங காத்தலும் காண்போய! நீஎன
தளிரோர் மேனித தொல்கவின் அழியப்
பலிபெறு கடவுள் பேணிக கலிசிறந்து
தொடங்குநிலைப் பறவை உடங்குகுரல் கவரும்
தோடு இடங்கோடாய், கிளாந்து
நீடினை விஃமோ வாழிய தினையே." (நற் உஙிக)



# - பேயனார் -

முதலிய சுக புலவர்கள்



ஆசிரியர் :

புலவர், கா. கோவிந்தன், எம். ஏ ,

கழக வெளியீடு : எஉஉ

சங்கத் தமிழ்ப்புலவர் வரிசை - கசூ

# பேயனார்

## முதலிய நகை புலவர்கள்



புலவர், கா. கோவிந்தன், எம். ஏ.,
எழுதியது



திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Aug., 1954.

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., 1/140, BROADWAY, MADRAS-1.

*Head Office*:

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1—C. 1250

# பதிப்புரை

காலம் இடையீடில்லா நுண்பொருள். அது, நல்லன அல்லன யாவும் செய்யவல்லது, நல்லன செய்தது பழையதான சங்ககாலம்; அக்காலந்தந்த நறுமணமலர்கள் பல; அம்மலர்களே சங்ககாலத்திய பொங்கருட் புலமையாளர்.

இவர்கள் செவ்விய சீரிய கூரிய தீஞ்சொல் வளன் நிறைந்த செந்தமிழ்ச் செய்யுளாம் தீந்தேன் தக்கது அறிவுப்பசியாற்றிய அருந்திறலினராவர்.

இப்பெரியார் வரிசைகளுள், 'பேயனார்' முதலவராக 'வேளாதத்தர்' ஈற்றினராக முப்பதுதொன்பதின்மராவர். இவர்தம் வரலாறு கூறும் நூலுக்குப் பேயனார் எனப் பெயர் சூட்டிய சங்கத் தமிழப் புலவர் வரிசையில் ஈசு ஆவதாக வெளியிட்டுள்ளோம். இதனை அவர்கள் பாவின் நய ஆய்வோடு கெழுமஆக்கித்தந்தவர் தீரு. புலவர், கா. கோவிந்தன் அவர்கள்.

தமிழக நன்மாந்தர்கள் இதனையும், இவ்வரிசையில் வெளிவந்துள்ள ஏனைய சங்கத் தமிழப் புலவர் வரிசை நூல்களையும் வாங்கிக் கற்று அறிவுத்துறையாம் பணைப்பணைத்த பெருஞ் செல்வத்தைப் பெற்று இன்புறுவார்களென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | தோற்றுவாய் | 1 |
| க. | பேயனார் | 6 |
| உ. | பேயார் | 12 |
| ங. | பேராலவாயர் | 13 |
| ச. | பொத்தியார் | 17 |
| ஞ | பொன்மணியார் | 22 |
| சு. | பொன்னாகனார் | 23 |
| �எ. | போத்தனார் | 24 |
| அ. | போதனார் | 25 |
| கூ. | மதுரைக் கண்ணனார் | 27 |
| கo. | மருதன் இளநாகனார் | 29 |
| கக | மாதிரத்தனார் | 57 |
| கஉ. | மாமூலனார் | 59 |
| கங. | மாயெண்டனார் | 84 |
| கச. | மார்க்கண்டேயனார் | 85 |
| கஞ. | மாலைமாறன் | 87 |
| கசு. | மீளிப்பெரும்பதுமனார் | 88 |
| கஎ. | முடத்தாமக் கண்ணியார் | 89 |
| கஅ | முதுவெங்கண்ணனார் | 105 |
| க�கூ. | மூலங்கீரனார் | 106 |
| உo. | மேலைக்கடைக் கண்ணம் புகுத்தாராயத்தனார் | 107 |
| உக. | மேலைக்கடையத்தார் நல்வெள்ளையார் | 109 |
| உஉ. | மையோடக் கோவனார் | 111 |

| | | பக்கம் |
|---|---|---|
| உங. | மோதாசனர் | 114 |
| உச. | வடநெடுந்தத்தனர் | 116 |
| உஞ. | வருமுலையாரித்து | 118 |
| உசு. | வன்பரணர் | 119 |
| உள. | வாடாப்பிரமந்தன் | 125 |
| உழ. | வான்மீகியார் | 126 |
| உசு. | விணைத்தொழிற் சோகீரனர் | 129 |
| ஙo. | வெண்கொற்றன் | 130 |
| ஙக. | வெண்பூதனர் | 131 |
| ஙஉ. | வெண்மணிப்பூதி | 133 |
| ஙங. | வெள்ளாடியனர் | 134 |
| ஙச. | வெள்ளியந்தின்னனர் | 136 |
| ஙஞ. | வெள்ளெருக்கிலையார் | 137 |
| ஙசு. | வெள்ளோமாளர் | 140 |
| ஙள. | வேட்டகண்ணன் | 141 |
| ஙழ | வேளாசான் | 142 |
| ஙசு. | வேளாதத்தர் | 144 |

# பெயரும்

## தோற்றுவாய்

தமிழ் இலக்கியம ஒரு கரைகாணுப பெருங்கடலாம்; பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழக்கணக்கு, ஐம்பெருங்காப்பியம், ஐஞ்சிறுகாப்பியம போலும நூல்களேயும், பிற்காலத்தனவாய எதனேயோ புராணங்கள், கோவை, உலா, அந்தாதி, மாலே போலும நூல்களேயும் எண்ணிக்காணின், அவற்றுட் பொதிந்துகிடக்கும் பாக்கள் எதனே எத்தனே ஆயிரங்களோ? அவற்றை ஆக்கியளித்த ஆசிரியப் பெருமக்கள் எதனே எதனே நூற்றுவரோ? தமிழுலகப் பிறந்த ஒவவொருவனும, இந்நூல்களேக் கற்றுத தேர்தல வேண்டுமாயினும், அவை யனேதையும் கற்றுத் தோதல் கனவினும் இயலாதகாரியமாம, ஆயினும், அவற்றைக் கல்லாது விடுதல, கழுவாயற்றதோர விழுமிய குற்றமாம; "கல்வி கரையில; கற்பவர நாளசில" என்ப. ஆகவே, அவற்றுள் தலேயாய நூல்கள் சிலவற்றையாவது அறிந்து பயன்கோடல் வேண்டுமம. தமிழ் நூலகளுள், பத்துப்பாட்டு, எட்டுதொதாகை, பதினெண்கீழ்க்கணக்கு, ஐமபெருங்காப்பியம, ஐஞ்சிறுகாப்பியங்களாய நூல்கள் எல்லாம, ஏறக்குறைய ஒருகாலத்தே தோன்றியனவே ஆயினும, அவற்றுள பததுப்பாட்டு, எட்டுதொதாகையாகிய நூல்களேயே, அறிஞர்கள், சங்க இலக்கியம் எனப் பெயரளித்துப் போற்றுவர்.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகையாகிய அந்நூல்களுள் அடங்கிய பழந்தமிழ்ப் பாக்கள், பண்டைத் தமிழகக் காட்சியினைப் பளிங்கெனக் காட்டும் படக்காட்சியாகும்:

அவற்றுட் புக்குக்காணவல்லார், அன்றைய தமிழ்நாட்டைத் தம் கண்ணெதிரே காணவல்லராவர்; அன்று, தமிழகம் அரசியல் நிலைகுறித்துப பிரிக்கப்பெற்ற பல்வேறு நாட்டுப் பிரிவினை, அவற்றிடைச் சிறப்புற்று விளங்கிய ஆறு, மலை, ஊர்கள், ஆங்காங்கு வாழ்ந்த பல்வேறு இனமக்கள், அவர்கள் மேற்கொண்டிருந்த தொழில் வகைகள், அம் மக்களிடையே வளர்ந்து வளங்கொழித்த மரம், செடி, கொடிகள், நீரினும, நிலத்தினும், நீலவானத்தினும் வாழ்ந்த உயிர் வகைகள், அன்றைய சிறப்பா, பேரூர் நிலைகள், ஆங்காங்கு நடைபெற்ற அககாலப பெரு விழாக்கள், அன்று வாழ்ந்த மக்கள் மனவளம் ஆக அனைத்தையும் அறிவிதது நிற்கினறன அப்பாக்கள். அப் பாக்களைப பாடிய புலவர்களால் நமக்கு அறிமுகமான பேராசர்களும், குறுநிலத தலைவர்களும், கொடைவள்ளல் களும் பலராவர்; அத்தகையாருள் நூற்றுஎழுபத்தைவர் வரலாறு, அவர் பாக்களால் நமக்கு அறியக் கிடக்கின்றன; அப்பாக்களின் வழிததுணைபெற்று நாம் காணவல்ல ஊர்கள், அஞ்சில், அட்டவாயில், அம்பர், அரிசில், அரிமண வாயில், அரையம், அலைவாய், அழுந்தூர், அழும்பில், அள்ளூர், ஆமூர், ஆர்க்காடு, ஆலங்கானம், ஆலங்குடி, ஆலததூர், ஆவினன்குடி, ஆவூர், இடும்பில், இடைக்கழி நாடு, இடைக்காடு, இடையாறு, இரணியமுட்டம், இருந்தையூர், ஈர்ந்தூர், ஈழம், உகாய்க்குடி, உம்பற்காடு, உரோடகம், உறத்தூர், உறந்தை, ஊணூர், எயிற்பட்டினம், எருமைநாடு, ஏரகம், ஐயூர், ஒக்கூர், ஒல்லையூர், கச்சி, கச்சிப்பேடு, கடம்பின் பெருவாயில், கரும்பனூர், கருவூர், கழாத்தலை, கழார், கழுமலம், கள்ளில், காப்பியாறு, காமூர், காவிரிப்படப்பை, கானப்பேரெயில், கிடங்கில், கிள்ளி மங்கலம், குடநாடு, குடநதை, குடவாயில், குமட்டூர், குழுமூர், குறும்பூர், குன்றூர், கூடல், கூடலூர், கொடுகூர், கொண்கானம், கொற்கை, கோடிக்கரை, கோவலூர், கோவூர், சாய்க்காடு, சிறுகுடி, சிறைக்குடி, செங்கண்மா, செந்தில், செருப்பாழி, செல்லூர், சோணாட்டுப்பூஞ் சாற்றூர், தகடூர், தண்கால், தண்டாரணியம், தலையாலங்

கானம், தாமல், திருப்போர்ப்புறம், துளுநாடு, துறையூர், தேமுதுகுன்றம், தேனூர், தொண்டி, நாஞ்சில், நாலூர், நான்மாடக்கூடல், நியமம், நீடூர், நெய்தலங்கானல் நெல்லினூர், நேரிவாயில், பருவூர், பல்குன்றக்கோட்டம், பவத்திரி, பாடலி, பாமுளூர, பாரம், பிசிர், பிடவூர, புகார், புனல்நீர்நாடு, பூழி, பெருங்குன்றூர், பொறையாறு, போஒர், மதுரை, மருங்கூர்பபட்டினம், மழபுலம, மாங்காடு, மாங்குடி, மாடலூர், மாந்தை, மாவிலங்கை, மிழலை, முகாவனூடு, முசிறி, முத்தூறு, முளூர, மோகூர், மோசி, வஞ்சி, வல்லம, வலாஅர, வாகைபபறந்தலை, வாட்டாறு, வியலூர, விளங்கில், விரைமுன்துறை, வெண்ணி, வெளியம, வெளூர், வேமபற்றூர, வேமபி, வேலூர், வேளூர, முகலியனவாம அயிரி, ஆனபொருநை, கங்கை, காரி, காவிரி, சிலம்பாறு, சேயாறு, சோணை, பஃறுளி, பெண்ணையாறு, பெரியாறு, வையை முகலிய ஆறுகளையும், அதலைக்குன்றம், அயிரைநெடுவரை, இமயக் குன்று, ஏழில்நெடுவரை, கவிரம், குடமலை, குதிரைமலை, குமரிக்கோடு, குருகொடுபெயர் பெற்றமலை, கொலலி, கோடை, நவிரம், நன்ரு, நேரி, பரங்குன்று, பறம்பு, பொதியில், மாலிருங்குன்றம், முதிரம், வேங்கடம முதலாய மலைகளையும் நமக்கு அறியக் காட்டுகின்றன அப்பாக்கள். அதியர், அருவாளர், ஆரியர், ஆவியர், ஒளியர், ஓவியர், கொங்கர், கோசர், தொண்டையர, நந்தர், பரதவர், பூழியர், பொதுவர், மழவர், மோரியர், யவனர், வடுகர், வேளிர் முதலாம பலவேறு இனததார்தம வரலாறுகளையும் விளங்க உரைக்கின்றனர் அப்புலவாகள.

இவ்வளவு வரலாறுகள் விளங்கத் துணைபுரியும் பத்துப்பாட்டு எட்டுத்தொகையாகிய நூல்களுள் அடங்கிய பாக்கள், இரண்டாயிரத்து முந்நூற்று அறுபத்தொன் பதாம், இவ்வளவு பாக்களையும் பாடிய புலவாகள் எண்ணிக்கை, நானூற்று அறுபத்து எட்டு; இவருள், அக்கால அரசர்தம வரலாற்றினை விரித்துரைத்தார், நூற்று காற்பத்து நால்வரே.

இவ்வாறு பெருகிதிப் புதையலாய் விளங்கும் அப் பாக்களை அறிந்து பயன் கோடற்குமுன், அப்பாக்களைப் பாடிய புலவர்கள்தம் வரலாறுகளை அறிந்துகோடல் அமைவுடைத்தாகும். வரலாறுவிளங்கத் துணைபுரிந்த புலவர்கள், தம் வரலாறு உரைவழி வகுத்தாரல்லர், அவர் வரலாற்றினை அறியப் பெருந்துணையாய் நிற்பன, அவர்தம் பெயரும், அவர் பாடிய பாக்களுள் சிலவுமேயாம் அப் புலவாக்களைமந்த பெயர்களை நோக்கின், இயற்பெயர் இதுவென உணர்த்தி நின்றன சில, தந்தை பெயர் தெரிய வந்தன சில; தந்தை பெயரொடு தம்பெயரும் உணர வந்தன சில, உறுப்பான் அமைந்தன சில; ஊரான்வந்தன சில; ஊரும், பெயரும உணரவந்தனவும், ஊரும் தொழி லும் உணரவந்தனவும், ஊரும பெயரும், உற்ற தொழிலும் ஒருங்குணர வந்தனவும் சில, அவர் பாட்டிடை விளங்கும் அழகிய உவமையும், அரிய தொடருமே பெயராய் அமைந்தன சில, ஆதன், ஆந்தை, எயினன், கடுவன், கண்ணன், கீரன், குமரன், கொற்றன், சேவன், நாகன், பூதன் போலும பெயர்களைப் பெற்றுவந்தன சில, ஆக, இவ்வாறு, அவா வரலாற்றின் ஒரு பகுதி உணரத் துணை புரிவனவாதல விளங்கும். இப்புலவாகள்தம வரலாறுகளை நோக்கியக்கால், அவரிடையே, அரசராய் வாழ்ந்தார சிலரும, உழவு, நெசவு முதலாம் பல்தொழில் புரிந்து பயன்தருவார சிலரும், வணிகராய் வாழ்ந்து வளங்கொழித் தார் சிலரும விளங்கக் காணலாம்

இவ்வாறு வாழ்ந்து வழிகாட்டிகளாய் விளங்கிய புலவர் களின் வரலாறுகளை, அவர் பெயர்தத்துணையும் பாக்கள் துணையும்கொண்டு அறிவிக்க முன்வந்து,தனிநூலாக வெளி யிடத்தக்க விரிந்த வரலாறு உடையராகிய, கபிலர், பரணர், நக்கீரர், ஔவையார் ஆகியோர் வரலாறுகளைத் தனித் தனியே வெளியிட்டு, ஏனையோர் வரலாறுகளையும், "பெண் பாற்புலவர்கள்" "உவமையாற் பெயர் பெற்றோர்," "காவலபாவலர்கள்," "கிழார்ப் பெயர் பெற்றோர்," "வணிக ரிற்புலவர்கள்," "மாநகர்ப்புலவர்கள்-1, 2, 3," "உறுப்

பாலும் சிறப்பாலும் பெயர் பெற்றோர்,” “அதியன் விண்ணத்தனார், குட்டுவன் கண்ணனார்” என்ற பல்வேறு தலைப்பின்கீழ் விரித்துரைத்து விட்டு, எஞ்சுகின்ற மூப்பத்தொன்பது புலவர்கள் வாலாறுகளை உரைக்கும் இந்நூற்கு, அவருள், முதற்கண் நிற்பவராய பேயனார் பெயரே, பெயராக அமைந்துள்ளது.

கூறியநூல்கள் பதினொன்றினும், முதலநூலில், ஒருபுலவர் வரலாறும், 235 பாக்களின் பண்பும, இரண்டாம் நூலில் ஒரு புலவர் வரலாறும், 85 பாக்களின் பண்பும, மூன்றுவது நூலில், ஒருபுலவர் வரலாறும, 37 பாக்களின் பண்பும், நான்காவது நூலில், ஒருபுலவர் வரலாறும், 59 பாக்களின பண்புமு, ஐந்தாவது நூலில், 26 புலவாகள வரலாறும, 101 பாக்களின் பண்பும, ஆறுவது நூலில 22 புலவர்கள் வரலாறும், 50 பாக்களின் பண்பும, ஏழாவது நூலில் 28 புலவர்கள வரலாறும், 142 பாக்களின பண்பும, எட்டாவது நூலில 41 புலவாகள் வரலாறும, 159 பாகளின் பண்பும, ஒன்பதாவது நூலில், 28 புலவாகள் வரலாறும், 78 பாகளின் பண்பும, பத்தாவது நூலில, 30 புலவாகள் வரலாறும, 90 பாக்களின் பண்பும, பதினோராவது நூலில, 30 புலவாகள் வரலாறும, 104 பாகளின் பண்பும பன்னிரண்டாவது நூலில், 50 புலவாகள் வரலாறும், 92 பாக்களின் பண்பும, பதின்மூனறுவது நூலில், 25 புலவாகள் வரலாறும, 83 பாகளின் பண்பும, பதினான்காவது நூலில், 65 புலவர்கள வரலாறும், 548 பாகளின் பண்பும், பதினைந்தாவது நூலில், 80 புலவர்கள வரலாறும் 128 பாக்களின் பண்பும், பதினறுவது நூலில், 39 புலவர்கள் வரலாறும், 188 பாக்களின் பண்பும, ஆக, 468 புலவர்களின் வரலாறும், 2178 பாக்களின பண்பும ஓரளவு அறிந்து கூறபபட்டுள்ளன.

---

## க. பேயனார்

பேயனார் என்னும் பெயருடைராய இப்புலவர், முல்லை வளங்களை வனப்புறப் பாடுதலில் வல்லவராவர்; ஐங்குறு நூற்றின் ஐந்தாம் நூறுகிய முல்லைத்திணையைப் பாடியவர் இவரே; குறுந்தொகைக்கண் வந்துள்ள மூன்று செய்யுளும், நெடுந தொகைக்கண் காணப்படும் செய்யுளும அம்முல்லைத் திணைப்பொருள பற்றியே பாடப் பெற்றுளளன.

நாடுகாவல், நன்பொருள் ஈட்டல் முதலாயினகருதித தலைமகன் பிரிந்து போதலும், பிரிந்து சென்றுன் செல்லுங் கால் கூறிய உரையினைத் தேறி, தலைமகன் ஆற்றியிருத் தலும, வினைமுடிதது வருவான் வழியின் இன்பங்கண்டு வருநதிக கூறுவனவும் முல்லைத் திணைக்குரியவாம் இவற் றின் இயல்புகளை யெல்லாம் இனிதெடுத்துப் பாடியுள்ளார் புலவா. அவாகாட்டும் முல்லை நிலக்காட்சிகள் பலவாம்; அவை அனைத்தும் அறிந்து மகிழ்தல் எளிதில் ஆகாது; அவற்றுள் அங்கொன்றும், இங்கொன்றுமாகக் கண்டு களித்துச் செல்வோமாக.

பொருள் குறித்துப்போகும் தலைவன், கார்காலத்தொடக் கதமேத வருதல் உண்மை, ஆகவே கவலாது இருக்க எனக் கூறிச் சென்றுன்; அவன் உரையினைத தேறி, அவன் மனைவி யும் ஆறறியிருந்தாள் அவன் கூறிய பருவமும் வந்துவிட் டது, ஆயினும் அவன் வநதிலன்; அதனால் அவள் வருததம் மிகுநதது, வருந்தியிருப்பாள் முன்வநது நின்றுன் பாணன்; அவள் துயர் போகுமாறு சில உறுதிகளைக் கூறத் தொடங் கினன்; அவன் பால், "பாண! சென்ற நின்தலைவர், என்னை மறநது விட்டார், என்பால் அவருக்கு அன்பும் இல்லை; ஆகவே, அவர் என்பொருட்டு இவண்வாரார்; அதற்காகவும் யான் வருந்துகின்றேனல்லேன்; தாம் கூறிய சொல் பொய்த்துப் போதலைக் கண்டும் அவர் நாணுமை கண்டே யான் பெரிதும் வருந்துகின்றேன்" என்று கூறித் தன் துயரினும், தலைவன் சொற் பிழைத்தலால் உண்டாம்

துயரே பெரிதாம் எனக்கருதும் பெருந்தகையாள் ஒருத்தியைப் பாடியுள்ளார் புலவர் :

"கைவல் சீறியாழப் பாண! நுமரே
செய்த பருவம வந்து நின்றதுவே;
எமமின் உணராராயினும, தம்வயின்
பொய்படு கிளவி நாணலும்
எய்யாராகுதல் நோகோ யானே." (ஐங் சௌ உ)

காப்பருவம வந்துற்றதாகவும காதலா வநதிலரே எனக் கலங்கும் தலைவியின் நிலையினைக் கண்டாள தோழி. தலைவி தன்துயர் கருதி அழுகின்றாளல்லள், தலைவன் சொல் பிழைபட்டமை குறித்தே பெரிதும் அழுகின்றாள என் பதை உணர்வாள் அவள், ஆகவே, தலைவியின் துயர்போக்க விருமபிய அவள் தலைவன் பிழைபட்டிலன் என்பதைப் பொய்யாகவாவது அவள் உளங்கொள்ளுமாறு உணர்த்தத் துணிநதாள்; அவள்பால் சென்றாள். "தோழி! பொருள் தேடிப்போயுள்ள நின் தலைவர் நின்பால்பேரனபுடையராவர் அவர் நின்னழில் கெடக் கண்டு நிற்பாரல்லா, அவா, தாம் கூறிய சொற் பிழையாது வந்து சேர்தல உறுதி, கொன்றை மாலைபோல் மலர்நதுள காட்சியைக் கண்டு மருண்ட நின் உள்ளம், இதைக்கார்காலம் எனப் பிறழக் கொண்டுவிட்டது; உண்மையில் இது கார்காலமன்று, கார்காலம் இன்னமும் தொடங்கிற்றில்லை; கொன்றை மலர்ந்தது கார்காலம் வந்து விட்டமையால் அன்று; கார்காலம் தொடங்குவதற்கு முன்னரே, அறிவில்லாத மேகம் மழைபெய்து விட்டது; காலமல்லாக் காலத்தே பெய்த இம்மழையைக் கார்காலத்து மழையெனப் பிறழக் கொண்ட கொன்றையும மலர்ந்து விட்டது; இதுவே உண்மை; ஆகவே, இதைக் கார்காலம் எனப் பிறழக்கொண்டு புலம்புவது ஒழிக, தலைவர் அக்கா லத்தே நில்லாது வந்து அன்புசெய்வர்" என்று கூறித் தேற்றினாள்; தலைவன் வரும் காலமே, கார்காலம்; அவன் வருதற்கு முன்வரும் அக்காலம், உண்மைக் கார்காலமன்று என உரைக்கும் உறுதியுள்ளம் உடையாளாய தோழியை யும் பாடியுள்ளார் புலவர் :

"ஏதில பெய்ம்மழை காரென மயங்கிய
பேதையங் கொண்றைக் கோதைகலை நோக்கி
எவன் இனி மடந்தை நின் கலிழவே? நின்வயின்
தகை எழில் வாட்டுந ரல்லர்:
முகை அவிழ்புறவின் நாடிறந்தோரே." (ஐங: சசுஉ)

தனிததுறையும் தலைவியின் துயா நிலை கண்ட பாணன், அவள் துயர் போக்க எண்ணினான்; உடனே, தலைவன தங்கும் பாசறை நோக்கிச் சென்றான்; ஆங்கு அவனைக் கண்டு, அவள் துயரெலாம் எடுதது க் கூறினான், அதைக் கேட்டும, வந்தவனை முடியப்பெறுமையால், தன்னூர் செல்ல எண்ணினனல்லன், தலைவன் செயல் பாணன் உளதது சினம் எழச செயதது, மனைவி, மனத்துயர் கொண்டு மனையின்கண் மடிந்திருப்பவும், விரைந்து மீள எண்ணுது விடனையே கருதியிருக்கும .இவன் பண்புடையானலலன் எனத் துணிந்தான், உடனே தலைவனை நோககி, "தலைவ! நினபால் பாடிபபிழைக்கும பாணனும அலலேன் யான், எனக்குப பொருள அளிதது ப புரக்கும் தலைவனும் அல்லன் நீ" என வெறுத்துக்கூறி வெளியேறினான், பாடிப் பிழைப்பதத தன தொழில் என எண்ணுது, தனக்குப் பொருள் அளித்துப புரக்கும் தலைவன, பண்புடையனதலும வேண்டும என விரும்பும் பாணனையும் பாடியுளளார் புலவா:

"நினகுயாம் பாணரும் அலலேம்; எமககு
நீயும் குருதிலை அல்லை மாதோ;
நின்வெங காதலி தன்மனைப் புலம்பி
ஈரிதழ் உணகண உகுத்த
பூசல் கேட்டும் அருளா தோயே" (ஐங: சஅ0)

பாணன் வழியாய்த் தலைவியின் துயர்நிலையினை அறிந்த தலைவன், விரைவில் முடித்துக்கொண்டான்; வீடுநோக்கிச் செல்ல எண்ணிய அவன் உள்ளம் மிகமிக விரைந்தது; அவன் தேரிற்பூண்ட குதிரைகள் உள்ளம்போல் உற்றுழி உதவும் உரனுடையன; தேர்ப் பாகனும் நெறியறிந்து ஓட்டும் நல்லறிவுடையான்; ஆகவே,

அவன் தேர் குறித்த காலத்தே காதலி ஊர் சென்று நிற்றல் உறுதி ; இதை அறிவான் தலைவனும் ; ஆயினும், அவளைக் காணத் துடிக்கும அவன் உள்ள வேட்கை மேலும் விரைந்து செலல விரும்பிற்று, அவ்விருப்பம அவன் உள்ளத்தே நிறைந்து நிற்கும அருளையும் மறக்கச் செய்தது, தேர்ப்பாகனைப் பார்த்து "கொல் கொண்டு குதிரைகளைக் குதித்து விரைந்து செலுத்தும்" என்று வேண்டினான், என்னை அவன ஆர்வம ஆவமிகுதியால அருளையும் மறக்கும் மனமாண்புடையனைய தலைவனையும் பாடியுள்ளார் புலவர்

"செயிழை மாதரை உள்ளி நோயவிட
முள்ளிட்டு ஊடாமதி வலவ! நின்
புள்ளியற கலிமாப பூண்ட மேரே." (ஐங் ச்அக)

தலைவன் உள்ளம அறிந்தான பாகன, உள்ளவழியே ஓட்டிச் செல்லின விரைவில் ஊர் அடைதல இயலாது என்பதை உணர்ந்தான் குறுக்குவழி காணத தூண்டிற்று அவன் உள்ளம. அவ்வாறே பருகைகளை நிறைந்த மேட்டுநிலம என்று எண்ணுமல, தேரை விரைந்து ஓட்டினான, தேரும், அவன்னிலமும பிளந்து வழிவிடப பாய்ந்தோடி வந்தது, இவ்வாறு அவன கண்ட புதுவழி ஓடிய தேர், குறித்த பருவத்திற்கு முன்னரே தலைவியின் மனைமுன் வந்து நின்றது, கண்டான தலைவன், சிறிது கழித்து வந்திருப்பினும, தலைவியை உயிரோடு கண்டிருத்தல் இயலாது என்பதை உணர்வானவன், உடனே பாகனை அன்பொழுகத தழுவிக்கொண்டான், "பாக! இன்று இவண் தேரைமட்டும கொண்டுவந்து சோத்தனை அல்லை, என் ஆருயிர்த தலைவியையும் அன்றே கொண்டு சேர்த்தனை" எனப் பாராட்டி மகிழ்ந்தான், இந்தக் காட்சியையும் காட்டுகிறார் புலவர் :

"நன்றுபுரிந் தெண்ணிய மனததை யாகி
மூரம்பு கண்ணுடைய ஏகிச், சுரம்பைப்
புதுவழிப் படுத்த மதியுடை வலவோய்!
இன்று தந்தனை தேரோ?
நோய்உழந் துறைவியை நல்கலானே." (குறுந் : ச00)

தலைவனும், தலைவியும் மகிழ்ந்து மணையறம் நடத்து கின்றனர்; ஒருநாள் மாலைக்காலத்துப் பசுவெண்நில வொளி விளங்கும் மாடத்து மேலிடத்தே, குறுகிய கால்களையுடைய கட்டில்மீது போடப்பட்டுள்ள நறுமணம் நாறும் மலர் தூவப்பெற்ற படுக்கையில் அமர்ந்திருக்கும் தலைவன், ஆசைப்பெருக்கால் பெருமூச்சுவிட்டுத் தன் அன் பிற்குரிய மகளை ஆரத்தழுவி நின்றான்; அங்கிலையில் ஆங்கு வந்த தலைவி, தலைவன் தோளை அன்பொழுகத் தழுவி நின்றாள்; இந்தக் காட்சியைக் கண்டாள் தோழி; பாகனை அழைத்து, அக்காட்சியை அவனுக்கும் காட்டி அகமகிழ்ந் தாள்; அழகிய இக்காட்சியைத் தோழிவாயிலாக நமக்கும் காட்டிக் களிமகிழ்வூட்டுகிறார் புலவர்

"கணடிசின் பாண! பணபுடைத் தம்ம;
மாலைவிரிந்த பசுவெண நிலவில்
குறுங்கால் கட்டில நறும்பூ சேககைப்
பள்ளி யானையின் உயிர்தகனன், நசையின்
புதல்வன் தழீஇயினன் விறலவன்;
புதல்வன்தாய் அவன்புறங் கவைஇ யினளே."

(குறுந்: நடுகூ)

புலவர் பேயனார், அக்கால மக்கள்தம் செல்வச் சிறப் பினையும், அச்செல்வத்தை உடையார்தம் சீரிய பண்பாட் டினையும் சிறக்க உணர்ந்தவராவர்; கவலைக்கிழங்கு தோண்டி யெடுத்தலால் உண்டாய குழிகளில், கொன்றை மரத்தின் பொன்னிறப் பூக்கள் உதிர்ந்து கிடக்கும் காட்சி, செல் வர்தம் மனையிடத்தேயுள்ள பொற்காசுகள் நிறைந்துள்ள பெட்டி வாய்திறந்து கிடப்பதுபோலும் எனக் கூறும் உவமை, தமிழர்தம் செல்வவாழ்வின் சிறப்பினை உணர்த்தி நிற்றல் காண்க.

"கவலை கெண்டிய அகல்வாய்ச சிறுகுழி
கொன்றை ஒள்வீ தாஅய்ச, செல்வர்
பொன்பெய் பேழை மூய்திறந் தன்ன
காரெதிர் புறவு."

(குறுந்: உகூக)

தலைமகள் ஒருத்தியைப் பாராட்டும் புலவர், அவள் தந்தை அறிவு, ஒழுக்கங்களால் உயர்ந்து தோன்று வார்க்குப் பொன்னையும் பொருளையும் நீரொடு வழங்கி எஞ்சியவற்றையே தம் பொருளாக் கருதுவன். அவன் தன் மனைநோக்கி வருவார் எவர்க்கும் இல்லையென்று கூறாமல் சோறிட்டுப் புரக்கும் பேருள்ளம் உடையன் எனப் பாராட்டி அக்காலச் செல்வர் தம் பகுதது உண்டு பல்லுயிர் ஓம்பும் பண்புடை வாழ்வினராவர் என்பதை விளக்கி யுள்ளார்

> "உயர்ந்தோர்க்கு
> நீரொடு செறிந்த மிசில், யாவாக்கும்
> வரைகோ ளறியாச் சொன்றி
> நிரைகோல் குறுந்தொடி தந்தை." (குறுந்: உகூ)

## உ. பேயார்

பேயார் எனும் இப்பெயர் இவர்க்கு வருதற்காம் காரணம் விளங்கவில்லை. "கறைப்பல் பெரு மோட்டுக் காடு கிழவோள்," எனும் வெண்பாவை மேற்கோள் காட்டி, "இது பூதத் தாழ்வாரும், காரைக்காற் பேயாரும் பாடியது," எனக் கூறும் யாப்பருங்கல விருத்தியுரையினை எடுத்துக் காட்டி, "அவரும், இவரும் ஒருவரோ, வேறோ, யாதும் புலப்படவில்லை," என்று எழுதுவர் சில ஆசிரியப் பெருமக்கள்; யாப்பருங்கல உரையால், பேயார் எனும் பெயருடைப் புலவர் பிற்காலத்தும வாழ்ந்தார் எனக் கொள்ளலாமேயன்றி, அவரை, இவரோடு ஒற்றுமை காணல் எவ்வாற்றானும் பொருந்தாது. இவர் பாடிய பாட்டொன்று குறுந்தொகைக்கண் இடம் பெற்றுளது.

காடழிதது நாடாக்கும கானவர், அக் காட்டு மரங்களை அழித்து எரிதலின் எழுந்த புகை, அம மரங்களிடையே அகிலும் சேர்ந்துள்ளமையான், மணம் நிறைந்ததாகி எழுந்து, பரந்துசென்று, அக் காட்டை அடுத்துள்ள அக் கானவர்தம சிற்றாரீது படியும் எனக் குறிஞ்சிநிலப் பண்பினைப் படம பிடிததுக் காட்டும் புலவர், அவ்வாறு எழுந்த புகை வெண்ணிறம் பெற்றுள்ளமையான், நீர் அற்ற வெண்மேகம்போல் தோன்றும் என அழகிய உவமையினையும் அமைத்துப் பாடியுள்ளார்.

"நறை அகில் வயங்கிய நளிபுன நறும்புகை
உறை அறு மையின் போகிச சாரல்
குறவர் பாக்கத்து இழிதரும் நாடு." (குறுந்: ஙஙக)

———

## ஈ. பேராலவாயர்

மதுரையில், சொக்கப்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலுக்கு ஆலவாய் என்பது பெயர்; அதனால், ஆங்குக் கோயில்கொண்டிருக்கும் பெருமானுக்கு ஆலவாயர் என்பது பெயராம். சிவபெருமான், நக்கீரரோடு வாதாடவேண்டி, ஒரு புலவர் உருத்தாங்கி வந்த பொழுது தம பெயர் யாது என்றார்க்கு எம்பெயர் பேராலவாயர் என்று கூறியதாகத் திருவிளையாடல் கூறும். அவ்விறைவனுக்குரிய இப் பெயரே, நம் புலவர்க்கு இயற்பெயராயிற்று இவர், பிற ஊர்களிற் பிறந்து, மதுரை போந்து வாழ்ந்தாரைப் போலல்லாமல், மதுரையிலேயே பிறந்து வாழ்ந்தவர், ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் காலத்தே வாழ்ந்தவர்; அவனுக்குரிய வையை யாறு, கொற்கைத்துறை, மதுரைத் தலைநகர் ஆகியவற்றைப் பாராட்டியுள்ளார்; அவன் இறந்தனனெனத் தீப் புகுந்த அவன் மனைவியாகிய பெருங்கோபெண்டு தீப பாய்தல் கண்டு வருந்தியுள்ளார்.

வையை, மணம் நாறும் மலர்களால் மாண்புறும் மலர்ச் சோலைகளைத் தன் இருபாலும் கொண்டது, பெருநீர் உடையது என்றும், கொற்கைத்துறை, மீன் கொணர எண்ணிக் கடல்மேல் சென்ற பரதவர், அம் மீன்களோடு கொண்ட முத்துச் சிப்பிகளைக் களஞ்சிற்கு விற்கும் வளமையால் நிறைந்த புகழ் உடையது என்றும், செழியன், வெற்றி தரும் வேற்படையாலும், பெரிய யானைப்படையாலும், நெடிய தேர்ப்படையாலும் புகழுடையோனவன் என்றும், கூடல் எனப் பெயருடைய மதுரை மாநகர், மலை போல் உயர்ந்து தோன்றும் மாட வரிசைகளையுடையது என்றும் பாராட்டியுள்ளமை காண்க.

> "நெருநையும் கமழ்பொழில் துஞ்சி, இன்றும்
> பெருநீர் வையை அவளொடு ஆடி."

"பன்மீன் கொள்பவர் முகந்த இப்பி
காரரி நறவின் மகிழ்நொடைக் கூட்டும்
பேரிசைக் கொற்கைப் பொருநன் வென்வேல்
கடும் பகட்டியானை நெடுந்தேர்ச செழியன்
மலைபுரை நெடுநகர்க் கூடல்." (அகம்: ஒகசு)

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் இறந்தானாக, அவன் பிரிவுத்துயரால் வருந்தி வாழ எண்ணாது, அவனோடு உடன் உயிர் துறக்க எண்ணிய அவன் மனைவியும், பேரிசைப் புலமை யுடையாருமாய பெருங்கோப் பெண்டினைத் தீப் பாயாதிருக்க வேண்டிய சான்றோர்களுள் பேரால வாயரும் ஒருவர்; அவள் அவர் சொற் கேளாது தீப் பாய்ந்த கொடுங்காட்சியினைக் கண்டு கலங்கிப் பாடியும் உள்ளார்.

காட்டினகததே அமைந்த காடுகிழாள் கோயில்முன், அவள் தீப் பாய்தற்காம் பெருந்தீ எழுப்பப்பட்டுளது, அதைக் கண்டார் அப் புலவர்; அதே கோயில்முன், அக் காட்டுவாழ் மக்கள், தங்கள் பழகிய யானைகள் கொண்டுவந்து கொடுத்த விறகினுல் மூட்டிய தீயினைக் கண்டவர் அப் புலவர்; அத் தீயினைக் கண்டவழி எழுந்தது மகிழ்ச்சி; இத் தீயினைக் காணும்வழி எழுவது கலக்கம்; அத் தீயின் ஒளியில், காட்டுக் கொடுவிலங்குகளுக்கு அஞ்சி வரும் மானினங்கள், தம் அச்சம் நீங்கி உறங்கியதையும், அவ்வாறு உறங்கிய அவற்றிற்கு, அத் தீயால் துயர் உண்டாம் என அஞ்சிய குரங்குகள், அந் நெருப்பை அழித்ததையும் கண்டு களித்தவர்; துஞ்சும் மானினங்கட்குத் துயர் உண்டாகா முன்னமே, துயர் உண்டாகிவிடுமோ என்ற எண்ணம் உடையபோல், அத் தீயை அழித்த அக் குரங்குகளின் மனப்பண்பினை வியந்து நிற்கும் காலத்தே, பெருங்கோப்பெண்டு, புனலாடிப், புனலாடியநீர் மயிர்வழி ஒழுக, அப் பெருங்காடு நோக்கித் துயர்நிறை உளத்தளாய் மெல்லென அடியிட்டு வருவதைக் கண்டார்; அவள், அரசன் வாழ்ந்த காலத்தே அரண்மனையிடத்தே வாழ்ந்த அன்புவாழ்க்கையினை அறிந்து மகிழ்ந்தவர் நம் புலவர்;

அக்காலை, அரசன் சிறிதுபொழுது பிரிந்திருப்பானெயினும், அச்சிறு பிரிவினையும் தாங்கமாட்டாது, இளமை உணர் வாம் காமநோயால் வருந்தி வாடும் இயல்பினள் அவள்; அத்தகைய மென்மையுடையாள், கணவனைப் பிரிந்து, கலக்கமுற்றுக் கால் கடுகக், காடுகிழாள்முன் அமைந்த பெருந்தீ நோக்கி வருவதைப் புலவர் உள்ளம் காணமாட் டாது கலங்குவதாயிற்று, மானினம் பிழைக்க, மரதிகள் அந் நெருப்பினை அழித்தனை, ஆனால், நமமால் ஓர் அரச மாதேவியின் உயிரைக் காக்க இயலவில்லை; அவள் அந் நெருப்புட் புகுந்து மடிந்து மறைவதைக கண்டு நிற்கின் றோம! என்னே நம் மாண்பு! என்றெல்லாம எண்ணி வருந்தினர், அவ வருந்தம் ஒரு பாட்டாக வெளிவந்தது.

யானை தந்த முளிமர விறகில்
கானவர் பொத்திய தெவிழ் விளககத்து
மடமான் பெருநிரை வைகுதுயில் எடுப்பி
மரதி சீக்கும அணங்குடை முன்றிலின்
நீவார் கூரதல் இருமபுறம் தாழப்
பேரஞாக கண்ணள பெருங்காடு நோக்கித்
தெருமரும் அம்மதானே, தன்கொழுநன்
மூழவுகண் துயிலாக் கடியுடை வியன்நகர்ச்
சிறுநனி தமிய ளாயினும்
இன்னுயிர் நடுங்கும் தன்இளமை புறங்கொடுத்தே."

(புறம்: உசஎ)

வென்று மீளும் வீரர்களை வரவேற்க, ஊரில் உள்ளார் கால்பல நட்டுப் பசுநதழை வேய்ந்து பந்தர் அமைப்பதும், ஆங்கே உள்ள பழ மணல் மாற்றி, நீர் கொழிக்கும் புது மணல் கொணர்ந்து பரப்புவதும், வருவார்க்கு வழங்க மதுவையும் ஆட்டிறைச்சியினையும் ஆங்கே சேர்த்து வைப் பதுமாய வரவேற்புவிழாக் காட்சியை நம் புலவர் இக்கால மக்களும் கண்டு களிக்குமாறு காட்டுகிறார்.

"நறவும் தொடுமின்; விடையும் வீழ்மின்;
பாசுவல் இட்ட புன்காற் பந்தர்ப்
புனல்தரு இளமணல் நிறையப் பெய்ம்மின்."

(புறம்: உசஉ)

பண்டைத் தமிழகத்தில் வழியகத்தே அமைந்த ஊர்கள், பகைவர் படைகளாலும், ஆறலை கள்வர்களாலும் பலகாலும் தாக்குறுவதால் வறுமையுற்று அவ்விடங்களில் புல்வேய்ந்த குடிசைகளே காணப்படுவதையும் அவர்கள் வீட்டின் முன்பக்கத்தே தொங்கும் தயிர் கடைந்துவிட்ட மத்தினை ஆண்டுக் கட்டப்பெற்றுள்ள கன்று நக்கிநக்கிச் சுவைப்பதையும், வறுமையுற்ற காலத்திலும் வந்து தங்குவாக்கு வாழ்வளித்து அனுப்புவதையும் ஆங்கு வாழும் மக்கள் விடியற்காலத்தே, கோழி முதற் குரல் எழுப்பியவுடனே எழுந்து வினைமேற் செல்வதையும் புலவர் பாரதத்துப் பழகியவா ஆதலின், அவற்றின் இயல்பு குன்றுவாறு எடுத்துக்காட்டியுள்ளார்

> "தீந்தயிர் கடைந்த கிரள்கால் மத்தம்
> கன்றுவாய் சுவைப்ப முனறில் தூங்கும்
> படலைப் பந்தர்ப் புலவேய் குரம்பை
> நல்கூர் சீறார் எல்லித் தங்கிக
> குடுமி நெற்றி நெடுமரச சேவல்
> தலைக்குரல விடியல போகி." (அகம்: அஎ)

காடுகளில், ஆறலைத்து வாழும மறவர்கள், அக்காட்டினகத்தே கற்களால் அரண அமைத்து வாழ்வர், ஆண்டு அவர் எழுப்பும் பறையொலி, அவ்வழிச் செல்வார்க்கு அச்சத்தை விளைக்கும் என அவர கூறும் காட்டரண் அமைப்பும், நாட்டில் செல்வர தம் மாளிகைகளில் விடியும் வரை விளக்கொளி விளங்கும் எனக்கூறும் நகரச் சிறப்பும் நாம் அறிந்து பாராட்டற்குரியனவாம்:

> "கடுங்கண் மறவர் கல்கெழு குறும்பின்
> எழுந்த தண்ணுமை இடங்கட் பாணி
> அருஞ்சுரம் செல்வோர் நெஞ்சம் துண்ணென."
> "வைகுசுடர் விளங்கும் வான்தோய் வியன்நகர்."
> (அகம்: அஎ)

தலைவன் தேர் வரக்கண்ட தலைவி, விருந்தயர் விருப்பினளாயினள் என (நற்: ஙூசுக) அவர் கூறும் பாட்டு படித்து மகிழ்தற்குரியதாம்.

## ச. பொத்தியார்

கோப்பெருஞ் சோழனின் உயிரொத்த தோழர்களுள் பொத்தியாரும் ஒருவர். உறையூர்க்கண் இருந்து ஆட்சி புரிந்த சோழவேந்தருள் கோப்பெருஞசோழன், அறிவு நலமும், ஆட்சி நலமும் ஒருங்கே அமையப்பெற்றவன்; பெரும்புலவனுய்க், கண்ணகனுர், கருவூர்ப் பெருஞசதுக் கத்துப் பூதநாதனுர, பிசிராந்தையார், புல்லாற்றூர் எயிற் றியனுர, பொத்தியார் போன்ற புலவர் பெருமக்கள் போற்ற வாழ்ந்தவன். மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்ன மானம் உடையவன். தன் வயிற்றுதித்த மக்கள தகாவொழுக்கத்தினராய்த் தன்மீதே போர் தொடுத்துப் போந்த பழிசசெயல் நாணி, வடக்கிருந்து உயிர்நீத்தவான் புகழ் உடையவன். இத்தகையானின் உயிர்நண்பராம் உரிமைபூண்டு, அவன் புகழையும், அவன்தன் ஆருயிர் நண்ப ராகியபிசிராந்தையாரையும், அவரும அவனும மேற்கொண் டிருந்த உயிர் ஒன்றிய நட்பின் பெருமையினையும போற்றிப் பாராட்டி, அவரோடு வாழ்ந்து அவர் வடக்கிருந்து உயிர் விட்டாராக, அவரை இழந்து தாம் மட்டும வாழ எண் ணுதது, அவர் இறந்து நடுகல்லான இடத்திற்கு அணித்தே வடக்கிருந்து உயிர்விட்ட உயர்ந்தோராவர். "கோப் பெருஞ சோழனுக்கும், பிசிராந்தையார்க்கும போல உணர்ச்சியொப்பின், அதுவே உடனுயிர் நீங்கும உரிமைத் தாய நட்பினைப் பயக்கும்" (குறள்: எஅநு: பரிமேல்) என உயர்ந்த நட்பினர்க்கு எடுத்துக்காட்டாக, உயர்ந் தோரான் காட்டப்பெறும் பெருமைவாய்ந்த பிசிராந்தை யாரே, பழியின் நீங்கிய பெருநண்புடைய பொதியார் "பொத்தில் நண்பின் பொதி" (புறம உகஉ) எனப் போற்றுவராயின், பொத்தியார்தம் புகழினைப் போற்றவும் வேண்டுமோ?

குணங்களால் நிறைந்த குன்றென வாழ்ந்தவன் கோப்பெருஞ்சோழன். அத்தகையான் உயிர்நீத்துக்கிடக்

கும் வீலியினைக் கண்ட புலவா பொத்தியார் உளத்தே, அவன் புகழ் எல்லாம் தோன்றித் துயர்வினைத்தன; ஈதலும் இசைபட வாழ்தலுமே, உயிர்க்கு ஊதியமாம் எனக் கொண்டு பாடிவருவார்க்கெல்லாம் பெரும் பொருள் வழங் கும் வள்ளன்மையும், கூதகரும், விறலியருமாய் வந்து ஆடி மகிழ்விப்பாரபால் காட்டும் அன்புடைமையும் அவன்பால் பொருந்தியிருந்தன, அறநூல் துறைபோய அறிஞர்களும் புகழுமாறு அரசியல் நடாத்தும் செங்கோற் சிறப்புடை யவன், புலவர் புகழ்ந்த பெருநட்புடையவன், மகளிர்பால் மென்மையும், வீரரபால் வனமையும் உடையான், நான் மறையுணர்ந்த நல்லோர்க்குப் புகலிடமாம் பெருமை யாளன், இவ்வாறு பல்லோர் புகழும் நல்லோனுய் நாடாண்ட நண்பனைக் கொண்டுசென்றனனே கூற்றுவன் என எண்ணினர் புலவர், அக் கொடுஞசெயல் புரிந்த கூற் றுவன்பால் கோபம் மிக்கு எழுந்தது, தன்னைப்போன்றே அவனை இழந்து வருந்தும புலவாகளையும், பாணர்களையும ஒருங்கு அழைத்து, "நாமும, நம் சுற்றமும் வருந்த, இவன் உயிரைக் கொண்டுசென்ற கூற்றுவனை வருததல் நம்மால் இயலாது ஆயினும் வாயார வைதலையாவது புரிவோம், வம்மின் புலவீர்!" என்று கூறி வருந்தினர்.

"பாடுநர்க்கு ஈத்த பல்புக ழன்னை,
ஆடுநர்க்கு ஈதத பேரன்பினனை;
அறவோர் புகழ்ந்த ஆயகோ லன்னை;
திறவோர் புகழ்ந்த நிணநண் பினனை;
மகளிர்சாயல், மைந்தாக்கு மைந்து;
தகளறு கேள்வி உயாந்தோா புக்கில்;
அனையன் என்னுது, அத்தக கோனை
வினையாக் கூற்றம் இன்னுயிர் உய்த்தன்று;
பைதல் ஒகல் தழீஇ அதனை
வைகம் வம்மோ! வாய்மொழிப் புலவீர்!"

(புறம் : உஉக)

கோப்பெருஞ்சோழன், இறப்பதற்கு முன்னர், தன் அருகிருக்கும் ஆன்றோர்பால் "ஐயன்மீர், என் பெருநண்பர்

பிசிராந்தையார் வருவர்; அவர் வடக்கிருத்தற்காம் இடத்தை எனக்கு அணித்தே ஆக்கித் தாருங்கள்" என்று வேண்டினன்; அதுகேட்ட அவர்கள், "ஐய! பல்லாண்டு பழகிய நண்பரும், இங்கிலையில் நேரில்வருவது அரிது; பிசிராந்தையாரோ, சேணெடுந்தூரத்ததாகிய பாண்டிநாட்டின்கண் உள்ளார்; அவரும் நின்னைக் கேளாவிவழியான் அறிந்தவரேயன்றி நின்னோடு நேரிற பழகியவரலலர். அத்தகையார், இங்கிலையில் ஈண்டு வருதல் அரிதினும் அரிதே" என்று தெரிவித்தனர். அவ்வாறு அவர் கூறக்கேட்ட அவன், "ஐயன்மீர்! ஆந்தையார் பாண்டிநாட்டுப் பிசிர் எனும் ஊரினரேயாயினும், அவர் உயிரை விருமபும் உண்மை நண்பராவர், தனது பெயரைச் சொலலுமிடத் தெல்லாம, என்னின் வேறலலர் என்பது விளங்க, என் பெயரைத தன் பெயராகக்கொண்டு "என பெயர் கோப் பெருஞ்சோழன்" எனறே சொலலுவர் அததகையார் தம் நட்புத திரிந்து என்னை இகழ்ந்து ணர்டு வாராதிரார்; யான் அரசச்செல்வத்தே சிறபபுறறிருந்த காலததே வந்து என்னைக் கண்டதிலராயினும, யான் அல்லலுறும இக் காலததே வந்து காணகிரார், அவர் நிலலாது வருவர்; ஆகவே, அவர்கரு ஓர் இடம ஒழித்துத தருக" என்று கூறி உயிரவிட்டான; அவனைச சூழ இருந்த சான்றோர்கள் அவன் பிரிவால உண்டாய துயரினை ஒருவாறு தேறி, அவனுக்கு நடுகல நிறுவுதலும புரிந்துவிட்டனர். சின்னாட்கள கழிதற்கு முன்பே பிசிராந்தையார் கோப்பெருஞ் சோழன் கூறியவாறே அவண் போந்து, அவன் நிலைகண்டு கண்ணீர்விட்டுக் கலஙகித் தாமும் வடகிருந்து உயிர் நீத்தார்.

பார்ததுப் பழகியறியாத ஒருவர் நில்லாது வருவர் எனச் சோழன் துணிந்துகூறிய கூற்றும், அச்சொல் பழுதாகாவண்ணம் அவண் வந்து சேர்ந்த பிசிராந்தையார் பேரன்பும், சோழன் நடுகல்லைச் சூழஇருந்த புலவர்க்குப் பெருவியப்பாயின; புலவர் பொததியார் அவர் செயலை வியத்தலோடு, அவரை வாயாரவும் வாழ்த்தினர்:

"நினைக்கும் காலை மருட்கை உடைத்தே,
எனைப்பெருஞ் சிறப்பிலெனு ராங்கு துணிதல்,
அதனினும் மருட்கை உடைத்தே, பிறன்நாட்டுத
தோற்றம் சான்ற சான்றோன் போற்றி
இசை மரபாக, நட்புக் கந்தாக,
இனையதோர் காலை ஈங்கு வருதல்,
வருவன் என்ற கோனது பெருமையும்,
அது பழுதின்றி வந்தவன் அறிவும,
வியதெறும, வியதெறும வியப்பிறந்தன்றே"
(புறம் · உகஎ)

பொத்தியார், சோழனைச் சூழ இருந்த பிற சான்றோர்களைப் போன்றே, தாமும அவனோடு வடக்கிருந்து உயிர் விடத் துணிந்தார; ஆயினும, அவன் அதற்கு இசைந்தானல்லன; பொதியார மனைவி, அக்காலைக் கருவுறறிருந்தனர. மனைவி கருவுறறிருக்கும் காலத்தே, அவளைத் தனியே வருந்தவிடுதது உயிரவிடுதல உயாந்தோர ஒழுகக மன்று என உட்கொணட உரவோனதலின, அரசன, அவரை அந்நிலையில் வடக்கிருந்ததலைத தடுதது, "புலவீர! நின்னைவிட்டு நீங்கா நிழலபோல நினனை விரும்பி வாழும் நின் மனைவி, புகழசால புதலவனைப் பெறறபின் வருக!" எனக் கூறினர; அரசன அனபுடன் கூறிய அச்சொல்லை மறுக்கமாட்டாப் புலவா பொதியார, ஊர் நோக்கிச் சென்றார; ஊருட் புகுந்த அவர, அங்கே, அரசன் வழக்கம் போல அமாந்து ஆட்சிபுரியும் மன்றத்தை நோக்கினார; அரசனையின்றிக் கண்ட அமமன்றக் காட்சி புலவாக்கு மனக்கலகத்தை உண்டாக்கிற்று, தன் யானைக்கு வேண்டும் பெருஞ் சோற்றினை நாள்தோறும் பெருமபாடுபட்டுச் சோதது அதை உண்பித்து, இவ்வாறு பல்லாண்டு புரந்து, அதைப பெரிதாக்கிக் கண்டு மகிழ்ந்த யானைப்பாகன் ஒருவன், ஒருநாள் தன் யானை இறந்துவிட்டதாக, அது கிடந்த இடமவிட்டுச் செல்வோன், இடைவழியில், அவ் யானையைக் கட்டப்பெறும் கூடதத்தினையும், அதன்கண், யானை கட்டப்பெறுமையால் வறிதே கிடக்கும கம்பத்தினையும் கண்டு, கண்கலங்கி நின்று பெருந்துயா உறுமாறுபோல் பெருந்துயருற்றார் பொத்தியாரும்.

"பெருஞ்சோறு பயந்து, பல்யாண்டு புரந்த,
பெருங்களிறு இழந்த பைதற் பாகன்
அதுசேர்ந்து அல்கிய அழுங்கல் ஆலை
வெளில் பாழாகக் கண்டு கலுழ்ந்தாங்கு
கலங்கினேன் அல்லனோ யானே, பொலந்தார்த்
தேர்வண கிள்ளி போகிய
பேரிசை மூதூர் மன்றம் கண்டே" (புறம்: 260)

இவ்வாறு வருந்தி வாழ்ந்தார் சின்னாள், அவர் மனைவியாரும், மகனைப் பெற்றெடுத்துவிட்டார், உடனே, அரசன் வடகிருந்த இடம நோக்கி விரைந்தார், ஆண்டு, அவர் வருகையினை எதிர்நோக்கி, அவர்க்கு என ஓர் இடம் ஒதுக்கியிருக்கக கண்டார், அரசன் செயலை அறிந்து பாராட்டினர், அன்புடையார், உயிரோடு வாழ்ந்தகாலை உள்ளன எல்லாம் கொடுத்தலேயன்றி, இறந்தபினனரும் இருநிதி அளிபபர், உடமபும, உயிரும, ஒன்றையின்றி ஒன்று அமையாத ஒருமைபபாடு கொண்டிருத்தலைப் போன்றே, ஒருவரையின்றி யொருவா வாழமாட்டாப் பெருநட்புடையாரையே உலகம போறறும, அதறகைய நட்புடையார செதறும கொடுகுகும் சிறபபுடையராவர்; அத்தகு சிறப்பு அரசன் கோபபெருஞசோழன்பால் உளது. ஆகவே, இறந்தபின்னரும, தம மனம்மகிழ இடங் கொடுத்தது உதவினை எனப் போற்றினர்.

"நிலபெறு நடுகல ஆகிய கண்ணும்
இடம் கொடுத்து அளிப்ப மன்ற. உடம்போடு
இன்னுயிர் விரும்பும கிழமைத
தொன்னட் புடையார தம்மூழைச செலினே"
(புறம் 212)

சோழன் பிரிவால், பொத்தியார் உளதறே தோன்றிய உணாச்சிகள் உருவெடுத்த அவர் பாட்டின் வழியே, புலவர் நட்பின் பெருமையுணர்ந்த நல்லவர; அவரைப் போறறுவோமாக!

## ரு. பொன்மணியார்

பொன்னும், மணியும் பெருகக் கொண்டுள்ளமையால், இவர் இப்பெயர் பெறரூ போலும். இவரைப் பெண்பாற் புலவருள் வரிசைசெய்வர் சிலர்; அவ்வாறு கொள்வதற்காம் சான்று எதுவும் இல்லை இவர், மழை மாறிய கோடையின் கொடுமையினையும, மழைவளங காக்கவரும மாரிக்கால மாண்பினையும் நன்கு பாடியுள்ளார்.

மழைவளமற்ற மேட்டு நிலததே, மானினங்கள் வெம்மையின் கொடுமை ஆற்றாது மயஙகி வீழ்ந்து கிடக்கும், உழுதொழில் புரியும எருதுகள், தம தொழிலை வெறுததுச் சோமபிக் கிடக்கும் எனக கோடையின் கொடுமையும, மழை பெயயக்கண்டு, மயில் மூதலாம் உயிரகள் எல்லாம உவகை மிககு ஆடிபபாடும் எனக் காரகாலக் கவினும கூறபபட்டுளளன, மயில் மூதலாம் உயிரகட்கு உவகைதரும அம மாரிக்காலமே, கணவரைப் பிரிந்து தனிதது வாழும மகளிரக்கு மனததுயர் உண்டாககும இயல்பினையும் உணர்ததியுளளார் புலவர்.

"உவரி, ஒருதலை உழாது மடியப்,
புகரி புழுஙகிய புயல்நீஙகு புறவில்
கடிதுஇடி உருமின் பாம்பு பைஅவிய
இடியொடு மயங்கி இனிது வீழ்ந்தன்றே:
வீழ்ந்த மாமழை தழீஇப் பிரிந்தோர்
கையற வந்த பையுள் மாலைப்
பூஞ்சினை இருந்த பொழ்கண மஞ்ஞை
தானோ ஙனஙதலை புலம்பக்
கூஉம் தோழி! பெரும் பேதையவே." (குறுந். ஙகக)

## கூ. பொன்னாகனார்

பொன்னாகனார் எனும் இயற்பெயருடையவர் இவர்; இவர் பாடிய பாட்டொன்று குறுந்தொகைக்கண் இடம் பெற்றுளது; இவர் வரலாறு குறித்து அறியத்தக்கன இத்துணையே; "ஐய! நெய்தல் நிலத்து மணற்பரப்பில் என் பாவையை வளர்த்தி விட்டு, நீ இருக்கும் இடந்தேடி வந்துளேன்; இரவு வந்துற்றது; ஆகவே, ஆரல்மீன் அருந்தி நிறைந்த வயிறுடையவாய் ஆண்டுவரும் நாரைகள், என் பாவையின் நெற்றியை மிதித்துப்பாழாக்குதலும் கூடும்; ஆகவே, யாங்கள் விரைந்து வீடு செல்லுதல் வேண்டும்" எனத் தலைவனை நோக்கிக் கூறிய தோழி கூற்றில், என்பாவை எனவும், வருதேன் எனவும ஒருமையாற் கூறியவள், யாங்கள் செல்லுதல் வேண்டும் எனபபின்னர்ப் பன்மையாற் கூறினமையால், தோழியொடு தலைவியும் ஆண்டுவந்துளாள் என்பதைக் குறிப்பான் உணர்வித்தாள எனபபாடிய புலமை நலம் பாராட்டற்குரியதாம்

"நெய்தற் பரப்பில் பாவை கிடப்பி
நின்குறி வந்தனென் இயல தோக்க கொணக!
செல்கம், செலவியங கொணமோ! அல்கலும்,
ஆரல் அருந்த வயிறற
நாரை மிதிகதும் என மகள் நுதலே."

(குறுந்: ககச)

## ஏ. போத்தனார்

பல்லவ அரசர்கள் போத்தரையர் எனவும் வழங்கப் பெறுவர்; ஆதலின் போத்து என்பது பல்லவரைக் குறிக்க வழங்கும் சொல்லாதல் அறிக இதனால், போத்தனார் என்ற பெயருடைய இவர், பல்லவர்த் தொடர்புடையவராவர் எனக் கோடலும் பொருந்தும்.

அருள், பொருள் ஆகிய இரண்டனுள், அருளே, சிறப் புடையதாம் ஆதலினாலும், மக்கள்பால் இருக்கவேண்டிய மாண்புடையதாம் ஆதலாலும், "அருளொடும், அன்பொ டும் வாராப் பொருளாக்கம் புல்லார் புரளவிடல்" என்பதற் கேற்ப, அருள் அழியவரும் பொருள், பொருளாகாது ஆதலாலும், பொருளினும், அருளையே அறிவுடையோர் விரும்புவர்; அவ்வாறின்றி, அருளை மறந்து, பொருளை விரும்புதல் உண்மை அறிவாகாது. இந்த உண்மையைப் புலவர் போத்தனார் தம்முடைய பாட்டில் வைத்து விளக்கி யுள்ளார்.

"அருளன்றுக, ஆள்வினை ஆடவர்
பொருள் எனவலித்த பொருளல் காட்சி."

(அகம்: எடு)

இளமை கழிந்தால், அது மீண்டு வருதல் இல்லை; அதை மீட்டுக் கொணர்வார் எவரும் இலர்; இளமை கழிந் தால் கழிந்து விட்டதே என்று கலங்குவதல்லது அதை மீளப் பெறுதல் இயலாது என்பதைப் பிரிந்து சென்ற தலைவர், "சென்றுபடு விறற்கவின் உள்ளி, என்றும் இரங்கு நர் அல்லது, பெயர்ந்து யாவரும் தருநரும் உளரோ இவ் வுலகத்தானே" (அகம்: எடு) என்று தலைமகள் கூறினள் எனக் கூறி விளக்கியுள்ளார்.

# 1. போதனார்

வரலாறு விளங்காப் புலவர்களுள் இவரும் ஒருவர். போதனார் என்பது, தாய்தந்தையர் இட்ட இயற் பெயரா, அல்லது பிற்காலத்தா இவர் சிறப்பறிந்து இட்டு வழங்கிய காரணப்பெயரா என்பது விளங்கவில்லை; நற்றிணைப் பாக்களைப் பாடிய புலவர்களுள், இவர் பெயரே பூண்டார் மற்றொருவரும் உளர்; மதுரைச் சுள்ளம் போதனார் என்ற பெயரை நோக்குக

மனைத்தக்க மாண்புடைய மகளிராவார், தாம் பிறந்தகத்துப் பெருவாழ்வு வேண்டாராய், தாம் புகுந்தகத்துப் பொருள் நிலைக்கேற்ப வாழ்வுவேண்டுமெ பெருந்திருவினராவா; அத்தகையார் அருகிய இக்காலமெ போன்றதன்று பழந்தமிழ்க்காலம்; மனைமாட்சி நிறைந்த மகளிரே மல்கிய காலம் அக்காலம்; அம்மாண்பு நிறை மகளொருத்தியின், மனைவாழ்க்கைக் காட்சியை, அவள் தாய்வழியே காட்டியுள்ளார் புலவர்.

மணவீடு புக்க தன் மகள், ஆண்டு நடாத்தும் இல்லறச் சிறப்பினைக்காணச் சென்றுள் தாய் ஒருத்தி, அத்தலைவன் இல்லமோ, வறுமைநிறைந்த வாழ்வுடையது; ஆனால், தன் மகளோ, தந்தை இல்லத்தே உள்ள வளமிக்க செல்வத்தையும் நினைக்கிறுள் இல்லை; முப்பொழுதும் உண்ணுதற்கேற்ற வாய்ப்பு இன்மையால், பொழுதுமாறி உண்ணுகின்றனர்; அந்நிலையிலும், அவன் கூற்றிற்கு மறுத்துரை கூறுமல், அவன் குறிப்பறிந்து நடக்கின்றுள் மகள்; இவற்றையெல்லாம் கண்டாள் தாய்; பண்டை நிகழ்ச்சியொன்று அவள் மனக்கண் முன் தோன்றி நின்றது

அன்பே உருவாய் அமைந்த செவிலி, ஒருகையில் தேன்கலந்த இனிய சுவைமிக்க பாற் சோறு நிறைந்த ஒளிவிடும் பொற்கலத்தையும், மற்றொருகையில், மெல்லிய கோலொன்றையும் ஏந்தி வருகின்றுள்; முத்துப் பரலிட்ட சிலம்பணிந்த தலைவி, அச்சிலம்பொலிக்க ஓடி விளையாடுகின்றுள்; அவளை நெருங்கிய செவிலி, சோற்றை உண்ணு

மாறு வேண்டுகிறாள்; மகள் மறுப்பதுகண்டு அவளைப்பிடித்து உண்பிக்க முயலுகின்றாள்; தாய் பிடிக்க வருவதறிந்து மெல்ல ஓடுகின்றாள் தலைவி; செவிலியும் தொடர்ந்து ஓடுகிறாள், ஓடியும், பிடிக்க முடியாமல், இறுதியில் இளைத்து நின்றுவிடுகிறாள்; அங்ஙிலையில், முன்றிற்கண் போடப்பட்டிருக்கும் முல்லைப்பந்தரின் அடியில் ஓடி நின்ற தலைவி "உண்ணேன் காண்" என்று கூறி மறுத்துவிட்டு ஆடத் தொடங்கி விடுகிறாள்; மகள்தன் இளமைப்பருவத்து அச் செயலையும், இன்று அவள் நடாத்தும இல்லறச்சிறப் பினையும ஒருங்கு கண்ட தாய், "அன்று, அறுசுவையுண் டியை அமர்ந்து ஊட்டவும், உண்ண மறுத்த இவள், இன்று பொழுது மறுத்துண்ணும இவ்வாழ்கையினைப பெரிதும் விரும்புகின்றனளே! தலைவனொடு கூடிவாழும வாழ்க் கையில அதனினை இன்பதினைக காண்கின்றனள்போலும! அன்று 'உண்' என ஏவலும, அவ் ஏவலை மறுத்த உண் ணுதி ஓடி ஆடிய இவள, இன்று, தலைவன் சொற்பிழை யாது ஒழுகும் ஒழுக்கத்தினையும், அவன் குறிப்பறிந்து பணியாறறுதற் கேற்ற பேரறிவினையும யாண்டுப் பெற்ற னளோ!" என வியந்து மகிழ்ந்து கூறினாள்

"பிரசம் கலந்த வெண்சுவைத தீம்பால்
விரிகதிர்ப் பொறகலத்து ஒருகை ஏந்திப்,
புடைப்பிற் சுற்றும பூந்தலைச சிறு கோல்
'உண்' எனறு ஓக்குபு புடைப்பத தெணணீர்
முதது அரிப் பொற்சிலம்பு ஒலிப்பத தத்துற்று,
அரிநரைக கூந்தல் செம்முதுச செவிலியா,
பரீஇ மெலிந்து ஒழியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி,
அறிவும், ஒழுகமும் யாண்டுணாந்தனள் கொல்?
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்,
ஒழுகுநீர் நுணங்கறல போலப்
பொழுது மறுத்து உண்ணும் சிறுமதுகையளே."

(நற்: ககo)

## ஈ. மதுரைக் கண்ணனூர்

கண்ணனூர் என்ற பெயரைப் புலவர்கள் தம் இயற் பெயராகப் பயில வழங்கினா; கண்ணனூர் என்ற பெய ருடையா பலரா தலின், இவர் மதுரைக் கண்ணனூர் எனப் பெயா பெற்றூர்.

ஒரு தலைவன் பொருள் கருதிப் பிரிந்து பலநாள் கழிதது வீடு திரும்பினன்; அவன் பிரிந்தமையால் வருந்திய அவன் மனைவி, அன்று இரவு அவனோடு மகிழ்ந்து உறங்கிக்கொண்டிருந்தாள்; அன்றைய இரவு அவளுக்குப் பேரின்பம் தரும் இரவாய்த தோனறிற்று; அதனால் அவ் விரவு நீண்டு தோன்ற விருமபிறறு அவள் உளளம்; அவவாறு அவள உள்ளம எண்ணிக்கொண்டிருககும் போதே, எஙகிருநதோ வநதது சேவல ஒன்றின் குரல, பொழுது விடிநதுவிட்டமை யறிநத வெளியே வநதாள; தன் வட்டுக் கூரைமீது அக கோழிசசேவல் நின்று கூவுவ தைக் கண்டாள், அதன் பருதத்ச சிவநது தோன்றிய கொண்டை, கொத்துக கொதத்தாக மலரும் செஙகாநதள் மலாபோல தோன்றி அழகு தருவதாயினும, அதன் செயல் துயர் தநததை எண்ணினாள், தலைவனோடு நெடிது நேரம துயில விரும்பிய வேட்கை உடையளாதலின், தானே புலர்ந்த பொழுது, அச சேவல் கூவியதால் புலர்நத தாகக் கொண்டாள; உடனே அச் சேவல்மீது அவளுக்கு மாறுசசினம பிறந்தது; "என் இனிய துயில் கெடுதத ஏ சேவலே! நின்னை உயிரோடு இனி விடுவதில்லை, இரவில் என் வீடு வந்து இல்லுறை எலிகளைத் தேடித் திரியும் காட்டுப் பூனைக்கு நீ விரும்பிய உணவாவாய், இன்று அப்பூனை வரட்டுமை, நின்னைப் பற்றி அதன்பால் ஒப்படைதது விடுகின்றேன்; அதனால் கொல்லப்பெற்று, அதற்கு இனிய உணவாகித் துயர் உறுவாயாக!" என வன்சொல் கூறிநின்றாள்.

தாம் அரிதின்பெற்று மகரும் இன்பத்திற்கு இடை யூறு உண்டாயக்கால், அதனால் உள்ளம் உடைந்து சினம்

பிறந்தவழி, அறிவும் அழிய, அவ் இடையூற்றிற்குக் காரணமாகார் மாட்டும் கினைந்து சீறிவிழுவது மக்களின் மனப் பண்பாம்; அவ்வாறு இன்ப இடையூறுற்று தாம் வருந்துங்கால், பிறர் மகிழ்ந்திருப்பக் காணவும் மனம் பொறார்; இம் மனிதப் பண்பினைத் தன் இன்பம் இயல்பாக இடையூறு உற்றதாகவும், எழுந்து நின்றவழி, தன் கண்முன் முதற்கண் நின்ற சேவலை, அதுகவின் மிக நின்ற அந் நிலையில் கண்டு பழிக்கும் தலைமகள் ஒருத்தியின் வழியாக உணர்த்தியுள்ளார் புலவர்:

"குவி யிணாத் தோன்றி ஒண்பூ வன்ன
தொகுசெந் நெறறிக கணங்கொள் சேவல்!
நள்ளிருள் யாமத்து இல் எலி பார்க்கும்
பிள்ளை வெருகிற்கு அல்கு இரையாகிக்
கடுநவைப் படூஇயரோ நீயே! நெடுநீர்
யாணா ஊரன் தன்னெடு வதிந்த
எம இன்துயில் எடுப்பி யோ யே." (குறுந் கo)எ)

## கo. மருதன் இளநாகனார்

இவர் பெயர், மதுரை மருதன் இளநாகனார் எனவும், மருதன் இளநாகனார் எனவும ஏடுகளில் காணப்படும். மதுரைப் பூதன் இளநாகனார் என்ற பெயருடையாரு ஒருவரும, மதுரைப் பெரு மருதன் இளநாகனார் என்ற பெயருடையார் ஒருவரும் உளராதலின், இவர மதுரை மருதன இளநாகனார் என அழைக்கப்பெற்றார். இவர இயற்பெயர் இளநாகனார் என்பது, இவர் பெயரக்கு முன்வரும் மருதன் என்ற சிறபபு, இவர் தநதையார் பெயரைக் குறிகக வநததாம அது, இவர் மருதத்திணை பாடிய சிறபபுக குறிதது வழஙகபபட்டதாம என்று சிலா கூறுகின்றனர அது, இவர் மருதம பாடிய சிறப்பால் வநததாயின, மதுரைப பெரு மருதன், மதுரைப் பெருமருதன் இளநாகனார் ஆகியோரும, முறையே பெரு மருதன, மருதன் என்ற சிறபபிணைப பெறுமளளமையால, அச் சிறப்பு, அவாகளும அவர் மருதம பாடிய சிறபபால் வநதது எனக் கூறல்வேண்டும, ஆனால, அவவாறு கூறபபடுவதில்லை ஆதலானும, அஃது, இவாக்கு மருதம பாடிய சிறபபால் வநததாகவே கொள்வதாயின், இவர் பெயர், பாலை பாடிய சிறபபுடைய பெருங் கடுஙகோ, பாலைபாடிய பெருங் கடுஙகோ எனவும், வெறிபாடிய சிறப்புடைய காமக் கண்ணியார, வெறிபாடிய காமக்கண்ணியார் எனவும் அழைக்கப் பெறுதலேபோல், மருதம் பாடிய இளநாகனார் என அழைகபபெறுதல் வேண்டும, அவ்வாறு அழைக்கப் பெறவில்லை ஆதலானும், பாலை பாடிய பெருங் கடுங்கோ பாடிய அகத்துறைப் பாக்கள் அறுபத்தேழும், பாலைத் திணையையே தழுவி வந்துள்ளன, ஆதலின், அவர்க்குப் பாலை பாடிய என்ற சிறப்பு ஏற்புடையதாகும். மருதன் இளநாகனார் பாடிய அகத்துறைச் செய்யுட்கள் எழுபதது நான்கு எனின், அவற்றுள் மூப்பத்தாறு செய்யுட்கள் மருதம அல்லாத பிற திணைகளைத தழுவிவந்த செய்யுட்களாம். நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய

வற்றுள் இவர் செய்யுட்களாக வந்துள்ளன முப்பத்தொன்பது செய்யுட்கள்; இதில் மூன்றுமடடுமே மருதத்திணை தழுவி வந்துள்ளன; ஏனைய முப்பத்தாறு பாடல்கள் பிறதிணை தழுவி வந்துள்ள பாடல்களாம். இவ்வாறு, தாம் பாடிய பாக்களுள் பாதிக்கும் குறைவான பாடல்களே மருதத்திணை சார்ந்து வந்ததாகவும, அதனால, இவர்க்குப் பெயர் வழங்கினர் எனல் பொருந்தாது ஆதலாலும், மருதத்திணை பாடிய சிறபபுக் குறித்து வழங்கப்பெறும் மருதம பாடிய என்ற சிறப்பு, மருதம் பாடிய இளங்கடுங்கோ என்ற சேர அரசர வழிவந்த புலவர் ஒருவாகுக் கொடுக்கப்பட்டுளது; அவர் பாடிய செய்யுட்கள் அனைத்தும மருதம தழுவியே நிற்பதால், அச சிறப்பு அவர்க்கே பொருத்த முடைததாம ஆதலாலும, மருதன் இளநாகனர் பெயர்க்கு முன்வரும் மருதன என்ற சிறபபு, இவர் மருதத்திணை பாடினர் என்பது குறித்து வந்ததன்று; புலவர்கள தநதை பெயரை, அப் புலவாதம் பெயர்முன் இணைத்தும் வழங்கும வழகக்ததிற்கு ஏற்ப வந்த, இளநாகனரின் தநதை பெயரைக் குறிக்கவந்ததே எனக் கொள்க.

மதுரை மருதன் இளநாகனர், இலவநதிகைப பள்ளித் துஞ்சிய நன்மாறன், கூடகாரத்துத துஞ்சிய மாறன் வழுதி என்ற இரு பாண்டிவேந்தாகளையும, நாஞ்சில் வள்ளுவன், பிட்டங கொற்றன், சிறுகுடிவாணன் ஆகிய குறுநிலத தலைவர்களையும, கழுவுள என்பானையும, கொங்கர, கோசர், மழவர், வேளிர ஆய வீரமரபினரையும், மதுரை, திருப்பரங்குன்றம், திருச்செநதூர் ஆகிய பாண்டி நாட்டுப் பேரூர்களையும், ஊணூர, சாய்க்காநம, செல்லூர், நியமம் போன்ற கோசாக்குரிய ஊர்களையும், வேளிர்க் குரிய வீரை நகரையும் தம்முடைய பாக்களில் ஆங்காங்கே எடுத்துக் கூறிப் பாராட்டியுள்ளார்.

மதுரை மருதன் இளநாகனர், கற்றறிந்தார் போற்றும் கலித்தொகையில், மருதத்திணை தழுவிய பாடல்கள் முப்பத்தைந்தையும், நற்றிணையில் பன்னிரண்டு பாடல்களையும், குறுந்தொகைக்கண் நான்கு செய்யுட்களையும்,

அகநானூற்றில் இருபத்துமூன்று செய்யுட்களையும், புறநானூற்றில் ஐந்து பாடல்களையும் பாடியுள்ளார். நக்கீரர் இயற்றியது எனப்படும் களவியல் உரைக்கண், "உருத்திர சன்மனைத் தரல் வேண்டுமென்று வேண்டி, கொடுபோந்து, வெளியது உடீஇ, வெண்பூச் சூட்டி, வெண் சாந்தணிந்து, கன்மாப் பலகையேற்றிக் கீழிருந்து சூததிரப் பொருள் உரைப்ப, எல்லாரும் முறையே உரைகளைக் கேட்டு வாளா இருந்து, மதுரை மருதன் இளநாகனார் உரைத்தவிடத்து ஒரோவிடத்தை கண்ணீர் வாராது மெய்ம்மயிர் நிறுத்து," என்றதனாலே காணப்படுவதால், இறையனார் களவியலுக்கு இவரும் ஓர் உரை யெழுதியுள்ளார் என்பது புலனும்.

இனி, மதுரை மருதன் இளநாகனார் வேறு, மருதன் இளநாகனார் வேறு; மதுரை மருதன் இளநாகனார், இறையனார் களவியலுக்கு உரை வகுத்தவர், புறத்தில் பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனைப் பாடியவர், மருதன் இளநாகனார், மருதக்கலியைப் பாடியவர்; பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறனை வழுதி, நாஞ்சில் வள்ளுவன் ஆகியோரைப் பாடியவர் என்று கொள்வர், புறநானூறுப் பதிப்பாசிரியர் டாக்டர். உ. வே சாமிநாத ஐயரவர்கள்.

அவர் அவ்வாறு கொள்வதற்குக் காரணமாயது, புறநானூற்றுப் பாக்களின் அடியில காணப்பெறும் கொளுக்களில், மதுரை மருதன் இளநாகனார் எனவும், மருதன இளநாகனார் எனவும வேறுபடத் தோன்ற எழுதப் பட்டிருப்பதேயாம, ஐயரவர்களே, அக் கொளுக்களில், சில, மதுரைச் சித்தலைச் சாத்தனார் எனவும், சில சித்தலைச் சாத்தனார் எனவும் கூறவும், அவ்விரு பெயர்களும வேறு வேறு இயல்பினராய இருவரைக் குறிக்கும எனக் கொள்ளாது, இவ்விருபெயர்களும், மதுரைக் கூலவாணிகன் சித்தலைச் சாத்தனார் ஒருவரையே குறிக்கும் எனக் கொண்டுள்ளாராதலாலும, சில புலவர் பிறந்த ஊர்ப் பெயர்களை இணைத்து வழங்க, சில, அவற்றை இணைக்காது வழங்கவருவது, ஏடுகளில் காணப்படும் இயல்பு ஆதலாலும,

கொளுக்களில் அவ்வாறு உள்ளன என்பதை மட்டுமே கொண்டு மருதன் இளநாகனார் இருவராவர் எனக் கொள்ளுதல் பொருந்துவதன்றும.

இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன், மிக்க பேராண்மையுடையவன்; இவனைப பாடிய புலவர் பலரும் இவன் ஆண்மையினையே பாராட்டியுள்ளனர்; மக்கள் நலததை மாண்புறப பெற்றவன்; இவ்வாறு படையாலும், புதல்வாகளாலும பொலிந்து தோன்றினமையால், தன்னைப் பாடிவரும பரிசிலாக்கு விரைந்து பரிசளிக்கும பண்பிலாதானுவன் அதனால் இவனைப் பாடிய புலவர்களுள் ஆலூர் மூலங்கிழாரும், வடமவண்ணகன் பேரிசாத்தனாரும் பெரிதும வருநதிப் பாடியுள்ளனர் பேராண்மை மிகக இவன் பெருநகுணனிலனுதல அறிந்த புலவா மதுரை மருதன் இளநாகனார், அவனுககு அறமூரைதது அறிவுடையனுக்க விருமபினார் அவனை அடைநது, "சிவபிரானுக்குக் கண்கள மூன்றுயினும அவற்றுள் அமரராலும வணங்கப் படும் சிறபபுடையது, அவா பகைவரைப் பாழாக்கிய நெற்றிகணணே, அதைப்போல், தமிழநாட்டு வேந்தர் மூவரேயாயினும, அவருட்சிறப்புடையோன இலவநதிகைப் பள்ளிததுஞ்சிய நன்மாறனே எனப்புகழ்நதார், "வேலன்று வெனறி தருவது, மனனவன் கோல், அதூஉம் கோடாதெனின்" என்பவாகலின், மறப்படையினும், அறப் படையே அரசர்க்கு வேண்டும் என்பதை எடுத்துக்கூற விரும்பினர்; "வேநதே! கடுஞசினமும், பகைவர் படையைப் பாழாக்கும் பேராண்மையும் உடையது நின் யானைப்படை; விரைந்த செலவினையும், போர் வேட்கையினையும் உடையது நின் குதிரைப்படை; நினறு பறக்கும் கொடியும், நிமிர்ந்த நடையும உடையது நின் தேர்ப்படை; உள்ளத்தே உரனும், போர் என்றவுடனே பூரிக்கும தோளும் உடையர் நின்வீரர்; இவ்வாறு மாட்சிமையுற்ற பெரும படையினை உடையை நீ" என அவன் படைப்பெருமையினைக் கூறிப், பின்னர், "இவ்வாறு, பெரும் படையால் பாடுற்றுய் எனினும், நின் ஆட்சியின் அழியலாகாத் திண்மை, அப்

படையால் உண்டாதல் இல்லை; நின் நாட்டு மக்கள், அல்லற் பட்டு ஆற்றாது அழஅழ ஆளும் கொடுங்கோலனுயின், அவர் அழுது சிந்திய கண்ணீர், நின் படைச்செல்வத்தைப் பாழாக்கும் பெரும் படையாய் மாறும் ஆதலின், நின் ஆட்சியின் அழிவின்மை, அவர் கண்ணீர் காணுவண்ணம் ஆளும் நல்லாட்சியால் ஆம்" என்று அவன் நால்வகைப் படையின் சிறுமையினையும், நல்லாட்சியின் பெருமை யினையும் எடுத்துக் கூறினர். நல்லாட்சியின் பெருமை கூறிய அவர், அந்நல்லாட்சியாவது யாது என்பதையும் விளக்குதல் வேண்டும் என விரும்பினர் "இவர் நம்மவர்; ஆகவே, அவர் அறனல்லன செய்யினும் விடுக; இவர் நம் பகைவர்; ஆகவே, அவர் பிழையிலராயினும் ஒறுக்க எனக் கொள்வது செங்கோலன்று; கொடுங்கோல்; அஃது அரசர்பால் இருத்தலாகாது; இவ்வாறு கோல் கொண்டு குடிபுரக்கும் கொற்றவன்பால் ஆண்மையும், அருளும், கொடையும் குன்றுதல் நின்று நிலைபெறுதல் வேண்டும்; ஆண்மை, எதையும் எரித்து அழிக்கவல்ல ஞாயிற்றின்பால் உளது போன்ற பேராண்மை இருத்தல்வேண்டுமே, அருள், தன் தண்ணொளியால் உலகதது உயிர்கட்கு இன்பமூட்டுமதிங்கள்பால் உளதுபோன்ற தண்ணருள் நிலைபெறுதல் வேண்டும்; கொடை, இங்குப் பெய்யலாம், இங்குப் பெய்தல் கூடாது என்ற வேற்றுமை எண்ணமின்றி, எங்கும் ஒரு படித்தாகப் பெய்யும் இயல்பினதான வானமே போல், இவர்க்குக் கொடுக்கலாம்; இவர்க்குக் கொடுத்தலாகாது என்ற வரையறையின்றி வழங்கும் கொடைக்குணம் குன்றுமல் நிற்றல் வேண்டுமே. ஓர் அரசன், இத்தகைய பண்புடையனுயின், அவன் நாட்டில் பொருள் இன்மை கூறி இரந்து வாழ்வார் இலராவர்" என்ற நல்லாட்சியின் பண்பினை எடுத்தோதி, அத்தகைய ஆட்சியுடையனுய் ஆண்டுபல வாழ்ந்து ஆண்டு உயர்வாயாக! என்று வாழ்த்தி வழி காட்டினர்:

"கறைமிடற் றண்ணல், காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல
வேந்து மேம்பட்ட பூந்தார் மாற!

கடுஞ்சினத்த கொல்களிறும், கதழ்பரிய கலிமாவும்,
நெடுங்கொடியநிமிர்தேரும்,நெஞ்சுடையபுகன் மறவரும்என
நான்குடன் மாண்டதாயினும், மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்;
அதனால், நமா எனக்கோல் கோடாது,
பிறா எனக் குணங் கொல்லாது,
ஞாயிறு அன்ன வெந்திறல் ஆண்மையும்,
திங்களன்ன தண்பெரும் சாயலும்,
வானத்தன்ன வண்மையும் மூன்றும்
உடையை யாகி, இல்லோர் கையற
நீ நீடுவாழிய! நெடுநெதகை!" (புறம் : நடு)

அன்று, ஆயிரம ஆயிரம் ஆண்டுகட்கு முன்னே, வழங்கிய இவ் அரசியல் அறிவுரை, இன்று உலகிடை வாழும் உயர்ந்த அரசியல் தலைவர்கள்தம் உள்ளத்தைத் தொடும் நாள் எந்த நாளோ? அவர்க்கு அறிவுரை கூறவல்ல மருதன் இளநாகனரை இம்மண்ணுலகம் என்று காணுமோ?

மதுரை மருதன் இளநாகனர் காலத்தே, பாண்டி நாட்டின் மற்றோர் பகுதியைக் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி என்பான் ஆண்டிருந்தான்; அவனை எதிர்த்தார் எவரும் வாழ்ந்தவரல்லர்; அவன் இத்தமிழகம் எல்லோர்க்கும் பொது என்ற சொல் கேட்கப்பொரு மண்ணாசை மிக்கவன், ஆசையோடு, அவ்வாசையைக் குறைவற நிறைவேற்றிக்கொள்ளற்கு வேண்டும் ஆற்றலும் உடையவன்; அவன் ஒருகால் வடநாடு நோக்கிப படையெடுத்துச்செல்ல எண்ணுகின்றான் என அறிந்தார் மதுரை மருதன் இளநாகனர்; அவன் செல்லும் நாட்டின் நிலநீர் வளங்களையும், ஆண்டுவாழ் மக்கள் மனநலத்தையும் அறிந்தவர் இளநாகனர். அந்நாடு நெய்தல் வளமும், மருத மாண்பும் ஒருசேரப்பெற்றது; மீன் சுடுகின்ற புகை சுடுவதால் உண்டாய மணத்தினையும் உடன்கொண்டு எழுந்து பரந்து, வயலிடங்களைச் சூழஉள்ள மருதமரக்கிளைகளில் படிந்துகிடக்கும் காட்சியினை அந்நாட்டில் உள்ள ஊர்

தோறும் கண்டுகண்டு களித்தவர்; அந்நாடுகள் பாழாம் என்ற எண்ணம் அவர்க்கு இணையிலாத் துயரைத் தந்தது; பகைவர் படையால் பாழான ஊர்களைப் பார்த்து வருந்தியவர் அவர், பகைவர் படையால் பாழான ஊர்களில் மக்கள் வாழார்; மக்கள் வாழாமையால், ஆண்டுறை கடவுளர்க்குப் பலி கிடைத்தல் இன்றும, பலி பெறுதல் இன்றுகவே, அக்கடவுளரும தாம் உறைந்த கமபங்களை விட்டு வெளியேறுவர்; இவ்வாறு கடவுளர் போன கம்பங்கள் அவ்வூர மன்றங்களில் பொலிவிழந்து நிற்கும், வளம் பெற்று வாழ்ந்த காலத்தே அவ்வூர் மன்றங்களில் ஆண்டு முதிர்வால் தொழில் பெறுத பெரியோர்கள் அமர்ந்து ஆடிய சூதாட்டிடங்களில், காட்டுகோழிகள் முட்டையிட்டு வாழும. இவ்வாறு பாழான ஊர்களைக் கண்டு கலங்கிக் கண்ணீர்விட்டவர் புலவா ஆதலின், பாண்டியன் படையெடுப்பால், பாழாகும் அவன் பகைவர் நாட்டு வளத்தினை எண்ணி எண்ணி உருகினர், இப்படை யெடுப்பினைத் தடுத்தல் தம்மால் இயலுமா என்று எண்ணினர்; முயன்று பார்க்க முனைந்தார்; அவனை அடைந்தார்; "வேந்தே! இப் படையெடுப்பு யாரை நோக்கி? நீ நினைத்தால், நின்னால் அழிவுறுதவரும் உளரோ? எங்கு, எப்போது எவரை அழிக்க எண்ணினும் அஃது எளிதில் இயலும் நினக்கு, அத்தகையாளை நின்னால் அழிவுறத் தக்கார் யாவர்? அவர் நாட்டு அழிவினை எண்ணி வருந்துகின்றேன்; அந்தோ! அவர் மிகவும் வருந்தத்தக்காராவர்! அவர்தம் நாட்டுவளம் இத்துணைச் சிறப்புடைத்து! அவர் நாடு நின்படையால் உறப்போகும் கேடு இத்துணைப் பெரிதாம! வாழ்க நின் கொற்றம; வருந்துக நின் பகைவர்," என்று கூறி, அவன் வெற்றியை வியந்து பாராட்டுவார்போல், அவன் பகைவர் நாட்டுப் பாழ்படுநிலை அவன் கண்முன் தோன்றி, அவன் உள்ளத்தே அருள்நோக்கம் உண்டாகப் பாடினர்.

அவ்வாறு பாடிய பாட்டில், மாறன் வழுதி, போரெண்ணம் இன்றி மடங்கி இருத்தலொழிந்து, போர் வேட்டு

எழுவனுயின் காலமோ, இடமோ கருதவேண்டியதிலனுய்த் தான் வேண்டும் காலத்தே, வேண்டிய இடத்தே விரும்பிய பகைவரைப் பாழாக்கும் இயல்புடையான் என்பதை விளக்க, முறையில் உறங்குவதினின்றும் விழித்தெழுந்த புலி, இரைவேட்டுப் புறப்படின், அது தான் விரும்பிய இடத்தே விரும்பிய அப்போதே, விரும்பிய இரையினைப் பெற்றுப் பசியாறும் செயலே உவமை கூறிய திறம் உணர்ந்து மகிழ்தற்காம்.

இவ்வாறு பாண்டியனைப் புலியொடு உவமைகூறி உயர்த்திப் பாராட்டுவார்போல், "வேந்தே! நின் உள்ளத்தே அருள்நோக்கமற்று, மறநோக்கம் கொண்டனை ஆதலின், தக்க இன்ன; தகாதன இன்ன என்று ஒக்க உணரும் உணர்வினை இழந்த விலங்கினைப் போன்றனை" என்று இழித்துக்கூறிப் பழித்துள்ள புலமை பாராட்டி மகிழ்தற்குரியதாதல் காண்க

"அணங்குடை நெடுங்கோட்டு அலையகம் முனைஇ
மூணங்குநிமிர் வயமான் முழுவலி ஒருத்தல்
ஊன்நசை உள்ளம் துரப்ப, இரைகுறித்துத்
தான்வேண்டு மருங்கின் வேட்டெழுந் தாஅங்கு,
வடபுல மன்னர் வாட, அடல்குறித்து
இன்னு வெம்போர், இயல்தேர் வழுதி!
இதுநீ கண்ணியதாயின், இருநிலத்து
யார்கொல் அளியர்? தாமே? ஊர்தொறும்
மீன்சுடு புகையின் புலவுநாறு நெடுங்கொடி
வயலுழை மருதின், வாங்குசினை வலக்கும்
பெருநல் யாணரின் ஒரீஇ, இனியே,
கலிகெழு கடவுள் கந்தம் கைவிடப்
பலிகண் மாறிய பாழ்படு பொதியில்
நரைமூதாளர் காயிடக் குழிந்த
வல்லின் நல்லகம் நிறையப், பல்பொறிக்
கானவாரணம் ஈனும்
காடாகி விளியும் நாடுடை யோரே." (புறம்: ஙூ)

இவ்வாறு பாண்டியர் இருவரைப் பாராட்டிய புலவர் மதுரை மருதன் இளநாகனார், பகைவர் அரண்மிக்க மதிற் புறத்தே போந்தாராகவும், அவரைத் தாக்கி, அவர் முரசுகளையும் கைக்கொண்டதோடு அமையாஞய், அவரை, அவர் நாடுவரை துரத்திச்சென்று, ஆங்கு அவரையும் அழித்து, அவர் அரண்களையும் கைக்கொண்ட செழியன் ஒருவனையும்,

"நண்ணர்
அரண்தலை மதிலராகவும், முரசுகொண்டு
ஓம்பரண் கடந்த அடுபோர்ச செழியன்." (நற்: ஙக)

பகைவர் புறங்கொடுத்து ஓடக்கண்ட பேராண்மையினையும், முழந்தாள் அளவும் தாழ்ந்து தொங்கும் நீண்ட கைகளையும் உடையவன்; வெல்லும் போர்பல கண்டவன்; பகைவரைப் பாழ்செய்து வென்ற புகழ் நிறைந்த வேலேந்தியவன் என ஒரு வழுதியையும்,

"ஒன்னா
ஓடுபுறங் கண்ட, தாள்தோய் தடக்கை
வெல்போர் வழுதி, செல்சமத் துயாத்த
அடுபுகழ் எஃகம்." (அகம்: ஙகஉ)

வேம்பின் மலர்மாலை அணிந்தவன்; பொதியமலை உடையவன்; அவன் பொருத போர்க்களத்தே பகைவர் படையும், அரணும் பாழாகும் என ஒரு பாண்டியனையும் பாடிப் பாராட்டியுள்ளார்:

"சினையலர் வேம்பின் பொருப்பன் பொருத
முனையரண் போல உடைந்தன்று." (மருத. கலி: உள)

பாண்டியர்களைப் பாராட்டிய மதுரை மருதன் இளநாகனார், தம் பாண்டிநாட்டுப் பற்று அவ்வளவோடு அமைதி உறுமையான், அப்பாண்டியர்க்குப் படைத்துணை வழங்கும் வீரனும், ஔவையார் போன்ற அருந்தமிழ்ப் புலவர்களால் பாராட்டப்பெறும் பெருங்கொடையாளியும் ஆய நாஞ்சில் வள்ளுவனைப் பாடியுள்ளார். பேரரசர் இருவரை ஒவ்வொரு பாட்டால் பாராட்டிய புலவர், நாஞ்சில்

வள்ளுவனைப் பாராட்ட இரு பாக்கள் பாடியுள்ளார் எனின், இவன் அவ்விருவரினும் சிறந்தான் என்பதில் ஐயமுண்டோ?

நாஞ்சில் வள்ளுவனைக் காணவேண்டின் நாடுபல நடந்து செல்லுதல் வேண்டும்; புலவர், நெடுவழிகண்டு மருளாது தம சுற்றம சூழப் போந்து பாடினர், தாம் கடந்து வந்த வழியின் நெடுமையினையும், கொடுமை யினையும், அவா அவன்பால் கூறும் திறம் வியத்தற்குரி யது, நெடுந்தூரம் என்பதைக் குறிக்க இடைக்கால எழுத் தாளர், காடு, மலை, வனம், வனாந்தரங்களைக் கடந்து சென் றார் என்று எழுதுவர், அதைப் போல் புலவரும், நாடும், காடும், மலையும், மடுவும் நிறைந்த நெடுவழி நடந்து வந் ததை, "நாஞ்சில் வள்ளுவ! யான் ஆனினம் வாழும் அரும் வழி பலவற்றை நடந்து கடந்தும் மானினம் மகிழ்ந்து ஆடும் மலைபல ஏறி இறங்கியும், மீன்பல நிறைந்த நீர் நிலை களை நீந்தியும் வந்து சேர்ந்தேன், என்னுடன் வரும் சிறு வர், உடன் கொணர்ந்த பொதிமூட்டையால் வருந்தி இளைத் தனர், என் பின்வரும் விறலி, தன் அடிவருந்த ஏறி இறங் கிய மலை பலவாதலின் இடைவருந்தி இளைத்தாள்" என்று கூறினர்.

"ஆனினம கலிதத அதாபல கடந்தும்,
மானினம் கலித்த மலைபின் ஒழிய,
மீனினம் கலித்த துறை பல நீந்தி!'

"சுவல் அழுந்தப் பலகாய
சில் ஓதிப் பல் இளைஞருமே;
அடிவருந்த நெடிதேறிய
கொடிமருங்குல் விறலியருமே." (புறம் கடஅ, கூ)

நாஞ்சில் வள்ளுவனைக் கண்ட புலவர், அவன், பகைவர் படைகண்டு பயந்து பணிவதோ, புறங்காட்டி ஓடுவதோ புரியாஞைப் பாய்ந்து அழிக்கும் பேராண்மை உடையனு தலையும், அவன் நாஞ்சிற் பொருப்பின் உயர்ந்த நிலையினை யும் பாராட்டினர், பின்னர், நாஞ்சிற் பொருநனுக்கும் அவன் வேந்தனைய பாண்டியனுக்கும் உள்ளம் நெருங்கிய

நட்புடைமையினை விளக்குவார், "பொருந! நீ வேண்டுவன, வற்றை விரும்பி அளிக்க மறுக்கான் நின் வேந்தன்; நீயும், அவன் பொருட்டு உயிர் விடற்கும் அஞ்சாய்" என்று கூறினார். இவ்வாறு அவன் பெருமையினைப் பாராட்டிய புலவர், தம்வறுமையின் கொடுமையினையும், அவன் போர் வேட்கையினையும ஒருங்கே விளக்குவார, "நாஞ்சில் வள்ளுவ! கனி பழுகுகட்டும, இருந்து உண்ணலாம என்று காதிருந்து பொருளபெறும செல்வவளம உடையவன் அல்லன் யானும், நீயும், ஒருநாள திடும எனப் போர ஒன்று தோன்றக் கண்டு, விரைந்து போதலும உண்டாம, அதனால், யானும் என் சுற்றமும வருந்துதலும உண்டாம, ஆகவே இன்னே அளித்து அருளுதல் வேண்டும்," என்று வேண்டினார். இறுதியாக, விரைந்து பொருள பெறுதல் வேண்டும் என்பதற்காகவே, புலவர், இவ்வாறு தாம மிக மிக வறுமையுடையார போலவும கூறுகிறார், வள்ளுவன் பால் இல்லாத பண்புகளை இருபபதாகக் கூறியும் பாராட்டுகிறார் என்று எங்கே இவ்வுலகம கூறிவிடுகிறதோ என்ற அச்சம புலவர்க்கு உண்டாகி விட்டது, தாம் அவ்வியல் புடையாரல்லர், தம் பால் அபபண்பு எபபொழுதும் இருந்ததில்லை; வாழ்தல் வேண்டிப் பொய் கூறும் புல்லன் அல்லன்; எத்தகைய இடர் உற்ற காலத்தும் மெய் கூறுவதே தம் பண்பாம் என்று எடுத்தோதியும் அமைந்தார்,

"வாழ்தல் வேணடிப்
பொய் கூறேன், மெய் கூறுவல்,
ஓடாப் பூட்கை உரவோ மருக!
உயர்சிமைய, உழாஅ நாஞ்சிற் பொருந!
மாயா உள்ளமொடு பரிசில் உன்னிக்
கனிபதம் பார்க்கும் காலை யன்றே,
ஈதல் ஆனுன் வேந்தே; வேந்தற்குக
சாதல் அஞ்சாய் நீயே; ஆயிடை
இருநிலம் பிளிர்ந்திசி னஅங்கு, ஒருநாள்
அருஞ்சமம் வருகுவ தாயின்,
வருந்தலும் உண்டென் பைதலங் கடும்பே."

(புறம்: கஙக)

நாஞ்சில் வள்ளுவன் கொடைப்புகழை இத்துணையும் புகழ்ந்தும் அமையாத புலவர் அவன் தன்பால் வந்து இரந்து நிற்பாரை இன்றுபோய் நாளைவருக எனக் கூறும் இயல்புடையானல்லன், "மாறிவாவென மொழியலன்" என்றும், தாம் வாழும் மரப்பொந்தின்கண் பெரியபெரிய தினைக்கதிர்களை வைக்கப்பெற்ற கிளிகள், அவற்றை உண்ணப் பிறரைக் கேட்கவோ, அவரைக் கண்டு அஞ்சவோ வேண்டிய தின்றி, தாமே வேண்டியாங்கு விரும்பி யுண்பதைப் போல், புலவர்களும், பிறஇரவலர்களும், இவன் பால் உள்ள பொருளை இவனைக் கேட்டுப் பெறுதல் வேண்டும் என்ற நிலையிலராய்த் தாம் வேண்டிய போது, வேண்டிய பொருளை எடுத்துச்செல்லலாம். கொடைவளம் உடையன் "கிளிமரீஇய வியன்புனத்து, மான் அணி பெருங்குரல் அணையன்" என்றும் பாராட்டி மகிழ்வாராயினர்.

உழாத நாஞ்சிலுக்கு உரியோனும், பாண்டியர் படைத்தலைவனுமாய நாஞ்சில் வள்ளுவனைப் பாராட்டிய புலவர், ஊராக் குதிரைக்கு உரியோனும், சேரர்படைத் தலைவனும், வள்ளலும் ஆகிய பிட்டன் என்பானைப் பாராட்ட எண்ணி, அவன் சேரர்படைத் தலைவன்; விற்போர்வல்லவன்; மதுவுண்டானும் மகிழ்ந்து, பிறர்க்கும் அம்மதுவினை அளித்து மகிழ்விப்பன்; அவன் ஏந்திய வேல், அவன் பகை மன்னர்க்கு உள்ளம் வேம் பெருந்துயர் அளிக்கும்" என்று கூறிப் பாராட்டினர்:

> "வானவன் மறவன்: வணங்குவில் தடக்கை
> ஆனா நறவின் வண்மகிழ்ப் பிட்டன்,
> பொருந்தா மன்னர் அருஞ்சமத்து உயர்த்த
> திருந்திலை எஃகம் போல
> அருந்துயா தரும்." (அகம்: எஎ)

இருபெரும் வேந்தர்க்குப் படைத்துணை போகும் பெருமை வாய்ந்த இரண்டு பெரிய படைத்தலைவர்களைப் பாராட்டிய புலவர், தம் காலத்தே வாழ்ந்த மற்று இரண்டு தலைவர்களையும் தாம் பாடிய அக நானூற்றுப் பாடல்களில் வைத்துப் பாராட்டியுள்ளார். அவ்விருவர், வாணனும்,

கழுவுளும் ஆவர்; வாணன், புலவர் பலரும் போற்றும் பெருவளம் நிறைந்த நாடுடையன்; அவன் நாட்டை ஏனைப் புலவர்களைப் போலவே, மதுரை மருதன் இளநாகனரும் பாராட்டியுள்ளார். மகளிர் தாம் விளையாடக் கொணர்ந்த பாவையை, உண்ணு நீர்த்துறையில் வைத்துவிட்டுக் குரவை ஆடி மகிழும் கடற்கரைச் சோலைகளால் சூழப்பெற்றது வாணன் சிறுகுடி; முற்றி வளைந்த கதிர்களைக் கொண்டு நெல்வளையும் நன்செய்கள் சூழ்ந்தது வாணன் சிறுகுடி என அவன் சிறுகுடி வளத்தை வாழ்த்துவது காண்க.

"வண்டற் பாவை உண்துறைத் தரீஇத
திருநுதல் மகளிர் குரவை அயரும்
பெரு நீர்க் கானல் தழீஇய இருக்கை
வாணன் சிறுகுடி, வணங்குகதிர் நெல்லின்
யாணர்த் தண்பணை." (அகம்: உசுக)

கழுவுள் என்பான், இடையர் தலைவனவன்; தகடூர் எறிந்த பெருஞ் சேரலிரும்பொறையால் வென்று அடக்கப்பட்டோன்; இவனுக்குரிய காஞ்சிமரை வேளிர் பதினெல்வர் ஒருங்கு கூடி அழித்தனர். இவனைப் பாராட்டிய புலவர் மதுரை மருதன் இளநாகனர், கழுவுள் வெல்லும் வேற் படையுடையவன், சிறந்த வண்மையினையும் உடையவன்; அவன் காஞ்சி, பூதம் ஒன்று கொண்டுவந்து பேணி வளர்த்த வேங்கை மரத்தை உடையது என்று பாராட்டுகிறார்:

"வென்வேல்
மாவண் கழுவுள் காஞ்சி ஆங்கண்
பூதம் தந்த பொரியரை வேங்கை." (அகம்: நடுஞ)

தமிழகம், பெரும் பொருளால் பெட்டக்கதாகி, பொறையொருங்கு மேல் வருங்கால் தாங்கும் இயல்பின தாதல் அறிந்த பிறநாட்டு மக்கள் வரிசை வரிசையாக, ஒருவர்பின் ஒருவராக அந்நாட்டுள் புகுந்து வாழலாயினர்; அவ்வாறு வந்தாருள் கொங்கர், கோசர், மழவர், வேளிர் போன்றாரைப் பற்றியும், அவர் வாழ்ந்த ஊர்கள் சில பற்றியும் புலவர் தம்முடைய பாக்களில் ஆங்காங்கே குறிப்பிட்

டுச் செல்லுகின்றார். பிற நாட்டினின்றும் வந்து கொங்கு நாட்டில் வாழ்ந்து கொங்கா என்ற பெயருடைய இனத்தா, அக்காலப் பெரு விழாக்களுள் ஒன்றாகிய உள்ளி விழாவின்போது, தம அரைகளில் மணிகளை அணிந்து தெருவில் நின்று ஆடிக்காட்டி மகிழ்வூட்டும் நிகழ்ச்சியைக் குறித்துள்ளார், அத்தகைய உள்ளி விழாக்களுள், கருவூர் உள்ளிவிழா மிகவும் சிறப்புடையதாம் என்று களவியல் உரை கூறும்.

"கொங்கர்
மணிஅரை யாத்து மறுகின் ஆடும்
உள்ளி விழவு" (அகம். க சுஅ)

வடநாட்டினின்றும போந்து, தொடக்கத்தில் தளு நாட்டில் வாழ்நதவராய கோசர் என்பார், வீரத்திற்கும், வாய்மைககும் சிறநதாராவர்; அவருடைய ஆண்மை, அவா வாழ்நத நியமம் ஆகியவற்றைப் புலவர் கூறியுள்ளார்; செல்லூர்க்குக் கிழக்கே கடற்கரையைச் சார்ந்துள்ள நியமம செல்வத்தாற் சிறந்தது, அதை ஆண்டிருந்த கோசா, இருமபான் இயன்ற படைக்கலங்கள் பல முறை தாக்கி உண்டாக்கிய புண்வடு நிறைந்த முகத்தினராவர்; அவர் கூறுவன இவை

"செல்லூர்க் குணை அது
பெருங கடல முழக்கிற் றாகி, யாணர்
இரும் பிடம் படித்த வடுவுடை முகத்தா
கடுங்கண் கோசர் நியமம்.' (அகம்: கo)

மழவராவார் சிறந்த வீர மரபினராவர்; இவரைத் தம் படையில் பணியாற்ற விரும்பிய வேந்தர் பலராவர். இவாகள் நாடுகளுட் புகுந்து ஆனிரைகளை, நாட்டார் அறியாவண்ணம் ஓட்டிச் செல்வதும, செல்லும் வழியில் வில்லேந்தி நின்று வருவாரைக் கொன்று வாழ்வதும் ஆய கொடுந் தொழிலுடையராவர். இவாகள், வீளைபோலும் ஒலியோடு விரைநது செல்லும் அமபுடையார; ஆறலைத்து வாழும் வாழ்வுடையார்; ஆனிரைகளைக் கொண்டு அருஞ் சுரத்தை ஒளியும் இயல்புடையார் என்றெல்லாம கூறுகிறார் நம் புலவர்:

"வீஎ அம்பின் விழுத்தொடை மழவர்
நாளா உயதத நாம வெஞ்சுரம்"

"உறுகண் மழவர் உருள்கீண டிட்ட ஆறு."

(அகம்: கஉக, கஉக)

வெளி நாட்டினின்றும் வந்தாருள, வேளிர, தமிழர் என்றே மதிக்கத்தக்க மாண்புடையராவர, வள்ளல் பலரும் பிறந்தது இவ் வேளிர் குடியிலேயே, இவர் வரலாறுகள சங்க இலக்கியங்களுள விளங்க உரைக்கப்பட்டுள்ளன; இவ் வேளிரையும, அவர்க குரியதும, கடலைச் சார்ந்துள்ளதும, உபபு விளையும உப்பளங்களை உடையதும் ஆய வீரை நகரையும, புலவர் தமமுடைய செய்யுளொன்றில் குறிப்பிட்டுள்ளார.

"அடு போர் வேளிர வீரை முன்துறை
நெடுவெள் உப்பின் நிரமபாக் குப்பை" (அகம்: உ0சு)

முருகன் உறையும் சிறப்புடையது, நல்லந்துவனார் பாடிய பெருமை யுடையது எனப பரங்குன்றையும், "சினமிகு முருகன் தண்பரங் குன்றதது, அநதுவன் பாடிய சந்துகெழு நெடுவரை" (அகம 9சு), அலை மோதும் கரைகளை உடையது; நெடுவேள் நிற்கும் சிறப்புடையது; அதன் அழகிய கடற்றுறை, காறறுச சுழன்று வீசுவதால் உண்டாய மணல் மேட்டினை உடையது எனத் திருச்செந்தூரையும், "தாழ்நீர் வெண்தலைப புணரி அலைக்கும் செநதில், நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறைக், கடவளி தொகுப்ப சுண்டிய வடுவாழ் எக்கர்" (புறம்: 9டு), என்றும் அழியாத வேள்விததீ யுடைமையால் அழகுமிக்கது; களததே யாளை பல அழியுமாறு அரசர் பலரை அவர் குடி முதல் அழிய அழித்த பரசுராமன் இருந்து வேள்வி பல முடிதத விழுச் சிறப்புடையது எனச செல்லூரையும், "கெடாஅத் தீயின் உருகெழு செல்லூர்க், கடாஅ யாளைக் குழூஉச் சமம ததைய, மன் மருங கறுத்த மழுவாள் நெடியோன், மூன்முயன்று அரிதினின் முடிதத வேள்வி" (அகம்: உஉ0), முழங்கும் கடலின் அலை அலைக்கும் கரை

உடையது; நெல் வளம் நிறைந்தது என ஊணூரையும், "முழங்கு கடல் ஓதம் காலைக் கொட்கும், பழம்பல் நெல்லின் ஊணூர்," (அகம்: உஉ0), மீன் வளமும் செந்நெல் வளமும் மிக்கது எனத் திருச் சாய்க்கானத்தையும், "முடங்குபுற இறவோடு இனமீன் செறிக்கும், நெடுங்கதிர்க் கழனித் தண் சாய்க்கானம்," (அகம்: உஉ0) அறிந்து பாராட்டியுள்ளார் புலவர்; அவர் பாராட்டிய பிற ஊர்களை அவர் பாட்டில் ஆங்காங்கே அறிந்து கொள்க

மதுரை மருதன் இளநாகனார், இவ்வாறு தம் காலத்தே வாழ்ந்த பேரரசர்களையும், குறுநிலத் தலைவர்களையும், தாம் பார்த்து மகிழ்ந்த பேரூர்களையும் பாராட்டும் பண்பினராதலோடு, தாம் அறிந்த சில நிகழ்ச்சிகளையும் ஆங்காங்கே குறித்துச் செல்லும் இயல்பும் உடையராவர். அவர், மதுரை மாநகரை எரியூட்டிய மாபெரும் பத்தினிக் கடவுளாம் கண்ணகியின் வரலாற்றினை உணர்ந்தவராவர் என்று கொளலத்தக்க நிலையில் ஒரு பாட்டுளது; குருகுகள் ஓவாரிக்கும் கழனியின் அருகிலே நின்ற, கடவுள் காக்கும பெருமையும், எரிபோலும் மலரும் உடைய வேங்கை மரத்தின் மீது கட்டிய பரண் அருகிலே, அயலான் ஒருவன் செய்த செய்கையால் கவலையுற்றுத் தன் ஒரு கொங்கையை அறுத்து நின்றருள் திருமாவுண்ணி என்பாளொருத்தி என அவர் கூறும் இச் செய்தி, கண்ணகி வரலாற்றினை ஒத்துக் காணப்படுதல் காண்க.

"எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்
குருகார் கழனியின் இதணத்து ஆங்கண்
ஏதி லாளன் கவலை கவற்ற
ஒருமுலை அறுத்த திருமா வுண்ணி." (நற்: உகசு)

பழந்தமிழ் மக்கள் மேற்கொண்ட பெருந்தொழில் உழவு ஒன்றே ஆதலின், அவ் வுழவிற்கு உறுதுணை புரியும் ஆனிரைகளை, அவர்கள் தம் பொருளெனப் போற்றிக் காத்தனர். அவர்கள் பொருள் எனப் போற்றிய அவ் ஆனிரைகளையே, அக்காலக் கள்வரும் கவர்ந்து செல்லலாயினர்; இதனால் அந் நிரைகளைக் கவர்வதும், அவற்றை

மீட்பதும் அன்றுட நிகழ்ச்சிகளாகிவிட்டன ; இத்தகைய நிகழ்ச்சிகளில் உண்டாம் போரில், இரு திறத்தாரிலும் பலர் இறப்பர் ; அவ்வாறு இறந்தாருள் மீட்கச் சென்று இறந்தார் மாண்புடையராதலின் அவர்க்குக் கல் நாட்டிச் சிறப்புச் செய்தனர் அக்கால மக்கள் இந் நடுகற் சிறப்பினைப் புலவர் பலவாறு விளக்கிப் பாராட்டுகின்றார் ; இறந்த வீரர்களை, மறவர்கள் விடியற்காலததே ஆக்களைக் கவர்ந்து சென்றுவிட்டாராகத் தம் தாய்மார்களை நினைந்து, அவை சென்ற அரிய சுரவழியில் ஓடி இளைத்து, மேலும் ஓடமாட்டாமல் வருந்திநின்று கண்ணீர் வாரக் கதறிக் கதறி அழும் கன்றுகளின் துயரைப் போக்குவான் வேண்டிச்சென்று அம் மறவரை மடக்கிப் போரிட்டு ஆனிரைகளை மீட்டுத் தந்து, அம் மீட்சிப்போரில் தம உயிர் கொடுத்த ஆண்மையாளர் என்று பாராட்டுகிறார்.

> "வீளை அம்பின் விழுத்தொடை மழவர்
> நாள்அ வுய்த்த நாமவெஞ் சுரத்து
> நடைமெலிந்து ஒழிந்த சேட்படா கன்றின்
> கடைமணி உகுநீர் துடைத்த ஆடவர்." (அகம்: கஉக)

அவ்வாறு இறந்தார்க்கு நடுகல் நடுங்கால், அவர் பெயரும், அவர் பெருமையும் பொறிக்கப்பெற்ற கற்களை அவர் இறந்த அவ்விடங்களில் நடுவர் ; இவ்வாறு வேறே கல் கொணர்ந்து நடுவதே அன்றி, அவர் இறந்த இடங்களில் உள்ள பாறைகளில் அவர் பெயரையும், பெருமையையும் பொறிப்பதும் உண்டு. அவ்வாறு எழுப்பிய நடுகற்கு, மஞ்சள் தெளித்து, மயிற்பீலிசூட்டி, மாலை அணிவித்து வழிபாடு செய்து வணங்கிய பின்னரே உடன் சென்ற வீரர் ஊர் திரும்புவர் ; அவ்வாறு எழுப்பிய அக் கற்கள் அவ்வழிச்செல்லும் வணிகர்தம் பொதிஏறிய வண்டியின் உருள்களால் பலகாலும் தாக்குறுவதால், அக்கற்களில் பொறிக்கப்பெற்ற எழுத்துக்கள் சிதைந்து படிக்க இயலாவாறும், வேறு பொருள்படுமாறும் சிதைந்து பாழாவதும் உண்டு. நடுகற்பற்றி இந் நிகழ்ச்சிகளையும் புலவர் விடாது குறித்துச் சென்றுளார் :

"பெயரும், பீடும் எழுதி அதர்தொறும்
பீலிசூட்டிய பிறங்குநிலை நடுகல்" (அகம்: கஉக)

"குறும்பொறை மருங்கின்
நட்டபோலுமை நடாஅ நெடுங்கல்
அகலிடம் குயின்ற பல்பெயர் மண்ணி
நறுவிரை மஞ்சள் ஈர்ம்புறம் பொலிய
அம்புகொண் டறுத்த ஆநா உரிவையின்
செம்பூங் கரந்தை புனைந்த கண்ணி
வரிவண்டாப்பச சூட்டிய கழற்கால்
இளையர் பதிப் பெயரும்." (அகம்: உசுக)

"மரங்கொள் உமணமகன் பெயரும் பருதிப்
புன்தலை சிதைத்த வன்தலை நடுகல்
கண்ணி வாடிய மண்ணை மருங்குல்
கூருளி குயின்ற கோடுமாய் எழுத்து அவ்
ஆறுசெல் வமபலா வேறுபயம படுகரும்."

(அகம்: நடசுக)

இன்று தமிழகத்தில் நிலவும் இந்து மதம், கடைச் சங்க காலத்திற்குப் பன்னூறு ஆண்டுகட்கு முன்பே, இந் நாட்டில் காலூன்றிவிட்டது. சமயத்திலும், சமுதாயத் திலும் காணப்படும் பழக்க வழக்கங்கள் பலவும் அன்றே நிலைபெற்றிருக்கக் காண்கிறோம். சிவன் மலையை வில்லா கவும், பாம்பை நாணுகவும் கொண்டு ஓர் அம்பு ஏவி, அரக்கர்தம் மூவெயிலை அழித்தான்; நஞ்சுண்டு கறை யேறியது அவன் கண்டம்; பிறையால் விளக்கம்பெறுவது அவன் சென்னி; மூன்று கண் உடையான் அவன் எனச் சிவனையும் (புறம. நிநி), கண்ணன், யமுனை ஆற்றங்கரையில் நீராடி மகிழும் ஆயர் மகளிரின் ஆடைகளை ஒளித்து வைத்து ஆடி மகிழ்ந்தான் எனத் திருமாலையும் (அகம்: நிசு), சூரபன்மாவினையும, அவன் சுற்றத்தினையும் தொலைத்த வேலுடையான், தண்பரங்குன்றத்தே தங்கி உறைவான் என முருகனையும் (அகம்: நிசு), கள்ளை ஒழித்த கடவு ளர்க்கும், அதை ஒழிக்கா அரக்கர்க்கும் ஆசிரியராவர்; அவர்க்கு வேண்டும் அரசியல் நூல் ஆக்கித்தந்தவர் என

வியாழனையும் வெள்ளியையும் (மரு. கலி : ஈச), அறிந்து கூறுவதோடு, மணம் செய்வார், அம் மணவினைக்காம் நன்னாள் வேண்ட, அஃதறிந்து அறிவிப்பார் அந்தணர்; அந்தணர் ஒத்து அறிந்தவர்; அவர் ஒம்பிய எரியினை மண மக்கள் சூழவந்து மணங்கொள்வர் என அந்தணரையும், அவ் அந்தணர் துணைபெற்று நடந்த அக்காலத திருமணங் களையும் (மரு கலி உஅ, ச) நமக்கு உரைததுள்ளார்

தம் காலத்தே நிலவிய சமயநிலைகளை விளக்கிய புலவர் மதுரை மருதன்இளநாகனார், தம் கால மக்கள் இயல்புகள் சிலவற்றையும் எடுத்துக் கூறியுள்ளார், அரசன் அவைக்களததே வாழும ஆன்றோர் தாம் எழுதிபபோகுமு ஓலைகளைப் பிறர் பிரிததுக் காணுவாறு கட்டி அக்கட்டின் மீது முத்திரை பொறிதது விடுதல் வழக்கமாம். பழங் காலத்தே, ஊராண்மைக் கழகங்கட்கு உறுப்பினரைத் தேருங்கால், அவ்வூரார் தாம் விரும்புவார் பெயரைத் தனித்தனி ஓலைகளில் எழுதி ஆன்றோர் கூடியுள்ள அவை யிடை வைத்த குடத்தினுள் இடுவர், அக்குடத்தினை ஆங் குள்ளார் பலரும காணத் திறநது அவ்வோலைகளை எடுதது ஆராய்வதற்குமுன், அக்குடத்தின்மீது இடப்பெற்ற அரச இலச்சினையைப் பழுதாகாதிருப்பதகண்டு போக்கிக் குடத் தினைப் பிரிப்பர். இந்நிகழ்ச்சிகளைப் புலவர் இருவேறு இடங்களில் எடுத்துக் காட்டியுள்ளார் (அகம் : எஎ, மரு. கலி : உகூ)

வணிகர்கள், தம் பண்டப் பொதிகளை வண்டிகளி லேயே அன்றிக் கழுதைகள்மீதும் ஏற்றிக்கொண்டு செல்வர் என்றும், அவ்வாறு செல்லும்வணிகர்க்கு ஆறலை கள்வரால் உண்டாம் ஆக்கக்கேட்டினை அழித்துக் துணை புரிவான் வேண்டி வீரர் பலர் அவ்வணிகர் குழுவோடு செல்வர் என்றும் கூறுகிறார் (அகம் : ஈசஈ).

பழந்தமிழர், கடல் கடந்து சென்றும் வணிகம் புரிந் தவராவர்; அவர்கள் பெருங்கடலைக் கடந்து செல்வதற்கு வேண்டும் பெரிய பெரிய கப்பல்களைக் கொண்டிருந்தனர்; அத்தகைய கப்பல்கள் ஓர் ஊரே எனத் தோன்றுமாறு

பெருமையுடையனவாம்; அக்கப்பல்கள், கடல் அலைகளாலும், காற்றாலும் அசைவுறாமல், காற்று ஓடும் திசை அறிந்து ஓட்டவல்ல மாலுமிகளைப் பெற்றிருந்தன; அம் மாலுமிகள் இரவில் திசையறிந்து செலுத்துவதற்குத் துணை புரியும் கலங்கரை விளக்கங்கள் தமிழ்நாட்டின் கடற் கரை நகர்தோறும் நின்றுவிளங்கும். பழந்தமிழர்தம் இக்கடல் வாணிபச் சிறப்பினையும் புலவர் கூறியுள்ளார் (அகம் : உருரு).

நிலத்தினும், நீரினும் நெடுந்தொலைவு கடந்து சென்று வாணிகம் புரியும் வணிகர்க்கு அவர் செல்லும் வழியில் துயர் விளைக்கும் ஆறலை கள்வர்களையும் கொண்டிருந்தது தமிழகம்; அக்கள்வரின் இயல்பு கூறுவார், அவர்கள் தம் வாழ்வு நன்கு நடைபெற மழையை எதிர்நோக்கி நில்லார்; அவர்க்கு வேண்டுவது மழையன்று; பாலை வழிகளில் தாம் மறைந்துநின்று அவ்வழி வருவாரை அலைத்துப் பொருள் கவர்தற்கு ஏற்ற, வருவார்க்குக் கவலைதரும் இடங்களே அவர்க்கு வேண்டுவன என்று கூறுகிறார் (அக : ககூஉ).

மதுரை மருதன் இளநாகனார், இவ்வாறு தம்காலத்தே நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும், நிலவிய வழக்காறுகளையும் அறிந்த அறிவினராதலோடு, தம்மைச் சூழவாழ்ந்த உயிர்ப் பன்மைகளின் இயல்புகளையும் உணர்ந்த உணர்வினராவர் என்பதை அவர் பாடல்கள் உணர்த்துகின்றன. கொக்கு தான் கொணர்ந்த மீனைக் குடைந்து உண்டலால் எழுந்த நாற்றம் பொறாது குரங்கு தும்மும் (நற் : ஙஉசு), களிறு நீர் தேடிச்சென்று கண்ட கலங்கல் நீரால், தன் பிடியையும் கன்றையும் கழுவிவிட்டு, எஞ்சிய சேற்றினைத் தன் தலையில் வாரி இறைத்துக்கொள்ளும் (அகம் : கஉக); பருந்து, தன் குஞ்சுக்கு ஊட்டிய ஊன், தவறிக் கீழேவிழ, அதை ஆங்குக் காத்துக்கிடந்த நரி எடுத்து ஓடும் (அகம் : ககூஉ) என்று அவர் கூறுவனவற்றைக் கூர்ந்து உணர்க.

தாமரை மலர்ந்த பொய்கையுட் புகுந்து ஆடும் அன்னங்களுள் சேவலன்னம், அத்தாமரை இலைகளிடையே

மறைப்புண்டதாக, அதைக் காணப்பெறுத பெடை அன்னம், அதை அப்பொய்கையெல்லாம் தேடிவருங்கால், வானத்துமதி நீருட் தோன்றியதாக, அதுவே தன் சேவலாம் எனக்கொண்டு, அதன்பால் விரைந்து போங் கால், எதிரே தன் சேவல் வரக்கண்டு, தன் அறியாமைக்கு நாணிப் பூக்களிடையே புகுந்து மறைந்துகொள்ளும் எனவும், மணமக்கள், மணப்பந்தலில அந்தணா ஓம்பிய செந்தீயை வலம்வருதலேபால், சேவலும் பெடையுமாகிய அன்னங்கள், பொய்கையில மலர்ந்து கிடக்கும் செந் தாமரை மலர்களைச சூழவரும் எனவும் புலவர் காட்டும் அன்னப்புள் வாழுமகுளக காட்சிகள் கண்முன் தோன்றிக் கவினளிததல் காண்க.

" மணிநிற மலர்ப்பொய்கை மகிழ்ந்தாடும் அன்னம், தன்
அணிமிகு சேவலை, அகலடை மறைத்தெனக,
கதுமெனக காணாது, கலங்கி, அம்மடப் பெடை
மதிநீழல் நீருட்கண்டு, அதுவென உவந்தோடித,
தனனத தன்னதிரவருஉம் துணைகண்டு மிகநாணிப்
பன்மலர் இடைப்பு கூஉம் "

" தாதுசூழ் தாமரைத் தனிமலர்ப் புறஞ்சேபு,
காதலகொள் வதுவைநாள் கலிங்கதத்துள் ஒடுங்கிய
மாதாகொள மான்நோகதின் மடநதை தன் துணையாக
ஓதுடை அநதணன் எரிவலம செயவானபோல்
ஆய்தூவி அன்னம்தன் அணிநடைப் பெடையொடு
மேதகத் திரிதரும் " (மருதகலி . கூ, ச)

மதுரை மருதன் இளநாகனார், அழகிய உவமைகளை ஆங்காங்கே எடுததாளும் திறம, எழுத்தறிந்தார் அனைவ ராலும் அறிந்து போற்றததக்க அழகு வாய்ந்தனவாம். எருமைமீது ஏறிச்செல்லும் சிறுர்க்குக் கற்பாறைமீது அமர்ந்திருக்கும் குரங்கையும் (அகம் : உ0சு), மகனைக் கண்ட தந்தை, அம்மகனுழை மகிழ்ந்து விரைதற்குக், கட்டிய கன்றை நோக்கி விரைந்தோடும் பசுவின்செயலையும், (மரு. கலி : கசு) நனவே கனவாம் என்பதை விளக்க, உள்ளம் உருவாக்கும் பண்ணை, பறையில் ஒலித்துப்

புலனுதலியும் (மரு. கலி : உள), உலகத்து உயிர்க்கு உற்ற துயர் நோக்கிப் பெய்யும் மழைக்குக் குழந்தையின் முகம் நோக்கிப் பால்சுரக்கும் தாயையும், (மரு. கலி ஈச) ஓர் ஊரிற் பிறந்தாள் ஒருத்தி, அவள் தந்தை, அவளை விரும்பிய வேந்தர்க்கு அளிக்க மறுப்பதால், அவரால் அவ்வூர் அழிதலின், அவ்வூர் அழிவிற்கு அவளே காரண மாதலை விளக்க, விறகில் தோன்றிய தீ, அவ்விறகையே அழிப்பதையும், (புற : ஈசசு) தன் கணவன் விரைந்து வராமையால் உற்ற துன்பத்தால் அவள் தோள் மெலிதற்கு, மழையால் கரையும் உப்புக் குவியலையும் (அகம் : உசுஏ), தலைவிக்கு உண்டாம் துயரைத் தலைவன் முன்னின்று போக்குவதற்குக், கண்ணில் விழும் நுண்ணிய தூசினைத் தடுத்துக் காக்கும் கைகளின் செயலையும் (நற் : உகசு), காட்டில் அல்லன கடிந்து, நல்லன ஒம்பும் நல்லறி வுடையனைய தலைவன், தலைவிக்குற்ற துயர் அறியாததற்கு, மிகச் சேய்மைக்கண் உள்ள பொருள்களையும் காணவல்ல கண்கள, தம்பால் உள்ள வடுவைப் பிறர் உணர்த்தவும் உணராமாட்டாமையினையும் (மரு கலி : ஈச) உவமை காட்டியுள்ளார், அவர் காட்டிய பிறவுமைகளையும் ஈண்டு எடுத்துக்காட்டின் ஏடு விரியும் எனினும், ஒன்றை மட்டும் உரைத்து மேற் செல்கின்றேன்.

அமைதி நிலவிய ஒரு நாட்டில், மக்கள் மகிழ்ந்து வாழ்ந்திருந்தனர்; ஒருநாள பகைவர் படையொன்று அந் நாட்டுட் புகுந்து பாழ்செய்யத் தொடங்கிவிட்டது; அதனால், ஆண்டு வாழ்தல் இனி இயலாது என அறிந்த அந்நாட்டுக் குடிகள், அந்நாட்டை விட்டகன்று, நல்லாட்சி நிலவும் பிறிதொரு நாட்டைத்தேடி உழல்வாராயினர்; அவர் ஆண்டு வாழினும், அவர் உள்ளமெல்லாம் தாம் பிறந்து வாழ்ந்த தம் நாட்டை மறவாது எண்ணியிருந்தது; சின்னாட்களுக்குள், அழிந்த நாட்டிற்குரிய அரசன், தன் படைத்துணையால் பகைவரை அழித்துப் போக்கினன்; நாட்டில் பண்டைநிலை நிலவிற்று; அஃதறிந்த அக்குடிகள், மீண்டும் தம் நாடு புகுந்து மகிழ்ந்து உறைவாராயினர்.

ஒரு பொய்கைக்கண் மலர்ந்திருந்த தாமரைமலர் ஒன்றில் தும்பி ஒன்று தன் பெடையோடு தேனுண்டு வாழ்ந்திருந்தது; ஒருநாள் அப் பொய்கையின் கரை, திடும் என உடைத்துக்கொள்ளவே, அவ்வுடைப்பின் வழியே வெள்ளம் உட்புகுந்துவிட்டது; தாமரை மலர்கள் நீருள் ஆழ்ந்துவிட்டன; தான் வாழ்ந்த மலர் நீருட் புகுந்து விட்டமையால், இனி அதில வாழ்தல் இயலாது என அறிந்த அத்தும்பி, அக்குளத்தைவிட்டு நீங்கிக் காவல் நிறைந்த கரையமைந்த பிறிதொரு பொய்கைதேடி உழன்றது; பின்னர்ப் பண்டைப பொய்கைக்குரியார், உடைந்த அவ்வுடைப்பினை அடைத்துப் புகுந்த புதுப் புனலைப் போக்கிவிடவே, தாமரை மலர்கள பண்டே போல் தலைதூக்கி நிற்கலாயின, அஃதறிந்த அத்தும்பி, மீண்டுவந்து தன் மலருட் புகுந்து மகிழ்ந்து உறைகின்றது.

இவ்விரு காட்சிகளையும கண்ட நம் புலவர், இவ்விரண்டையும் உவமையும் பொருளுமாக்கிக கூறி அறிவிக்கும் நிறம் அறிந்து அகம் மகிழ்வோமாக.

‘ பன்மலர்ப் பழனத்த பாசடைத தாமரை
இன்மலர் இமிரூதும தூணைபுணா இருந்தும்பி,
உண்துறை உடைந்தூப் புனல சாயப்பப, புலந்து ஊடிப்
பண்புடை நன்னாட்டுப் பகைதலை வந்தென,
அதுகை விட்டகன்று ஏரீஇக, காகிறபான் குடைந்ழல்
பதிபடர்ந்து இறைகொள்ளும் குடிபோலப் பிறிதுமொரு
பொயகை தேர்ந்து அலமரும் பொழுதிஞன் மொய்தப
இறைபகை தணிப்ப அக்குடிபதிப் பெயர்ந்தாங்கு
நிறைபுனல் நீங்கவந்து அத்தும்பி அமமலாப்
பறைதவிா பசைவிடூஉம் பாய்புனல் நல்லூர.”

(மருதக கலி : கந)

மதுரை மருதன் இளநாகனார் பாடிய அகத்துறைப் பாடல்கள் ஒவ்வொன்றும், அக்கால மக்கள்தம் உயரிய உள்ளத்தை உலகறிய உணர்த்தும் இயல்பினவாம்; அவை யனைதையும் ஈண்டு எடுத்துரைப்பது இயலாது ஆதலின், அவற்றுள், தலைவன், தலைவி, தோழி ஆக இவர்கள் ஒவ்

வொருவர் உள்ளத்தையும், ஒவ்வொரு செய்யுளான் உணர்வோமாக.

"தோன்றின் புகழொடு தோன்றுக; அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்று கூறுவர் பெரியோர்; இதனால், உயிரினும் புகழே சிறந்ததாதல் அவர் கருத்தாம் அப்புகழ் ஈதலால் உண்டாம், ஈதலும், இசைபட வாழ்தலும் பொருள் உடையார்க்கன்றி இயலாது; ஆகவே, உயிரினும் சிறந்தது பொருளாம். அப்பொருள் அரிதின் முயல்வார்க்கே ஆகும்; ஆகவே அப்பொருள் தேடிப்போதல் அறிவுடைமையாம். ஒரு தலைவன் இவ் வறிவுடையனாயினான்; பொருள்தேடிப் போக எண்ணினான்; ஆனால், அவன் மனைவிபால் அவன் கொண்டுள்ள அன்பு அவனைப் பிரியவிடாமல் தடுத்து நிறுத்தலாயிற்று; அவன் பிரியின் அவள் வாழாள். அவள் இன்றி அவன் வாழான் ஆக ஒருவழியில் அவன உயிரினும அவள் சிறந்தாளா யினாள், இங்ஙனேயில் அவளைத் தேற்றாது பிரிந்து சென்று பொருள் கொணர்ந்தும் பயனின்றாய் முடியும்; ஆகவே அவள், தான் போதல் அறிவுடைமையாம் என உணர்ந்தது; அவ்வுணர்வு வரப்பெற்றமையால், பிரிவைத் தாங்கும் ஆற்ற லுடையளாயினள் என அறிந்து செல்வதே அறிவுடைமை யாம என எண்ணினான். இவ்வாறு காதல், கடமை ஆகிய இரண்டையும் கைவிடாது நின்றே உயர்ந்த வாழ்வு வாழ எண்ணும் அவ ஆண் மகன் உளளத்தை உணர்ந்து உயர் வடைவோமாக!

"உயிரினும் சிறந்த ஒண்பொருள் தருமார்
நன்று புரி காட்சியர் சென்றனர் அவர் என
மனைவலித்து ஒழியும் மதுகையளாதல்
நீ நன்கறிந்தனை யாயின் நீங்கி
..... ..... .. .. .. .....
சென்மோ நெஞ்சம்!" (அகம்: உசடு)

சிறுவர்களைப் பேணி வளர்ப்பவர் பெண்டிர்; அவர்க்கே அப்பண்பு உண்டு; இளைஞர்க்கு இன்சொல் கலந்த அறி வுரை வழங்கிவளர்க்கும் பெண்டிர்பால் தாயன்பும் கலந்து

விடின், அவர் வளர்க்க வளர்ந்தார் வளமார் பண்புற்று வாழ்வர்: தம் வயிற்றுதித்த சிறுவர்களே அத்தகையார் பால் ஒப்படைப்பதினும், அவரைப் பேணிவளர்க்கும் அப் பணியைத தாமே மேற் கொள்ளின், அம் மக்கள மாண் பினராதலில் சிறிதும் ஐயம இராதனறே? தமிழகத்தே, தம் மக்களே அறிவூட்டி வளாக்கும அபபணியினைத் தாய் மாரே மேற் கொண்டனர என்பதைப் புலவர ஒரு செய்யு ளிடைக்தே கூறியுளளார். ஒரு தாய், அறிவன அறிந்த அறிவுடையளாய்த் திகழ்ந்தாள் தவறு செய்வான் தன் கணவனுயினும, அதை எடுத்துக் காட்டித திருத்தத தயங் காள அவள் கணவன், அவனையும, அவள மகனையும் பிரிந்து பரதசை வீடு சென்று பழியுடையனுயினன், அவ் வாறு வாழ்ந்த அவன் பின்னர்த் தவறு உணாந்து தன் வீடு வந்து சோந்தான், அவன் வந்ததை அறிந்தாள் அவள்; அவன் பால காணலாம நற்பண்பு கண்டு பாராட்டும் தான், அவன் பரத்தையர ஒழுக்கத்தினைப பழிப்பதை அவன் உளர உணாத்த விருமபினுள், உடனே, அவள அவனைக் காணுள போனறு, தன் மகனை அருகழைத்து அவனுக்கு அறிவுரை கூறுவாள போல், தன் கணவனுக்கு அறிவுரை கூறினுள். மகனை அணைத்துக கொண்டவாறே, "என் அருமை மகனே! நீ நின தநதையின் வடிவும, வனப்புமே, நின் வடிவும, வனப்புமாயக் கொண்டு விளங்கு கினறனை எனினும், நின்தநதை பால் காணலாம் பண்புகளில் எவற் றைக் கொளளலாம? எவற்றைக கொள்ளலாகாது என் பதை யான்கூற அறிந்து மேற்கொள்வாயாக! தன்னொடு பகைத்த பகைவரைப பாய்ந்து வென்று களங்கொளளும் ஆற்றல அவர பால் உணடு, அதை நீ பெற்றுக்கொள்; இவர நமமவர், ஆகவே பிழைபுரியினும் விடுக. இவர் பகைவர், ஆகவே பழியிலராயினும ஒறுக்க என எண்ணும் இயல்பின்றி எவாக்கும் ஒருபடித்தர அறங்கூறும செம் மைப பண்பு நின் தந்தை பால உண்டு, அதையும் நீ பெற் றுக் கொள், தம் பால்பொருள் வேண்டி வந்து இரந்தார்க்கு வரையாது வழங்கும் வள்ளன்மை அவர் பால் உண்டு; அதையும் நீ பெற்றுக்கொள், ஆனல் தமமோடு ஒருமனப்

பட்டு ஒன்றி வாழ்ந்த மகளிரையும் பிரிந்து துயர் உறுத்தும் பழிக்குணமும் அவர் பால் உண்டு; அதை நீ கொள்ளற்க!" என்று தன் மகன் கொள்ளலாம் குணம் இவை; கள்ளலாம் குற்றம் இவை என எடுத்தோதினாள். இத் தாயின் நல்லறிவும், நற்பண்பும் தமிழகத்துத் தாய்மார்க்குத் துணை புரியுமாக!

"செமமால்! வனப்பெலாம் நுங்தையை ஒப்பினும், நுங்தை
நிலைப்பாலுள் ஒத்தகுறி என்வாய்ககேட்டு ஒத்தி,
கன்றிய தெவவாக் கடந்து களங்கொள்ளும்
வென்றி மாட்டொத்தி; பெரும! மற்று ஒவ்வாதி
ஒன்றினேம் யாம் என்று உணாஅதாரை நுங்தைபோல்
மென்தோள் நெகிழவிடல்;
பால் கொளல் இன்றிப் பகல்போல் முறைகசு ஒலகா
கோல் செமமை ஒத்தி, பெரும! மற்று ஒவ்வாதி
கால் பெரு பூவின் கவின் வாட, நுங்தைபோல்
சால் பாய்ந்தார் சாயவிடல்;
வீதல் அறியா விழுப்பொருள் நசஇயார்க்கு
ாதல் மாட்டொத்தி; பெரும! மற்று ஒவ்வாதி
மாதர் மென் நோக்கின் மகளிரை நுங்தை போல்
நோய்கூர நோக்காய் விடல"  (மருதக கலி: உகூ)

தலைவிபெறும் இன்பம தான்பெறும் இன்பமாம் எனவும், அவளுக்குற்ற துயர், தனக்குற்ற துயராகவும் எண்ணும் இயல்புடையாள் தோழி. தோழியும், தலைவியும் சுருடலும் ஒருயிருமாய் வாழும் இயல்பினரஎவர் என்பதைப் புலவா, ஒருபாட்டில் எடுததுக் காட்டியுள்ளார். தமர், தாம் விருமபிய தலைமகனுககுத் தலைவியை மணம் செய்து தாரா என்பதறிநதாள் தோழி, அந்நிலையில் தலைவியின் கற்பு கெடாமை வேண்டுமாயின், அவள் அததலைவனோடு அவனூர் சென்று ஆண்டு அவனை மணந்து வாழ்வதேதக்கது எனததுணிந்தாள்; இதுகாறும் பிரிந்தறியா அவளைப் பிரிதல் தனக்குப் பெருந்துயா தருவதாயின், அப்பிரிவில் அவள் கற்பு உளது என்ற உள்ளததால், ஒருவாறு உறுதி பெற்றாள், இருவரும் போதற்கு ஆவன புரிந்து நின்றாள்;

அவர்கள் போகும் வழியின் கொடுமையினையும், அவ்வழியில் நடந்து வருந்தும் தன் தோழியின் துயர் உறு நிலையினையும் எண்ணினாள்; ஆறுத்துயர் உற்றாள்; அவ்வழி, அவள் போகுமாறு இனிமை உடையதாக மாறுதா! வெயிலால் வாடிவதற்றிய மரங்கள், தளிர் ஈன்று தழைக்கவும், வெப்பம் நீங்கவும், விசும்பெலாம் இருண்டு வேண்டும் அளவு பெய்ய மேகம் வரிசைவரிசையாக எழாதா! மழை பெய்த நிலத்தே பசும் புல் தோன்றிப் படராதா! அப்பசும் புல் இடையிடையே செங்நிறக் கோபம் சிதறிக்கிடந்து கவினுறு காட்சியதாகாதா! என்றெல்லாம் ஏங்கினாள்; என்னே அவள் அன்பு! என்னே அவள் உள்ளத் தூய்மை!

"செலவுதலைக் கொண்ட பெருவிதுப்புறவி
..... .. ..... . ... . ..... .. ..
போகுநர் புலம்பும் ஆறே எகுதற்கு
அரிய வாகும் என்னுமைக் கரிமரங்
கணைகை இளங்குழை கான்முதற் கவினி,
விசும்புடன் இருண்டு, வெம்மை நீங்கப்
பசுங்கண வானம பாய்தலி பொழிந்தெனப்
புல் நுகும்பு எடுத்த நன்னெடுங் கானது
ஊடுபஞ்சிப் பிசா பரந்தன்ன
வண்ண மூதாய் தணணிலம் வரிப்ப
இயை வாகுக தணிந்தே
இன்னு நீப்பின் நீன்றெடு செலற்கே." (அகம்: உஅக)

இறுதியாக, மதுரை மருதன் இளநாகனார்பால் மண்டிக்கிடந்த மாண்பு ஒன்றைக் கூறுவோமாக. மதுரை மருதன் இளநாகனார் புலவர் பலர் வாழ்ந்த மதுரையில் வாழ்ந்தவர்; அப்புலவர்களின் பெருமையை உணர்ந்தவர்; அப்புலவரோடு பழகிய பண்புடையவர். அதனால் அப் புலவர்தம் பெருமையறிந்து போற்றும பெருங்குணமுடையராயினர்; பரங்குன்றைப பாராட்ட எண்ணிய புலவர், அது அந்துவன் பாடியதால் பெருமையுற்றது என்று கூறிய ஒன்றே அவர்க்குப் புலவர்பால் உள்ள பெருமதிப்பை உணர்த்தவல்லதாம், அவர் அவ்வளவோடு

அமைதியுறுது புலவர்தம் பண்புகளைப் போற்றிப் புகழ் இன்றூர், ஆசிரியராவார் உரைதத இன்சொல் அன்றி இன்னசொல கேட்டறியாச் செவியே நிலமாகவும் முன்னோர் கூறிய அறவுரைகளே நீராகவும், அறிவினீன உடைய நாவே ஏராகவும் கொண்டு உழுது புதுப்பொருள் கண்டு மகிழும் மாண்புடையார் புலவா என்று பாராட்டும் பண்பினராவர் நம் மதுரை மருதன் இளநாகனர் என்பதறிந்து, "பொருமை புலவாக்கு அணிகலம்" என வழங்கும் புல்லுரை பொன்றுமாக!

"வல்லவா
செதுமொழி சீதத செவி செறுவாக:
முதுமொழி நீராப், புலன்நா உழவா
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ புனலூா."
(மருதகலி · கூ)

## ௪௪. மாதிரத்தனார்

மாதிரம் எனும் சொல், திசைகள் எனும் பொருள் உடையது ; இவர்க்கு இப்பெயர் வழங்குதற்காம் காரணம் இஃது எனப் புலப்படவில்லை ; இவர் பெயர், மாதீரத்தன் என்றும், மாதீர்த்தன் என்றும் ஏடுகளில் காணப்படுகின்றன.

"ஐய ! எம ஊர்க்கு அணித்தேயுளது, ஊரார் நீர் உண்ணும் பொய்கை, அப்பொய்கை அடுத்தது ஒடுகிறது ஒரு சிறிய காட்டாறு, அக்காட்டாற்றினை அடுத்துளது ஒரு பொழில், அப்பொழிற்கண் ஆற்றிலும், பொய்கையிலும் மீன் தேடியுண்ணும் பறவைகள் ஒழிய, பிறர் எவரும் அணுகார், யாங்கள் எம் கூந்தலுக்கு இட்டுப் பிசைய உதவும் எருமண் கொணர்வான் வேண்டி, ஆங்கு வருவேம், எமமோடு எந்தலைவியும் வருவள்" என்று கூறி, ஊர்க்கு அணித்தே உள்ள பொய்கையை யடுத்துளது ஆகவே, பொழிற்கண் வருதல் எமக்கு எளிது என்றும், ஆங்குள்ள அப்பொழில், பறவையன்றிப பிறர் அணுகையாத் தனிமையுடையது ஆகவே, அப்பொழிற்கண் தலைவியைத் தனித்துக் காணலும் இயலும் என்றும், ஆங்குத் தலைவியொடு வரும் யாங்கள், மண்கொணரும நோக்குடையேம் ஆதலின், யாங்கள் ஆற்றங்கரையில் நிற்பதன்றி, பொழிலிடையே புகேம், ஆகவே, யாங்கள் வருவதால தும் கூட்டத்திற்கு ஊறு இன்றும் என்றும் கூறி, ஆகவே "ஐய ! தலைவியைக் காணவிரும்பும் நீ ஆண்டு வருக" எனத் தோழி பகற்குறியிடம் நேரும் துறையமையப் பாடிய புலவர் பாட்டொன்று குறுந்தொகைக்கண் இடம் பெற்றுளது.

இச்செய்யுற்கண் ஊரும், ஊரைச்சார்ந்த ஊருணியும், அவ்வூருணியைச் சார்ந்து ஓடும் ஆறும், அவ்விரு நீர்நிலைகட்கும் இடையே அழகிய ஒரு சோலையும் அமைந்து அழகுதர விளங்கிய தமிழகத்துச் சிற்றூர்க் காட்சிகளை

நன்கு தீட்டிக் காட்டியுள்ளார் புலவர்; கூந்தலில் உள்ள எண்ணெய்ப்பசை, அழுக்கு முதலாயினவற்றைப் போக்குதற் பொருட்டுக் களிமண்ணைத் தேய்த்துக்கொண்டு மகளிர் நீராடும் வழக்கம், இன்றேபோல் அன்றும் தமிழகத்துச் சிற்றூர்களில் நிகழ்ந்ததையும் புலவர் எடுத்துக் காட்டியுள்ளார்; ஒரு சிறு பாட்டிலேயே பழந்தமிழகத்துச் சிற்றூர்க் காட்சிகளையும், அச் சிற்றூர்வாழ் மக்கள் வாழ்வியலையும் வகுத்துக்காட்டிய திறம் வியத்தற்குரியதா மன்றே?

"ஊர்க்கும் அணித்தே பொய்கை, பொய்கைக்குச
சேய்த்தும் அன்றே சிறுகான் யாறே,
இரைதேர் வெண்குருகல்லது யாவதும்
தன்னல் போகின்றில் பொழிலே; யாம், எம்
கூழைக்கு எருமண் கொணர்கம் சேறும்;
ஆண்டும் வருகுவள் பெரும் பேதையே." (குறுந்· ககஉ)

## கஉ. மாமூலனார்

கபிலர், பரணர், நக்கீரர் போன்ற பெரும்புலவர் வரிசையுள் வைத்து மதிக்கத்தக்க மாண்புடைப் புலவராவார் மாமூலனார், சிவனடியார்களுள் ஒருவராய்த் திருமூலம் பாடிய திருமூலர் வேறு, மாமூலர் வேறு, மாமூலனார் அந்தணர் குலத்தவர்; தவத்திற் சிறந்தவர், இது, "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்ற தொல்காப்பியம புறத்திணையியற் சூத்திரத்திற்கு (உ0) உரை வகுத்த ஆசிரியர நச்சினார்க்கினியர், "யோகிகளாய், உபாயங்களான் முக்காலமும் உணர்ந்த மாமூலர் முதலியோர் அறிவன் தேயதது அணேகிலை வகையோராவர்" என எழுதியிருப்பதால் இனிது விளங்கும். மாவடியில் மகிழ்ந்துறையும காஞ்சி ஏகம்பத்துறை இறைவனே மாமூலன் என வழங்கப்படுவன் எனக்கொள்ளின், மாமூலனார் சைவராவர் என்றும் கொள்ளலாம், இலக்கண உரையாசிரியர்கள் கபில பரணர் என்ற தொகையினை எடுத்தாளுதல் போன்றே, கல்லாட மாமூலனார் என்ற தொகையினையும் ஒரோவழி எடுத்தாளுப; இதனால், கல்லாடாக்கும், மாமூலர்க்கும் யாதோ ஒருவகையான் தொடர்புண்டாதல் தெளிவாம்.

மாமூலனார் பாடிய பாக்களாக மூப்பது பாக்கள் கிடைத்துள்ளன; அவற்றுள், புறத்திணை தழுவிவந்த பாட்டு ஒன்றுகூட இல்லை; அணைத்தும் அகப்பொருள் தழுவ வந்துள்ளனவே; மாமூலனார பாடிய பாக்கள் அணைத்தும அகத்திணைப் பொருளுடையவேயாயினும், அவரால் உணர்த்தப்படும் புறப்பொருள் பலவாம தமிழ கததின் வரலாறு அறியத் துணை புரிந்தார் மாமூலனாரினும சிறந்தாரிலர், வரலாறு உரைக்காது வந்த பாட்டு ஒன்றுகூட இல்லை எனலாம்; அவர் பாக்கள் ஒவ்வொன்றும் வரலாற்றுக் குறிப்புக்களுள் ஒன்றோ பலவோ அமையவே பாடப்பட்டுள்ளன. பேரரசரும், சிற்றரசருமாய்த் தமிழ்

நாடாண்ட அரசர்கள் தம் வரலாற்றையெயன்றித் தமிழகத் திற்கு அப்பாற்பட்ட நாடுகளை ஆண்ட அரசர்கள் வரலாற் றையும் மாமூலனார் அறிந்து அறிவித்துள்ளார்; அவர் தம் காலதேதை நிகழ்ந்த அரசியல் நிகழ்ச்சிகளையே அல்லாமல், தம் காலத்திற்கு முற்பட்ட காலத்தே நிகழ்ந்த அரசியல் நிகழ்ச்சிகளையும், அறிந்தார வாய்க்கேட்டு அறிவித் துள்ளார்; அவர் பாக்களால் அறியத்தக்க அரசியல் நிகழ்ச்சிகளை முதற்கண் அறிவோமாக!

மாமூலனார் காலத்தே, தமிழ் வேந்தர் தம் ஆட்சிப் பரப்பு, தமிழகத்திற்கு அப்பாற்பட்டு, பிறமொழி வழங் கும் நாடுகளிலும் பரவியிருந்தது; விற்போரிட்டுப் பகை வரை அழித்தது, அவ் வெற்றியால் பெற்ற திறைபொருள் உண்ணும் வல்லாண்மை மிக்க வாழ்வினராய தமிழரசர் மூவரும் காக்கும், வேற்றுமொழி வழங்கும் நாடு என்ற தொடரால் அது வெளியாதல் காண்க.

"வென்றியொடு
விலலலாதது உணணும் வல்லாண வாழக்கைத்
தமிழ கெழு மூவா காக்கும
மொழி பெயா தேயம்." (அகம் 44)

வரலாறு விளங்க வாழ்ந்த சேர அரசர்களுள் முன் னிலையில் நிற்போன் பெருஞ்சோற்றுதியன் சேரலாத னவன்; இவன் மனைவி, வெளியன் வேண்மான் மகள் நல்லினி என்பவள் என்றும், இவன் மகனே இமயவரம் பன் நெடுஞ் சேரலாதன் என்றும் பதிற்றுப்பத்துப் பதிகத் தால் அறிகிறோம்; பாரதப் போர் நிகழும் காலத்தே, இருதிறப் படைகளுக்கும், போர் மூடியுங்காறும் உண வளித்துப் புரந்தான இவன் என மூரஞ்சியூர் முடிநாகராயர் என்ற முதற் சங்கப் புலவர் மொழிவர். இவனைப் பாடிய புலவர், உதியன் சேரலாதன், பகைவர் நாடுகளை வென்று தன்னுட்டோடு சேர்த்துச் சேரநாட் டெல்லையை விரியக் கண்ட வீறுடையான் என்றும், அவனைப் பாடிச் செல்லும் பரிசிலர், பொருள்பெற்று மகிழ்வர் என்றும், உதியன் சேரலாதன் வீரத்திற் சிறந்த குதிரைப்படை உடையவன்;

பின்னேக்காப் பேராண்மை உடையவன்; இறந்து துறக்கம் எய்திய முன்னோர்க்காக, ஆண்டுதோறும் விழா வெடுக்கும் வழக்கமுடையவன்; அவ விழாக் காலத்தே வருவார் எவர்க்கும் சோறு அளித்துப் புரக்கும் பேருள்ளம் உடையவன், அச் சோறு உண்ணும் எண்ணத்தால், மக்களே அல்லாமல் கூளிகளும் அவண்வந்து குவியும் என்றும் கூறுகிறார். உதியன் பெருஞ்சோறு குறித்துப் புலவர் மாமூலனார் கூறுவனவே உண்மையாம, வரலாற்று நெறியொடு பட்டதும் அதுவே என்பதைப் பிற புலவர் பாக்களும் உறுதி செய்கின்றன.

"ஈரடுகண் அகற்றிய உதியஞ் சேரற்
பாடிச செனற பரிசிலர் போல
உவ வினி வாழி." (அகம: சுடு)

"மறப்படைக் குதிரை மாரு மைந்தின்
துறககம் எயதிய தொய்யா நல்லிசை
முதியாப் பேணிய உதியஞ் சேரல்
பெருஞ்சோறு கொடுதத ஞான்றை இருமபல்
கூளிச சுற்றம் குழீஇ இருந்தாஙகு." (அகம உகூட)

மாமூலனார், சேரலாதன் எனும பெயருடையாரெரு சேர அரசன், கரிகால் வளவனொடு, வெண்ணி எனும் இடததே நடத்திய போரில் புறப்புண் பெற்றான், அது கண்டு உளம் வெட்கி உயிர்விடத் துணிந்து வடக்கிருந்தான்; இறந்து போகின்றான் என்பதனால் இன்னுமையும. புறப்புண் நாணி உயிர் விடுகின்றான் என்பதனால் இனிமையும் உடைய அச் செய்தி கேட்ட, அவன்பால் அன்புடைய ஆன்றோர் பலரும் அவனொடு வடக்கிருந்து உயிர்விட்டுத் துறக்கம் புக்கனர் என்ற செய்தியை ஓரிடத்தே கூறியுள்ளார் சேரர், சோழர் ஆகிய இரு குலத்தார் வரலாறுகளையும் ஒருங்கு வைத்து ஊனறி நோக்குவார்க்குக் கரிகாலனொடு போரிட்டுப் புறப்புண் பெற்று உயிர்நீத்த சேரலாதன், பெருஞ் சோற்றுதியன் சேரலாதனே என்பது நன்கு புலனும்.

"ஒண்படைக்
கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருது புண் நாணிய சேரலாதன்
அழிகள மருங்கின் வாள்வடக்கு இருந்தென
இன்ஞ இன்னுரை கேட்ட சான்றோர்
அரும்பெறல் உலகத்து அவனொடு செலீஇயா
பெரும் பிறிது ஆகி யாங்கு." (அகம் · நிநி)

பெருஞ சோற்றுதியன் சேரலாதனைப் பாராட்டிய புலவர் மாமூலனார், அவன் மகன் இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனையும் பாராட்டியுள்ளார்; நெடுஞ்சேரலாதன், சேரருட் சிறந்தோனாகிய செங்குட்டுவனை ஈன்றெடுத்த ஈடிலாப் பெருமை யுடையவன்; இவனுக்கு மனைவியர் இருவர், சோழன் மணக்கிள்ளியின் மகளாகிய நற்சோனை ஒருத்தி, வேளாவிக் கோமான் பதுமன் என்பான் மகள் மற்றொருத்தி, முன்னவள் வழியாகச் செங்குட்டுவன், இளங்கோவடிகள் ஆய இருவரையும், பின்னவள் வழியாக, களங்காய்க்கண்ணி நாமுடிச் சேரல், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் ஆய இருவரையும் மக்களாய்ப் பெற்று மாண் புற்றான்; நெடுஞ் சேரலாதன் இமயம் வரை படையெடுத் துச் சென்று அம் மலைமேல் தன் இலாஞ்சனையாகிய வில்லைப் பொறித்தான்; ஆரிய அரசரை வென்று அடி பணியச் செய்தான்; கடலிடைத் தீவொன்றில் வாழ்ந்த பகைவரையும் கப்பற் படையுடன் சென்று அவர்தம காவல் மரமான கடம்பை வெட்டி யெறிந்தான்; இதனாலும் பெருமை யுடையானாகிய நெடுஞ சேரலாதனைப் பாராட்டிய புலவர், சேரலாதன் பெரும் படையும், வீர முரசும் உடைய வன்; அவன் கடற் பகைவரை அழித்து அவர் காவல் மரமாம் கடம்பை வீழ்த்தி, அம் மரத்தால் முரசமைத்து வாழ்ந்தான்; தம் முன்னோரைப்போன்றே, இமயத்துச்சி யில் தன் இலாஞ்சனையாம் விற்பொறித்தான்; அவன் பகைவர் பணிந்து போந்து, அவன் மாந்தைநகர் மனைமுற் றத்தே திறையாகக் குவித்த, பொற்பாவையும், வயிரமும் போலும் பொருள்களின் எண்ணிக்கை, ஆம்பல் எனும்

பேரெண்ணும் சிறிதாம் எனுமாறு மிக்கதாம் என்றெல்லாம் கூறிப் பாராட்டியுள்ளார் :

"சால் பெருந்தானைச் சேரலாதன்
மால்கடல் ஓட்டிக் கடம்பறுத்து இயற்றிய
பண்ணமை முரசு"

"வலம்படு முரசின் சேரலாதன்
முந்நீர் ஓட்டிக் கடம்பறுத்து இமயத்து
முன்னோர் மருள வணங்குவில பொறித்து
நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார்
பணிதிறை தந்த பாடுசால் நன்கலம்
பொன்செய் பாவை வயிரமொடு ஆம்பல்
ஒன்றுவாய் நிறையக் குவைஇ அனைவண்
நிலங் கினத் துறந்த நியமம்." (அகம் : ஈசஎ, கஉஎ)

குட்டுவன் என்பான் ஒரு சேர அரசன்; அவன் ஆட்சிக் கீழ்வந்த சிறப்பால், ஓடுவங் காட்டிற்கு அப்பாற் பட்ட குடநாடு, பசியறியாப பெருவளம் உடையதாயிற்று; அந் நாட்டு எருமை, தாமரையை மேய்ந்து, மிகுதியாக மேய்ந்துவிட்டமையால் அதை வெறுத்து பலாவின் நிழலில் தங்குதலே விரும்பும்; அக் குட்டுவனுக்குரிய அரண் மதிலே முற்றவும் அழித்ததோடு, அற்றைப் பகலே அவன் ஊரையும் தீயிட்டு அழித்தான் ஒரு சோழ அரசன் என்ற வரலாறுகளையும குறித்துச் சென்றுளார் புலவர்;

"ஓடுவங்காட் டும்பா
விசிபிணி முழவின் குட்டுவன் காப்பப்
பசியென அறியாப் பணைபயில் இருகைகைத்
தடமருப் பெருமை தாமரை மூனையின்
முடமுதிர் பலவின் கொழுநிழல் வதியும்
குடநாடு." (அகம். கூக)

"குட்டுவன்
அகப்பா அழிய நூறிச செம்பியன்
பகல்தீ வேட்ட ஞாட்பு." (நற் : கச)

வானவரம்பன் என அழைக்கப்பெறும் சேரன் ஒருவனுக்குரியது வெளியம் எனும் பேரூர்; அது செல்வத்தாற் சிறந்த நலம்பல உடையது என்றும் கூறியுள்ளார். "வானவரமபன் வெளியத்தன்ன நம்மாணலம்" (அகம்: கூடுசு) எனத் தோழி ஒருத்தி கூறினளாகப் பாடியுள்ளமை காண்க.

தன்னைப் பகைத்த சேரலாதன், புறப்புண் பெற்று வடக்கிருந்து உயிர் துறக்குமாறு வெண்ணியில் செய்த கன்னிப போரில் வெற்றிபெற்றான் கரிகாலன் எனப் பாராட்டிய புலவர், அக்கரிகாற் பெருவளத்தானால், வெண்ணெல் விளைந்து விழுச்சிறபபுற்ற சோணாடுர்களையும் உளமுவந்து பாராட்டியுள்ளார்:

"சோழர்
வெண்ணெல் வைப்பின் நன்னாடு." (அகம்: உ0க)

சேரரையும், சோழரையும போற்றிப் புகழ்ந்த புலவர் மாமூலனார், பாண்டியர், பேரொளி வீசும் பொன்னாலாய அழகிய நெற்றிபபட்டம் அணிந்த யானைகளையும், போரில், வெற்றியல்லது தோல்வி காணா விறலையும் உடையர், அவர்க்கு உரியது உலகப் புகழ்பெற்ற கொறகைத்துறை; அத்துறைவாழ் பரதவர் மகளிர், ஒளிவீசும் முத்துக்களுடன் வலம்புரிச் சங்குகளையும சொரிந்து, கடற்றெய்வத்தைப் பேணி வாழ்வர் எனப் பாண்டியரையும், அப் பாண்டிநாட்டு முத்துவளத்தையும முறையே பாராட்டிப் பரவுவர்:

"பொன்னின்
அவிர்தழில் நுடங்கும அணிநிலர் ஓடை
யினைகவில் யானை, விறற்போர்ப் பாண்டியன்
புகழ்மலி சிறப்பின் கொற்கை முன்துறை
அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து
தழையணிப் பொலிந்த கோடேந்தல்குல்
பழையர் மகளிர் பனித்துறை பரவ." (அகம்: உ0க)

மாமூலனார், சேர, சோழ, பாண்டியர்களாய பேரரசர்களைப் பாராட்டி அவருள் ஒருசிலர் வரலாறு விளங்கத்

துணை புரிந்ததோடு அமைதியுற்றாரல்லர்; அவர் காலத்தும், அக்காலத்திற்கு முன்னும், தமிழகத்தும், பிறநாட்டகத்தும் வாழ்ந்திருந்த சிற்றரசர் பலருடைய வரலாறுகளையும் விளக்கியுள்ளார்.

இன்று தர்மபுரி என வழங்கும் தகடூரை ஆண்டிருந்தான் அதியமான் நெடுமானஞ்சி என்பானொரு குறுநிலத் தலைவன்; ஔவைக்கு அரிய நெல்லிக்கனி தந்த அருள் உள்ளம் உடையான் அவன்; அத்தகையான், தன் நாட்டை அடுத்துள்ள பகைவர் நாடுகளுட் புகுந்து அந்நாட்டு ஆனிரைகளைக் கவர்ந்து வருவதை வழக்கமாக உடையவன்; இவனைப் பாராட்ட முன்வந்த புலவர் மாமூலனார், பிறை போல் வளைந்த வெண் கோடுகளையுடைய யானைப்படையும், சினம் மிக்கனவும், வலிமை உடையனவும், காற்றெனத் தாவிச் செல்வனவுமாய குதிரைப்படையும் உடையான் அஞ்சி, அவன் பகைவர் ஆனிரைகளைக் கவர்ந்துகொணர்ந்து மறைத்து வைப்பன் என ஆனிரை கவரும் அவன் ஆற்றலையே எடுத்துக்கூறிப் பாராட்டியுள்ளார்:

> "பிறைமருள் வான்கோட்டு அண்ணல் யானைச
> சினமிகு முன்பின் வாமான் அஞ்சி
> இனமெகொண்டு ஒளிக்கும் அஞ்சுவரு கவலை."
>
> (அகம்: ககஞ)

அதியன் எனும் குறுநில மன்னன் ஒருவனின் குண நலத்தைப், புலவர் மாமூலனார் போற்றிப் புகழ்ந்துள்ளார்; பாணரும், பொருநரும் பாடிப் பரவ வாழ்ந்திருந்தான் அதியன்; அவனுக்கு ஒரு கண்பன், அள்ளன் எனும் பெயர்பூண்டு வாழ்ந்திருந்தான்; அதியனுக்குப் படைத் துணைபோகும் பேராண்மையுடையவன் அவன்; அவன் துணையால் பெரு வெற்றிபெற்ற அதியன், அவன்பால் பேரன்புகொண்டு, பரிசிலாகத் தன் நாட்டின் ஒரு பகுதியையே அளித்துப் பெருமை செய்தான்; அத்தகையான் இறந்தபின்னர், அவன் அவையிடைவாழ்ந்த, பாணர், பொருநர் முதலாம் இரவலரை ஆதரிப்பாரின்மையால், அவர்தம் இசைப்பறைபோலும் இசைக்கருவிகள் இயங்குதல்

ஒழிந்து அழிந்தன. இவ் அதியனையும், அள்ளனையும் தம் பாட்டொன்றில் வைத்துப் பாராட்டியுள்ளார் புலவர் :

"ஆடுகடைப் பொலிந்த புகற்சியின், நாடுகோன்
அள்ளனைப் பணித்த அதியன் பின்றை
வள்ளுயிர் மாக்கினை கண்ணவிந் தாங்கு."
(அகம் : கூடுடு)

பொதினி எனப்படும் பழனிமலைக்கு உரியனும் நெடுவேளாவி என்பானொரு வீரன் இருந்தான் ; வையாவிக் கோப்பெரும்பேகன் பிறந்த ஆவியர் குடியில் வந்தவன் அவன் ; அவனைப் பாராட்டும் புலவர் மாமூலனார், ஆவி, வண்டுகள் ஒலிக்கச் சூடிய தலைமாலையும், ஒளிவீசும் வீரக் கழலும் உடையவன் ; அவன், அஞ்சத்தக்க குதிரை வீரர்களாய மழவர் என்பாரை வென்று ஓட்டிய வீரம் செறிந்தவன் ; முருகனைப் போலும் பேராண்மை வாய்ந்தவன் ; அவனுக்குரிய பொதினிமலை யானைகள் வாழ்வால் வளமுற்றது ; பொன்னால் பொலிவுற்றது என்றெல்லாம் கூறிப் பாராட்டியுள்ளார் :

"வண்டுபடத் ததைந்த கண்ணி, ஒண்கழல்,
உருவக குதிரை, மழவர் ஓட்டிய
முருகன் நற்போர் நெடுவேள் ஆவி
அறு கோட்டு யானைப் பொதினி."

"முனை அது
முழவுறழ் திணிதோள் நெடுவேள் ஆவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி." (அகம் : க ; சுக)

வடுகர் தலைவனும், குடநாட்டின் ஒரு பகுதியை ஆள்வோனும் ஆய எருமை என்பானையும், அவன் குடநாட்டு நலத்தினையும், ஒரு பாட்டில் குறிப்பிட்டுள்ளார் புலவர் :

"நுண்பூண் எருமை குடநாட்டன்ன என்
ஆய் நலம்." (அகம் : ககடு)

தேரில் வாழ்ந்தவனும், பாணரைப் புரப்போனும், பசும்பூண் பாண்டியனொடு பகைத்துப் பணியாது பெரு

யிதம் தோன்ற வாழ்ந்தமையால், அவனுல் அழிவுற்றேனு மாய எவ்வி என்பானைப் பாராட்டுமை புலவர், அவன் பாணரைப் புரக்கும் பெருமைவிளங்கப் பாராட்டியுள்ளார்; எவ்வியைப் பாடிப் பரிசில் பெற்று வாழ்ந்த பாணர், அவன் இறந்தான் என அறிந்து, அவன் இறந்துகிடக்கும் போர்க் களம் சென்று அவனைக் கண்டு கண்ணீர்விட்டுக் கலங்கி, அவனை இழந்தபின்னர், அவனைப் பாராட்டப் பயன்பெற்ற தம் கையாழ், அத்தொழிற்கு இனிப் பயன்படாமை அறிந்து, வணங்கி வாழ்த்தவேண்டிய அதை முறித்து ஆண்டே எறிந்து அகன்றனர் எனக்கூறி, அவரை அவன் புரந்த அருமையும், அவன்பால் அவர் கொண்டிருந்த அன்பும் ஒருங்கே புலப்படப் பாடினர்:

> "வாய்வாள்
> எவ்வி வீழ்ந்த செருவில், பாணர்
> கைதொழு மரபின்மூன் பரித்திடுஉப் பழிசசிய
> வள்ளுயிர் வணர் மருப்பு" (அகம்: ககஙி)

சோழ வேந்தர்க்கு அடங்கிப் பணிபுரியும் சிற்றரசாய் வாழ்ந்தாருள் எழினி என்பானும் ஒருவன்; ஒருகால் சோழவேந்தன் குழிகளை வெட்டி, அதில் விழும் யானை களைப் பிணித்துவரும் யானை வேட்டைக்குச் சென்றி ருந்தான்; அக்காலை அவனுக்குத் துணையாகச் செல்ல வேண்டிய எழினி சென்றனல்லன், அதனுல் சினங் கொண்ட சோழன், தன் படைத்தலைவருள் சிறந்தோனும், கழார்த்துறைக்கு உரியோனுமாய மத்தியை அனுப்பி, அவனை ஒறுக்கப் பணித்தனன், சோழன் ஏவச் சென்ற மத்தி, எழினியைப் போரில் வென்று, அவ்வெற்றிக்கு அறிகுறியாக அவன் பல்லைப் பறித்துவந்து வெண்மணி எனும் ஊரின் வாயிற் கதவிற் பதித்து வைத்தான். எழினி, மத்தி இருவர்க்கிடையே நிலவிய உறவினை விளக்கும் இந்நிகழ்ச்சியைத் தம் பாட்டொன்றில் குறித்து, அக்காலப் பேரரசர் தம் ஆட்சிக்கீழ்ப் பணிபுரியும் படைத் தலைவர்பால் கொண்டுள்ள மதிப்பின் தன்மையினை விளக்கி யுள்ளார் புலவர் மாமூலனர்:

"குழியிடைக் கொண்ட கன்றுடைப் பெருநிரை
பிடிபடு பூசலின் எய்தாது ஒழியக்
கடுஞ்சின வேந்தன் ஏவலின் எய்தி
கொடுஞ் சேணுட்டில் தலைத்தார்ப் பட்ட
கல்லா எழினி பல்லெறிந்து அழுத்திய
வன்கட் கதவின் வெண்மணி வாயில்
மத்தி நாட்டிய கல்கெழு பனித்துறை" (அகம். உகக)

சேரர் படைத்தலைவர்களுள் கட்டி என்பவனும் ஒருவன்; பாணன் எனும் வடநாட்டு மற்போர் வல்லானை நண்பனாகக் கொண்டவன், ஒருசால், உறையூரிலிருந்து ஆட்சிபுரிந்த திதன் வெளியன் என்பானொடு போர்புரிய எண்ணிப் பாணனையும் துணையாகக் கொண்டுவந்தான். வந்தவன், தித்தன் நாளவைக்கண் ஒலிக்கும் கிணையோசை கேட்டே அவன் பெருமையுணர்ந்து, அஞ்சி அகன்றுவிட்டான்; இத்தகையான், தமிழகத்தின் எல்லையிலே வாழ்ந்து, வடுகர் போலும் பிறமொழியாளரா தமிழகத்துட் புகாவாறு பேரரணாய் விளங்கிவந்தான்; வடுகநாட்டிற்கும், தமிழகத்திற்கும் இடைப்பட்ட இவன் நல்ல நாட்டைக் குறிப்பிட்டுப் பெருமைசெய்துள்ளார் புலவர் மாமூலனார்.

"வடுகர் முனையது
பல்வேல் கட்டி நன்னாட்டு உம்பர்
மொழி பெயர் தேஎம்" (குறுந். ககக)

பகைத்துப் போரிட வந்தாரை வென்று ஓட்டும் வெற்றித்திருவுடையானும், அதற்கேற்ற வீரம செறிந்த படைத்துணையுடையானுமாய கண்ணன் எழினி என்பானையும், அவனுக்குரிய தேன்வளம் மிக்க முதுகுன்றம் எனும் மலையையும் பாராட்டும் மாமூலனார், அம்மலை தமிழகத்திற்குச் சேய்மைக்கண் உளது என்பதுபடக் கூறியுள்ளார்.

"முன்னுவர் ஓட்டிய முரண்மிகு திருவின்
மறமிகு தானைக் கண்ணன் எழினி
தேமுது குன்றம் இறந்தன ராயினும்." (அகம்: ககள)

தமிழ் நாடாண்ட குறுநில மன்னர்களுள் திதியன் எனும் பெயருடையார் பலராவர்; அவருள் ஒரு திதியன், தன் காலோலக்கக் காலத்தே, ஏழிசைத்துறையில் வல்லராய், யாழிசைத்துப் பாடிப் பாவும் பாணர், பெருமகிழ்ச்சி கொண்டு ஆரவாரிக்குமாறு அவர்க்கு அரிய அணிகலன் பல அளிக்கும் அருள்நெறி அறிந்தவனுவன்; வள்ளலாய அவன், வாட்போர் வல்ல வீரனுமாவன்; ஒருகால் அவன் தன்னை எதிர்த்த வேளிரொடு பெரும்போர் புரிந்து வெற்றிபெற்றான். இச் செய்தியும் மாமூலர் செய்யுட்டானே கொண்டே அறியப்படுவதாயிற்று

"அருந்துறை முற்றிய கருங்கோட்டுச சீறியாழப்
பாணர் ஆர்ப்பப் பலகலம் உதவி,
காளைவை இருந்த நனைமகிழ் திதியன்
வேளிரொடு பொரீஇய கழித்த
வாள்வாய்" (அகம்: 82)

வேள் மரபில் வந்தோருள், நன்னன் என்பான் நனி சிறந்தவனுவன்; அவன் கொண்கான நாட்டகத்ததாய ஏழில்மலை, பாழி, பாரம் முதலாய ஊர்கட்கு உரிமையுடையான், பாழி, பகைவரான கைபபற்றறகரிய காவலையுடையது, வேளிர் பலரும், தம் அருமபொருளை வைததுக் காக்கும் அத்தனைச் சிறப்புடையது, தன தோட்டத்து நறுமாவின் காயொன்றைத் தின்றுள் என்பதற்காக, அவள் தந்தை அத் தப்பிற்குத் தண்டமாக எண்பதமேதார் யானைகளும், அவள் நிறை பொன்னலாய பாவையும் தர முன் வந்தும் ஏற்றுக்கோடாது, அவளை கொன்ற அறக்கொடியோனுயவன் இந்நன்னனே. இந்நன்னனுக்குரிய பாழியின் சிறப்பையும், நீதி வழங்குவதில் நடுநிலை பிறழாமையுடையனுய அவன் தன்னைப் பாடிவரும் பரிசிலர்தம் வறுமையைப் போக்க, பகைவர்தம் பேரரண்களை ஆற்றல் கொண்டு அழித்து ஆங்குத் தான் பற்றிக்கொணர்ந்த பெரும்பொருளை வரையாது வழங்கும் வள்ளன்மைச் சிறப்பையும் எடுத்துக்கூறிப் பாராட்டியுள்ளார் புலவர்.

"சூழி யானைச சுடர்ப்பூண் நன்னன்
பாழி அன்ன கடிபுடை வியனகர்ச
செறிந்த காப்பு."

"ஞமன்
தெரிகோல் அன்ன செயிர்தீர் செம்மொழி
உலந்த ஒக்கல் பாடுநா செலினே
உரன்மலி உள்ளமொடு முனைபா ழாக
அருங்குறும்பு எறிந்த பெருங்கல வெறுக்கை
சூழாது சுரக்கும நன்னன் நன்னாட்டு
எழிற குன்றம்," (அகம் : கடு ; கூசக)

சேரன் செங்குட்டுவனால் அழிக்கப்பெற்ற வியலூர்க்கு உரிமையுடையனாய் வாழ்ந்த நன்னன் வேண்மான் என்பானையும், அவன் பாணரைப் புரக்கும் பேரன்பினையும், வீரக் கழலையும், விளங்கப் பாடிய மாமூலனார் பாட்டும் ஒன்று உளது ; மீண்டுப் பாராட்டப்பெற்ற நன்னன் வேண்மான் என்பான் முன்னர்க் கூறிய நன்னனே ஆவன் :

"அகவுநர்ப் புரந்த அன்பின் கழல்தொடி
நறவுமகிழ் இருக்கை நன்னன் வேண்மான்
வயலை வேலி வியலூர் " (அகம் : கூள)

வடநாட்டினின்றும போந்து, தமிழகத்தே வாழ்ந்து, தமிழ்ப் புலவர் போற்றுதலைப் பெற்றாருள் பாணன் என்பானும் ஒருவன் ; இவன், முன்னர்க் கூறிய கட்டி என்பானின் நண்பனாவன் ; மற்போரில் வல்லனாய இவன், ஒருகால், தன்னைப்போன்றே தமிழகம் புகுந்து வாழும் ஆரியப் பொருநன் எனும் மற்றொரு வடநாட்டு மற்போர் வல்லானொடு பொருது வெற்றிபெற்றான் ; இவனையும், இவனுக்குரிய வேற்படைச் சிறப்பையும், வடநாட்டின் கண்ணதாய இவன் நாட்டின் நன்மையையும் பாராட்டியுள்ளார் ஒரு பாட்டில் :

"வடாஅது
கல்வேல் பாணன் நன்னாடு." (அகம் :நூஉ)

தமிழகத்தின் வடக்கெல்லையாக விளங்கும் வேங்கட மலையையும், அதைச் சூழ உள்ள சிறு நாட்டையும் ஆண்டு வந்தான் புல்லி எனும் வீரன் ஒருவன்; புல்லி சிறந்த வீரர் பலர் சூழ வாழ்ந்தவன்; மழவர் எனும் குதிரை வீரரை வென்றவன்; வீரர் சூழ வேட்டைமேற் சென்று களிறு பல கைப்பற்றிக் கொணர்வன்; கள் விற்றுப் பெற்ற நெல்லால் ஆக்கிய சோற்றுணவை, தன் நாளோலக்கம் காண வருவார்க்கு அளித்து மகிழ்வன்; அவன் வேங்கடம் விழாக்கள் பல நடைபெறுவதால் பெற்ற பெரும் புகழுடையது; அவ் வேங்கடம், தமிழகத்திற்கே அல்லாமல், அப் புல்லியின் நாட்டிற்கும் வடவெல்லையாம்; வேங்கடத்தைக் கடந்தால் தமிழ்மொழி வழங்காது; வேங்கடத்திற்கு வடக்கே வடுகர் நாடு உண்டு; புல்லி, பொய்யா நாவுடையன்; புல்லி, களவர்குலத் தலைவன்; என்ப, இக் கல்வர் என்பார், சங்க காலததை அடுத்து நிலவிய தமிழகத்து அரசியல் இருள் நிலைக்குக் காரணமாய களப்பிரரே எனக் கொள்வாரும் உளர். இப புல்லியையும், அவனுக்குரிய வேங்கட நாட்டுச் சிறப்பையும் புலவர் மாமூலனார், பல பாக்களில் வைத்துப் பாராட்டியுள்ளார்:

"அண்ணல் யானை வெண்கோடு கொண்டு
நறவு நொடை நெல்லின் நாணமகிழ அயரும்
கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்
மழபுலம் வணக்கிய மாவண புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடம்."

"புல்லி குன்றத்து
நடையருங் கானம் விலங்கி நோன்சிலைத்
தொடையமை பகழித் துவன்றுநிலை வடுகர்
பிழியார் மகிழ்ர் கலிசிறந்து ஆர்க்கும்
மொழி பெயர் தேஎம்."

"புல்லி நன்னாட்டு உம்பர்ச செல்லரும் சுரம்"

"பொய்யா நல்லிசை மாவண் புல்லி"

"நிரைபலகுழீஇய நெடுமொழிப் புல்லி
தேன்றூங்கு உயர்வரை நன்னாட்டு உம்பர்
வேங்கடம்."

(அகம்: சுக, உகஎ, உகக, உஎஅ., உகஉ)

"கடுமான் புல்லி காடு" (நற்: கசு)

புலவர் மாமூலனார், தமிழகத்து வரலாற்று நிகழ்ச்சிகளையே யல்லாமல், தமிழகத்திற்கு மிகமிகச் சேய்மைக் கண்ணதாய வடநாட்டு வரலாற்று நிகழ்ச்சிகளையும் விளங்க அறிந்தவராவர்; அவர் கூறும் அந்நாட்டு வரலாற்றுக் குறிப்புக்கள் பல. வடநாட்டில், கங்கைக்கரையில் பாடலிபுத்திரத்தைத் தலைநகராக்கொண்டு வாழ்ந்தபேரரசுகள் பலவாம்; அவ்வரசுகளுள் நந்தர்குலப் பேரரசும் ஒன்றுப, அந்நந்தர் பொருளாசை மிக்கவராவர், அவ்வரசர்களுள் ஒருவன் மகாபதுமம் எனும் பேரெண் அளவு பெரும பொருள் படைத்து மகாபதும நந்தன் எனப் பெயர்பூண்டு வாழ்ந்தான் என்றும், அவ்வாறு ஈட்டபபெற்ற அபபெரும் பொருள் மாற்றூர் படையெடுப்பால் அழிவுறு வண்ணம், கங்கையாற்றின் அடியில் சுருங்கை அமைத்து, ஆங்கு அப்பொருளைவைத்துக் காத்தனர் என்றும், பின்னர், கங்கையின், மாறிய போக்கால், அச்செல்வம் காணப்பெறுது அழிந்து விட்டது என்றும் வடநாட்டு வரலாற்று ஆசிரியாகள் கூறுமை இவ் விளக்கங்களைப் புலவர் மாமூலனாரும் அறிந்து கூறியுள்ளார்.

"புல்புகழ நிறைந்த வெல்போா நந்தர்
சோமிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதல் கரந்த நிதியம்"

"நந்தன் வெறுக்கை எய்தினும்."

(அகம்: உசுஅ, உடுக)

தமிழ்ச் சங்க காலத்தே தளரா வளம் பெற்று விளங்கிய தமிழகம், பிறநாட்டு வீரர்கள் உளத்தே பேராசைத் தீயைத்தூண்ட அதனால், தமிழகத்தின் மீது தண்டெடுத்து வந்தோர் பலராவர், அவ்வாறு வந்தாருள், தமிழகத்தின்

அரசியல் அமைதி குலையுமாறு பெரும்படையுடன் வந்து புகுந்தவர்கள், கோசர், மழவர், மோரியர், வடுகர் என் போராவர். இவருள் கோசர் எனப்படுவார், மங்களூரை நடுவிடமாகக் கொண்ட துளுமொழி வழங்கும் நாட்டை வாழ்விடமாகக் கொண்டவர், அசோகனுல் சத்யபுத்ரர் என அழைக்கப் பெறுவார் இவரே என்ப, கோசர் வாய் மொழி வழுவாதவர்; அவர்கள், தமிழகத்துட் புகுந்து, சோணாட்டில் குடியேறி உழுதொழில் மேற்கொண்டு வாழ்ந் தனர்; ஆதன் எழினி என்பானுக்குரிய செல்லூர்க்குக் கிழக்கே உள்ள நியமம் என்ற ஊர் அவர்க்கு உரியதாய் இருந்தது. நன்னன் நறுமாவைக் கொன்று, அவன் பகை வன் அகுதைக்கு அடைக்கலம் தந்து காத்தனர். தாம் விளைத்த பயிரை மேய்ந்தது பசு என்பதற்காக, அப்பசுவுக் குரியோன் கண்களைப் போக்கியதனுல், அழுநூர்த திதிய னுல் அழிக்கப பெற்றனர் தமக்குப் பணியாத மோகூர் மன்னனை மோரியர் துணைகொண்டு தாக்கினர். இறுதியில் பாண்டியன் படைவீரராகத் தொழிலாற்றினர் இதுவே தமிழ்நூல் அறிந்த கோசர் வரலாறு மாமூலனர், கோசர் மெய்ம்மையிற் சிறந்தவர்; அவர்க்குரியது துளு நாடு; அந் நாட்டுச் சோலைகள் மயில்கள் நிறைந்தன; அந்நாட்டுப் பெரூர்வாழ் மக்கள், தம்மூர்நோக்கி வரும் வறியரைப் புரக்கும் வள்ளன்மையுடையவர் என்றும், வெற்றிக்கொடி யும், விரைந்த செலவும் உடைய தேர்ப்படை உடையராய அக்கோசர், தம் பகைவராயினு செல்லாரையும் அழித்து வருங்கால், தமக்குப பணியாது நின்ற மோகூர் மன்னன் பழையன் என்பானை மோரியர் துணைகொண்டு தாக்கினர் என்றும் கூறி, அவர் வரலாற்றின் ஒருபகுதி விளங்கத் துணை புரிந்துள்ளார்:

> "மெய்ம்மலி பெரும்பூண் செம்மல் கோசர்
> கொம்மையம் பசுங்காய்க் குடுமி விளைந்த
> பாகலார்கைப் பறைக்கண் டீலித்
> தோகைக் காவின் துளுநாட்டன்ன
> வறுங்கை வம்பலர் தாங்கும் பண்பின்
> செறிந்த சேரிச செம்மல் மூதூர்."

"தினைகாலன்ன புனைதோர்க் கோசர்
தொன் மூதாலத்து அரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசம் கடிப்பிகுத்து இரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியாமையின் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்." (அகம்: கஎ; உஎக.)

மழவர் வரலாறுக மாமூலனார் அறிவிப்பன இவை; மழவர் தமிழகதிற்குப் புறம்பான பிறமொழி நாட்டவராவர்; கல்வியறிவு வாய்க்கப்பெறுத அவ்வீரர், வில்லை இடப்பக்கததே தழுவினின்றவாறே, வழிப்போவாரை எதிர் நோக்கி, அஞ்சததக்க வழிகளில் காத்துக்கிடப்பர்:

"கல்லா மழவர் வில்லிடம் தழீஇ
வருநர்ப் பார்க்கும் வெருவரு கவலை
மொழி பெயர் தேஎம்" (அகம்·கஉஎ)

களவாடி உண்ணும கொடிய வாழ்வுடையராய அம் மழவர் வாழிடம, குடநாட்டை அடுத்துள்ள ஒடுவங்காடு எனும் இடமாம்:

"கடுங்கண் மழவர் களவுழ எழுந்த
நெடுங்கால் ஆசினி ஒடுங்காட்டும்பர்
. ..... .. .. .. .. . .. ..... .. . ..
குடநாடு." (அகம்: கூக)

மழவர் கருண்டு விரிந்த தலைமயிர் உடையர்; சிவந்த கண்ணினராய அவர், வாயினின்றும் எழும் இருமலை அடக்குதற்குப் புற்றுமண்ணை வாயில் அடக்கிவைப்பர்; தீப்போல் கொடிய அமபும், விலலும் உடையராய், காற செருப்புத் தேயக் கடிதுசென்று, காத்துநிற்கும பகைவரை ஓட்டிவிட்டு, அவாதம் ஆனிரைகளை ஓட்டிவருவர்:

"தகர் மருப்பு ஏய்ப்பச் சுற்றுபு சுரிநத
சுவல்மாய் பித்தைச செங்கண் மழவர்,
வாய்ப்பகை கடியும் மண்ணெடு, கடுந்திறல்
தீப்படு சிறுகோல் வில்லொடு பற்றி

துரைதெரி மத்தம் கொளீஇ நிரைப்புறத்து
அடிபுதை தொடுதோல் பறைய ஏகிக்
கடிபுலம் கவர்ந்த கன்றுடைக் கொள்ளையர்
இனந்தலைப் பெயர்க்கும் நனந்தலைப் பெருங்காடு."
(அகம் : கடக)

தம்மைப் பகைப்பார்தம் நாட்டைப் பாழ்செய்யும் போராற்றல் வாய்ந்த அம் மழவர், தம் மரபினர்தம் வீரம் குன்றுது விளங்கித்தோன்றுதல்வேண்டும் எனும் வேட்கை யுடையராய்த் தம் இளைஞர்க்குப் போர்ப்பயிற்சி அளித்து, அரங்கேற்றம் செய்து அகமகிழ்வர்; அவ்வரங்கேற்ற நாளன்று, ஊரையும், வீட்டையும் அணிசெய்து காண்பர்:

"தெம்முனை சிதைத்த கடும்பரிப் புரவி
வார்கழல் பொலிந்த வன்கண் மழவர்
பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன
தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றம்." (அகம் : கஅள)

மழவர், தமக்கு ஆகாதார் நாடுகளுட் புகுந்து நிரை களைக் கவர்ந்து வருவதையே தொழிலாகக்கொண்டுவிட் டமையால், அவரை அழிக்க எண்ணிய அரசர் பலராவர்; அவ்வாறு அவர்களை வென்று துரத்தி வீறுகொண்டோருள், பொதினியை ஆண்ட நெடுவேள் ஆவியும், வேங்கடத்தை ஆண்ட புல்லியும் சிறந்தோராவர் எனக் கூறுகிறார் மாமூலனார்.

"மழவர் ஓட்டிய
முருகன் நற்போர் நெடுவேளாவி."
"மழபுலம் வணக்கிய மாவண் புல்லி." (அகம் : க, ஙக)

மௌரியப் பேரரசர்களுள், அசோகனுக்கு மூன்றா வது பிந்துசாரன் தென்னாட்டின்மீது படையெடுத்து, அந நாட்டின் பெரும் பகுதியை வென்று கைக்கொண்டான் என வரலாற்று நூல்கள் உரைக்கின்றன; அவ்வாறு தென்னாடு நோக்கி வந்த அவன், தமிழ்நாட்டில் தன் ஆற்றலைக் காட்டமாட்டாது மீண்டான்; மௌரியர் தென்னாடுபோந்த இச் செயலைத் தமிழ்ப்புலவர் சிலரும்

தாம் பாடிய பாக்களில் குறிப்பிட்டுள்ளனர்; வடநாட்டு நிகழ்ச்சிகளை விளங்க உணர்ந்தவராய மாமூலர், மோரியர் படையெடுப்பினை இரண்டிடத்தே எழுதிக் காட்டியுள்ளார். தமிழகத்தின் வடக்கெல்லையை ஒட்டிய நாட்டினராய வடுகரை வழிகாட்டும் தூசிப் படையினராக் கொண்டுவந்த மோரியர், தம் தேர்ப்படை தடையின்றித் தென்னாட்டில் புகும்வண்ணம், வழியிடை யிருந்த மலைகளை வெட்டி வழி யமைத்தனர் என்றும், அவ்வாறு வந்த அம் மோரியர், மோசூர் மன்னனைப் பணியவைப்பான் வேண்டிப் பெரும் போர் புரிந்துகொண்டிருந்த கோசர்க்குத் துணைபுரிந்து அவர் துணையையும் பெற்றனர் என்றும மாமூலனார் கூறி யுள்ளமை காண்க.

"வடுகர் முன்னுற மோரியர்
தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு
விண்ணுற வோங்கிய பனியிருங் குன்றத்து
ஒண்கதிர்த் திகிரி உருளிய குறைதத
அறை."

"கோசர் .. .. .. .. .....
தெம்முனை சிதைத்த ஞான்றை மோசூர்
பணியாமையின் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி உருளிய குறைத்த
இலங்கு வெள்ளருவிய அறை."

(அகம்: உஅக, உநக)

கோசர், மழவர்களைப் போன்றே தமிழரசர்கட்குத் தீராத் தொல்லை தரவந்தவர் வடுகராவர்; இவரை வென்று அடக்க வீறுகொண்டெழுந்த வேந்தர் பலராவர், அத்துணை ஆற்றல் வாய்ந்தவராய இவ்வடுகர், புல்லிக்குரிய வேங்கட மலைக்கும், கட்டி என்பானுக்குரிய நாட்டிற்கும் வடக்கின் கண் உள்ள நாட்டில் வாழ்பவர்; தமிழ்மொழிக்கு அய லான ஒரு மொழியை வழங்குபவர்; விற்போரில் வல்லவர் என்றெல்லாம் கூறி இவர் வரலாற்றின் ஒருபகுதியைவிளக்கி யுள்ளார் புலவர் மாமூலனார்.

"புல்லி குன்றத்து
நடையருங் கானம் விலங்கி நோன்சிலைத்
தொடையமை பகழித் துவன்றுநிலை வடுகர்
பிழியார் மகிழா கலிசிறந் தார்க்கும்
மொழிபெயர் தேஎம்."  (அகம். உகூடு)

"குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல் வேற்கட்டி நன்னுட்டும்பா
மொழிபெயர் தேஎம்"  (குறுந் ககக)

வானுற உயர்ந்த, படரும் புகைபோல் பனிதவழும் செந்தீப பிழம்பெனத தோன்றும இமயம என மாமூலர் காட்டும் இமயக்காட்சி, கண்ணிற்கு விருந்தளிக்கும் காட்சியாதல் காண்க.

"புகையிற் பொங்கி, வியல விசும்பு உகந்து
பனியூா அழற்கொடி கடுப்பத் தோன்றும்
இமயச செவவரை"  (அகம் உஎடு)

மாமூலனார் உரைத்த அரசியல் உண்மைகளைக் கண்டனாம், இனி அவர்காட்டும் அகத்துறைக்காட்சிகள் சில வற்றைக் கண்டு களிப்போமாக.

தலைவன் ஒருவன், தன்பால் அன்புடையாளொரு தலைவியைக் காதலித்தான், அவர்களிருவர்க்கிடையே உண்டாய அக் காதல் வாழ்வைத் தலைவியின் தமர் உணர்ந்தாரல்லர், மணப்பருவம வந்துற்ற மகள் இனி, புறத்தே போதல் நன்றன்று என உணர்ந்த நற்றாய், அவளை வீட்டை விட்டுப் போகாவண்ணம் இற்செறித்து விட்டாள், இதனால், தலைமகளைக் காணல் தலைவனுக்கு அரிதாயிற்று, அவன், அவள்பால் கொண்ட அன்பு, அவளை எவ்வாற்றானும் காணுமாறு தூதத்திற்று, தலைவியின் ஊரோ, புறத்தார் எவரும் எளிதிற் புகலாகா அரிய காவலையுடையது; அவ்வூர் நடுவே அமைந்துள்ள அவள் வீடும் அரண்பல உடையது; ஆகவே, பகலிற் சேரின், காவலர்க்குப் புலனும் என உணர்ந்த தலைவன், இராக்காலம் வந்துற்றதும், காவலர் அறியாவண்ணம், அவ்வூருட்புகுந்து, அவள் மனையை

அடைந்து விட்டான்; ஆனால், உடனே உட்புகுதல் இய லாததாயிற்று; தாயும், தமரும் உறங்கும் வரை ஆங்கேயே காத்துக்கிடந்தான்; பேயும் கண்ணுறங்கும் நள்ளிரவு வந்துற்றதும், ஒருவாறு எல்லோரும் உறங்கிவிட்டனர் என்பதை உணர்ந்த அவன், இருந்த விடத்தை விட்டு எழுந்து ஓசை எழாவாறு மெத்தென நடந்து சென்று, அம் மனைவாயிலிடத்து வலிய கதவினைப் பையத்திறந்து உட் புகுந்தான்; பின்னர் அவளைக் காணத்தான் பட்ட துய ரெலாம் ஒழியும் வரை, அவளோடு அன்புரை வழங்கி ஆளவளாவி யிருந்து மீண்டான். களவுக் காலத்தே, காதலியைக் காணத்துடிக்கும் காதலன் செயலைக் கவினுறக் காட்டிய புலவர், அவன் அவள் மனையகத்தே காத்துக்கிடப் பது, வள்ளியோர் கடைத்தலை, வந்து காத்துக்கிடக்கும் இரவலர் செயல் போலும் என உவமையும் கூறியுள்ளார்.

"இரும்பிடிப் பரிசிலர் போலக் கடை நின்று
அருங்கடிக் காப்பின் அகனகர் ஒரு சிறை
எழுதியன்ன திண்ணிலைக் கதவம்
கழுது வழங்கு அரை நாள காவலர் மடிந்தெனத்
திறந்து நப்புணர்ந்து நம்மிற் சிறந்தோர்
இம்மை உலகத்து இல் எனப் பன்னாள்
பொம்மல் ஓதி நீவிய காதல்." (அகம்: ஈகக)

பண்டைத் தமிழ்மகன் ஒவ்வொருவனும் வீரனாய் விளங்கினான், அவன், போரில் புண்பெறலைப் புகழ்பெறு செயலாப் போற்றினான்; போர்க்களம் புகுந்தான், புண் பெறாது கழிந்த நாளைத் தன் வாழ்நாளில் பயனின்றிக் கழிந்த நாள் எனக் கருதினான். "விழுப்புண் படாத நாள் எல்லாம் வழுக்கினுள் வைக்கும் தன் நாளை எடுத்து" எனக் கூறுவர் வள்ளுவரும் (எளசு). இதற்குக் காரணம், இம் மையில் போரில் புண்பெற்று இறந்தாரே, மறுமையில் மாறாப் பேரின்ப நிலைபெறுவர் என அவர்கள் நம்பியதே யாம். அதனால், போரில் இறவாது, இயல்பாக நோயுற்று இறந்தார் உடலையும், வாளாற்று வினையாமையால் வந்துற்ற அவர் பழிதீங்குமாறு, அவர் உடலைத் தருப்பைப் புல் மீது

இடத்தி, "நல்லமர் வீழ்ந்த நாணுடை மறவர் பெறும் நன்னிலை இவர்க்கும் வாய்க்குமாக" எனக்கூறி வாளால் வெட்டிப் பின்னர்ப் புதைப்பர். இவ்வாறு வளர்ந்து வாழ்ந்து இறந்தார் உடலையே யன்றி, பிறந்தபோதே இறந்த குழவியின் உடலையும், உருவற்றுப் பிறந்த ஊன் தடியையும் அவ்வாறே வெட்டிப்புதைப்பர்:

"நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇக்
காதல் மறந்து, அவர் தீது மருங்கு அறுமார்
அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
நிறம்புரி பசும்புல் பரப்பினர் கிடப்பி
மறம் கந்தாக நல்லமர் வீழ்ந்த
நீள்கழல் மறவர் செல்வுழிச செல்க என
வாள் போழ்ந்து அடக்கல்."

"குழவி இறப்பினும், ஊன்தடி பிறப்பினும்
ஆள் அன்று என்று வாளின் தப்பார்."

(புறம்: கூஉ; எசு)

தமிழர் தம் தன்னேரில்லா இப்பண்புணர்ந்த புலவர் மாமூலனார், நாடுகாவற் பணிகுறித்துப் போர் மேற்கொண்டு பிரிந்து சென்ற தலைவன் ஒருவனைக் கூறுங்கால், கூற்றுவன் கொள்ள வீணை இறவாது, தம் பொருளைப் பிறர்க்கு ஆளித்துப் புகழ் நிறைந்து போரிடை இறந்தாரே, பெருந்தவம் புரிந்தோராவர் என்பதை வற்புறுத்தி யுணர்த்தி விட்டு, தன் வெற்றிச் சிறப்பை விளக்கிக் காட்டப் பிரிந்தான் எனக் கூறிப் பாராட்டியுள்ளமை காண்க.

"நேற்றோர் மன்ற தாமே, கூற்றம்
கோளுற விளியார், பிறர்கொள விளிந்தோர் எனத்
தான்வலம் படுப்பச சேட்புலம் படர்ந்தோர்." (அகம்:சுக)

உடனிருந்து அன்புசெய்ய வேண்டிய தலைவர், தன்னைப் பிரிந்து, காடு மலையும், காட்டாறும் இடையிட்ட சேய்நாட்டிற்குச் சென்றுவிட்டார் என வருந்திய தலைமகள், தன் தோழியை நோக்கி, "தோழி! நம்மைத் தனித்துத் துயருறப் பிரிந்துசென்ற தலைவர் நம்மோடு

உடனுறைந்த காலத்தில் அவர்க்கு இடையறா இன்பம் தந் தோமே யன்றிச் சிறிதும் துயா தந்தோமில்லை ; இங்ஙனம், நன்றன்றித் தீதொன்றும் செய்தறியேமாகவும், நாம்வருந்த அவர் பிரிந்தது ஏனோ? உலகத்தார், இம்மையில் நன்மை புரிந்தார்க்குத் தீமை வந்துறுவதில்லை என்று கூறுகின் றனரே ; பண்டுதொட்டு வந்த அப் பழமொழி, இன்று, நம் மளவில் பொய்த்துவிட்டது போலும்!" எனக்கூறி வருந் தினள் எனப்பாடி நல்லன புரிந்தார் அல்லன உறுதல் இல் என நம்பும் தம் உள்ளத்தையே காட்டியுள்ளார் புலவர் :

" அம்ம வாழி தோழி ! இம்மை
நன்றுசெய் மருங்கில் தீதில் என்னும்
தொன்றுபடு பழமோழி இன்று பொய்த்தன்று கொல்?
.. . .. ..... .. . .. . . .. . ...
பனிபடு பன்மலை இறந்தோர்க்கு
முனிதரு பண்பு யாம்செய்தன் றேவிலமே "(அகம் · கக)

பொருள்கருதிப் பிரிந்து சென்றுளான் தலைவன் ; தலைவனைப் பிரிந்தறியாத் தலைவி, அப்பிரிவினைத் தாங்காது பெரிதும் வருந்தினள், அதனால், அவள் உடல் நலனும் குன்றிற்று ; அவளும் அழகிழந்து தோன்றலாயினள் , அவ்வூரில் வாழும் பெண்டிர் பிறரைப் பழி கூறுவதில் மகிழ்ச்சிகாணும் மனமுடையவராவர்; பிறர்பால் பழியில்லை யாகவும், பொருந்தாதன சிலவற்றை ஏறிட்டுக் கூறியாவது இன்பம் காண்பது அவர் இயல்பு ; அத்தகையார், நலம் குறைந்து தோன்றும் இவளைப் பழிக்காதுவிடார் ; இதை யெல்லாம் உணர்ந்த தோழி, விரைந்து வந்து சேருமாறு தலைவனுக்குத் தூதுவிடவும் எண்ணினாள் , தோழியின் கருத்தை உணர்ந்தாள் தலைவி ; தன்பால் பேரன்புடைய அவர், தன் துயர்நிலை அறியின், தாம் மேற்கொண்ட வினையை முடியாது விடுத்தே வந்துசேர்வர் என்பதை உணர்வாள் ; அவர் அவ்வாறு வருதல் அறமுமன்று ; தம் ஆக்கமும தேயும் ; ஆகவே அவர் வினை முடியாமுன்னர் மீண்டு வருதலை விரும்பினளல்லள்; தோழிபால், "தோழி! ஊர்ப்பெண்டிர் உரைப்பன உரைக்க ! என் நலன் கெடினும்

கெடுக! பொருள்கருதிப் பிரிந்துசென்ற நம் தலைவர், அவ் வினை விரைவில் முடிந்திலாமையாலன்றே இன்னமும் வந் திலர்; அவர் அவ்வினையைக் குறைவற முடித்து வரத்தக்க முழுவலி பெறுவாராக! அதையே யான் வேண்டுகின்றேன்" என்று கூறினாள்; என்னே அத்தலைவியின் உள்ளம்!

"அழியா விழவின் அஞ்சுவரு மூதூர்ப்
பழியிலாராயினும் பலர்புறங் கூறும்
அம்பல் ஒழுக்கமும், ஆகிய வெஞ்சொல்
சேரியம் பெண்டிர் எள்ளினும் எள்ளுக!
நுண்பூண் எருமை குடநாட்டன்ன என்
ஆயகலம் தொலையினும் தொலைக! என்றும்
நோயிலராக நம் காதலர்! .. ...
.. .. . .. .. .. . ..... . ... . .. .
நன்னர் ஆய்கவின் தொலையச சேய்நாட்டு
நசநீதது உறையும் பொருட்பிணிக்
கூடாமையின் நீடி யோரே" (அகம்: ககஞ)

தலைவன் பொருள்கருதிப் பிரிந்திருந்த காலத்தே, தனிமை பொறுது வருந்தும் தலைமகள் முன் சென்று, "தோழி! போகம் விரும்புவார் பொருள் உடையராதல் இயலாது என்ப, போகத்தை விரும்பிப் புகழ்தரும் பொருள் தேடிச்செல்லாமல் இருத்தல், ஆண்மகற்கு அழ கன்று, அத்தகையார் நாணற்றவராவர் என நல்லோரால் இழித்திடப்படுவர், "மனைவிழைவார் மாண்பயன் எய்தார்; வினைவிழைவார் வேண்டாப் பொருளும் அது" என்று பெரியோர் கூறும் பொன்னுரையும் உண்டு, இதை உணர்ந் தவர் நம் தலைவர்; நம் தோள் தனிமையுற்றுத் துயர் உறுவது ஒழிய என்றும் நம்மோடு இருந்து நாள் பல கழித்தல் நாணத்தக்கதாம் என உணர்ந்தே அவர் அரும் பொருள் தேடிச் சேய்நாடு சென்றுளார்; இதை உணர்ந்த நீ, அவர் பிரிவு குறித்து வருந்துவது நன்றன்று" என்று அறிவுரை கூறி ஆற்றினாள். இடனறிந்து ஏற்றன கூறும் அத்தோழியின் அறிவின் பெருமையினைப் பாராட்டியுள் ளார் புலவர்:

"தோள்புலம்பு அகலத் துஞ்சி, நம்மொடு
நாள்பல நீடிய கரந்துறை புணர்சசி
நாணுடை மையின் நீங்கிச சேய்நாட்டு
அரும்பொருள் வலித்த நெஞ்சமோ டேகி
நம்மூயர்வு உள்ளினர் காதலர்." (அகம் : கஅள)

தாய்மனை வாழ்வே வேண்டின், தான் விரும்பும் காதலனை மணத்தல் இயலாது; தமர்புறத்தார்க்கு வரைவு நேர்தலும் செய்வர் என அறிந்த தலைவி, தமர் அறியா வண்ணம் தலைவனோடு கூடி அவனூர் சென்றுவிட்டாள். இதை அறிந்த அவள தாய், தன் மகளை அவள் விரும்பும் அன்புடையானுக்கு மணம்செய்துதர மறுத்த தன் தவறு உணராது, அன்புடையானுடன் சென்றுவிட்ட அவளைப் பலவாற்றானும் பழித்துரைக்கும இக்காலத்தாய்போலன்றி, "யான் அவள்பால் கொண்டுள்ள அன்பு உண்மையாய் அதன் பயன் தருவதாயின், அவள் தோழிமாரும், யானும் வருந்துமாறு எம்மைவிட்டுப் பிரிந்து, தன் மனதிறகினிய துணைவனுடன் சென்ற என் மகள் செல்லும் வழி தம் ஊர் நோக்கி வரும் வறியரை வரவேற்றுப பேணும் பெருமையுடைய நம் ஊரில் அவள் அறிந்த மக்களை உடைய தாகுக!" என்றே விரும்பினாள். கடமையறிந்த அத் தாயுள்ளத்தின் கனிவுதான் என்னே!

"எம்வெங காமம் இயைவ தாயின்,
... . . .... .. .. .. ....
வறுங்கை வம்பலர்த் தாங்கும் பண்பின்
செறிந்த சேரிச செம்மல் மூதூர்
அறிந்த மாகடட்கு ஆகுக தில்ல,
தோழிமாரும் யானும் புலம்ப
..... .. ..... .. .. .. .... . ..... .. ..
இன்துணைப் படாந்த கொள்கையொடி ஓராங்குக்
குன்ற வேயில் திரண்ட என்
மென்தோள் அஞ்ஞை சென்ற ஆறே." (அகம் : கஙு)

மாமூலனார், அழகிய உவமைகளை ஆங்காங்கு அமைத்துப் பாடவல்லவராவர் என்பது அவர் பாக்களை நோக்கினார்க்கு இனிது புலனும். அவர் காட்டும் உவமைகளுள் சில:

சூல் கொண்ட பிடி யொன்று ஒருபால் படுத்துளது; அப் பிடியைத் தழுவியபடியே அதனை அணைத்துப் படுத்துளது களிறு; அக் களிற்றின்மீது ஏறியும், இறங்கியும் ஆடி மகிழ்கிறது அதன் கன்று; இக் காட்சியைக் கண்டார் மாமூலனார்; அந்தக் காட்சி, நாட்டகத்தே தாம் கண்ட ஒரு காட்சியை அவர் கண்முன் கொணர்ந்து காட்டிற்று: அக் காட்சி: தோள்களிற் படிந்து இருண்டு தொங்கும் கூந்தலையுடைய தன் மனைவியைத் தழுவிக் கொண்டுள்ளான் ஓர் ஆண்தகை; அவன் மார்பில் ஏறியும், இறங்கியும ஆடி மகிழ்கின்றான் அவன் மகன் இரண்டு காட்சிகளும் கண்ணிற்கு விருந்தளிக்கும் கவின் மிகு காட்சிகளன்றோ?

"தோள் தாழுபு இருளிய குவையிருங் கூந்தல்
மடவோட் தழீஇய விறலோன் மாபில்
புன்தலைப் புதல்வன் ஊறுபு இழிந தாங்குக
கடுஞ்சூல் மடப்பிடி தழீஇய வெண கோடடு
இனஞ்சால் வேழம் கன்று ஊறுபு இழிதரப்
பள்ளி கொள்ளும்." (அகம் கசுஎ)

கணவனும், மனைவியும், மகனும் கூடிய கவின் மிகு காட்சியைக் காட்டிய புலவர், மற்றொரு பாட்டில், துன்பம் வந்துற்றக்கால், அவர மூவரும், ஒருவரை யொருவர் அறியாமல் வேறு வேறு திசையில் பிரிந்துசென்று பெருந்துயர் உறும் காட்சியையும் காட்டியுள்ளார் புலி பாயப் பெற்ற களிறு துயர் தாங்கமாட்டாது வருந்தி முழங்கிய ஒலியைக் கேட்டு அஞ்சித் தன் கன்றையும மறந்து ஓடிய பிடியானைப் பின்னர் அக் கன்றைத தேடியலையும காட்சி, மகவு மறைய வருந்திய தாய் ஒருத்தி, தலைமேல் வைத்த கையளாய் அம் மகவைத் தேடிப் போவதுபோலும் என்ற அவர் உவமையின் அழகே அழகு!

ஒண்கேழ வயப்புலி பாய்தெனக் குவவடி
வெணகோட்டு யானை முழகிசை வெரீஇக்
கன்று ஒழித்து ஓடிய புன்தலை மடப்பிடி
கைதலை வைத்த மையல் விதுப்பொடு
கெடு மகப் பெண்டிரிற் றேரும்" (அகம் கூசஎ)

## கஉ. மாயெண்டனார்

மாயெண்டனார் பாடிய பாட்டொன்று குறுந் தொகைக்கண் வந்துளது என்பதல்லது, இவர் வரலாறுக உரைப்பதற்கு வேறு எதுவும் தெரிந்திலது. பொருள் வயிற் பிரிந்து சென்ற தலைவன், மீண்டு வருங்கால், "வாடையே! நெல்லிக்காயைத் தின்ற மரையினம் மகிழ்ந் தாடும் முன்றிலையும், புல்வேய்ந்த குடிசைகளையும் உடைய நம் தலைவியின் ஊர், தொங்கும் பாம்பின் தோல்உரி போன்ற, தூய வெள்ளிய அருவிகள் விளங்கும் மலையின் உயரத்தே உளது; ஆண்டுள்ள தலைவியை வருத்தாது காப்பாயாக," என வாடையை நோக்கிக் கூறுவான்போல், தலைவி, வாடையால் வருந்துவள், ஆகவே அவள் வருத தம் ஒழியும் வகை, ஆண்டு விரைந்து சேரல்வேண்டும்; அவளுறையும் இடம் இது; ஆகவே, பாக, ஆண்டு நின் தேரைவிரைந்து செலுத்துவாயாகஎனப், பாகனுக்குரைத் தான் தலைமகன் என்ற துறையமைய வந்துளது அவர் பாடிய அக் குறுந்தொகைப் பாட்டு. இப் பாட்டில், மலைக்காட்சியும், மலைநாட்டு ஊர்க்காட்சியும், அந்நாட்டு வாழ் உயிர்கள் இயல்பும், தலைவியின் அன்பும், அவளை விரைந்து அடைய விருமபும் தலைவன், தன் விருப்பத் தினைப் பாங்கற்கு உணர்த்தும் பண்பட்ட முறையும் ஒரு சேரக் காட்டப்பட்டுளளன

"ஓம்புமதி வாழியோ வாடை! பாம்பின்
தூங்கு தோல் கடுக்கும் துவெள் அருவிக்
கல்லுயர் நண்ணி யதுவே; நெல்லி
மரையினம் ஆடும் முன்றில்
புல்வேய் குரம்பை நல்லோள் ஊரே." (குறுந்: உஉடு)

## கச. மார்க்கண்டேயனார்

மார்க்கண்டேயனார், இறையனார், அகத்தியனார், வான்மீகனார், கவுதமனார் போன்ற அறவோராய்த் தமிழறிந்து வாழ்ந்த பெரியாராவர்: இவர் இயற்றிய நூல், தலையாய நூல் வரிசையுள் வைத்துப் பாராட்டப்பெறும் பெருமை வாய்ந்ததாம் என்ப; "இனித், தமிழ்ச் செய்யுட்கண்ணும், இறையனாரும, அகத்தியனாரும், மார்க்கண்டேயனாரும், வான்மீகனாரும், கவுதமனாரும் போல்வார் செய்தன தலை," என நச்சினார்க்கினியர் கூறுவது நோக்குக (தொல்: புறம்: உ0). நிலையாமை யுணர்த்தும காஞ்சித்திணை பாடிய புலவர்களுள் மார்க்கண்டேயனாரும் ஒருவர். இதை அவர் பாடிய புறநானூற்றுச் செய்யுளே யன்றி, யாப்பருங்கல விருத்தி, காரிகை உரைகளும் உணர்த்துகின்றன.

நாடும் மக்களும் நல்வாழ்வு பெறவேண்டின், அவர் இளமையும் உடைமையும், வாழ்வும், வளமும் நிலைபேறுடையன அல்ல என்ற நிலையாமை யுணர்வுடையராதல் வேண்டுமென, உணர்ந்த தமிழ்ப் பேராசிரியர்கள், வாய்க்கும்போதெல்லாம, நிலையாமை யுணர்வினை நினைப்பூட்டுவதைத தம வாழ்வின் கடமையாகக்கொண்டு போற்றினர். அவர் வழிவந்தநம் புலவருமம, "வயிரத்தாற் குடம கடைந்து, மாணிக்கத்தாலாய ஆர்க்கால் செறித்துச் செய்த பொன்னலாய ஆழிப் படைகொண்டு அரும் போராற்றி, எதிர்ப்பார் எவரையும் காணாது வென்று வீறெய்தி வாழ்ந்த வேந்தர்கள் பலரும், இறநது விண்ணுலகெய்தியதைக் கண்டும், அவர்க்கு உரிமை பூண்டு, அவரால் ஆளப்பட்டு வந்தாம், அவரோடு உடன்மடிந்து மறைந்து ஒழியாமல், நின்று நிலைபெற்று வாழும் தம் செயல், தமக்குப் பொன்னும் பொருளும் கொடுத்துப் பேணிய காதலர் இறந்து போனராகவும், அவரோடு உயிர்துறநது உயாவடையாமல், இருந்து வாழ்ந்து, நீங்காப் பழிகொள்ளும் விலைமகளிர் செயல் போலாம்," என நிலமகளே நின்று வருந்துவள் என்று பாடி, "இந் நிலவுலகம் தோன்றிய நாள்தொடங்கி,

இந் நிலத்தை உரிமை பூண்டு ஆண்ட அரசர் எண்ணற்றவ ராவர்; அவருள் ஒருவரும் நிலேபெற்று வாழ்ந்தாரல்லர்; அனேவரும் மாண்டே போயினர், பெற்ற பெருவளம் எல்லாம் பிறர் கொள்ள மறைந்தே போயினர், ஆகவே உலகீர்! நிலேயாமையினே நினேவிற்கொண்டு நிலேபேறுடை யன புரிவீராக!" என அறிவுரை கூறியுள்ளார், இப்பாட்டில். உலகை மகளாக உருவகம் செய்த புலவர், விசும்பை அவள் முகமாகவும், ஞாயிறு, திங்கள் ஆகிய இரு சுடர்களேக் கண்களாகவும் உருவகம் செய்துள்ளார்:

மயங்கு இருங் கருவிய விசும்பு முகனுக,
இயங்கிய இருசுடர் கண்ணெனப் பெயரிய
வளியிடை வழங்கா வழக்கரு நீத்தம்,
வியிரக் குறட்டின்; வயங்குமணி ஆரத்துப்
பொன்னகர் திகிரி முன்சமந்தது உருட்டிப்
பொருநாக காணுசை செருமிரு மூன்பின்
மூன்னோர் செல்லவும் செல்லாது இன்னும
விலேநலப் பெண்டிரின பலர்மிக் கூற
உள்ளேன் வாழியா யான் எனப் பண்மாண்
நிலமகள் அழுத காஞ்சியும்
உண்டு என உரைப்பரால் உயாந்திசி னேரே.

(புறம: நகரு)

## கரு. மாலை மாறன்

மாறன் எனும் பெயருடைமையான், புலவர் பாண்டியர் குடியோடு தொடர்புடையராவர் என்பது பெறப்படும்; இவர் பெயர்க்கு முன் வரும் மாலை எனும் சிறப்பு வருதற்காம் காரணம இஃது எனப் புலப்படவில்லை; இவர் வேந்தர் குடிவழி வந்தவர் என்பதற்கேற்ப, வாளரம் போலும் விளிம்புகளையுடைய தாழைகள வரிசையாக நிற்பது, வேலியாக நடப்படும் வேல்களைப்போல் தோன்றுகிறது என, அரசர் அறியும் பொருளை உவமை காட்டியுள்ளார்.

தலைவன், விரைந்து வரைந்து கொள்ளாமையால் வருந்தினள் ஒரு தலைவி, அவ்வருத்த மிகுதியால், அவள் உடல் நலமும் ஓரளவு குன்றிவிட்டது; ஆயினும், அவள், தன் நலன் குன்றுவது குறித்தும் கவலைகொண்டாளல்லள், தன் நலக்குறைவால் தன் வருத்தம் வெளிப்பட, அதனால் அத்தலைவன் செய்யும் கொடுமை புறத்தார்க்குப் புலனாகும்மே! தகைசான்ற சொற் காக்கக் கடமைப்பட்டவளாய தன்னாலேயே, அவன் பழிச்சொற்கு உள்ளாவனே! எனத தலைவன் பெறும் பழிகண்டே கவலை கொள்வாளாயினள்; அதனால், தன் வருத்தம் புறத்தார்க்குப் புலனாகாவண்ணம் மறைத்து ஒழுகவும் முயன்றாள்; இத்தகைய உயர்வுடையாளொரு பெண்ணின் பெருந்தகைமை விளக்கவந்த புலவர் பாட்டொன்று குறுந் தொகைக்கண் இடம் பெற்றுளது:

> "கடலனாகானல் ஆயம் ஆய்ந்த என்
> நலம் இழந்ததனினும் நனி இன்னாதே;
> வாள்போல் வாய கொழுமடல் தாழை
> மாலை வேல் நாட்டு வேலி யாகும்
> மெல்லப் புலம்பன் கொடுமை
> பல்லோர் அறியப் பரந்து வெளிப் படினே."
>
> (குறுந்: உசஎ)

## ௧௬. மீளிப் பெரும்பதுமனார்

பெரும்பதுமனார் என்பது இவரது இயற்பெயர்; மீளி என்பது இவர் பிறந்து வாழ்ந்த பெருமைசால் பேரூர்; அது யாண்டுளது என்பது இப்போது விளங்கவில்லை; "ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலுக்காவில், மல்லி என்றோர் ஊர் உளது; மீளி என்பதே, மல்லி என்று திரிந்து வழங்குகிறதோ தெரியவில்லை" என்று கூறுவர், நற்றிணை உரையாசிரியர், திருவாளர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர். பெரும்பதுமனார் என்ற பெயருடைய புலவர் மற்றொருவரும் உளர்; இருவரும் ஒருவரே எனக் கொள்வர் சிலர்; இவரை மீளிப் பெரும்பதுமனார் எனச் சிறப்பித்தும், அவரைப் பெரும்பதுமனார் எனப் பொதுவாகவும் அழைத்தலின், இருவரும் ஒருவரல்லர் என்பது துணியப்படும்; இவர் பாடிய பாட்டாக, இப்போது கிடைத்திருப்பது, நற்றிணைக்கண் காணப்படும் பாட்டு ஒன்றே.

வாடை வீசும் மாலைக்காலதனே தலைவனைப் பிரிந்து, தனித்துத் தயருறும் தலைவியின் நிலைக்குச், சேறு நிறைந்த தொழுவதனின்றும் வெளிக்கொணர்ந்து வேறிடதில் கட்ட வேண்டிய இருள செறிந்த இராக் காலதனே, அவ்வாறு கொண்டு சென்று கட்டாமையோடு, அத்தொழுவத்தினுள்ளும், கீழே படுக்கவும் இயலாமல், நின்ற நிலையிலேயே நிறகுமாறு, தலைக் கயிற்றை இழுத்து உச்சியிலே தூக்கி இறுகப பிணித்து விடப்பெற்ற பசுவின் துயர நிலையினை உவமை கூறிய திறம, புலவர் தம் புலமைக்குப் பெருமையளித்து நிற்கிறது.

"விரைககும் வாடை இருள்கூர் பொழுதில்
தொளியுடைத் தொழுவில் துணிதல் அற்றத்து
உசிக் கட்டிய கூழை ஆவின்
நிலையென ஒருவேனகி
உலமரக் கழியும் இப்பகல் மடி பொழுதே."

(நற்: ௪0௯)

## கஎ. முடத்தாமக் கண்ணியார்

முடத்தாமக் கண்ணியார், பத்துப் பாட்டெனும் பெருநூலுள், திருமுருகாற்றுப் படையை அடுத்து வைத்துப் பாராட்டப்பெறும் பெருமை வாய்ந்த பொருநராற்றுப் படை பாடிய புலவர் பெருந்தகையாவர். இவர் பாடிய பாட்டும் அப்பொருநராற்றுப் படையொன்றே; அவர் பாராட்டிய அரசனும், அப்பாட்டுடைத் தலைவனுய கரிகாற் பெருவளத்தான் ஒருவனே. கரிகாற் பெருவளத்தான் பண்பும், பெருமையுமே பொருளாகக் கொண்டு பாடியுள்ளமையான், அப்பாட்டின் பண்பறிந்து பாராட்டுதலுக்கு முன்னர், அவன் வரலாற்றினைச் சுருங்க அறிதலும் ஈண்டு வேண்டுவதாயிற்று.

"ஊர் எனப்படுவது உறையூர்" எனப் புலவர் புகழ்ந்துரைக்கும் உறையூரைத் தலைநகராகக் கொண்டு, உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி என்பான் ஒரு சோழ அரசன், நாடாண்டிருந்தனன், அவன் அழுந்தூரை வாழிடமாக் கொண்டு விளங்கிய வேளிர் தலைவன் மகளை மணந்து மாண்புற்றிருந்தான்; இவ்விருவர்க்கும மகனுய்ப் பிறந்தவனே கரிகாற் பெருவளத்தான; கரிகாற் பெருவளத்தான் பிறப்பதற்குச் சின்னாட்களுக்கு முன்னரே, இளஞ்சேட் சென்னி இறந்துவிட்டான், அதனல் கரிகாலன், தாய் வயிற்றிருக்குமபோதே, தரணியாளும் உரிமை உடையனுயினன்; இவ்வுண்மை தோன்றவே புலவர் முடத்தாமக் கண்ணியார், "தாய்வயிற்றிருந்து தாயம் எய்தி" எனப் பாராட்டுவாராயினர்; இத்தொடர்க்குப் பொருள் கூறிய நச்சினர்க்கினியர், "கரிகாற் பெருவளத்தான் பிறத்தற்குரிய காலம் வந்துற்றவிடத்து அவண் வந்த அறிஞர் சிலர், 'பிறக்கும் குழவி, சிறிது பொழுது தாழ்த்துப் பிறப்பின் பேரரசாம் பேறுடையதாகும்' என்று இயம்ப, அவ்வாறே தான் பிறக்கின்ற காலத்துப் பிறவாதே நல்ல முகூர்த்தம் வருமளவும் தாயுடைய வயிற்றிலேயிருந்து பிறக்கையினலே அரசவுரிமையைப் பெற்றுப்

பிறந்தான்" என்றவொரு கதையையும் கட்டிவிட்டுளார். நிற்க.

கரிகாலன் தந்தை, உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியைக் கொன்ற தாயத்தார், கரிகாலனையும் சிறையிலடைத்து விட்டனர்; கரிகாலனும், கூட்டுள் வளரும் புலிக்குட்டியேபோல், சிறையுள் வளர்ந்து பெரியவனையினன். மேலும் சிறையுள் அடைபட்டிருக்க விரும்பாத அவன், ஒருநாள் எவரும் எதிர்பாரா வண்ணம், சிறைக் காவலரைக் கொன்றும், காவலை அழித்தும் வெளியேறினன்: அக்காலை, அவன் வெளியேறுவண்ணம் தடுத்து நிறுத்த, அச்சிறையைச் சூழ அவன் பகைவர் எழுப்பிய தீயால், அவன் கால்களும் கரிந்து போயின; அதனாலேயே அவன் கரிகாலன் என அழைக்கப்பெற்றான்; வெளிப் போந்த கரிகாலன், தன் வாள் துணையால் தன் பகையாய் வந்த தாயதாதார் அனைவரையும் அழித்து, அரசியலைக் கைப்பற்றி ஆளலாயினன்.

சோணாடாளும் அரசனும் சிறுவன்; அந்நாட்டில் அமைதியும குன்றியுளது, ஆகவே அந்நாட்டைக் கைப்பற்றற்கு ஏற்ற காலம இதுவே எனக் கருதிய சேரனும், பாண்டியனும், குறுநில மன்னர் பதினெருவரையும் துணையெனக் கொண்டு, கரிகாலனை எதிர்த்தனர், கரிகாலன் அவர்களை வெண்ணியெனும் ஊரில் எதிர்த்துப் போரிட்டு வென்று பெருமையுற்றான்; வெண்ணியில பெற்ற வெற்றி, உலகத்தார் உளத்தே உவகைப் பெருக்கை ஊற்றோடச் செய்த சின்னாட்களுக்குள், வாகை எனும் இடத்தே வந்து எதிர்த்த ஒன்பது பேரரசர்களையும் ஒரே பகலில் அழித்து, அழியாப் புகழ்பெற்றான்; இவ்விரு பெரும் வெற்றிகளோடு, அவன் போர் வேட்கை தணிந்திலது; தொண்டை நாட்டை ஆண்டிருந்த அருவாளரையும், சேரரையும், பாண்டியரையும், ஒளியர், பொதுவர் முதலாயினரையும் வென்றான்; இவ்வாறு தன் நாட்டைச் சூழ இருந்த அரசுகளை அழித்து ஆட்கொண்ட கரிகாலன், வடநாடு நோக்கிச் சென்றான்; ஆண்டுள்ள, வச்சிரம், மகதம், அவந்தி

மூதலாம அரசுகளே அடிபணியச் செய்து, அவர்கள் அளித்த, முத்துப் பந்தர், பட்டி மண்டபம், வாயில் தோரணம் ஆகிய அரிய பொருள்களைத் திறையாகப் பெற்று மீண்டான்.

வெற்றி வீரனுய் விளங்கிய கரிகாற் பெருவளத்தான், நாங்கூரில் வாழ்ந்த வேளிர்தலைவன் மகளே மணந்து ஆட்சித தொழில் மேற்கொண்டிருந்தான்; நாடு பகைப் பயம் அற்றிருக்கக் கண்ட அவன், அந்நாடு, செல்வத்தில் சிறந்து விளங்க விரும்பினன்; கரையின்மையால், கொன்னே ஓடிக்கழியும் காவிரியாற்று நீரை, அவ்யாற்றின் இருமருங்கும் கரையுமை குறுக்கே அணையும் அமைத்து, நிலவளத்திற்குப் பயன்படுததி "சோழவளநாடு சோறுடைத்து" என்ற புகழ்ச்சொல் தோன்றத் துணைநின்றனன். ஒரு நாடு நிலவளததால் மட்டுமே ஏள்புகழ் பெறுதல் விடாது; அந்நாடு வாணிபத் துறையிலும் வளம்பெறுதல் வேண்டும் என அறிந்த கரிகாலன், காவிரி கடலொடு கலக்குமிடத்தே அமைந்துள்ள புகார் நகரைத் தலைநகராகக் கொண்டு, கடல் வாணிபம் வளர்தற்கு ஆவன எல்லாம் புரிந்து அந்நாட்டுச் செல்வவளம் பெருகப பெருந்துணை புரிந்தான். இவ்வாறு வளம்படுததிப பெருவளத்தான் எனவும், திருமாவளவன் எனவும் பாராட்டப பெற்ற கரிகாலன், புலவர்மாட்டுமை பேரன்புடையனுய், அறிவுச் செல்வம் வளரவுமை துணைபுரிநதுள்ளான். பட்டினப்பாலை பாடித் தன்னைப் பாராட்டிய புலவர் கடியலூர் உருத்திரங் கண்ணனர்க்குப் பதினுறு நூறுயிரம் பொன் பரிசளித்துப் போற்றினன். இத்தகைய பேரரசைப் பாராட்டிப் பாடிய பாட்டே பொருநராற்றுப்படை யெனின், அதன் பெருமையினை அளவிட்டுக் கூறலும் இயலுமோ!

பொருநராற்றுப் படையாவது, வரையாது வழங்கும் வள்ளலைப் பாடும் புலவன் ஒருவன், அவ்வள்ளலைப் பாடிப் பெருவளம் பெற்று மீளும் பொருநன் ஒருவன், தான் பெற்ற பெருஞ் செல்வத்தைத் தன் எதிர்வரும் வறியோன் ஒருவனுக்குக் காட்டி, "நீயும் அவன்பாற் செல்லின், யான்

பெற்றன போலும் பெரும் பொருள் பெற்று மீள்வை; அவன், இன்னன்; இத்தகையான்; அவன் நாடும், ஊரும் இன்ன; ஆண்டுச் செல்லும் ஆறு இது," எனக் கூறுவ தாகக் கொண்டு, அத்தலைவன் புகழெலாம் தோன்றப் பாடிய பாட்டாகும் என விதி கூறுவர் ஆசிரியர் தொல் காப்பியனார்:

"கூத்தரும், பாணரும், பொருநரும், விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெரு அர்க்கு அறிவுறீஇச
சென்று பயன் எதிரச சொன்ன பக்கமும்,"

(தொல்: புறம்: கூசு)

கரிகாலன் புகழ்பாட வந்த புலவர் முடத்தாமக் கண்ணியார், அவன் ஆட்சிமேற் கொண்டிருந்த சோணாட்டு வளத்தினைப பாராட்டும பண்பு வியந்து பாராட்டுதற்குரிய தாம்: நிலத்தை நால்வகையாகப் பகுத்துப் பார்த்தனர், நில நூல் அறிவோடு, புலமை நலமும் வாய்ந்த பண்டை யோர். முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்பன அந் நல் நிலங்கள், ஒரு நிலததே வாழும் உயிர், ஏனைய நிலத்தே வாழா; ஒரு நிலத்து ஒழுக்கம், ஏனைய நிலத் தார்க்கு ஒவ்வா என்றும் கூறுவர், சோணாடு, இந்நால் நிலவளமும் வாய்க்கப்பெற்றது, அதையுணர்த்த புலவர் மேற்கொண்ட முறை, அறிவிற்கு இன்பம் ஊட்டும் அருமையுடைத்தாம.

சோணாட்டு நெய்தல்நிலத்துக் கழிகளில் மீனைத் தேடியுண்டு அக்கழியை அடுத்துள்ள புன்னைமரக் கிளையில் அமரும் நாரைகள், அப்புன்னை மரத்தைமோதி அடங்கும் அலையோசைக்கு அஞ்சின், மருத நிலத்துட்புக்கு ஆங் குள்ள பனை மடலில் தங்கும், மருத நிலத்துப் பறவை யாகிய மயில், குலைகுலையாகக் காய்களைக்கொண்ட தெங்கும், வாழையும், காந்தளும், புன்னையும் நிறைந்ததும், தடியோசை போலும், ஒசையினையுடைய பேராந்தைகள் வாழ்வதுமாய நெய்தல் நிலத்தே எழும் யாழ் ஒசை போலும் வண்டோசை கேட்டு மயங்கி, ஆண்டுச் சென்று,

ஆண்டுள்ள நிலவொளி போலும் வெண்மணலிடத்தே விறல்பட ஆடி மகிழும்; குறிஞ்சி நிலப் பொருள்களாகிய தேனையும், கிழங்கையும் கொண்டு வந்து விற்றவர், மருத நிலப் பொருள்களாய மீன் எண்ணெயும், கள்ளும் வாங்கிச் செல்வர், மருதநிலப் பொருள்களாய கரும்பையும், அவலையும் விற்றவர், குறிஞ்சி நிலப் பொருள்களாய மானிறைச்சியும், மதுவும் பெற்றுச் செல்வர்; குறிஞ்சி நிலப் பண்ணை, நெய்தல் நிலத்தார் பாடி மகிழ்வர், நெய்தல் நில மலர்களால் ஆய கண்ணியைக் குறவர் சூடி மகிழ்வர்; முல்லை நிலத்து ஆயர், மருதப் பண் பாடி மகிழ்கொள்வர், மருத நிலத்து உழவர், நீல நிறத்தை உடைய முல்லைக் கொடி மணக்கும முல்லை நிலததே சென்று, அந்நிலம பாடிப் பரவுவர்; முலலை நிலத்துக் கோழிகள், மருத நிலத்து நெற்கதிரைத் தின்னும; மருத நிலத்துக் கோழிகள், குறிஞ்சி நிலததுத் தினைக்கதிரைத் தின்னும்; குறிஞசி நிலத்து மலைகளில் வாழும் மந்திகள், நெய்தல் நிலத்துட் புகுந்து கழிநீரில் ஆடி மகிழும்; நெய்தல் நிலத்துக் கழிகளில் வாழும் நாரைகள், குறிஞ்சி நிலத்து மலைகளில் சென்று தங்கும், இவ்வாறு நானில வளமும் நனி மிகக் கொண்ட நன்னாடு சோணாடு எனப் புலவர் நாவாரப் போற்றுமத திறம அவர் புலமைக்குப் பெருமை யளிக்கும் பெருஞ செயலா மன்றே!

சுறவழங்கும் இரும் பௌவத்து
இறவருந்திய இனநாரை,
பூம் புன்னைச் சினைச சேப்பின்
ஓங்குதிரை ஒலிவெரீஇத்
தீம் பெண்ணை மடல் சேப்பவும்;
கோள் தெங்கின், குலை வாழைக்
கொழுங் காந்தள், மலர் நாகத்துத்,
துடிக் குடிஞைக் குடிப் பாக்கத்து
யாழ் வண்டின் கொளைக் கேற்பக்
கலவம் விரித்த மடமஞ்ஞை
நிலவு எக்கர்ப் பலபெயரத்;

தேன்நெய்யொடு இழங்கு மாறியோர்
மீன் நெய்யொடு நறவு மறுகவும்;
தீங்கரும் போடு அவல் வகுத்தோர்;
மான் குறையொடு மது மறுகவும்;
குறிஞ்சி பாதவர் பாட; நெய்தல்
ஈரும்பூங் கண்ணி குறவர் சூடக்;
கானவர் மருதம் பாட; அகவர்
நீல்நிற மூல்லைப் பல்திணை நுவலக்,
கானக் கோழி கதிர் குத்த;
மனைக் கோழி தினைக்கவர;
வரைமந்தி கழிமூழ்கக்;
கழிநாரை வரையிறப்பத
தண்வைப்பின் நால்நாடு குழீஇ.”

(பொருநர்: ௨0௫-௨௨௬)

சோணாட்டின் நானில வளத்தினை இவ்வாறு பாராட்டிய புலவர், அந்நாட்டுப் பெருநிலமாகிய மருத நிலவளத்தினையும், அவ்வளத்திற்குக் காரணமாய காவிரியாற்றின் பெருமையினையும் வாயார வாழ்த்தியுள்ளார். ஏனைய நாடுகள் எல்லாம், வற்கடமுற்று வறுமையில் உழலும் காலத்திலும், நறை, நரந்தம், அகில், ஆரம் முதலாம் பொருள்களைத் துறைதொறும், துறைதொறும் ஒதுக்கிவிட்டு, நுரைத்தும், ஒலித்தமை ஓடி, மகளிர் மகிழ்ந்து ஆடுமாறு, குளங்களை நிறைத்துப்பாயும் காவிரியாற்றுப் பெருக்கால், விளையுள் பெருக, வளைந்து நின்று, அரிவாளால் அறுத்து அடித்துப் பெற்ற நெல், மலைபோல் அடுக்கிய குதிரின் கண்ணை வெற்றிடம் இல்லையாம்படி நிறைந்து கிடக்குமாறு, ஒருவேளி நிலம் ஆயிரங்கலம் விளைந்து விழுப்பயன் தரும் என அவர் கூறும் அந்நாட்டுவளம், அக்கால நிலையினை அழகுறக் காட்டுதல் அறிக.

“பெருவறன் ஆகிய பண்பில் காலையும்
நறையும் நரந்தமும் அகிலும் ஆரமும்
துறைதுறை தோறும் பொறையுயிர்த்து ஒழுகி,
நுரைத்தலைக் குரைப்புனல் வரைப்பகம் புகுந்தொறும்

புனலாடு மகளிர் கதுமெனக் குடையக்
கூனிக் குயத்தின் வாய்நெல் அரிந்து
சூடு கோடாகப் பிறக்கி, நாள்தொறும்
குன்றெனக குவைஇய குன்றூர்க் குப்பை
கடுந்தெற்று மூடையின் இடங்கெடக் கிடக்கும்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட்டாகக்
காவிரி புரக்கும் நாடு.” (பொருநர்: உரு எ-சஅ)

வரலாறு உறைக்கும் நூல்களே முரையாக வரைந்து வைத்தல் வேண்டுமெ என்ற எண்ணமற்ற தமிழகத்தே வாழ்ந்த அரசர்கள், அறிஞர்கள் ஆகியோர் வரலாற்றினை அறியத்துணைபுரிவன புலவாகள் அவவப்போது பாடிவைத்துள்ள ஒருசில பாக்களே, அமமுறையில், கரிகாலன் வரலாற்றை அறியும் நிலையில், முடத்தாமக் கண்ணியார் பாடிய பொருநராற்றுப் படையும் ஓர் அளவு துணைபுரிகின்றது. கரிகாலன் வரலாற்றுள், அவன் பெயர் கரிகாலன் என்பது; அவன் தந்தை உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியே; கரிகாலன் தாய் வயிற்றிருந்த போதே தாயவுரிமை உடையனாயினன்; அதனால, பிறந்து மொழிபயின்று ஆடத் தொடங்கிய அக்காலத்திலேயே ஆட்சிப் பொறுப்பு அவன் பால் வந்தடைந்தது, அவன் ஆற்றலை முன் அறியாதார், அறிந்தபின் பணிந்தது போயினர்: அறிந்தும் பணியாத அரசர், அழிந்து மறைந்தனர், அத்துணை ஆண்மையாளன் அவன்; வெண்ணிப் போரே, அவன் கன்னிப் போர், அப் போர்க்களத்தே அவன், சேரனும், பாண்டியனுமாய பேரரசர் இருவரையும ஒருங்கே அழித்து வென்றான், என்பனபோலும் பகுதிகள் பொருநராற்றுப் படையான் விளக்கம் பெற்றுள்ளன.

“வென்வேல்
உருவப் பஃறேர் இளையோன் சிறுவன்,
முருகற் சீற்றத்து உருகெழு குருசில்,
தாய் வயிற்றிருந்து தாயம் எய்தி
எய்யாத் தெவவர் ஏவல் கேட்பச

செய்யார் தேஎம் தெருமரல் கலிப்பப்
பல்வ மீமிசைப் பகற்கதிர் பரப்பி,
வெவ்வெஞ் செல்வன் விசும்பு படர்ந்தாங்குப்
பிறந்ததவழ் கற்றதற் றொட்டுச சிறந்த நல்
நாடு செகிற் கொண்டு நாடொறும் வளர்ப்ப,"

"இரும்பனம் போந்தைத் தோடும், கருஞ்சினை
அரவாய் வேம்பின் அகுழைத் தெரியலும்
ஒஙகிரும் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரும் ஒரு களத்து அவிய
வெண்ணித தாக்கிய வெருவரு நோன்தாள்
கண்ணுர் கண்ணிக் கரிகால் வளவன்."

(பொருநர் கூஉ; கசஙூ-அ.)

கரிகாலன் ஆட்சி நலத்தால், அந் நாட்டு, இளையரும், முதியருமாய மக்கள் தம்முள் முரண் ஒழிந்து, அன்புடை உளத்தராய் ஆடிப்பாடி அளவளாவி வாழ்வர்; அவருள் முதியராயினர் ஒரோவழி முரண்படுவராயினும், அம்முரண் பாடு, அரசன் அவை அடைந்து வழக்குரைக்கும் வரை நிற்றல் அரிதாம், அவர் அவ் அவைக்கு முன்னரே, தம் முரண்பாடு ஒழித்து, முன்னையினும் பெரு நட்பாளராவர்; அத்தகைய பெருந்தகை உடையார அந்நாட்டு மக்கள் எனக் கூறு முகத்தான், அந்நாடாளும் அரசன் செங் கோல் திறனைச் சிறக்கப் பாடியுள்ளார்:

"இளையோர் வண்டல் அயரவும், முதியோர்
அவைபுகு பொழுதில் தம்பகை முரண் செலவும்."

(பொருநர்: கஅள-அ)

இத்தொடரை அடிப்படையாகக்கொண்டு, திருமாவளவன், வழக்கறிந்து நீதிவழங்கும் வன்மையை விளக்கும் ஒரு கதை கூறுவாரும் உளர். ஒருநாள் கரிகாலன், அரசவையில் அமர்ந்திருந்தான்; அப்போது, தம்முட்பகை கொண்ட முதியோர் இருவர், அவன்பால் முறைவேண்டி வந்தனர்; வந்த அவர்கள், அரசனை அணுகி நோக்கியக்கால், கரிகாலன் நனி இளையனாய் இருப்பக் கண்டனர்;

உடனே, அவர் உளத்தே, "இவ்விளஞ்ஞெ, நம் முரண் தீர்த்து முறைவழங்க வல்லான்" எனும் ஐயம் எழுந்தது; அதை அவர் வாய்ச்சொல் வெளியிடவும் செய்து விட்டது; அவர் கருத்தைக் குறிப்பால் அறிந்து கொண்டான் கரிகாலன்; உடனே அண்மையில் இருந்ததோர் அறையுட் சென்று புகுந்துவிட்டான்; சிறிது நாழிகை கழித்து நரை, திரை தோன்றிய முதியான் போல் உருவுதாங்கி வெளிப் போந்து அரசவை அமர்ந்தான்; அந்நிலையில் அவனைக் கண்ட அம் முதியோர் இருவரும், முன்னர் யாம் கண்ட அவ் விளையோன் அரசனல்லன், இம முதியோனே அரசனுவன்; நம் முரண்போக்கும் மூதறிவுடையனே இவன் என்று எண்ணித் தம் வழக்கினை அவனுக்கு விளங்க உரைத்தனர்; கரிகாலனும், அவர் கூறியனவற்றை ஆர எண்ணி, அவரும், ஆண்டுள்ளார் எவரும வியக்குமாறு முறை யளித்தான்; அவன் கூறிய முறை கண்டு, மகிழ்ந்த அம் முதியோர், அவனை வாழ்த்தி வணங்கி நின்ற அப் போதே, தன் முதிய வேடங் கலைந்து, உண்மை உருவொடு தோன்றலாயினன்; அந் நிலையில் அவனைக் கண்ட முதியோர், அவன் பெருமையும், தம் சிறுமையும் உணர்ந்து வியந்து பாராட்டினர், இதுவே அக்கதை இக் கதையை உறுதி செய்யவல்ல சான்றுகளாகக் கீழ்வரும் செய்யுட் களைக் கொள்வர் அக் கதை கூறுவார்:

"உரை முடிவு காணுன் இளமையோன் என்ற
நரைமூது மகளை உவப்ப—நரை முடிதுசை
சொல்லால் முறை செய்தான் சோழன், குலவிசசை
கல்லாமல் பாகம் படும்." (பழமொழி · உக)

"இளமை நாணி முதுமை எய்தி
உரை முடிவு காட்டிய உரவோன்."
(மணி: பளிக்கறை · கoஎ-அ)

வளவன் வள்ளன்மையினை வாயார வாழ்த்தும் புலவர், அவன், பாணர் முதலாம் இரவலர்க்கு அளிக்கும், உணவு, உடை ஆகியவற்றின் வகைகளையும், வனப்பையும் விளங்கக் கூறுவதற்குமுன், அவன் அவரை வரவேற்கும்

முறையினை எடுத்துக் கூறி ஏத்திப் போற்றியுள்ளார்; கரிகாற் பெருவளத்தான், தண்ணைக் கண்டு பாராட்ட வரும் பரிசிலர்களைத் தன்னெடு முன்பே நட்புக்கொண்டு பழகிய வரை விரும்பி வரவேற்பதேபோல் வரவேற்பன், இரப் பாரைப் புரப்போர் எல்லாம் இவனே போலின், இரந் தண்ணும் வாழ்வே இனிமை யுடைத்தாம் எனும் எண்ணம் அவர் உளத்தே எழுமாறு இன்னுரை பல வழங் குவன்; வந்தாரைத் தன் அரசியல் அலுவல் மிகுதியால் காணுது இராது, அவர் எப்போதும் தன் காட்சிக்குட் பட்டாராகும் அத்துணை நெருங்கிய இடத்திலேயே அவரை இருத்திப் புரப்பன்; அவன, அவர்களைக் கண்ணுல் பருகி விடுவான்போல் பரிந்து நோக்குவதால், வந்தவர் எலும்பும கரைந்துகுமாறு உளங் குளிர்ந்து உறைவர். கரிகாலன்பால் காணலாம் இவ் விருந்தேற்கும் பண்பு, விருந்தினரைச் "சேய்மைக்கண்கண்டுழிஇன்முகமும், அது பற்றி நண்ணியவழி இன்சொல்லும், அதுபற்றி உடன் பட்டவழி நன்றூற்றலும் என விருந்தோம்புவார்க்கு இன்றியமையாத மூன்ற"னெடு மூற்றிலும் ஒத்துகிற்றல் உணர்ந்து பாராட்டற் குரிததாம்:

"ஒன்றிய
கேளிர் போலக் கேள் கொளல் வேண்டி,
வேளாண் வாயில் வேட்பக் கூறிக்
கண்ணிற் காண நண்ணுவழி இரீஇப்
பருகு வன்ன அருகா நோக்கமோடு
உருகு பவைபோல் என்பு குளிர் கொளீஇ"

(பொருநா : எசு-அ)

சோணாட்டு வளமும், அந் நாடாண்ட கரிகாலன் பெருமையும் விளங்கப் பாடிய புலவர், அக்காலத்து மக்கள் மேற்கொண்ட நனிநாகரிக வாழ்வினை விளக்கும் சிற்சில பகுதிகளையும் இடையிடையே கூறிச் சென்றுளார். தமிழகத்தின் பேரூர்தோறும் திருவிழா நிகழும்; விழாக் காண வருவார் அனைவர்க்கும், பெருஞ் சோறளித்துப் போற்றுவர், அவ்வூர் வாழ்மக்கள்; அம் மக்கள், ஓட்ட

மற்ற, மாத்திரைக் குறையில்லாத பொன்னாலாய கலங்களையும், இழை போனவழி இஃது எனக் கண்ணுற் கண்டறியாவாறு நுண்மையவாய் நெய்யப் பெற்றதும், பூத் தொழில் நிறைந்ததும், பாம்பின் தோல்போலும் மென்மை வாய்ந்ததும் ஆய நூலாடைகளையும், கொட்டைக் கரை அமைய ஆக்கப்பெற்ற பட்டாடைகளையும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்ந்தனர்; அந் நாட்டுப் பொருநர் ஏழிசையின் திறம் தெரிந்தவராவர்; காட்டகத்தே வாழ்ந்து, அவ் வழி வருவாரை அழித்து, அவர் கைப்பொருள் கவர்ந்து உண்ணும வாழ்வினராய, அருளறியா ஆறலைகளவரும், இளகிய நெஞ்சுடையராகித், தம் கைப் படைகளை வீசி யெறிந்து அருள்நிறை உளத்தராமாறு, அவர் மனததினை மாற்றவல்ல பாலைப் பண்போலும், பற்பல பண்களைப் பாட வல்லராவர் அப் பொருநர் எனப் புலவர் கூறுமசெய்திகள், அக்காலத் தமிழகத்தின் தன்னேரில்லாத தனி வாழ்வின் சிறப்பினை அறியத் துணைபுரிதல் காண்க

"அரு அ யாணா அகன்றலைப் பேரூச
சாறுகழி வழிநாள் சோறு நசை உரூஉது
வேறுபுலம் முன்னிய விரகறி பொருந!" (க-ங)

"போக்கில் பொலங்கலம் நிறையப் பல்கால்
வாக்குபு தரத்தர." (அசு-அஎ)

"நோகசு நுழை கல்லா நுண்மைய, பூக்கணிந்து
அரவுரி அன்ன அறுவை." (அஉ-அங)

"தூய, கொட்டைக் கரைய பட்டுடை" (கநிச-நி)

"ஏழின் கிழவ!" (சுங)

"ஆறலை களவா படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை." (உக-உஉ)

பொருநராற்றுப் படை பாடி, வள்ளலும், வீரனுமாய் விளங்கிய கரிகாற் பெருவளத்தானைப் பாராட்டிய புலவர் முடத்தாமக் கண்ணியார், இடையிடையே தம் உள்ளத்தின் உயர்வு உணர்த்தும் சில பல தொடர்களையும் அமைத்துச்

சென்றுளார்; உவமை போலும் செய்யுள் அணி கருதி அவர் காட்டும் சில செய்திகள், அவர் உள்ளத்தை உணரத் துணை புரிந்துள்ளன.

தமிழகம், தன்னேரில்லா அரசுபெற்றுத் தழைத் திருந்த காலம், மூவேந்தர் அரசோச்சிய காலமாம் என்ற பாராட்டுரைகளுக்கிடையே, தன்னேரில்லா அரசோச்சிய அத் தமிழகம், தாழ்ந்தமைக்கும், அம் மூவேந்தர்களும், அவர்கள் காலத்தே தமிழ்நாட்டின் சிறு சிறு பகுதிகளே ஆங்காங்கே ஆண்டிருந்த குறுநில மன்னர்களுமே காரண மாம் என்ற பழியுரைகளையும் எழுதவேண்டிய நிலையி லேயே அன்றைய அரசியல அமைந்திருந்தது. மூவேந் தர்கள் ஒற்றுமைகொண்டு ஊராண்டவரல்லர்; அவர் ஒவ் வொருவரும பிறரை அடக்கி ஆளவேண்டும் என்ற எண்ண முடையராவர், ஒரு குடியில ஒரு காலத்தே ஆறறல் மிக்க பேரரசன் ஒருவன பிறந்துவிட்டால், அவன பிற அரசுகளை யெல்லாம் பணியவைத்துப் பேரரசனுய் வாழ வேண்டும் என்று எண்ணுவதும, அவன் ஆற்றலும, செல்வமும கண்டு அழுக்காறுகொண்ட ஏனைய அரசாகள் அனைவரும் ஒன்றுகூடி அவனை அழிக்க வழி கோலுவதும் அக்கால வழக்கமாம, ஒரு குடியிற் பிறந்தார், பிறகுடியிற் பிறந்தாரோடு பகைத்து வாழ்தலோடு நினையாரல்லர்; ஒரு குடியிற் பிறந்தவாகளே ஒருவரோடொருவர் பகைத்துப் போர் மேற்கொளவர்; அமமட்டோ! தந்தை மகனை எதிர்ப்பன்; மகன் தந்தைமேல் போருக்கு எழுவன்; பழைய தமிழகத்தின் அரசியற் பெருநெறி இது; அரச ரிடையே நிலவும் இவ் வரசியல் முறையால், தமிழகம் பெற்ற அழிவு அம்மம்ம! கொடிது! கொடிது!

தமிழகம், அத்தாழ்நிலையின் நீங்கித் தன்னேரில்லாப் பேரரசாய் வாழ விரும்பினர் அக்காலப் புலவர் பலரும்; அவருள் மூடதாமக்கண்ணியாரும் ஒருவர்; தமிழகத் திற்குத் தாழ்வுதரும் இந்நிலை ஒழியவேண்டுமாயின், அந் நாடாள் உரிமையுடையராய தமிழ் அரசர் மூவரும் தம்முள் பகையொழிந்து, ஒற்றுமை யுளத்தராகி ஊராள முன்வரல்

வேண்டும். அவர்கள் அவ்வாறு வாழ முன்வரும் அந்நாளே எண்ணி ஏங்கினர் புலவர்; அந்நிலே தம் வாழ்நாளில் வாய்க்கப்பெறுதாயினும், அம்மூவரும் ஒன்றுகூடி வாழ்வதால் உலகத்தார்க்கு உண்டாம பேரின்ப வாழ்வை உவமையில் அமைத்துக்கண்டு அகமகிழ எண்ணினர் புலவர். பொருநன் பாடும் பிடற்றுப் பாடலுக்கேற்ப, எழும் அவன் யாழ்ஒலி தரும் இன்பம், அரசர் மூவரும், அன்புடையுளத் தாராய், அரசவை வீற்றிருப்பதால் உண்டாம் பேரின்பம் போன்றதாம் என உவமைகூறி உளமகிழ்ந்தார், என்னே அவர் உள்ளம்!

"டுடுகெழு திருவின் பெரும்பெயர் நோன்தாள்
மூவரு முழங்கு தானை மூவரும் கூடி
அரசவை இருந்த தோற்றம் போலப்
பாடல்பற்றிய பயனுடை எழாஅல்."

(பொருநர் · நிஉ - சு)

உலகில் நிகழும் ஒவ்வொரு செயலும் முற்பிறப்பின் வினையின் விளைவாம்; முன்னைப் பிறப்பில் நல்வினை செய்தார், இப்பிறவியில் நன்மை யடைவர்; இம்மையில் தவம் செய்தார், மறுமையில் பேரின்பம் பெறுதலோடு இப்பிறவியிலேயே, தவம்செய்த உடலோடு கூடியிருந்தே, அத் தவத்தாலாம் பயனைப் பெறுதலும் உண்டு என்ற கொள்கையுடையவர் நம புலவர்; வறுமையால் வாடிவரும் பொருநன் ஒருவன், கரிகாலனைக் கண்டு பெரும் பொருள் பெற்று மீளும் மற்றொரு பொருநனை வழியில் கண்டது, அவன் முற்பிறவியில் செய்த தவத்தின் பயனும் என்றும், கரிகாலனைக் கண்டு பாராட்டிய அவ்வளவிலேயே பொருநன் பெரும் பொருள் பெறுதல், தவம் செய்த பெரியோர், அத்தவம் செய்த தம் உடலோடு கூடியிருந்தே அத்தவத்தாலாம பயன்பெற்றுப் பேரின்பம் பெறுதல்போலாம் என்றும் அவர் கூறும் கூற்றுன் அவர் உள்ளத்துணர்வு வெளிப்போதரல் காண்க:

"அறியாமையின் நெறிதிரிந்து ஒரூஅது
ஆற்றெதிர்ப் படுதலும் நோற்றதன் பயனே." (நிஅ-சூ)

"தவம்செய் மாக்கள் தம்மூடம்பு இடாஅது
அதன்பயம் எய்திய அளவை மான." (கக-உ)

பெண்களுக்குரிய நலன்களுள், நனிசிறந்தது நாணுடைமையே; நாணுடை மகளிர் நிமிர்ந்த தலையும், வீசிய கைகளும் உடையராய் நடத்தலறியார்; அவர் கவிழ்ந்த தலையினராய்க், கால்விரல் நோக்கும் கண்ணினராய்ச் செல்லவே விரும்புவர்; அந்நிலையே அவர்க்கு அழகு தருவதாம்; பெண்களைப் பற்றிய இவ்வுண்மை, நம் புலவர்க்கும் உடன்பாடாம் என்பது, பொருநனைப் பின்தொடர்ந்து வரும் விறலியின் பல்வேறு உறுப்புக்களைப் பாராட்டி வருங்கால், அவள் கழுத்து, நாணத்தால் கவிழ்ந்து நலம் பெறும் கழுத்தாம் எனப் பாராட்டுவதால் புலனும்:

"நாண்அடச சாய்ந்த நலம்கிளா எருத்து." (நக)

உழவுத்தொழில் பற்றிய உணர்வு உடையவர் நம் புலவர்; உழுகலப்பை இருவகைப்படும்; உழவர் நன்செய் நிலத்தை உழும் கலபபையைப் புன்செய் நிலத்தை உழ மேற்கொள்ளார், அவ்வாறே புன்செய் நிலதை உழும் கலப்பை, நன்செய் நிலத்தை உழப் பயன்படாது; நன்செய் நிலம சேறுடையது ஆகலின், அதை உழும் கலப்பை விரைவில் தேய்ந்து பயனற்றுப்போதல் இல்லை, மாறாக, புன்செய் நிலம், நீரற்றும், கற்கள் நிறைந்தும் காணப்படுவதால், அதை உழும் கலப்பை விரைவில் தேய்நது பயனற்றுப்போகும். இதை நன்கு உணர்ந்த புலவர், கரிகாலனை அடைந்து வாழும் பொருநன், இரவும் பகலும் இறைச்சி கலந்த உணவே உண்டமையால் அவன் பற்கள் இறைச்சியை மென்று மென்று தேய்ந்துபோதற்குக் கொல்லையை உழுத கலப்பை தேய்ந்து போவதை உவமை காட்டியுள்ளார்:

"கொல்லை உழுகொழு எய்ப்பப் பல்லே
எல்லையும் இரவும் ஊன்தின்று மழுங்க." (ககள-அ)

மூடத்தாமக் கண்ணியார்தம் புலமை நலத்திற்கு, அவர் எடுத்தாளும் உவமைகளும் சான்று பகர்ந்து

நிற்கின்றன ; பொருநன் யாழின் பல்வேறு உறுப்புக்களுக்கும், விறலியின் பல்வேறு உறுப்புக்களுக்கும் அவர் காட்டும் பல்வேறு உவமைகள் அழகுற அமைந்துள்ளன ; அவையனைத்தையும் நன்கு எடுத்துக்காட்டின் ஏடு விரியுமாதலின், அதைச் செய்யாது, அவர் காட்டும் வேறுசில உவமைகள் சிலவற்றைக் காட்டி இக்கட்டுரையினை முடிக்கின்றேன்.

கரிகாலன் பிறந்தபோதே அரசாளும் உரிமை உடையனாயினன் ஆகவே, அவன் தவழ்ந்து விளையாடத் தொடங்கிய அக்காலத்திலேயே ஆட்சிப் பொறுப்பினைத் தாங்கி நின்றனன் , இதை விளக்கவந்த புலவர், தன் ஒளியால் உலகை விளக்கமுறச் செய்யவரும் ஞாயிறு, இளஞாயிறாகிய அக்காலத்திலேயே, தான் தோன்றும் இடமாகிய கடலிடையே தன் பொன்னிறக் கதிர்களைப் பரப்பி ஆண்டு ஒளிசெய்து எழுதலை உவமை காட்டியுள்ளார் :

> "பவள மீமிசைப் பகற்கதிர் பரப்பி
> செவவெஞ் செல்வன் விசும்பு படர்ந்தாங்குப்
> பிறந்து தவழ் கற்றதன் தொட்டுசி றந்தனன்
> நாடுசெகின் கொண்டு நாடொறும் வளர்ப்ப."
>
> (கஉடு-அ)

கரிகாலன் அரியணை அமர்ந்து பெற்ற முதல் வெற்றி, அவன் வெண்ணி நகரில் பெற்ற வெற்றியாம் ; வெண்ணிப் போரில், கரிகாலன், சேரன், பாண்டியன் ஆய பேரரசர் இருவரையும், அவர்க்குத் துணையாக வந்த சிற்றரசர் பதினொருவரையும் வென்று வீறுகொண்டான் , தனியிளைஞனாய கரிகாலன், தான் மேற்கொண்ட கன்னிப்போரிலேயே அத்துணைப் பெரிய வெற்றிபெற்ற பெருஞ்செயல் கண்டு வியந்த புலவர், கரிகாலன் செயல், பாலுண்ணலை மறந்தறியாத புலிக்குட்டி யொன்று, கூற்றுவன்போல் ஆற்றல் மேற்கொண்டு சென்ற முதல் வேட்டையிலேயே, களிற்றுயானையினைக் கொன்ற அருஞ்செயல்போலும் எனக் கூறிப் பாராட்டி மகிழ்கின்றார் :

"ஆளி கன்மான் அணங்குடைக் குருளை
மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி
முலைக்கோள் விடாஅ மாத்திரை ஞெரேரெனத்
தலைக்கோள் வேட்டம் களிறு அட்டாஅங்கு,
இரும்பனம் போந்தைத் தோடும், கருஞ்சினை
அரவாய் வேம்பின் அங்குழைத் தெரியலும்
ஓங்கிரும் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரும் ஒருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன் தாள்
கண்ணுர் கண்ணிக் கரிகால் வளவன்" (கநூ - சஅ)

———

## கூஅ. முதுவெங்கண்ணனார்

பொதும்பில் கிழார் ஒருவர் வெங்கண்ணனார் என்ற இயற்பெயர் கொண்டிருத்தலான், அவரின் வேறு அறிதற்கு இவர் முது வெங்கண்ணனார் என அழைக்கப் பெற்றுளார். அறிவானும், ஆண்டானும் முதுமையுற்றாராய இவர், அருள் ஒழுகும் கண்ணுடையராதலின், முது வெங்கண்ணனார் என அழைத்துப் பாராட்டப் பெற்றுளார். குறிஞ்சித்திணை தழுவிய இவர் பாட்டொன்று நற்றிணைக் கண் இடம் பெற்றுளது.

தன் ஆருயிர்த் தோழியாய தலைமகளைக் கூடிய தலைமகன், களவொழுக்கத்தைக் கைவிட்டு, ஊரார் கூறும் அலருரை ஒழியுமாறு அவளை மணந்து, மாண்புடைய இல்லறவாழ்க்கையினை ஏற்றுக் கோடல் வேண்டும் என்று விரும்பிய தோழி, அதைத் தலைமகன்பால் வெளிப்படக் கூறுது, "தலைவ! களிறும், பிடியுமாகிய இருயானைகளும், சுனையின் கரையிலே கூடி மலைவாழையை வெறுத்து, சிறு குடிவாழ்வார் அலறுமாறு ஆண்டுள்ள பலாப்பழத்தினைத் தின்று மகிழும் நாடு நின்னுடையது என்று அவன் நாட்டின் நிலைகூறுவாள் போல் கூறி, நின்னுட்டு யானைகளைப் போன்ற, நீயும் என் தலைவியும், இக்களவொழுக்கத்தினை வெறுத்து, ஊரில் உள்ளார் இக்களவொழுக்கம் கருதிக் கூறும் பழியுரை போமாறு, வரைந்து கொண்டு இல்லறப் பயனைப் பெறுவீராக எனத்" தான் கருதியது வெளிப்படக் கூறினள். தோழியின் இக்கூற்று அமைய வந்துளது புலவர் பாடிய பாட்டு.

"சிறுகண் யானைப் பெருங்கை ஈரினம்,
குளவித் தண்கயம் குழையத் தீண்டிச
சோலை வாழை முளைஇ அயலது
வேரல் வேலிச் சிறுகுடி அலறச்
செங்காற் பலவின் தீம்பழம் மிசையும்
மாமலை நாட!" (நற்: உகூ)

## கஉ. மூலங்கீரனார்

கீரனார் என்ற இயற்பெயருடைய இவர் மூலத்திரு நாளில் பிறந்தமையால் மூலங்கீரனார் என அழைக்கப் பெற்றுளார் போலும் இவர் தஞ்சை மாவட்டம், சாயாவனமாய திருச்சாய்க் காட்டைப் புனைந்து பாடியுள்ளமையால் சோழ நாட்டைச் சேர்ந்தவராவர் எனக் கோடல் பொருந்தும.

சாய்க்காடு, செந்நெல் விளைந்து சாய்ந்துகிடக்கும் கழனிகளில் அன்னப்பறவை துஞ்சும் வளமுடையது எனக் கூறுவது, தென்னாட்டு நெற்களஞ்சியம் தஞ்சை மாவட்டம் என்ற கூற்றினை மெய்ப்பிதுநிற்றல் காண்க.

> "மயிர்நிரைத் தன்ன வாகைகோல் வாங்குகதிர்ச்
> செந்நெலம் செறுவின் அன்னம் துஞ்சும்
> பூககெழு படப்பைச சாய்க்காடு." (நற்: எஉ)

பேயின் விரல்கள், செம்மூருக்க மரத்தின் காய்கள், பழுத்து முற்றிய நெற்றுக்களைப் போலும், பேய், ஊரார் இடும் பலி உண்ண வேண்டி, மாலைக்காலததே ஊர் மன்றம் சென்று அடையும் எனவும் கூறுவது, அக்கால மக்களின் மன இயல்பை உணர்த்துவதாம

> "வேனில் முருக்கின் விளைதுணர் அன்ன
> மாணு விரல வல்வாய்ப் பேஎய்
> மல்லல் மூதூர் மலர்ப்பலி உணீஇய
> மன்றம் போழும் புன்கண் மாலை" (நற்: எஉ)

மூலங்கீரனார் பாடிய பாட்டாக நமக்குக்கிடைத்தது இந் நற்றிணைப் பாட்டு ஒன்றே.

## உ0. மேலைக்கடைக் கண்ணம் புகுத்தாராயத்தனார்

கடையம் என்பது பாண்டி நாட்டு ஊர்களுள் ஒன்று; அது மேற்கடையம், கீழ்க்கடையம் என இரு கூற்றினதாம்; அது, "கோனூட்டுக்கடையம்" எனவும், "கோனூட்டு விக்கிரம பாண்டிய நல்லூரான கடையம்" எனவும் வழங்கப் பெறும். மேற்கடையத்திலிருந்து மதுரை வந்து வாழ்ந்தார் பலர், அவர்கள், மதுரை மேலைக்கடையத்தார் என அழைக்கப் பெறுவர்; அவர்களுள் கண்ணம்புகுத்தாராயத்தனர் ஒருவர். இவர் பெயரைக் கண்ணம் புகுத்தார், ஆயத்தனர் எனப் பிரித்து, ஆயத்தனர் என்பது இவர் இயற்பெயர், கண்ணம்புகுத்தார் என்பது, துயருறுவார் நிலை கண்டு தம் கண்கள் நீரொழுக நின்று வருந்தினமையாலோ, அவ்வாறு வருந்தியவரைக் கண்ணம்பு உகுத்தார் எனப் பாராட்டிச் சிறப்பித்தமையாலோ வந்த சிறப்புப் பெயராம் என்று கூறுவர் சிலர். இனி, இவர் பெயர்க்கு முன்வரும் மேலைக்கடை என்பதை ஓலைக்கடை எனக் கொண்டு, இவர், தாழை முதலியவற்றின் ஓலையால் இயற்றப்பட்ட குடைகளை விற்கும் குடைவாணிபம் மேற்கொண்டு வாழ்ந்தவர் வழிவந்தவராவர் என்று கூறுவாரும் உளர்.

இவர் பாடிய மகட்பாற் காஞ்சி மகிழ்தற்குரியது, ஓர் ஊர்த்தலைவன் மகள், மணத்தற்குரிய பருவம் உற்றுழி; பேரழகு கொண்டு விளங்கினாள்; அவளை மணந்து கொள்ள விரும்பிய மன்னர் பலராவர்; ஆனால், அவள் அண்ணன்மாரும், அவர் தந்தையும், அவளைத் தகுதியுடையானுக் கன்றித் தாரோம் எனக் கூறித் தக்கானை தேடிக் கொண்டிருக்கின்றனர்; அவளை மணக்க விரும்பிய மன்னர் அது பொறாது, அவரை வென்றுவது அவளைப் பெறத் துணிகின்றனர்; இதனால், அவ்வூரில் நடந்த போர்கள் பலவாம்; போர் பல நடந்தமையால், ஊரும், அவ்வூரைச்சூழ உள்ள

அரணும் பாழாயினவேயன்றி, அவரை வென்று அவனைப் பெற முடியவில்லை அரசரால்; மதிலைச்சூழ உள்ள அகழி தூர்ந்து விட்டது; மதில் உறுப்புக்கள் எல்லாம் இடிந்து தளர்ந்து விட்டன; மதிலும் இடிந்து விட்டது; இவ்வாறு பாழ்பட்டுக் கிடக்கிறது அவ்வூர்; அந்நிலையில் அவனை மணக்க மனம் கொண்ட மன்னன் ஒருவன், படையுடன் வந்து புறத்தே காத்துக்கிடக்கின்றான்; இவ்வாறு பாழான ஊரினைக்கண்டும், அவள் அண்ணன்மார் தம் முடிவினை மாற்றிக்கொள்ளாது, அப்போது வந்து நிற்கும் அம்மன்னனோடும் போரிடத்துணிந்து நிற்கின்றனர், ஊரின் நிலையினையும், இருதிறத்தார் உள்ளத்தையும் உணர்ந்த ஒருவர், இவ்வூரின் நிலை என்னுமோ? என்று எண்ணி வருந்துகிறார். பழங்கால மக்கள் தம் மறவுணர்வினை விளக்கும் இக் காட்சியை இனிய செய்யுள் ஒன்றில் அமைத்துக் காட்டுகிறார் புலவர்:

> "தூர்ந்த கிடங்கின், சோர்ந்த ஞாயில்,
> சிதைந்த இஞ்சிக் கதுவாய் மூதூர்,
> யாங்காவதுகொல் தானே! தாங்காது;
> படுமழை உருமின் இரங்கு முரசின்
> கடுமான் வேந்தர் காலை வந்து எம்
> நெடுநிலை வாயில் கொட்டுவர் மாதோ;
> பொருதாது அமைகுவா அல்லர், போருழந்து
> அடுமுரண் முன்பின் தன்னையா"

(புறம்: 26)

## உக. மேலைக் கடையத்தார் நல்வெள்ளையார்

நல்வெள்ளையார் என்ற இயற்பெயரினராய இவர், மேலைக் கடையம் என்ற பாண்டி நாட்டு ஊரினின்றும் போந்து மதுரையில் வாழ்பவர்; வழி வழி வந்த புலவர் குடியினர்; பெயர் நோக்கி, இவரைப் பெண்பாலர் எனக் கொள்வாரும் உளர். இவர் பாடியனவாக உள்ள பாடல் கள் இரண்டு. அவ்விரண்டும் நற்றிணைக்கண் உள.

வெள்ளம் பெருகி ஓடுங்கால், அதைத்தடுத்து நிறுதத வல்ல ஆற்றல் அணைக்கு உண்டாவதில்லை; அவ்வெள்ளத் தால், அவ் அணை அழியும்; அதைப் போலவே, ஒருவர்க் குக் காமம் மிக்கவழி, அதைத் தவறு என எடுத்துக் காட்டி அடக்கவல்ல ஆற்றல் அறிவிற்கு உண்டாவதில்லை; அக்காமததால அவ்வறிவு அழியும் இஃது எல்லாரும் கண்டது; இதனால், அளவற்ற காமதகிற்கு ஆற்று வெள் ளத்தையும, அககாமததை அளவறிந்து ஆள வேண்டிய அறிவிற்கு, அவ் ஆற்று வெள்ளததை அளவறிந்து போக் கும அணையையும் உவமையாகச் கொளவர் புலவர்கள். இதை நம் புலவர் பாட்டிலும காணலாம. "சிறையடு கடும்புனல் அன்ன, என் நிறையடு காமம்" என்ற தொட ரைக் காண்க.

புலவர் தாம் பிறந்த காலததே, மக்கள் வடகோடி யில் விளங்கிய இமயமலையினையும், அவ இமயத்தினின் றும் தோன்றிப்பாயும் கங்கைப் பேராற்றினையும உணர்ந்து பாராட்டினர் என்பதை உணர்ந்தவா ஆவர்; அவற்றை அக்கால மக்கள் பயில உணர்நதிருந்தனர்; ஒரு பொருளை உவமை கூறி விளக்குங்கால், அறிந்த பொருள்களையே உவமை கூறுதல் வேண்டும் நிறை அழித்துப் பெருகும் காமத்தை விளக்க, இமயத்தினின்றும் தோன்றி, இரு கரைகளையும், பெரு அணைகளையும் அழித்துப் பாயும் கங்கைப் பேராற்றினை உவமை கூறியுள்ளனர் எனின், அக்கால மக்கள் அவற்றைத் தீரத் தெரிந்திருந்தனர் என்பது தெளிவா மன்றே?

"ஞெமை யோங்கு உயர்வரை இமயத்து உச்சி
வாஅன் இழிதரும் வயங்கு வெள் அருவிக்
கங்கை அம் பேர் யாற்றுக் கரையிறந்து இழிதரும்
சிறையடு கடும்புனல் அன்ன என்
நிறையடு காமம்." (நற்: ஈஉஉ)

தமிழகத்தின் தெருவுகளில், தமிழ் இளஞ்சிறுவர்கள், தம் கால்களில் கட்டிய கிண்கிணி ஒலிக்க, நடை தேர் உருட்டி நடை பயிலும் நல்ல காட்சிகளையும், பொருளொடு படா அவர்தம் வாய்ச் சொற்களைக் குழலினும், யாழினும் இனிமையுடையதாக் கேட்டு மகிழ்ந்து, அவர் தம் மலர் போலும் வாயினின்றும் வடியும் நீரால், தம் மார்பிற் பூசிய சுகதனம் சிதையுமாறு அன்பொழுக எடுத்தணைக்கும் அவர்தம் தந்தைமார் அன்பின்பெருக்கையும புலவர் அழகொழுகக் காட்டியுள்ள காட்சியினை அவர் பாட்டொன்றில் கண்டு களிக்கலாம்;

"அரிபெய் கிண்கிணி ஆர்ப்பத், தெருவில்
தேர்நடை பயிற்றும் தேமொழிப் புதல்வன்
பூநாறு செவ்வாய் சிதைத்த சாந்தம்."

(நற்· உஞ0)

## ௨௨. மையோடக் கோவனூர்

பரிபாடல் பாடிய புலவர் பெருமக்களுள் மையோடக் கோவனூரும் ஒருவர்; புனல் விளையாட்டிற்குத் தகுந புரியும் ஓடத்தைப் புனைந்து கூறியதுபற்றி இப்பெயர் பெற்றார் போலும் எனக் கருதுவாரும் உளர். தலைமகன், தலைமகளோடு புனலாடி மகிழ்ந்தான எனக் கேட்டு இன் புற்ற செவிலித்தாய், தோழியை நீவிர் ஆடிய புனலணி இன்பங்களை எடுத்துக் கூறுக என்றாட்கு, அப்புனலணி இன்பமும், தலைமகன் காதற் சிறப்பும கூறி என்றும் இவ் வின்பமே நிறையுமாக என்று வாழ்த்தி வேண்டினள் எனத் துறையமைய வந்த அப்பரிபாடற் பாட்டு, வையைப் பெருக்கினை வனப்புத் தோன்ற விரித்துக் கூறுகிறது.

புலவர், மையோடக் கோவனூர், வையையின் வெள் ளப் பெருக்கினையும், அவ்வையைக்குரிய பாண்டி வேந்தர் தம் படையின் சிறப்பினையும் பல்லாற்றானும பாராட்டிக் கூறியிருத்தலின், இவர் பாண்டி நாட்டவர, அப்பாண்டிய அரசர்பால் பேரீடுபாடு உடையவர் என்பன புலனும்.

வையையாற்று வெள்ளம், புக அரிய இடம் என எதையும் ஒதுக்காமல் எங்கும் பரந்து பாய்ந்தோடும் காட்சி, பாண்டியர் பெரும்படை, தம்மால் கொள்ளற் கரிய நாடு இது என எந்நாட்டையும் வரைந்து ஒதுக்காது, கொள்ளக் கருதிய நாடுகள் அனைத்தினும் உட்புக்குப் பாழ் செய்யும் நிகழ்ச்சியோடு ஒத்துளது என்றும், வையைப் புனல் தன்னகத்தே புகுந்து ஆடும் ஆடவர், மகளிர் ஆய இருவரும் அணிந்திருக்கும தலைமாலை, கைவளை, விரல் மோதிரம், தலைக்கோலம், இடை ஆடை, இருவட மணிமேகலை, எண் வடக் காஞ்சி, வாகு வலயம் ஆய ஆடை, அணி அனைத்தையும் கவர்ந்தோடும் காட்சி, பகைவர் நாட்டுட் புக்குப் பாழ்செய்யும் பாண்டியர் பெரும் படை அந்நாட்டுச் செல்வம் எல்லாவற்றையும் கொள்ளை கொண்டு வரும் நிகழ்ச்சியோடு ஒக்கும் என்றும், வையைக்

கும், அதன் வேந்தர்க்கும் ஒற்றுமை காட்டிப் பாடியுள்ள புலமை பாராட்டற்குரியது.

"இரவிருள் பகலாக, இடமரிது செலவென்னுது
வலன் இரங்கு முரசின் தென்னவர் உள்ளிய
நிலனுற நிமிர்தானே நெடுநிரை நிவப்பன்ன
.. . . .. ... .... .. .. . . .. ..... . ..
வந்தன்று வையைப் புனல்."

"தூனெய்தாடுவார் ஆய் கோதையர்
அலர் தண்டார் அவர் காதில்
தளிர் செரீஇக், கண்ணி பறித்துக
கைவளை, ஆழி, தொய்யகம், புனைதுகில்,
மேகலை, காஞ்சி, வாகு வலயம்
எல்லாம் கவரும் இயல்பிற்றுய்த தென்னவன்
ஒன்னார் உடைபுலம் புககற்றல் மாறட்ட
தானையான் வையை வனப்பு"

(பரிபாடல் எ : ரு-கo ; சாரு-ரு0)

ஆடல மகளிர், தம் ஆட்டத்திற்கு அமைத்த அரங்கிடமன்றி, வேறிடம் புகுந்து ஆடல், ஆடல் மரபிற்கு மூரண்பட்டதாம் என்ற ஆடல் அறிவையும, "ஊடுதல் காமத்திற்கு இன்பம" எனினும், அவ்வூடற்கு இன்பம, அவ் வூடற்குப் பின் கூடி முயங்கப்பெறற வழியே உண்டாம் ; அவ்வாறின்றி, ஊடலே மேலும நிற்றல் இன்பத்திற்கு இடையூறும் ; ஆதலின் அன்றே, "உப்பு அமைந்தற்றல் புலவி, அது சிறிது மிக்கற்றல் நீளவிடல்" என்று கூறினர் வள்ளுவப பெருந்தகையாரும் ; ஊடலின் இவ்வுயர்வையும் உணர்ந்தவர் நம்புலவர் மையோடக் கோவனார் ; வையைப் புனல், அதற்கு என அமைந்த ஆற்றுப் படுகையின்கண் மட்டுமன்றி, அதையும் கடந்து எங்கும் பாய்ந்துபோம் நிகழ்ச்சி, ஆடல் மரபறியா மகள் ஒருத்தி, தனக்கு அமைத்த அரங்கையும் கடந்து ஆடுவது போலும் எனவும், ஊடற் பண்பறியாப் பேதை ஒருத்தி, கழிபெரும் ஊடலால் தன் கணவனையும் கடந்து செல்வதே போலும், வையை, தன் வெள்ளப் பெருக்கின் வேகம் மிக்கு விடா

மல் தடுத்து நிறுத்தத் தன்னிடையே அமைந்த அணைகளை அழித்துச் செல்லும் நிகழ்ச்சி எனவும் அவர் கூறுவன வற்றை அறிந்து மகிழ்க.

"ஆடல் அறியா அரிவை போலவும்,
ஊடல் அறியா உவகையள் போலவும்,
வேண்டுவழி நடந்து தாங்குதடை பொருது"
(பரிபாடல் எ. கள-கூ)

வெள்ளம், ஊரையும், சேரியையும் ஒருங்கே அழித் தும், விளை நிலங்களை வேறுக்கிப் பாழ் செய்தும் பெருகி ஓடுவதைக் கண்ட உழவர், அதன் போக்கை மாற்றி அமைக்க வேண்டும் எனும் ஆர்வத்தால் விரைந்து தொழி லாற்றத் தொடங்கும் அவர் வேட்கைக்கு, ஊடலைப் பல காலும் உணர்த்தவும் உணராது ஊடி நிறகும மகளிரை, ஊடல் தீர்க்க விரும்பும், அவர் கணவர்தம் ஆசைப் பெருக் கினை உவமை காட்டிய சிறப்பு, உயர்ந்தோர் பாராட்டும் பண்புடையதாம்:

"வித்திடு புலம் மேடாயிற்று என,
உணர்த்த உணரா ஒள்ளிழை மாதரைப்
புணர்த்திய விசயதப் பெருக்கத்தில் தூனெது
சினைவளர் வாளையிற் கிளையொடு கெழீஇப்
பழன உழவர் பாய் புனல் பரத் தந்து"
(பரி: எ, கடு-கூக)

## உங. மோதாசனர்

இவர் பெயரால், குறுந்தொகைக்கண் ஒரு செய்யுள் இடம் பெற்றுளது என்பதல்லது, இவர் வரலாறு குறித்து வேறு எதுவும் அறிதற்கில்லை.

ஒரு தலைவனும், ஒரு தலைவியும் தாம் இருவரும் மணத்தற்குத் தம் ஊர் வாழ்க்கை இடையூறுதல் அறிந்து, அயலார் சென்று மணந்து வாழத்துணிந்து தம் ஊரை விட்டுச் செல்லலாயினர், அவர்களை இடைவழியில் கண்டார் சிலர்; அவர்கள், அவர்களை முன்னரே அறிந்திருந்தனர்; இளமையில், ஐம்பாலாகப் பின்னிவிடப்பட்டிருந்த அவள் கூந்தலை அவன் பற்றி இழுப்பன்; அவன் தலை மயிரை அவள் கைபபற்றி வளைத்து வலிப்பள்; அவர் இருவர்க்கிடையே உண்டாம் இச்சிறு பூசல்களை, இருவர் செவிலித்தாயரும் இடையிட்டுப் போக்குவர்; அவ்வாறு அன்று பலகாலும் போர்புரிந்து வாழ்ந்த அவ்விருவரும், இரு மலர்கள் ஒருங்கே பிணைப்புண்டாற்போல், ஒருவரை ஒருவர் இன்றியமையாராயினர்; அன்று அவர்கள் மேற் கொண்ட சிறுபூசல்களை இடையிட்டுப் போக்கிய செவிலித் தாயர், இன்று அவர்கள் மணவினைக்கு இசையாராயினர்; அவர்கள் இசையாராகவும இவர்கள் மனம்ஒத்து மணக்கத் துணிந்துவிட்டனர்; இளமையில் இருவர் உள்ளத்திருந்த பகையையும், இன்று இருவாதம பெற்றோர்க்கிடையே நிலவும் ஒற்றுமை இன்மையையும் ஒருங்கே போக்கி, இரு வரும் உளம் கலந்து உறவாடத் துணைபுரிந்தது ஊழ்வினை; இவ்வாறு உறுதுணை புரிந்த ஊழ்வினை வாழ்க பல்லாண்டு என அவ்வூழ்வினையை வாழ்த்தினர். வழிச்செல்வார் வாழ்த்திய வாழ்த்துரையினை வகுத்துக்காட்டுகிறது புலவர் மோதாசனர் பாடிய அப்பாட்டு.

இதில் அடுத்தடுத்த வீடுகளில் வாழும் இளைஞர்கள், காரணம் இன்றியே பலகாலும் ஒருவரோடொருவர் போர் புரிவதையும், அப்போரை அவர்தம் பெற்றோர் இடை

விட்டுப் போக்குவதையும் புலவர் நன்கு விளக்கிக் கூறியுள்ளார். காதலர் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவுபட்ட வாழ்க்கைக்கு, இணைமலர்ப் பிணையலை உவமைகாட்டிய சிறப்புப் பாராட்டற்குரியதாம்.

"இவன், இவள் ஐம்பால் பற்றவும், இவள், இவன்
புன்தலைஓரி வாங்குகுள் பரியவும்,
காதற் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது
ஏதில் சிறுசெரு உறுப மன்னே!
நல்லை மன்றம்ம! பாலே; மெல்லியல்
தூணைமலர்ப் பிணையல் அன்ன இவர்
மணமகிழ இயற்கை காட்டி யோயே." (குறுந்: உஉகூ)

## உச. வடநெடுந்தத்தனார்

இவர், வடநாட்டினின்றும் தமிழ்நாட்டிற் குடிபுகுந்து வாழ்ந்த பழங்குடிகள் ஒன்றிற் றோன்றியவர், தத்தனார் என்ற இயற்பெயருடையவர், இவர் புலமைநலம் அறிந்த அக்கால மக்கள், இவரை நெடுந்தத்தனார் என அழைத்துப் பாராட்டினர், இவர் பெயர், வடமநெடுநத்தனார் என்றும், வடமநெடுந்தச்சனார் என்றும ஏடுகளில் காணப்படுகிறது. இவர், நாலிகிழவன் நாகன் என்பானைப் பாராட்டிப் பாடியுள்ளார்.

பாண்டிநாட்டில், அருப்புக்கோட்டையை அடுத்துள்ள நாலூர் என்பதே நாலை என மரீஇ வழங்கியுளது, அவ்வூர்க்கு உரிமைபூண்டு வாழ்ந்தமையால் நாகன், நாலிகிழவன் நாகன் என அழைக்கப்பெற்றுளான்; நாகன், பாண்டியர் படைதலைவருள் சிறந்தவன், பாண்டிவேந்தர்க்குப் படைத்துணை வேண்டிய காலத்தே அஃது அளித்துத துணைபுரிதலோடு, அப்பாண்டிநாட்டு அரசியல் நன்கு நடைபெறுதற்காம் நல்லறிவும் நல்கும் நற்பண்புடையவன்; கெடாத புகழ் உடையவன்; போர்க்களத்தே பகைவர் பலரைக் கொன்று, பருந்துகளின் பசி போக்கும் பேராண்மையாளன், இவன் துணைபெற்று, பாண்டிநாடாண்ட அரசன், மண்பல தந்த பாண்டியன் என அழைக்கப்படுதலால், அப்பாண்டியன், நிலந்தரு திருவிற் பாண்டியனுவன் எனக் கொள்வாரும் உளர்.

நாலிகிழவன் நாகனைப் பாராட்டிய நல்லிசைப் புலவராய நெடுந்தத்தனார், உலகில், உயர்ந்த கொடையாளர் ஒருவரும் இலராக எல்லோரும் மாய்ந்தாராக, பாணர், பொருநர், கூத்தர் முதலாம் இரவலர் தமக்குப் பொருள் அளித்துப் பேணுவாரை இழந்து வருந்திய காலத்தே, இவர்தம வறுமைபோக வழங்கவல்லோன் யாவன் என வேண்டி நின்றார்க்கு, அவ்வாறு வழங்கவல்ல வள்ளியோன், நாலிகிழவன் நாகனுவன் எனப் பலர் கூறினர் என்று

பாடிப் பாராட்டியுள்ளார் இதில் அவன் படைப்பெருமை யினையே முழுதும் பாராட்டிய புலவர், இரவலர்க்கு இட்டு வழங்குவார் இலராய உலகில், அவர்க்கு அருங்கலம் அளித்து ஆதரிப்போன் இவன் ஒருவனே எனக்கூறிய கூற்றால் அவன் கொடைக்குணத்தையும் பாராட்டிய பண்பு பாராட்டற்குரியதாம்

"ஞால மிமிசை வள்ளியோர் மாய்ந்தென
ஏலாது கவிழ்ந்த என் இரவல் மண்டை
மலர்ப்போ யார்என வினவலின் மலர்தோ
விசிபிணி முரசமொடு மணபல தந்த
திருவீழ் நுண்பூண் பாண்டியன் மறவன்
படை வேண்டுவழி வாள் உதவியும்,
வினை வேண்டுவழி அறிவு உதவியும்,
வேண்டுப வேண்டுப வேந்தன் தேஎத்து
அசைநகம் படாஅ ஆண்டகை உள்ளதது
தோலா நல்லிசை நாலுகிழவன்
பருந்து பசி தீர்க்கும் நற்போர்த்
திருந்து வேல் நாகன் கூறினா பலரே." (புறம். 165)

## உரு. வருமுலையாரித்தி

இவர் பெண்பாற் புலவராவர் எனக்கொள்வர், குறுந் தொகைப் பதிப்பாசிரியர். அவ்வாறு கோடற்குரிய காரணம் எதையும் அவர் காட்டிஞரல்லர்; வருமுலையாரித்தி என்ற தொடர் அமையப் பாடிய காரணத்தால் பெற்ற பெயராதலும் கூடும் ஆதலின், இவரைப் பெண்பாலார் எனத் துணிந்து கொள்வதற்கில்லை.

ஆண்மகன் ஒருவன், தன் உள்ளம் விரும்பிய பெண் ஒருத்தியைப் பெற எண்ணியக்கால், தன் ஆண்மையால் அறவழியின்நீங்கிப் பெற முயலாது, தன் கருதினை அவள் ஏற்று இசையுமாறு பலகாலும் அவள்பால் சென்றும், பணிந்த மொழிபல கூறியும் தான் எண்ணியதை முடித்துக் கோடல் வேண்டும், ஆண்மகன் இத்தகைய பண்பட்ட உள்ளமுடையனுதல் வேண்டும் என்ற தம் கருத்தினைப் புலவர் வருமுலையாரித்தியார் நன்கு எடுத்துக்காட்டி யுள்ளார்.

> "ஒருநாள் வாரலன், இருநாள் வாரலன்;
> பன்னாள் வந்து பணிமொழி பயிற்றி, என்
> நன்னர் நெஞ்சம் நெகிழ்த்த பின்றை." (குறுந்: களசு)

உளளம் கலங்கிய கலக்கத்திற்குப், பெருமழை பிறர் காட்டில் பெய்ததாக, ஆங்கிருந்து பெருகி ஓடிவரும் வெள்ளத்தின் கலங்கிய நிலைமையினை உவமை கூறியது, உள்ளக்கலக்கத்தின் கொடுமையினை விளக்கிநிற்றல் காண்க.

> "வேறுபுலன் நன்னாட்டுப் பெய்த
> ஏறுடை மழையிற் கலிழும் என் நெஞ்சே." (குறுந்: களசு)

## உசூ. வன்பரணர்

சங்க காலப் புலவர்களுள், பரணர் என்ற பெயருடையார் மூவர். அவர்கள், ஒருவரின் ஒருவர் வேறு அறிதற்குப் பரணர் எனவும், நெடுங்களத்துப் பரணர் எனவும், வன்பரணர் எனவும் வழங்கப்பட்டனர். பரணர், சேரன் செங்குட்டுவனைப் பாடியவர்; நெடுங்களத்துப் பரணர், நெடுங்களம் எனும் ஊரிற் பிறந்தவர்; வன்பரணர், கண்டீரக்கோப் பெருநள்ளியையும், வல்வில் ஓரியையும் பாடியவர். இவர் பெயர்க்கு முன்னே காணப்படும வன் என்ற சிறப்பு வருதற்குரிய காரணம் விளங்கவில்லை. இவர் காலப் புலவர்கள், இவராற் பாராட்டப் பெற்றோராய அவ் விரு வரையும் பாடிய, கபிலர், கல்லாடனார், கழைதின் யானையார், காக்கைப் பாடினியார், நச்செள்ளையார, பரணர், பாலத்தனார், பெருந்தலைச் சாத்தனார் முதலியோராவர்.

கண்டீரக் கோப் பெருநள்ளி, கடையெழு வள்ளல்களுள் ஒருவன்; குமணனுக்கு முற்பட்டவன்; தோட்டி என்ற மலைக்கும், அதைச் சூழவுள்ள மலைநாட்டிற்கும் உரியவன், வில்லாற்றல் மிக்க வீரர்க்குத் தலைவன், தன் நாடு நோக்கி வருவாரகு யானையும, தேரும், பொன்னும், பொருளும் அளித்துப் போற்றுபவன்; இவன் அளிப்பது மட்டுமன்று, இவன் இல்லாக் காலத்தில், இவன் நாடு நோக்கிச் செல்வார்க்குப் பிடி யானைகள பலவற்றை இவன் பெண்டிரும் அளிப்பர்.

ஒருநாள் நள்ளி, காட்டில் வேட்டையாடிக் கொண்டிருந்தான்; அக்காலை, அவ் வழியே வந்த வன்பரணர், வறுமையாலும், வழிநடை வருத்தத்தாலும் மெலிந்து, மரமொன்றின் கீழ் இருந்து இளைப்பாறினர்; இருந்தாரை, அந் நிலையிற் கண்ட நள்ளி, தான் வேட்டையாடிக் கொணர்ந்த விலங்கின் தசையைக் கடைக்கோலால் உண்டாக்கிய தீயில் தானே சுட்டு, அவர்க்கும், அவரொடு வந்தார்க்கும் வழங்கினன்; ஆரப் பசித்த அவர்கள், அது

தீர உண்டபின்னர், மீண்டும் வழியே செல்லலாயினர்; அப்போது, நள்ளி, அவர்களை அணுகி, "ஐய! காட்டில் வாழ்கின்றேன்; கையில் ஒன்றுமிலேன்," என்று கூறிக் கழுத்தில் அணிந்திருந்த ஆரத்தையும், கையிற்கிடந்த கடகத்தையும அளித்து மகிழ்ந்தான்; அவன் இன்னன் என்பதை அறியாத வன்பரணர், "வேண்டாதபோதே வலியவந்து விருந்தேற்றுப் போற்றும் நீயார்?" என்று வினவ, அதற்கு விடையளியாதே வெளியேறினன்; பின்னர் அவ் வழி வந்தோரால், அவன் நள்ளி என்ப தறிந்த வன்பரணர், உள்ளமும், உரையும் ஒருவழி நிற்க, உயர்ந்த பாக்கள் பல பாடிப் பாராட்டினர். காட்டகத்தே கண்ட காட்சி அமைய வந்த பாட்டு அவற்றுள் ஒன்று.

"கூதிர்ப் பருந்தின் இருஞ்சிற கன்ன
பாறிய சிதாரேன் பலவுமுதல பொருந்தித்
தன்னும் உள்ளேன், பிறிதுபுலம் படர்ந்தஎன்
உயங்குபடர் வருத்தமும் உலவும் நோக்கி
மான்கணம் தொலைசிய குருதியங கழற்கால்
வான்கதிர்த் திருமணி விளங்கும சென்னிச
செல்வத் தோன்றல் ஓர்வல்வில் வேட்டுவன்,
தொழுதனென் எழுவேன் கைகுவித்து இரீஇ,
இழுதின் அன்ன வானிணக் கொழுங குறை
கானதர் மயங்கிய இளையர், வல்லே
தாம் வந்து எய்தா அளவை, ஒய்யெனத்
தான்ஞெலி தீயின் விரைவனன் சுட்டு, 'நின்
இரும்பே ரொக்கலொடு தின்மென'த் தருதலின்
அமிழ்தின் மிசைந்து, காய்பசி நீங்கி,
நன்மரன் அளிய நறுந்தண் சாரல்
கன்மிசை அருவி, தண்ணெனப் பருகி,
வீடுத்தல் தொடங்கி னேனுக, வல்லே,
'பெறுதற் கரிய வீறுசால் நன்கலம்
பிறிதொன் றில்லை: காட்டு நாட்டேம்' என
மார்பிற் பூண்ட வயங்கு காழ் ஆரம்,
மடைசெறி முன்கைக் கடகமோடு ஈத்தனன்;

'எந்நாடோ?' என நாடும் சொல்லான் ;
'யாரீரோ?' எனப் பேரும் சொல்லான் ;
பிறர் பிறர் கூற வழிக்கேட் டிசினே." (புறம் · கஙo)

நள்ளியின் கொடைச் சிறப்பை, அவன் நாடடைந்து நேரிற் கண்ட புலவர் வன்பரணர், அதைத் தம் நாவார வாழ்த்துவாராயினர் ; நள்ளி, தம்மைப்போலும் புலவர்க்கும், பாணர் முதலாம் இரவலர்க்கும், களிறுகளையும், கலன்களையும் நாடோறும் அளிப்பதால், வறுமையொழிந்து வாழ்ந்த அவர்கள், தம் வறுமை போகவேண்டி, பொருள் ஒன்றே பெற்று, புகழ் சிறிதும் பெறுத மன்னர் அவைதோறும் சென்று, அவர் தரும் பொருள் கருதி, அவர்பால் இல்லாத குணங்களை இருப்பனவாகக் கூறிப் பொய் பாராட்டவேண்டிய பழியிலை அற்றவராயினர் என்றும், இரவலரும், புலவரும், நள்ளி அளித்த பொருளால், நல்வாழ்வு வாழலாயினர் ஆகவே, அவர்கள் வேறு பிறரைப் பாடவேண்டிய இன்றியமையாமை யற்றவராயினர் ; பாடற்றொழிலை அவர் மறந்துவிடவே, எந்தப் பண்ணை எந்தக் காலத்தில் பாடவேண்டும் என்ற பாடற் பண் அறிவையும் இழந்தனர் ; அதனால், காலையில் பாட வேண்டிய மருதப் பண்ணை மாலையிலும், மாலையில் பாட வேண்டிய செவ்வழிப் பண்ணைக் காலையிலும் பாடலாயினர்; இவ்வாறு அவர்கள் தம் குலத்தொழிலையும் மறக்கச்செய்த மாண்பு, நள்ளியின் கொடைக் குணத்திற்கு உண்டு என்று பாராட்டிய பாக்கள், புலவர்தம் புலமைச் சிறப்பினைப் புலப்படுத்தி நிற்றல் காண்க.

"நாடொறும் நன்கலம் களிற்றொடு கொணர்ந்து
கூடு விளங்கு வியன்நகர்ப் பரிசில் முற்றளிப்பப்
பீடில் மன்னாப் புகழ்சிவேண்டிச
செய்யா கூறிக் கிளத்தல்
எய்யா தாகின்று எம்சிறு செந்நாவே."

"நள்ளி ! வாழியோ ! நள்ளி ! நள்ளென்
மாலை மருதம் பண்ணிக், காலைக்
கைவழி மருங்குல் செவ்வழி பண்ணி

வரவு எமர் மறந்தனர்; அது, நீ
புரவுக் கடன் பூண்ட வண்மை யானே,"

(புறம்: கசஅ, கசக)

ஓரியும், கடையெழு வள்ளல்களுள் ஒருவனவன்; மேற்குத் தொடர்ச்சி மலையைச் சேர்ந்த கொல்லிமலை இவனுக்கு உரியது; அம் மலையில், அழகெலா மொருங்கு திரண்டு உருப்பெற்ற பாவை ஒன்று உண்டு; அவன் நாட்டு மக்கள, உழுதொழில் தவறி உணவின்றி வருந்த வேண்டிய காலத்தே, காட்டில் யானைகளைக் கொன்று, அவற்றின் கொம்புகளை விலையாகக் கொடுத்து உணவு பெற்று உண்பர்; ஓரி, காரியோடு போரிட்டு இறந்தான்; ஓரி, மாரிபோல் வழங்கும் மாபெரும வள்ளலாவன்; ஓரி, வில்போர் வல்லவன்; அதனாலேயே வல்வில் ஓரி என வழங்கப்பெற்றவன்; இவன் வில்லாற்றலை நேரிற் கண்டு மகிழ்ந்த பரணர், அதனைப் பாடிப் பரவியும் உள்ளார்; ஓரி கையேந்திய வலிய வில்லினின்றும் புறப்பட்ட அம்பு விரைந்து சென்று, முதற்கண் வேழத்தை வீழ்த்திப், பின்னர்ப் புலியின் உயிரைப் போக்கி, மானை மாளச்செய்து, பன்றியின் உயிரைப் பறித்தது, இறுதியில் புற்றில் அடங்கிக் கிடக்கும் உடும்பின் உடலிற் சென்று தைத்து நிற்கும் என்று கூறிய இப் பாராட்டு, இயற்கையோடியைந்து நின்று அவன் ஆற்றலை அறிவித்து நிற்றல் காண்க.

"வேழம் வீழ்த்த விழுததொடைப் பகழி
பேழவாய் உழுவையைப் பெரும்பிறிது உறீஇப்
புழல்தலைப் புகர்க்கலை உருட்டி, உரல்தலைக்
கேழல் பன்றி வீழ, அயலது
ஆழற் புற்றத்து உடும்பிற் செற்றும்
வல்வில் வேட்டம் வலம்படுத்து இருந்தோன்."

(புறம்: கஙஉ)

வல்வில் ஓரியும், காண்டூரக் கோப் பெரு நள்ளியைப் போன்றே, வன்பரணர்க்கு, வழியிடையிலேயே, உணவளித்து வழிபாடு செய்ததோடு, அவரும், அவர் சுற்றமும்

அவர்தம் தொழில் மறக்குமளவும் பெரும் பொருள் கொடுத்தும் சிறப்பித்துளான்.

கண்டீரக்கோப் பெருநள்ளி நல்கிய பெருவளத்தால், அவர்கள்தம் பண்அறி அறிவினே இழந்ததைப் போன்றே, வல்வில் ஓரி வழங்கிய வற்றாப் பெரும் பொருள் உடைமையால், அவர்கள், இசையெழுப்பிப் பாடலும், ஆடலுமாயதம் தொழிலே மறந்தனர் எனப் புலவர் கூறுவர்.

"கடும்பே, பனிநீர்ப்பூவா மணிமிடை குவளை
வானூர்த் தொடுத்த கண்ணியும், கலனும்
யானை யினதொடு பெற்றனர் நீங்கிப்
பசியாராகல் மாறுகொல் விசிபிணிக்
கூடுகொள் இன்னியம் கறங்க
ஆடலும் ஒல்லா தம் பாடலும் மறந்தே."

(புறம்: கடுங)

காட்டிடை நடந்த பெரும்போரில் தன் கணவன் விழுப்புண் பெற்று வீழ்ந்தானாக, ஆண்டு அவன் உடலைத் தேடிச் சென்ற அவன் மனைவி, "அந்தோ!" "ஐயோ!" என வாய்விட்டுக் கதறி அழுவாளாயின், அவள் அழுகையொலி கேட்டு, அக்காட்டுள் உறை கடும்புலி வந்து அவன் உடலையும் தின்றுவிடுமே; அதனால் அவன் உடலைக் கண்டு மகிழ்தலும் இன்றுமே என்ற அச்சத்தால் வாய்விட்டு அழுதலும் செய்திலள, அவன் உடலை அச்சம் நிறைந்த அக்காட்டினின்றும் எடுததுச் சென்று காக்கலாம் எனிலோ, அகன்ற மார்புடை அவன் உடலைஎடுத்துச் சேறல் அவளால் இயலாது ஆதலின், அதையும் அவள் செய்திலள். இவ்வாறு வருந்திய அவள், தன்னை இவ்வாறு வருத்திய கூற்றமும், இவ்வாறே வருந்தி அழிக! எனக்கூறி வருந்தினள் எனப் பாடிய பாட்டொன்று, பண்டைத் தமிழகத்தின் படைமறவர் பண்பாட்டினை உணர்த்தி நிற்கிறது.

"ஐயோ! எனின், யான் புலி அஞ்சுவலே,
அணைத்தனன் கொளினே, அகன்மார்பு எடுக்க வல்லேன்;
என்போல் பெருவிதிர்ப்பு உறுக! நின்னை
இன்னுந் துற்ற அறனில் கூற்றே." (புறம்: உருடு)

கேட்டினும் உண்டு ஓர் உறுதி என்ப; தலைவன் ஒருவன் பொருள் கருதிப் பிரிந்தறியாத் தன் மனைவியைப் பிரிந்து சென்றிருந்தான்; அப்பிரிவால் இருவருமே வருந்தினர்; ஆயினும், தலைவன் மீண்டுவரும் பருவம் வந்துற்றது என் பதறிந்த அவன் மனைவி, அவன பிரிவை எண்ணி அழுவதை மறந்தாள்; மீண்டுவரும அவனை மகிழ்ந்து வரவேற்க விரும் பினாள்; அவன் விரும்பி உண்ணும உணவு பல ஆக்க எண்ணினாள்; அதை ஏவல் மகளிர செய்யின், அவன் விரும் பும் சுவை அறிந்து ஆக்கார் என்று கருதினாள், உடனே அன்று காறும், அட்டிற்சாலை புகுந்தறியா அவள், ஆங்குச் சென்று, தன் உடல் வருத்தமும் பேணாது, வகைவகை யான உணவுகளை ஆக்கி முடித்தாள்; அழகிய அணிபல அணிந்து கொண்டாள், எதிர்ப்பட்டார் எவரிடத்தும் இன்னுரை வழங்கலாயினள்; மனைவிபால் உண்டாய இம் மாற்றத்தை அறிந்தார் வாய்க் கேட்ட அவன், அவள்பால் அத்தகையை மாண்பு வரச்செய்த தன் பிரிவை வாழ்த்தி னான்; அவள் பால் அன்று காணலாம் அம்மாண்புகள் என்றும் நிலைத்து நிற்க விரும்பினான். பழந்தமிழ் மகளிர் பால் தாம் கண்ட இம் மாண்புகளைப் புலவர் வன்பரணர் பாட்டொன்றில் வைத்துப் பாராட்டியுள்ளார்.

"முற்றையும் உடைய மோர்?... .. ..
..... .. ..... ..... .....
விருந்தயர் விருப்பினள் வருந்தும்
திருந்திழை அரிவைத் தேமொழி நிலையே." (நற்: நூஎச)

## உஎ. வாடாப் பிரமந்தன்

இவர் பெயர் வாடாப் பிரபந்தன் எனவும், வாடாப் பிரமாந்தன் எனவும் ஏடுகளில் காணப்படுகின்றது. இவர் பெயரன்றி, பிற எதுவும் தெரிந்திலது. குறுந்தொகைக் கண் காணப்படும் செய்யுள் ஒன்றே இவர் பாட்டாக நமக் குக் கிடைத்துளது.

தலைவன் பொருள்குறித்துப் பிரியக் கருதுகின்றனன் என்பதைக் குறிப்பால் அறிந்து வருந்துகிறாள் என்பதறிந்த தோழி, அவளை நோக்கி, "தோழி! மாவின் தளிர்போலும் மென்மையும, பொன்னிறமும பெற்ற நின் அழகை மதி யாரல்லர் அவா; அவா தேடிச் செலலும் பொருளும், நம் மினும சிறந்த தன்று; அவர் செல்லும் ஆறும் கொடுமை யற்றத்தன்று, நீண்ட மூங்கிலும வாடும் நீரற்றது; அவ் வழிச் செல்வாரை அழிதது அவர் பொருளைக் கொள்ளை கொண்டு உண்ணும் கொடியவர் வாழ்விடம், கொடிய யானை கள் பல கூடிவாழும் கொடுமை உடையது; ஆகவே, அவர், நின் அழகு அழியுமாறு, நின்னினும் சிறவாத பொருள் பொருட்டுக் கொடிய காட்டுவழிச் செல்ல எண்ணார், வேருந் தற்க!" எனக் கூறித் தேற்றினாள் என்ற பொருள் பொதிந்த சிறப்புடையது அப்பாட்டு.

"நெடுங்கழை திரங்கிய நீரில் ஆரிடை
ஆறுசெல் வம்பலர் தொலைய மாறுநின்று
கொடுஞ்சிலை மறவர் கடறு கூட்டுண்ணும்
கடுங்கண் யானைக் கானம் நீந்தி,
இறப்பர் கொல் வாழி தோழி! நறுவடிப்
பைங்கான் மாஅத்து அந்தளிர் அன்ன
நன்மா மேனி பசப்ப
நம்மினும் சிறந்த அரும்பொருள் தாற்கே"

(குறு: ஈஉக)

## உஅ. வான்மீகியார்

வடமொழி இராமாயணம் எழுதிய வான்மீகியார் வேறு; இவர் வேறு; வடமொழி வான்மீகியார்பால், இவருக்கோ, அல்லது இவர் தந்தையார்க்கோ பேரீடுபாடு உடைமையால், இவர்க்கு இப்பெயர் இடப்பட்டது போலும். வடமொழிவல்ல முனிவர் பெயர்களைப் பண்டைத் தமிழாசிரியா மேற்கொண்டனர் என்று செந்தமிழ் நாட்டுப் புலவர் பெயர்களே நோக்கினார்க்குப் புலனும். வடமொழி வான்மீகியாரின் வழிவந்தவர் இவர் எனக் கூறுவாரும் உளர். "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்ற தொல்காப்பியப புறத்திணை இயல் சூத்திரத்தால், இவர் பெயர் வான்மீகனர் எனவும் வழங்கப்பட்டது என்பது தெரியவரும். இவர் பெயர், வான்மீகையா எனவும் சில ஏடுகளில் காணப்படுகிறது இதுவே உண்மைப் பாடமாயின், இது, மழையினும் சிறந்த வண்மையுடையார் எனப் பொருள்தந்து, செந்தமிழ்ச் சான்றோர் ஒருவரது தமிழ் இயற் பெயராய், ஓரளவு ஒலி ஒற்றுமை உண்மையால், வடமொழி வான்மீகியார் பெயரோடு தொடர்புபடுத்தப் பெற்றதாம எனக் கோடல் பொருந்தும்; இல்லறத்தினும் துறவறமே சாலச்சிறந்ததாம் என்ற பொருள் விளங்க வந்த புறப்பாட்டொன்று புறநானூற்றின்கண் இடம் பெற்றுளது.

மக்கள் மனம் இன்ப நாட்டமுடையது; அவ்வின்பத்தைத் தேடித் திரிவது; உலக மக்கள் ஓயாது உழைப்பதெல்லாம் அவ்வின்பத்தினைப் பெறற்பொருட்டே; அதற்காகவே உலகில் வாழ்கின்றனர்; அதற்காகவே பொருள்தேடிப் போர்புரிகின்றனர். ஆனால், எதை இன்பமென அவர் கருதுகின்றனரோ, அஃது உண்மை இன்பமாகாது; எங்கு இன்பத்தைப் பெறலாம் என எண்ணுகின்றனரோ, அங்கு அதைப்பெறல் இயலாது; இன்பம் கருதி எதைத் தேடிச் செல்கின்றனரோ, அவரை

அது அடைய விரும்பாது; இவ்வுண்மைகளே உணர்ந்து உணர்த்தி, துறவறத்திற்கு உயர்வுகாண முயன்றுளார் புலவர்; உலகில் இன்பம் பெறலாம் என எண்ணுவது பேதைமை; உலக இன்பம் நிலையற்றது; இன்பம் நிலையாகப் பெறவேண்டின், அவ்வின்பம் நிலவும் உலகில் வாழ்வு நிலையுடையதாதல் வேண்டும்; ஆனால் உலகில் அதுதகைய வாழ்வு அரிதினும் அரிது; நிலையற்ற வாழ்வுநிறைஉலகில், நிலைபேறுடைய இன்பத்தை எதிர்நோக்கி நிற்றல் அறிவுடைமையன்று; "செல்வம் என்பது சிந்தையின் நிறைவே அல்கா நல்குரவு அவாவெனப் படுமே" என்ப ஆகலின், நிறை உள்ளம் உடையவரே பெருஞசெல்வம் பெற்றவராவர்; பொருள்பெறும் பேராசை உடையார்க்கு, அந் நிறைவுள்ளம் உண்டாதல் இல்லை ஆதலின், அவர் எத் துணைப் பெரும் பொருள் பெற்றவராயினும், அவர் செல்வராகார்; ஆகவே, செல்வத்தின்பால் சென்ற உள்ளம் உடையார்பால் செல்வம் சேர்வது இல்லை; அச்செலவம் பற்றிய சிந்தையற்றவரிடத்திலேயே அச்செல்வம் செழிக்கச் சேரும்; அதனால், பொருள்தேடிப் பேரின்பம் பெறலாம் என எண்ணுவது பேதைமை; அஃது இயலவும் இயலாது; ஆகவே, உலகியல் வாழ்வாகிய இல்லறவாழ்வு, துறவறவாழ்வோடு சிறிதும் ஒப்புடையதாகாது என உணர்ந்த அறிவுடையோர், உலகியல் வாழ்வைக் கைவிட்டுத் துறவற வாழ்வினை மேற்கொண்டு உயர்ந்தனர் எனக் கூறியுள்ளார் புலவர்.

துறவற நெறியினைத் தெளியக்கூறிய இவரே, அரசியல் நெறிபற்றிய அரிய கருத்து ஒன்றையும் அள்ளி வீசியுள்ளார்; நாட்டில் நல்வாழ்வு நிலவ வேண்டின், அந்நாடு நிலையான அரசியல் உடையதாதல் வேண்டும்; அழிக்கலாகா அரசியல் நிலவும் நாட்டிலேயே இன்பம் நிற்கும்; நாளுக்கொரு தலைமையென நிலையற்ற அரசியல் நிலைபெறும் நாட்டில் அமைதிகாணல் இயலாது; அமைதிகுலைவுற்ற நாட்டில் இன்ப வாழ்விற்கு இடையூறு பல உண்டாம்; ஆகவே, நாடு நல்வாழ்வு வாழவேண்டின், அந்

நாடு மாறுத் தலைமையால் மாண்புறுதல் வேண்டும் என்று கூறியுள்ளார். "ஆங்கமை வெய்தியக் கண்ணும் பய மின்றே, வேந்தமைவில்லாத நாடு" என்ற குறட்பாவின் கருத்தினையும் நோக்குக. இத்துணை அருங் கருத்துக்கள் பலவும் ஒருங்கே அமையப் பாடிய புலவர் பெருமையினைப் பாராட்டுவோமாக!

பருதிசூழ்ந்த இப்பயங்கெழு மாநிலம்
ஒருபகல் எழுவர் எய்தியற்றே;
வையமும், தவமும் தாக்கின், தவத்துக்கு
ஐயவி அனைத்தும் ஆற்றது ஆகலின்,
கைவிட்டனரே காதலர்; அதனால்
விட்டோரை விடாஅள் திருவே;
விடாஅதோர் இவள் விடப்பட்டோரே."

(புறம் : கூகிஅ)

## உகூ. வினைத்தொழிற் சோகீரனார்

தும்பிசேர்கீரனார் என்ற பெயருடையாரொருவரும், பண்டைப் புலவர் வரிசையில் இடம்பெற்றுள்ளனர். அவர் பெயர்க்கான காரணத்தைக் காணமாட்டாமையால், அவர் பெயரைத் தும்பிசேர்கீரனார் என்றும், தும்பி சொகினனார் என்றும் பலவாறுகக் கொள்வர். அப்பெயரைப் போன்றே இப்புலவர் பெயரும் ஐயப்பாட்டிற்குட்பட்ட பெயராக அமைந்துளது இவர் பெயாக்கு முன்வரும் வினைத் தொழில் என்ற சிறப்பிற்குரிய காரணத்தையும் காண்டற்கு இல்லை. இவர் பாட்டொன்று நற்றிணைக்கண் இடம் பெற்றுளது.

நெய்தல் நிலப்பண்புகளை விளங்க உரைக்கும் அப் பாட்டில், கடல்ஒலி அடங்க, ஊதைக்காற்று மணக்கும் கானற் சோலை கனிழக்க, மணல் பரந்து மகிழ்ச்சியூட்டும் மாநகர்த் தெருக்களில் கூகைகள் குரல் கொடுக்க, நாற் சந்திகளில் பேய் உலாவவரும் நளளிருள செறிந்த நடு யாமத்தே, மீன்களும் இயக்கம் ஒழிந்து இனிது கண்படுக்கும் என, நள்ளிருட்காலம் நன்கு எடுத்துரைக்கப்பட்டுளது.

அவ்வாறு மீனுறங்கும் அக்காலத்தும் காதலர், தம் வேட்கை நிறைவேறப்பெறுமையால கண் உறங்கலின்றிக் கலங்கி வாழ்வா எனக் காதலர்தம் வாழ்வும் காட்டப் பட்டுளது.

"ஓதமும் ஒலி ஓவின்றே ; ஊதையும்
தாதுளர் கானல் தெளவென்றன்றே ;
மணல்மலி மூதூர் அகல்நெடுந் தெருவில்
கூகைச சேவல் குராலோடு ஏறி,
ஆரிரும் சதுக்கத்து அளுவரக் குழறும் ;
அணங்குகால்கிளரும் மயங்குஇருள் நடுநாள்
..... ..... ..... .. .....
மீன்கண் துஞ்சும் பொழுதும்
யான் கண் துஞ்சிலன் ; யாதுகொல் நிலையே!"
(நற் : நகக.)

---

## ஈ0. வெண்கொற்றன்

கொற்றன் என்பது இவர் இயற்பெயர். இவர் பெயர்க்கு முன் வந்துள்ள வெண் என்ற சிறப்பு வருதற் குரிய காரணம் விளங்கவில்லை. இவர் பாடிய பாட்டொன்று குறுந்தொகைக்கண் இடம்பெற்றுளது.

ஊதைக் காற்றுகிய வாடைவீசும் குளிர்காலத்தே ஈமுதலிய சிற்றுயிர்களின் தோற்றம் மிகுதியாம் என்பதும், அக்காலத்தே அவற்றால் மக்களே அல்லாமல், மாடு முதலாயினவும் பெருந்துயர் உறும் என்பதும், அக்காலத்து இராக்காலத்தே, ஈக்கள் தன்னை மொய்த்துத் துன்புறுத்தல் அஞ்சிய பசு, அவை தன்னைத தீண்டாமை குறித்துத் தன் தலையினைப் பலகாலும் ஆட்டும் என்பதும், அவ்வாறு அது ஆட்டுந்தொறும், அதன கழுத்தில் கட்டப்பெற்ற மணி ஒலிக்கும் என்பதும, எல்லாரும் உறங்கும் நள்ளிரவில் எழும் அம்மணி ஒலி, தனிதனித் துயில்உறுது, துயர்உற்று வாழும் மகளிர்க்குப் பேரச்சம் தரும் என்பதும் இவர் பாட்டில் விளங்க உரைக்கப் பெற்றுள்ளன.

"சிறைபனி உடைந்த சேயரி மழைக்கண்
பொறையரு நோயொடு புலம்புஅலைக் கலங்கிப்
பிறரும் கேட்குநர் உளராகொல் இறைசிறந்து
ஊதை தூற்றும் கூதிர் யாமத்து
ஆன் நிலம்பு உலம்புதொறு உளம்பும்
நாஅவில் கொடுமணி நல்கூர் குரலே." (குறுந்: அசு)

## ஈக. வெண்பூதனார்

தேவன், நாகன், பூதன் என்பன சங்ககாலத் தமிழ் மக்கள் தங்கள் மக்கட்கு இட்டு வழங்கிய தெய்வப் பெயர்களாம். வெண்பூதனார் பாடிய பாட்டொன்று குறுந் தொகைக்கண் வந்துளது; தம் முயற்சியால் வந்த பொருளைத் தாம் உண்ணுங்கால் உண்டாம் உயரிய இன்பத்தினை உள்ளவாறு உணர்ந்தவர் புலவர்,

இன்பங்களுள், ஈத்து உவக்கும் இன்பமே இறப்ப உயர்ந்ததாம; அவ்வின்பத்தினும், முன்னோர் ஈட்டிய பொருளை, தான வறிதே இருந்துண்ணல் இன்றித் தானே அரிதின் முயன்று முடித்த பெரும் பொருளைப் பிறர்க்கும் ஈத்து, தானும் உண்பதனின் அந்நிலையில் உண்டாம் இன்பத்திற்கு, ஈடும், எடுப்பும் எங்கும் இல்லை என்ப; "கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம் புலனும் ஒண்தொடி கண்ணேஉள" எனப் பாராட்டப் பெற்றுப், பேரின்ப நிலைக்களனாய் விளங்குபவளாய பெண் ணொருத்தி தரும் இன்பத்திற்குத், தான் தேடிப்பெற்ற பொருளைத் தன் மனைநோக்கி வருவார்க்கு மகிழ்ந்து அளிதது, அருந்தி வாழுமை வாழ்வால் பெரும் பேரின்பத்தையே உவமை காட்டுவர் ஆசிரியர் வள்ளுவனார் எனின், அவ்வின்பத்தின் சிறப்பினை என்னென்ன புகழ்வது! "தம்மில் இருந்து தமது பாத்து உண்டற்றால், அம்மா! அரிவை முயக்கு." தன் முயற்சியால் தந்த பொருளை உண்ணுவழி உண்டாம் இன்ப உயர்வினை, "தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது உண்ணலின் ஊங்கு இனியது இல்" என்ற குறளாலும் போற்றியுள்ளார். இவ் வுண்மை உணர்ந்த புலவர், வெண்பூதனார், அவ்வின்பத்தினைப் பலாக்கனியின் பெருஞசுவை தரும பேரின்பதற்கு உவமை காட்டியுள்ளார்.

"தம்மில் தமது உண்டன்ன, சினைதொறும்
தீம்பழம் தூங்கும் பலவு."

தான் விரும்பிய தலைமகனுக்கே, தன்னை மணம் செய்துதர இசைந்து, அவ்விசைவினைப் பெற்ற அவன், வரைந்துகொள்ளும் முறையோடு வருவன் என்ற செய்தியையும் வெளியிட்டாள் தாய் என்பதறிந்த தலைவியும், அவள் தோழியும், அச்செய்தி கேட்ட பெருமகிழ்ச்சியால், "அவ்வாறு கூறிய நம் அன்னை, அமரர்க்கும் கிடைத்தற்கு அரிய அமிழ்த உணவை ஆரப்பெறுவாளாக! பெரும்புகழ் நிறைந்த அப் பேருலகே அவள் இருந்து வாழும் உலகாகுக!" என வாழ்த்தினர் எனக் கூறித் தமக்கு நன்மை புரிந்தார் நல்வாழ்வு வாழவிரும்பும் நல்லுள்ளமுடையர் தமிழர் என்ற செய்தியையும, அவர்கள் தேவர்உலக வாழ்வும், அத்தேவர் தம் அமிழ்தவுணவும் உயர்ந்த பண்பாடுடையன என்ற எண்ணமுடையராவர் என்ற செய்தியையும் அறிவித்துள்ளார் புலவர்

"அரும்பெறல் அமிழ்தம் ஆபத மாகப்
பெரும்பெயர் உலகம் பெறீஇயரோ! அன்னை,
தம்மில் தமது உண்டன்ன இனிதொறும்
தீம்பழம் தூங்கும் பலவின்
ஓங்குமலை நாடனை வரும என்றோளே." (குறுந். அகு)

## ஈஉ. வெண்மணிப்பூதி

இகர ஈறுகொண்ட பெயருடைமை நோக்கி இவரைப் பெண்பாற் புலவருள் ஒருவராகக் கொள்வாரும் உளர். வெள்ளூர்கிழார் மகனார் ஒருவரின் பெயரும் வெண்பூதியார் என வருதலை நோக்கின் அவ்வாறு கொள்வது பொருந்தாமை தெளிவாம். பூதி, திருநீறு எனப் பொருள்படவரும் விபூதி என்பதன் தலைக்குறை ஆகவே இவர் சைவராவர் எனக் கோடலும் உண்டு. அரியலூர்ப் பக்கத்தே வெண்மணி என்றோர் ஊர் உளது, இவரை அவ்வூரினராகக் கொளவது பொருந்தும் இவர் பாடிய பாட்டொன்று குறுந்தொகைக்கண் இடம பெற்றுளது

களவொழுகுகம மேற்கொண்ட ஓர் ஆண்மகன், தான் காதலித்த பெண்ணை விரைவில் மணந்துகொள்ளானாக, அதனால வருந்திய அப்பெண், அவ்வருத்தத்தால் தன் தோள்களும் மெலிந்துவிட்டன; அமமெலிவினைத் தாய் அறியின் தம ஒழுக்கதிற்கும், உறவிற்கும் கேடுண்டாம் என்பதை எடுத்துக்கூறி அவனை விரைநது வந்து வரைநது கொள்ள வேண்டுவாள், அதை விளங்க உரைகாது, "தோழி! தலைவன் அழகினை நம் கண்களும் கண்டன; அவன் கூறிய இனிய சொற்களை நம காதுகளும கேட்டன; ஆனால் இப்போது அவனைக் காண்பதோ, அவன் சொல்லைக் கேட்பதோ அரிதாகிவிட்டது; இருந்தும் நம் கண்களும், காதுகளும், அதனால் கவலைகொண்டன அல்ல. ஆனால் இத் தோள் மட்டும், அவனைப் பெற்ற அன்று மகிழ்ந்தது; அவனை பெறமாட்டாமையால் இப்போது வாடி வருந்துவானேன்!" என்று கூறிக் குறிப்பால் உணர்த்தினள் என்ற உயர்ந்த கருத்தமைய வந்துள்ளது அப்பாட்டு.

"கொண்கன்
கண்டன மன்எம் கணையே, அவன் சொல்
கேட்டன மன்எம் செவியே; மற்றவன்
மணப்பின் மாணலம் எய்தித்
தணப்பின் ஞெகிழ்ப எம்தடமென் தோளே."

(குறுந்: உகக)

## ஈஈ. வெள்ளாடியனார்

இவர் பெயர், வெண்வட்டியார், வேளாவட்டனன் என்றெல்லாம் காணப்படும். பொருட் சிறப்பு, அப் பொருளைத் தேடிப் பெறும் அருமை, அப் பொருளை அடைய எண்ணும் உள்ளத்தின் உரம் ஆய இவை குறித்துப் புலவர் கூறும் பொருளுரை, பொன்னே போல் போற்றத் தக்கனவாம். ஒரு வினையைத் தொடங்குவார், தொடங்கிய அவ்வினையை இடையே கைவிடுதல் ஆண்மை யன்று; இடுக்கண்கள் பல அடுக்கி வரினும், அவை நோக்கி எடுத்த வினையை இடையே விடாது நின்று முடித்தற்கு உள்ளதே ஊக்கமும உரமும் மிகமிகத் தேவை. பொருள் பெற விரும்புவார், அதை எவ்வாற்றானும் பெற்று விடுதல் வேண்டும் என விரும்புதல் கூடாது; அப் பொருள் அறவழியுறுதலையே விரும்புதல் வேண்டும்; இடுக்கண்படினும் இளிவந்த செய்தல் கூடாது; ஈன்றாள் பசி காணும் பருவத்தும், சான்றோர் பழிக்கும் செயல் புரிதல் கூடாது; பழிமலைந்து எய்திய ஆகத்தின் சான்றோர் கழிநல்குரவேதலை;" ஆகவே, அப்பொருள் அறவழி வருதலையே விரும்புதல் வேண்டும்; அதற்கு ஏற்ப அருஞ் செயல் ஆற்றல் வேண்டும; புலி, பசியால் பெருந்துயர் உற்ற காலத்தும், இடப் பக்கததே வீழ்ந்ததனை உண்ண எண்ணாது; அத்தகைய உள்ள உரம் வேண்டும் என்றெல் லாம், பொருள்பெற விரும்புவான் மேற்கொள்ளும் வினைத் தூய்மையினை விளங்க உரைத்துள்ளார்.

"தொடங்குவினை தவிரா அசைவில் நோன்தாள்
கிடந்து உயிர் மறுகுவதாயினும் இடப்படின்
வீழ்களிறு மிசையாப் புலியினும் சிறந்த
தாழ்வில் உள்ளம் தலைத்தலை சிறப்பச்
செய்வினைக்கு அகன்ற காலை." (அகம்: உக)

மனிதனை மாண்புடையனாக்குவது மானமும், நாண மும் என்ற இவ்விரு நற்பண்புகளே ஆம்; இவை இரண்டும்

பெற்றவரே பழி கண்டு அஞ்சுவர்; பழிகண்டு அஞ்சும் அறிவு அவர்பால் உண்மையினாலேயே, அவர் அறவழி நடக்க எண்ணுகின்றனர்; இவ்விரு நற்பண்புகளும் இல்லாதார் செய்யும் இழி செயல்களை எண்ணிக் கூறலும் இயலாது!

மனைவிபால் கொண்ட மட்டற்ற அன்பால் அவளைப் பிரியாது உறைய விரும்புவனையின், அவனால் பொருளால் பெறலாம் பேறுகளைப் பெறல் இயலாது; பொருளின்றி வாழ்வாரை, உலகத்தார் பழித்து உரைப்பர்; அதனால் மனைவி, எத்துணை மாண்புநிறை பேரழகு உடையளாயினும் அவளைப் பிரிதல் வேண்டும்; அப்பொருளைத் தேடிச் செல்லும் பெருநெறி எத்துணைக் கொடுமை நிறைந்ததாயினும் அந்நெறி செல்ல அஞ்சாமை வேண்டும்; பிரிந்து சென்று பொருள் தேடிக் கொணர வேண்டும் என்ற எண்ணத்தை உலகம் பழிக்கும் என்ற எண்ணம் உண்டாக்குகிறது. அதனால் அருமை மனைவியையும் பிரிந்து பொருள் தேடிச் சென்றனர் தமிழர் என்ற ஓர் அரிய உண்மையினையும் உணர்த்தியுள்ளார் புலவர்.

"உள்ளூர்ப் பனிக்கும் ஊக்கரும் கடத்திடை
எள்ளல் நோனாப் பொருள்தரல் விருப்பொடு
நாணுத்தலையாக வைகி மாணவினைக்கு
உடம்பு ஆண்டு ஒழிந்தமை யல்லதை
மடங்கெழு நெஞ்சம் நின்னுழையதுவே."

(அகம்: உக.)

## ஈசு. வெள்ளியந்தின்னனார்

வெள்ளியந்தின்னனார் என்ற இப்பெயர் இவர்க்கு ஏன் இடப்பட்டுளது? இவர் தம் பிறப்பு, குலம் யாவை? என்பன குறித்து ஏதும அறிதற்கில்லை. இவர் பாடிய பாட்டொன்று நற்றிணைக்கண் இடம் பெற்றுளது. ஒரு பொருள் ஒருவர்க்கு இன்பம் அளித்தலும், அன்றித தானபம் தருதலும், அவா தம் உள்ள இயல்பை ஒட்டியதாம், ஒருவர் உள்ளம் மகிழ்ந்திருப்புழி, காணும் எப்பொருளும மகிழ்ச்சியினை அளிக்கும். அவர் தம் உள்ளம் துன்பத தொடர்புடையதாயவழி, அவையே துன்பம் தருவனவாய்த் தோன்றும் ஆகவே, உலக இன்ப துன்பங்களுக்கு உள்ளமே காரணமாம். இதை உணர்ந்தே, "செல்வம் என்பது சிந்தையின் நிறைவே; அல்கா நல்குரவு அவாவெனப் படுமே" என்று உரைத்துச் சென்றனர் பெரியோர். இக்கருதது வெளிபபடும வகையில் வந்ததொரு பாட்டைப் புலவர் பாடியுள்ளார், புலால் நாறும பரதவர் தம் சிறுமார், அப்பரதவா மகளைக் காண்டற்கு முன் இன்பம் தந்தது; அவளைக் கண்டு, ஆனல், அவளைப் பெறமாட்டாக்காலத்தே அச்சிறுமார் துன்பம் தருவதாய் இருந்தது எனக் கூறினன் ஒரு தலைவன் என்று கூறியுள்ளார் அப்பாட்டில். இன்ப, துன்பங்கட்கு உள்ளமே காரணம்; அவ்வுள்ளத்தைத் தொழிற்படுத்தவல்ல ஆற்றல் அவளுக்கே உண்டு எனக் கூறும் ஆண் உள்ளதின் அழகினையும், பெண்ணுலகின் பெருமையினையும் பாராட்டுவோமாக!

"துறைநணி யிருந்த பாக்கமும் உறைநனி
இனிதுமன்; அளிதோ தானே.....
மீனெறி பரதவர் மடமகள்
மானமர் நோக்கம் காணு வுங்கே."

(நற்: ஈ0ஈ)

## கூ. வெள்ளெருக்கிலையார்

வேள் எவ்வியைப் பாடிய புலவர்கள் கபிலர், குட வாயிற் கீரத்தனர், நக்கீரர், பரணர், மாங்குடி கிழார், மாமூலனர் போன்றார் காலத்தே வாழ்ந்து, அவர்களைப் போன்றே அவனைப பாடியுள்ளார். வேள் எவ்வியைப் பாராட்டிய பாராட்டிலேயே, அகுதை என்பானெரு வீரனின் கொடைச் சிறப்பினையும் பாராட்டியுள்ளார். வேள் எவ்வி, பாரிக்குரிய குடிவழி வந்தவன், இவனுக்கு உரிய நாடும் ஊரும், மிழலைக் கூற்றமும், நீடூருமாம்; வாட்படை, வேற்படை மிக்க பெருமபடை யுடையவன்; தனச்குப் பணியாத பகைவராயினர் சிலரை வென்று, அவ் வெற்றிக் களிப்பால், அப் பகைவர்க்கு உரிய அரிமணம் என்னும ஊர்க்குப் புறத்தே உள்ள உறத்தூர் எனு மிடத்தே தன் வீரர்க்குப் பெருஞ சோறளித்து விழாக் கொண்டாடினான், தன் நண்பன் அன்னி என்பான், திதியன் என்பானெடு பகைத்தவழி, அவனெடு பகைத்தல் அறிவுடைமையன்று என அறிவுரைகூறிய அரிய நண்பன்; இவனுக்குரிய மிழலைக் கூற்றம், தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞசெழியனால் கைப்பற்றப்பட்டது. தன்னைப் பாடிவரும் பாணர் முதலாயினர்பால் பேரன்புடையவன்; இதனால் அப் பாணரும் அவனைப் பெரிதும் விரும்புவா ராயினர்; அவன் இறந்தான் எனக்கேட்ட பாணர் பலரும், அவன் இறந்த பின்னர்த் தம் கையாழ் இருந்து பயனுறுதல் இல்லை என எண்ணியவராய், அதை முறித்துப் போட்டுப் புலம்பினர் எனின், அவர், அவன்பால் கொண்டிருந்த ஆர்வத்தினை அளவிட்டுக் காணல் ஆகுமோ? இத்தகைய பெருமை யுடையானகிய வேள் எவ்வி இறந்தான் எனக் கேட்டு வருந்திய புலவர்களுள் வெள்ளெருக்கிலையாரும் ஒருவர்.

ஒருமுறை பகைமேற் சென்ற எவ்வி, ஆங்கே அரும் போர் ஆற்றி இறுதியில் இறந்தான்; அவன் அப் போரில் விழுப்புண் பல பெற்றுப் பெருமையுற்றான்; போர்க்

களத்திருந்து மீண்டார் சிலர், ஆங்கு எவ்விக்கு உண்டான இறுதி நிகழ்ச்சியினை, ஊரில் உள்ளார்க்கு எடுத்துக் கூறினர்; அச் சொல் புலவர் காதிற்கும் எட்டிற்று; எவ்வியின் கொடைக்குணம், பொருள்வளம், படைப் பெருமை ஆகியன கண்டு கண்டு மகிழ்ந்த புலவர்க்கு அவர் கூறியன ஆற்றொணாத் துயர் அளிப்ப ஆயின; அவர் கூறியன பொய்யாகிப் போர்க்களம் புகுந்த எவ்வி பெற்ற வெற்றியைப் பெருமையுற மீள்வதை அவர் உள்ளம் அவாவிற்று; அவர் போவா, அவர் கூறியன பொய்யாகுமாக! பொய்யாகுமாக! எனப் பலகால் கூறி வேண்டவும் தூண்டிற்று; வேண்டியும் பயனென்? மாண்டான் மீண்டானல்லன்; இறந்த அவன் பீடும், பெருமையும், பெயரும் பொறித்த கல்லை நட்டு வழிபடலாயினர் அவன் சுற்றத்தார்; அவன் மனைவி, அச் சிறு இடத்தை மெழுகிப், புல்லைப் பரப்பி, அதன்மீது பிண்டம் வைத்துப் படைக்கும் காட்சியைக் கண்டார் புலவர்; கண் கலங்கினர். எவ்வியின் மனைநோக்கி இம் மாநிலத்துள்ளார் அனைவருமே அன்றே வருவர்; வருவார் பலரோடும் இருந்து உண்டு இறும்பூது கொள்ளுமை எவ்விக்கா இச் சிறு பிண்டம்! என எண்ணி எண்ணி வருந்தினர். அவ்வாறு அவர் வருந்திய வருத்தம் இரு பாக்களாக உருக்கொண்டது.

எவ்வி இறந்தான் என்ற செய்தி பொய்யாகுமாக என வேண்டிய புலவர், ஊரார் பலரும் ஒன்று நிகழ்ந்து விட்டதாகக் கூறினராகவும், இறுதியில் அது நிகழாது போனதாக ஒரு நிகழ்ச்சி தம் காலத்தே நிகழ்ந்ததை எடுத்துக்கூறி, அதுபோல் இவர் கூறுவனவும பொய்யாகுக என்று கூறியுள்ளார்.

வள்ளலும் வீரனுமாக அகுதை என்பானொருவன் இருந்தான்; அவன் பகைவர் எறிந்த ஆழிப் படையால் அழிந்தான் என்று பலர் கூறினர்; ஆனால் இறுதியில், அவன் அப் படையால் அழிந்திலன் என்பது உறுதியாயிற்று; இந் நிகழ்ச்சியை எடுத்துக் கூறி, அகுதை ஆழியால் இறந்தான் என்ற சொல் பொய்யானதைப்

போன்றே எவ்வி விழுப்புண்பெற்று வீழ்ந்தான் என்ற சொல்லும் பொய்யாகுமாக எனக் கூறியுள்ளார்.

"பொய்யா கியரோ! பொய்யா கியரோ!
பாவடி யானே பரிசிலர்க்கு அருகாச்
சீர்கெழு நோன்தாள் அகுதைக்கண் தோன்றிய
பொன்புனை திகிரியிற் பொய்யா கியரோ!
இரும்பாண் ஒக்கல், தலைவன், பெரும்பூண்
போரடு தானை எவ்வி, மார்பின்
எஃகுறு விழுப்புண் பல என
வைகுறு விடியல் இயம்பிய குரலே."

"நோகோ யானே! தேய்கமா காலே!
பிடியடி யன்ன சிறுவழி மெழுகித்
தன்னமா காதலி புன்மேல வைத்த
இன்சிறு பிண்டம் யாங்கு உண்டனன் கொல்!
உலகு புகத் திறந்த வாயில்
பலரோடு உண்டல் மீஇ யோனே."

(புறம்: உகூ, உகூ)

## ங. வெள்ளை மாளர்

வெள்ளை மாளர் என்ற இப் பெயரன்றி, இவர் வரலாறு குறித்து வேறு குறிப்பு ஒன்றும் கிடைத்திலது; இவர் வரலாறு குறித்தோ, அன்றி இப் பெயர் குறித்தோ ஒன்றும் விளங்காமையால், இவர் பெயர் வெள்ளை மாளனர் எனவும் கொள்ளக் கிடக்கின்றது எனவும், இவர் பெயர் வெள்ளைமாளர் என்பதன்று, வெள்ளை மாறனர் என்பதாம் எனவும் பலரும் பலவாறு கூறுவாராயினர்.

போர் மேற்சென்று விழுப்புண் பெற்று வீரர் பலரும் வீடு திருமபினராக, ஒரு வீரன்மட்டும், பகைவரைப் பாழ் செய்தன்றி மீளேன் எனக் கூறிப் பெரும்போர் செய்தமை யால் அவன் தேர், காலநதாழ்த்து வந்தது எனக் கூறிப் பழங்கால மறக்குடி மாண்பினை வாழ்த்தியுள்ளார் புலவர். வீரர் விழுப்புண் பெற்றராக, புண்பெற்றரைப் பேய் முதலாயின அண்டி அச்சுறுத்தாமை கருதிய, அவ் வீரர்க்கு வாழ்க்கைத துணையென வந்த மாண்புடை மனைவி யர், வேப்பிலை கொணாநது வீட்டு இறப்பில் செருகுவர்; காஞசிப் பண் பாடுவர்; வெண்சிறு கடுகு புகைப்பர்; அவர்தம் இச் செயல்களால் மறவர்சேரி ஆரவாரம் நிறைந்து தோன்றும் என்று கூறிப் பழந்தமிழர் தம் போர்ப் பண்பினைப் போற்றிப் புகழ்ந்துளளமை நோக்குக.

"வேம்புசினை ஒடிப்பவும், காஞ்சி பாடவும்,
நெய்யுடைக் கையர் ஐயவி புகைப்பவும்,
எல்லா மனையும் கல்லென் றவ்வே;
வேந்து உடன்று எறிவான் கொல்லோ
நெடிது வந்தன்றால் நெடுந்தகை தேரே." (புறம்: உகசு)

## கூ. வேட்ட கண்ணன்

வேட்டம் : வேட்டை ; இவர் வேட்டுவர் குலத்து வந்தவர் ; கண்ணன் என்ற இயற் பெயருடையவர் ; வேடர், யானை முதலாம் பெரு விலங்குகளையே யல்லாமல் குறும்பூழ் போலும் சிறு பறவைகளையும் வேட்டையாடு வர் ; "யானை வேட்டுவன் யானையும் பெறுமே : குறும் பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே" என்ற தொடரை நோக்குக. இவர் தாம் வேடர் என்பதற்கேற்ப, நெய்யை நிறையவிட்டுப் பொரித்த குறும்பூழ் இறைச்சி இனிமை மிக்கது என்று கூறியுள்ளார். இவர் பாடிய பாட்டொன்று குறுந்தொகைக்கண் இடம் பெற்றுளது.

தலைவன், மணத்திற்குரிய முயற்சிகளை மேற்கொண் டான் என்ற நற்செய்தி கேட்ட அவன் குற்றேவல் மகன், நிறை நெய்யிட்டுப் பொரித்த காடை கல்லிறைச்சி ஆரப் பெற்று அகமகிழ்க என வாழ்த்தினுள் தோழி என்ற பொருளமைய வந்துள்ளது அப்பாட்டு. தலைவன குற்றே வலர் பலரைக் குறைவறப்பெற்ற பெருமையாளன் என்ப தற்கேற்ப, தலைவியும், விருந்தினர்க்கு, நெய் கனி குறும் பூழ் இறைச்சியைக் குறைவறக் கொடுக்கும் பெருமையள் ஆவள் எனக்கூறி, "ஒத்த தலைவியும தலைவனும் காண்ப" என்ற இலக்கணத்திற்கு உறுதுணை அளித்துள்ளார் புலவர். நல்லன கூறி நன்மை புரிந்தார்க்கு நாவிரும்பும் நல்லுணவு அளித்து நன்றி பாராட்டல் வேண்டும் என்ற நல்லுரையினையும் நல்கியுள்ளார் புலவர். இத்துணைப் பெரும் பொருளும் ஒருங்கே தோன்ற உள்ளது ஒரு சிறு பாட்டு ; அது இது :

"நெய்கனி குறும்பூழ் காயமாக
ஆர்பதம் பெறுக தோழி! அத்தை ;
பெருங்கல் நாடன் வரைந்தென ; அவன்எதிர்
நன்றே? மகனே! என்றனென் ;
நன்றே போலும் என்று உரைத் தோனே."

(குறுந் : கூஅக)

## கூ அ. வேளாசான்

ஆசான், ஆசிரியன் எனும் பொருள் உடையது; அந்தணராய்ப் பிறந்தார் அனைவரும் வேள்வி இயற்றும் ஆசிரியராகி விடுவதிலர்; அவருட் சிலர்மட்டுமே அத்தொழில் உடையராவர்; மதுரையில் வாழ்ந்த அத்தகைய ஆசிரியர்களுள் நம்புலவர் ஒருவராதலின், இவர் மதுரை வேளாசான் என அழைக்கப் பெற்றார்.

பழங்கால அரசர்கள், ஒருவரையொருவர் பகைத்துப் போரிட்டு வாழ்வதையே வாழ்வாகக் கொண்டிருந்தமையால், அக்காலத்தில் நாட்டில் எப்போதும் போர் நிகழ்ந்து கொண்டே யிருக்கும்; இதனால் ஊர்கள் பாழாகும்; மக்கள் மடிவர், நாட்டில் அமைதி குன்றும். இக்கொடுங் காட்சியினைக் காணப் பொறாத அக்காலப் பெரியோர்கள், போர்மேற் கொண்ட இரு அரசர்களையும் அடுத்து அறவுரை கூறிப் போர் நீக்க முயன்றுள்ளனர்; அவ்வாறு தூதுபோதல், ஆன்றவிந்தடங்கிய சான்றோர்க்கே இயலும் ஆதலின், "ஒதலும், தூதும் உயாநதோர் மேன" எனத் தொல்காப்பியர் விதியும வகுத்துளார்.

ஓர் அந்தணன் தூது செல்ல, போர் நின்ற நிகழ்ச்சியொன்றைப் புலவர் கூறியுள்ளார். இரண்டு பெரிய அரசர்கள் பகைத்தனர்; ஓர் அரசன் கோட்டையை மற்றோர் அரசன் முற்றுகை செய்துவிட்டான்; கோட்டைக்குரியோன், கோட்டையின் வாயிலை அடைத்துச் சீப்புச் செறித்துவிட்டான்; முற்றுகையிட்டிருப்போனும், மதில் மீது ஏறிப் போரிடுதற்கு வேண்டும் ஏணிகளையும் பொருத்திவிட்டான்; இவ்வாறு இருவரும் போருடற்றற்கு ஆவன புரிந்து இரவு கழிவதைக் காத்திருந்தனர்; அந்நிலையில், புறத்தே தங்கியிருக்கும் அரசன் பாசறையினின்றும் வந்த ஒரு பார்ப்பான், தளர்ந்த மேனியும், தள்ளாடிய நடையும் உடையனாய்க் கோட்டைக் காவலனையும் கேட்காதே உட்புகுந்தான்; சிறிது நேரத்திற்கெல்லாம்

வெளிப்போந்து விட்டான்; அவன் வெளிப் போந்த சின் னேரத்திற் கெல்லாம், உள்ளிருக்கும் அரசனும், அடைத் திருந்த சீப்பை நீக்கி வாயிலைத் திறந்துவிட்டான்; புறத் திருக்கும் வேந்தனும், கோட்டையைத் தாக்கச் சார்த்தி யிருந்த ஏணிகளை ஒழித்துவிட்டு ஊர் திரும்பலாயினன். இவ்வாறு போர் ஒழிந்தமைக்கு அந்தணனே காரணம், அவன் கூறிய அறவுரைகளே காரணம் என அறிந்தார்; அவ்வந்தணனைப் பாராட்டினர்; அப்பாராட்டுரையினைப் பாட்டாக்கித் தந்துள்ளார் புலவர்.

"வயலைக் கொடியின் வாடிய மருங்குல்
உயவல் ஊர்திப் பயலைப் பார்ப்பான்
எல்லிவந்து, நில்லாது புக்குச
சொல்லிய சொல்லோ சிலவே; அதற்கே
ஏணியும், சீப்பும் மாற்றி,
மாண்வினை யானையும், மணிகளுந் தனவே."

(புறம்: கூ0இ)

## ஈக. வேளா தத்தர்

தத்தன் என்பது இவர் இயற்பெயர்; இவர் பெயர்க்கு முன்வரும் வேளா என்ற அடை ஏன் வந்தது என்பது விளங்கவில்லை; வேளாளன் தத்தன் என்பது வேளாதத்தன் எனக் குறைந்தது எனக கூறுவர் சிலர்; அஃது உண்மையோ, பொய்யோ அறிதற்கில்லை.

இவர் மாலைக் கடலிடையே தோன்றும் மதியத்தின் அழகிய காட்சியினையும், மலைகளிடையே ஓடி இழியும் அருவிகளின் வெண்ணிறக் காட்சிகளையும் கண்டு மகிழ்ந்தவர்; தலைவன் ஞாயிறு போன்ற அறவுள்ள முடையவன்; அவன் மனைவி, ஞாயிறு, கீழ்த்திசைக்கண் இருப்பின் கிழக்கு நோக்குவதும், அவன் மேற்றிசை செல்லின் மேற்கு நோக்குவதும், அவன் நடுவானதனே விளங்கின் உச்சியை நோக்குவதுமாய இயல்பினையுடைய நெருஞ்சி மலர்களைப்போல் தலைவன் எண்ணியதையே எண்ணும் இயல்புடையாள் எனக், கணவன், மனைவியர்க்குள்ள உறவு முறையினையும் உணர்ந்தவர். இவ்வளவு பெருங் கருத்துக்களையும், சிறு செய்யுளொன்றில் அடக்கிக் கூறவல்ல ஆற்றல் வாய்ந்தவர்

தலைவன் பொருள்வயிற் பிரியக் கருதுகின்றான் என உணர்ந்த தோழி, தலைமகள்பால் அதைக்கூறி, 'அவன் பிரிந்த வழி, எவ்வாறு ஆற்றியிருப்பையோ' என்று கவன்ற தோழிக்கு, "தோழி! அவர் எண்ணமே, என் எண்ணமாம் ஆதலின் ஆற்றுவேன்" என்று கூறினாள் என்பதை இந்தப் பாட்டின் மூலம் புலப்படுத்துகின்றார் புலவர்.

"எழுதரு மதியம் கடற் கண் டாஅங்கு
ஒழுகு வெள்ளருவி, ஓங்குமலை நாடன்,
ஞாயிறு அனையன்; தோழி!
நெருஞ்சி அனைய, என்பெரும்பணைத் தோளே."

(குறுந்: ஈகஇ)

கல்வியும செல்வமும் நாட்டின் இரு கண்களாம்; செல்வமும, கல்வியும் சிறக்கப்பெற்ற நாடே, உலகில் சீரும், சிறப்பும் பெற்ற பெருநாடெனப போறறபபெறும். அவை வாய்க்கப்பெறு நாடு, நாடாகாது, காடெனவே காட்சிதரும் கல்வியும், செல்வமும ஒன்றையொன்று இன்றியமையாதன, அவற்றுள் ஒன்றைப் பெற்று, ஒன்றைப் பெறு நாடு பெருமையுறுவதிலலை என்பதெல்லாம் உண்மையேயெனினும, அவவிரண்டனுள் கல்வியைப் பெற்றுச் செல்வத்தைப பெறு நாடு பெருங் கேடுறுவதில்லை; ஆனால், இதற்கு மாறாகச் செல்வதைதச் சிறக்கப் பெற்றுக் கலவியைக் கண்ணெடுதாதமபாநாடு, கல்வி, செல்வம் ஆய அவவிரண்டினையும ஒருங்கே இழந்த நாட்டைக்காட்டினும மிகதொரு பெருங கேடுற்றுபபாழுறும்.

கல்வி, செல்வம் ஆய இவ்விரண்டினையும் ஒருங்கே பெறுதல் அரிதினும் அரிதாம் "இரு வேறு உலகத் தியற்கை, திருவேறு, தெளளியராதலும வேறு." எனக் கூறுவர் வள்ளுவப் பெருநதகையாரும கலவியுள்ள இடத்தே, செல்வம் நில்லாது, செல்வம உள்ள இடத்தே, கலவி நில்லாது கல்வியுடையார, செவைமுடையாராதலும, செல்வமுடையார், கல்வியுடையாராதலும இலர்; அறிவுடையார், பொருளினும் அறிவே ஆற்றலுடையது என்பதையும், "தொட்டனைததூறும் மணற்கேணி, மாந்தர்க்குக் கற்றனைத் தூறும அறிவு," "தாங்கற்ற நூலளவே யாகுமாம நுண்ணறிவு," "வைத்தலதாரு கல்வி மனபபழககம" எனற உண்மைகளையும் உணாந்தவராதலின், அப் பொருள்பெறு முயற்சி மேற்கொள்ளாது, அறிவுவளர் வழியினையே மேற்கொள்வதால், பொருள் அவர்பால் அடைநதிலது

பொருளுடையார், தம அறியாத் தன்மையினால் பொருளே எல்லாம என எண்ணி விடுவதாலும் செல்வததை இயற்றலும், ஈட்டலும், காத்தலும, காத்து

வகுத்தலும் வல்லார்க்கே இயலும். ஆதலின், அவர்கள், தம் வாழ்நாட்களை யெல்லாம், அப்பொருளை ஈட்டலும், காத்தலுமாய தொழிற்கே கழித்துவிடுவதாலும் அன்னர் அறிவைப் பெற வேண்டும் என்ற எண்ணமற்றவராகி விடுகின்றனர். இவ்விருவர் நிலைகளும் குறைபாடுடையனவே; அறிவுடையார் நல்வாழ்வு வாழ, அவர்க்குப் பொருள் தேவை. பொருளுடையார், அப் பொருளை நல்வழியிற் பேண, அவர்க்கு அறிவு தேவை; ஆகவே, ஒவ்வொருவரும் இரண்டையும் பெறுதல் வேண்டும். ஆகவே, எந்த நாட்டில், எந்தக் காலத்தில், மிகுந்த கல்வியும், திரண்ட செல்வமும் ஒருங்கே பெருகி மண்டிக் கிடக்கின்றனவோ, அந்த நாடு ஒன்றுதான். அக்கால நாடுகளுள்ளே, நாகரிகத்தின் நடுநாயகமாய் விளங்கும்.

அவ்வாறு கல்வியும், செல்வமும் சிறக்கப் பெற்ற நாட்டிலும் அவ்விரண்டனையும் ஒருங்கே பெற்றூர் அரியராவர்; பொருள் பெறுமல் அறிவொன்றையே பெற்றூரும். அறிவு பெறுமல், பொருளொன்றையே பெற்றூருமே மிகப் பலராவர்; ஆதலின், அந்நாட்டில் பொருளுடையார்க்கு அறிவுடையார் வழிகாட்டுவோராகவும், அக் கல்வியுடையார் காட்டிய வழியில், செல்வம் உடையார் செல்வோராகவும் வாழ்தல் வேண்டும். அதனால் அவர்களும் வாழ்வர்; உலகமும் வாழும். அவ்வாறின்றி, உலகம் பொருளுடையார் வழி நடப்பது என்றாகிவிட்டால், அவ்வுலகம் அவாகள் அறியாமை வயப்பட்டு அழிதல் உறுதி.

உலக நிகழ்ச்சிகளை உற்று நோக்கின், முற்றிலும் முரண்பட்ட இரு பொருள்கள், ஒன்றையொன்று இன்றியமையாதனவாய்க் கொண்டு இணைந்து தொழில் புரிவதாலேயே, உலக வாழ்வு வளம்பல பெற்று, இன்பம் பெருகி இயங்குகிறது என்ற உண்மையுணரப்படும். அறிவுருவாகிய உயிரும், அறிவில்லா வுடலும மாறுபட்டனவே யென்றாலும், அவை ஒன்றையொன்று இன்றியமையா நிலையில், ஒன்றுபடுவதாலேயே, மக்கள் வாழ்வு நடைபெறுகிறது. தண்பொறிகளை ஆக்கித் தரும் அறிவு நூல்

கைவரப் பெற்றாரும், அறிஞரும் அந் நாண் பொறிகளே இயக்கும் கல்லா மக்களும் முற்றிலும் மாறுபட்டவரே யெனினும், அவர் இருவரும் ஒன்றுபட்டுழைப்பதாலேயே, உலக மக்கள் வாழ்வு வளம் பெறுவதைக் காண்கிறோம்.

சட்டக்கலை தேர்ந்த நீதியாளனும், படைபல பயின்று பெற்ற உடல்வலியுடையானும், முற்றிலும் முரண்பட்ட இருவேறு நிலையினரே யெனினும், முன்னோன் மொழி வதைப் பின்னோன் ஏற்றுப் போற்றி நடப்பதாலேயே உலகில அமைதி நிலவக் காண்கிறோம் இந்நிலை மாறின், உலகில் யாண்டும், எக்காலத்தும் அமைதி காண்பது அரிதாகிவிடும். கண்ணும், காதும் முதலியன ஒன்றன் நன்மை தீமைகளைப் பிரிதறியும் உணர்வுடைய அறிகருவி களாம்; கையும் காலும் முதலாயின, அவ்வுணர்வற்றுத் தொழிலாற்றுதற்கென்றே தோன்றிய தொழிற் கருவி களாம். கண்ணும், காதும் முதலாய அறி கருவிகள் அறி வித்தவாறே, கையும் காலுமாகிய தொழிற் கருவிகள் தொழிலாற்றினால்தான், உடலிற்கு ஊறுண்டாகாது இன்பம் உண்டாம். அவ்வாறின்றி, கையும், காலும் செய்யும் அவ்வளவு தொழிலையும் பார்த்துக் கொண்டி ருக்கவே, கண்ணும் காதும் உள்ளன என்று கொண்டு இயங்குவதாயின், உடல் அழிவது உறுதி, உறுதி, முக் காலும் உறுதி. இவ்வாறே, ஒரு நாட்டில் நல்வாழ்வு நடைபெற வேண்டுமாயின், ஏவும் வினை முதல் கல்வியாள ராகவும், இயற்றும் வினைமுதல் செல்வராகவும் அமைதல் வேண்டும்.

நம் தமிழகம், பண்டு பெருமைக்குரிய நாடாக விளங் கிற்று என்றால், அதற்குக் காரணம் அக்காலத்தில் அறிவன அறிந்த அறிவுடையோராய்ப் புலவர் சொல்வழி, அக்கால அரசர்களும், பிற செல்வர்களும் பின்பற்றி நடந்தனர் என்பதே; ஆகவே, ஒரு நாடு வாழ்வதும், தாழ்வதும் அந்நாட்டுச் சான்றோர் வாழ்வாலும், தாழ்வாலுமேயாம் என்பதை உணர்ந்து வாழ்ந்தனர் அக்காலத் தமிழர். "எவ் வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே!"

என்னூர் ஔவையார் "நான்னூர் பலர், யான் வாழும் ஊரே" என்னூர் பிசிராந்தைப் பெருந்தகையார்; "வழக் கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே, நிகழ்ச்சி அவர்கட் டாகலான்" என்னூர், ஒல்காப் பெரும்புகழ்த தொல்காப்பி யனார். "தக்காருமி, தாழ்விலரச் செலவரும் சேர்வது நாடு" "பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்; அதுவின் றேல், மண்புக்கு மாய்வது மன்" என்னூர் திருவள்ளுவனார்.

இவ்வுண்மை உணர்ந்த அறிஞருமி, அரசரும், பண்டு நம் தமிழகத்தே பெருக வாழ்ந்தனர். அக்கால அறி ஞர்கள், தம் வயிற்றுப்பாட்டிற்கு வழி காண்பதே வாழ்க்கை, அதற்காகப பிறரைப் பாடிப் பிழைப்பதே தம் தொழில் என்பதை மறந்து, தவறு கண்டவழி, அத் தவறு செய்தான் நாடாள் அரசனே யெனினும், 'அவன் அரசன்; நமக்கு வேண்டும் பொன்னுமி, பொருளும் அளித்துப் புரப்பவன், ஆகவே, அவனைக கடிந்து சொல கூறிக் கண் டித்தல் கூடாது' என எண்ணுது, இடித்துக் கூறித் திருத்து வதையே தொழிலாகக் கொண்டிருந்தனர் அரசரும் தம் பால் வந்து நின்று இரந்து நிறகும எளிய வாழ்க்கையினை யுடைய புலவர்கள், தமமை அண்டிப் பிழைக்க வந்தவரே யல்லர், அறிவூட்ட வந்தவரல்லர் என்று இகழ்ந்து விடாது, அவர் அறிவினுக்கடி பணிந்து, அவர் ஊட்டிய வாறு ஆளவதே அரசாககு அழகு எனக் கொண்டு, அவர் கூறும் பொருளுரைகளைப பொன்னேபோல் போற்றி மேற்கொண்டனர் இவ்வாறு புலவர வழிகாட்ட, அவ் வழியே அரசாகள சென்ற காரணத்தால், செந்தமிழ் நாடு சீரும், சிறப்பும செழிக்க, பாரோர போற்றும் பெருநிலை யுற்றுத் திகழ்ந்தது.

இவ்வாறு நாடு வாழ, நல்லறிவூட்டி வாழ்ந்திருந்தனர் புலவர் நானூற்று அறுபத்தெண்மர். அவர்கள் நானூற்றறு பத்தெண்மரும், புலமையுடைமையால் ஒரியல்புடையராய்க் காணப்படுகின்றனரே யெனினும், குலத்தால், குணத்தால் மேற்கொண்ட தொழிலால், ஆறறிய தொண்டால் அவர் பல்லாற்றானும் வேறுபட்டவரேயாவர். சங்க காலத் தமிழ்

மக்கள், ஆயர், வேட்டுவர் எனவும், பாணன், பறையன் எனவும, அந்தணன், அரசன் எனவும் தொழில் பற்றிப் பிரிக்கப்பட்டிருந்தனரெனினும, அப்பிரிவுணர்ச்சி, அவர்கள் வாழ்க்கையில மகிழ்ந்து வாழ்தற்கு வழி செய்வனவாய கல்வி, பொருள் ஆகிய இவைகளைப் பெறுதற்குச் சிறிதும் தடையாய் நிற்கவில்லை. பிரித்துணர்ந்து பாழ் செய்யும் பொல்லாங்கில்லா நல்வாழ்வு பெற்றிருந்த காரணத்தால, அந்தணர்க்கும் அரசர்க்கும் அறமுரைக்க வல்ல அறிவுரான்ற புலவர் பெருமக்கள் பல அப்பல்வேறு குடிகளினும் வந்து பாரோர் போற்ற வாழ்ந்தனர்.

படிக்க ஓர் இனம; பாடுபட ஓர் இனம என்ற இழிநிலை நிலைபெறுவதால, ஓர் இனம படிந்தும் பாராண்டும் உயர, ஏனையோர் எழுதறிவு பெறாமலாய்ப்பும் இலராய்ப் பாட்டாளிகளாய்ப், பசியும, பிணியும் உற்றுப் பாழுறுவதின்றி, எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும் அக்குடிவந்தார் அனைவரும் உறுதுணையாவர் என்ற உயர்நிலை பெற்றுத் திகழ்ந்த காரணத்தால, பண்டைத் தமிழகத்து எல்லாக் குடிகளிலும, இறப்ப உயர்ந்த கல்வியறிவு பெற்றுக் கலியுற்று வாழ்ந்தாரைக் காணுகின்றோம.

அக்கால அரசரும், செல்வரும, புலவர்கள் எக்குடிப் பிறந்தாராயினும, அவர்தம குடிகொண்டு குறை காணாது, அவர்தம அறிவறிந்து, அருகணைந்து, அவர் வேண்டுவன வெல்லாம அகமகிழ்ந்தளித்துப் போற்றிப் பாராட்டுவாராயினர்.

கல்வி, வாழ்வை வளமாக்குதற்காம செல்வந்தரும் கருவி எனக் கொண்டு கற்கும இக்கால மக்களைப் போன்றவரல்லர் பழந்தமிழர்; கருதுது விளக்கத்திற்காகவே, அவர்கள் கல்வி கற்றனர். தமமை வாழவைக்கும் வழித்துணை, கல்வியொன்றே என்னும கருத்தினரல்லர், வாழ்வளிக்கும் வளம்பெற அவர்கள் வேறு வழிகளைக் கண்டிருந்தனர். முயற்சி திருவினை ஆக்கும என்ற மூதறிவினராதலின், உழவு, நெசவு போன்ற கைத்தொழில்களையும, வாணிபத்துறைகளையும மேற்கொண்டு வளம பலபெற்று வாழ்ந்

தனர்; இவ்வாறு செல்வம் சேர்க்கும் வழிகளைச் சிறக்க வுணர்ந்திருந்த அவர்கள், செல்வமே யெல்லாம் என்ற எண்ணமுடையராய் இருந்துவிட்டாரல்லர். செல்வம், உடல்வாழத் துணை புரிவனவற்றுள் தலையாயதேயெனினும், உயர்ந்தோர் போற்றும் உயர்வாழ்வுபெற, அதன்துணை ஒன்றே போதாது; உயிர்க்குணங்களே வளர்த்து உயர்ந் தோராகக் கல்வியின் உறுதுணையே இன்றியமையாதது என உணர்ந்து, கல்வியை விரும்பிக் கற்றனர். அதனால், வயிறு வளர்க்கவென்றே கற்கும் இக்கால மக்களினும், வாழ்வு வளம்பெற வேண்டி, வரிசை பலபெற்று விளங்கக் கற்ற பண்டையோர், பல்லாற்றானும் சிறந்து விளங்கினர். அதனால், அக்காலக் குடிதோறும், குலந்தோறும் புலவர் பல்லோர் பிறந்து பார்புகழ வாழ்ந்தனர். அக்காலத்தே வாழ்ந்த புலவர்கள் நானூற்று அறுபத்தெண்மருள், அறு தொழில் புரியும் அந்தணர் குலத்துவந்த புலவர் பலர்; வில்லேருழவராய் வியனுலகு ஆண்டாருள், சொல் லேருழவராய்ச் செந்தமிழ் காத்தார் கணக்கற்றார், வணிகர் குல மணிகளாய் வந்து வளம்பல கொழித்தாருள், பாக்கள் பல புனைந்து பண்பாடு வளர்த்தார் பல்லோர் செம் பொன்னும், நவமணியும், கரும்பொன்னும் கொண்டு, அணியும் ஆயுதமும் ஆக்கித்தரும் அருந்தொழில் உடை யாருள் உலகம் போற்றும், உயர்பெரும் புலவராய் வாழ்ந் தார் எத்தனையோ பெரியார்; குயவர் குலத்தே வந்து, குன்றுப்புலமை யுறறாரும் உளர், உடற் பிணிபோக்கும் உயர்ந்த மருத்துவத் தொழில்பூண்டாருள்ளும், உயிர்ப் பிணிபோக்கும் உரன்மிகு புலமையுடையார் சிலர் வாழ்ந் தனர்; புலவராய்ப் பிறர்போற்றத் தாம் வாழ்வதோடு, பிறரையும் அப் புலமை யுடையராக்கும் பேருள்ளங் கொண்டு, ஆசிரியத் தொழில் பூண்டு வாழ்ந்தார் பலர். சுருங்கக் கூறின், பழந்தமிழ்க் குடிகளுள்ளே, புலவரைப் பெற்றுப் புகழ்பெறாக் குடியே இல்லை எனலாம்.

இவ்வாறு வாழ்ந்த அப் புலவர் நானூற்று அறுபத் தெண்மரும், பாடல் புனைவது, பரிசில்பெற்றுண்பது

என்ற அவ்வளவோடு நின்றுவிட்டாரல்லர்; அன்றைய தமிழகத்தின் அரசியல் வாழ்வில், அவர்கள் மேற்கொண்ட பணிகள் பலப்பல, அவர்கள், அக்கால அரசவைதோறும் சென்று சென்று, அரசர்க்கும் மக்கட்கும் ஆற்றிய தொண்டுகள் எண்ணிலடங்கா; பழந்தமிழ் நாட்டின் பெருமையில் புலவர்க்கும் பெரும்பங்குண்டு, அப்புலவர்களின் வரலாற்றினை விளங்க உணர்வார், அவர்கள் அன்று ஆற்றிய தொண்டின் அருமை பெருமைகளை உணராமற் போகார்.

தமிழகம் தன்னேரில்லா அரசு பெற்றுத் தழைத்திருந்த காலம், மூவேந்தர் அரசோச்சிய காலமாம என்ற பாராட்டுரைகளுக்கிடையே தன்னேரில்லா அரசோச்சி அத் தமிழகம தாழ்ந்தமைக்கும், அம மூவேந்தர்களும், அவர்கள் காலத்தே தமிழ் நாட்டின் சிறுசிறு பகுதிகளை ஆங்காங்கே ஆண்டுகொண்டிருந்த குறுநில மன்னாகளுமே காரணமாம் என்ற பழியுரைகளையும் எழுதவேண்டிய நிலையிலேயே அன்றைய அரசியல் அமைந்திருந்தது. தமிழரசர் மூவரும், ஒற்றுமை கொண்டு ஊராண்டவரல்லர்; அவர் ஒவ்வொருவரும், பிறரை அடக்கி ஆளவேண்டும் என்ற எண்ணமுடையவராவர். ஒரு குடியில், ஒரு காலதேதை ஆற்றல் மிக்க அரசனொருவன் தோன்றி விட்டால், அவன், பிற அரசுகளையெலலாம் பணிய வைத்துப் பேரரசனாய் வாழவேண்டும் என்று எண்ணுவதும், அவன் ஆற்றலும் செல்வமும் கண்டு மனம் பொருதை ஏனைய அரசாகள் அனைவரும் ஒன்றுகூடி, அவனை அழிக்க வழிகோலுவதும் அக்கால வழக்கமாம். ஒரு குடியிற் பிறந்தார், பிறகுடியிற் பிறந்தாரோடு பகைத்து வாழ்தலோடு நின்றாரல்லர்; ஒரு குடியிற் பிறந்தவர்களே, ஒருவரோடொருவர் பகைதத்துப் போர்மேற்கொண்டனர்; அம்மட்டோ! தந்தை, மகனை எதிர்த்தான்; மகன் தந்தை மேல் போர்கொண்டு எழுந்தான். பழைய தமிழகத்தின் அரசியல் நெறியிது. இவ்வரசியல் முறையால், தமிழகம் முழுதும் அழிந்து, மண்ணோடு மண்ணாய் மறைந்து

போகாமல், தமிழகம என்ற பெயரால் இன்றும் ஒரு நாடுளது என்ற இங்கிலீக்கு அக்காலததே வாழநத புலவர் களே காரணராவர் வாழபபிறந்த உயிரகள வாழாது வீணே மடிவதுகாண, அவாகள உளளம பொறராயினர்; அதனால், அவ்வுயிர்கள அழிவதைத தடுககத தமமாலாவன செய்வதே அறிவுடையோர கடனும் என்ற கொள்கை யினராய் வாழநதனர, அவாகள தலையிட்டால தடையுற்ற போர்களும், அதனால பிழைதது உயிர்வாழ்நத உயிர்களின் தொகையும மிகப் பலவாம நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி ஆகிய இரு சோழகுலச சிற்றரசர இருவர்களிடையே, ஆஹா, உறையூர் குறிதது எழுநத போராளைப் போக்கப் பெரிதும முயன்ற கோவூர்கிழார், சேரனுக்குரிய கரு வூரை முற்றி அழிக்க முனைநத குளமுற்றதது ஞெரிய கிள்ளிவளவன போர் வெறியைய போககினர ஆலததூர் கிழார்.

தனனைப் பகைததெழுநத தன மகளமீது போர் கொண்டெழுநத கோபெருஞசோழன கொடுஞசெயலைப் போக்கினர புலலாற்றூர எயிறறியனர, அதிகமான் நெடுமானஞசிக்கும, தொணடைமானுககும இடையே பகை வளரா து தடுகக தொண்டைமான அவைக்குத தூது சென்ற ஔவையார அறியமான நெடுமானஞசிககும, அவன் பகைவனைய, அவன் ககிரை அழிதத பெருஞசேர லிரும பொறைககும இடையே வளாநத பகையைப் போக்கத தாமும முயனறதோடு, தமபோலும பிறபுலவர் துணை கொண்டும முயனறார பாரியின் பறமபமலை முற்றி அழிகக முனைநத மூவேநதர்க்கு அறிவுரை பல வழஙகி, அவர் போர வேட்கையைய போக்க எண்ணினர கபிலர். இவவாறு, அககாலப புலவர பலரும், பாடிப் பிழைபபதே தம தொழில என்று அடஙகியிராது, அககால அரசாகள, நெறிதவறுமிடதது, அஞசாது முன்வந்து, ஏறறவகையால இடிததுக்கூறித திருத்தியதி னாலேயே, தமிழோலி கேட்கும நாடு ஒனறு, உலகின் ஒரு பகுதியாகத திகழகின்றது. வாழக அப புலவர்கள்.

அக்காலத் தமிழரசர்கள், தம் பகைவர்கள்பால் கொண்ட ஆத்திரத்தால் அறிவிழந்து, தம ஆண்மைக்கும், பெருமைக்கும் பழிதரும் செயல்களை ஒரோவழிச் செய்து விடுதலும் உண்டு. அவ்வாறு, அவாகள் மேற்கொள்ளும் பழிச்செயல்களைத தடுத்து, அவாக்குப் பழியுண்டாகா வண்ணம் காபபாறறியதோடு, அவரால அழிய இருந்தார் உயிரையும் காத்து உயர்துணை புரிந்தாரும, அப்புலவ ரிடையே சிலர் உளர் குளமுற்றதுத் துஞ்சிய கிள்ளி வளவன், தன் பகைவனைய மலையமான் மக்களைப பற்றிக் கொணர்ந்து, தன் பட்டத்து யானையின் காற்கீழிட்டுக் கொல்லத் துணிந்தகாலை, ஆண்டுபபோநத புலவர் கோவூர் கிழார், கிள்ளிவளவன் பிறநத சோழர்குடியும, அமமக்கள் பிறந்த மலையமான் குடியும், இரவலரைப புரக்கும பண்பால் கொண்டுள்ள ஒற்றுமையையும், அமமக்கள் தம் நன்கிள மைப் பருவநிலையையும் எடுததுக்கூறி, அவர்களையும் காத்து, கிள்ளிவளவன் பெருமையையும் காத்தா. நலங் கிள்ளி, நெடுங்கிளளிகட்கிடையே நிலவும பகையினை உணராைனுய்; நலங்கிள்ளிபால பரிசில பெற்று, நெடுங் கிள்ளிபால் பரிசில்பெறச் சென்ற இளநதததன் எனும் புலவன் ஒருவனை, அவனை, அவன் தன்பால் உளவறிநது போகவநத நலங்கிள்ளியின் ஒற்றனுவன் எனப பிறழக் கொண்டு, நெடுங்கிள்ளி கொலலப புகுநதகாலை, அவண் வந்த புலவர் கோவூர்கிழார், புலவர்தம வாழ்வியல் இத் தன்மைதது; அவா அரசியற் சூழற்கு அப்பாற்பட்டவர் என்பதையெல்லாம் எடுத்துக்கூறி, அபபுலவனைக் கொல் லாது போகவிடுமாறு செய்து, புலவன் உயிரையும், அரசன் புகழையும் ஒருங்கே காததார்

"நகுதற் பொருட்டன்று நட்டல், மிகுதிக்கண், மேற் சென்றிடிததற் பொருட்டு," "அழிவினவை நீக்கி ஆறுய்த்து, அழிவின்கண் அல்லல் உழப்பதாம் நட்பு" என்ற உண்மையுரைகளை உணர்ந்து நடப்பவர் பழந்தமிழ்ப் பாவலர்கள; அவர்கள் தமக்குப் பொன்னும் பொருளும கொடுத்துப் போற்றிப் புரக்கும் அரசாகள் நல்வாழ்வு

வாழவேண்டும்; பழியின் நீங்கிய பண்புடையராதல் வேண்டும் என்ற பேரெண்ணம் உடையராயினர்; அதனால் அரசர்கள் தவறு செய்வர், செய்கின்றனர் என்பதை அறிந்த அக்கணமே, அவர்கள்பால் சென்று, அவர் அறிவு திருந்தும் அறவுரைகளே அஞ்சாது எடுத்துக்கூறி நல்வழிப் படுத்தியுள்ளனர்; புலவர்கட்கு வரையாது வழங்கும் வள்ளியோனாய் வாழ்ந்த வையாவிக்கோப் பெரும்பேகன் பால், பரத்தையர் ஒழுக்கம் உண்மை கண்டு உளம நாணிய புலவர்கள், கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன் றூர்கிழார் முதலியோர், அவன், அவளோடு வாழும் கல்லூர் சென்று, நல்லுரை புகன்று, அவனை நல்லவனாக்கி நனிமிக மகிழ்ந்தனர்.

உலகுபுரக்கும் உயர்வுடையதாகிய சிறப்புமிக்க உழவுத்தொழிற்கு உறுதுணையாக, நீர்நிலை யமைத்தல்போலும் செயல்களைச் செய்துதாராது, அவ்வுழவுத்தொழில் புரிவாரிடமிருந்து நிலத்திறைகளை மட்டுமே தள்ளாது தண்டும் இயல்பினரைத் தன் அரசியல் அலுவலராக மேற்கொண் டமையால், குளமுற்றத்துதஞ்சிய கிள்ளிவளவன்பால் உண்டாய பெரும்பழியை, அவனுக்கு அவன் நாட்டு உழவர் அடையும் அல்லல்களை எடுத்துக்காட்டி, மழை யின்மையாலோ, மன்னன் தன் கடமையிற் றவறுவதாலோ உண்டாம் நிலவரிக் கடன்களைத் தண்டாமல் விடுவதோடு, அவ்வுழவுத் தொழிற்கு உறுதுணையாக நீர்நிலை பலவாக்கித் தருதலும் வேண்டுமென்று அறிவுரை கூறித் திருத்தி அரசியல் நெறிவாழத் துணைபுரிந்தார் புலவர் வெள்ளைக்குடி நாகனார். பாண்டியன் அறிவுடை நம்பியின் அரசியல் அலுவலர், தம் நாட்டு மக்களிடத்தே வரி தண்டுங்கால் அறநெறிமேற் கொள்ளாது, தம் அறிவுநெறி மேற் கொண்டு, முறையின்றி, வருத்தி வாங்குவது கண்ட புலவர் பிசிராந்தையார், அறிவுடை நம்பிபால் சென்று, முறை யின்றி வரி வாங்கின், அவன் நாடேயன்று அவனும் அழி வுறுவன் என்பதைத் தெளிய எடுத்தோதி, அவனை அழிவுப் பாதையினின்றும் அகற்றித் துணைபுரிந்தார்.

கெடுங்காலைக் கைவிடும் கேண்மையுடையாரல்லர் நம் பைந்தமிழ்ப் புலவர். தமக்குப் பொன்னும், பொருளும் அளிததுப் புரந்த பேரரசர்கள, அரசியல் சூழ்ச்சியால் அல்லல் பல அடைந்து தாழ்வடைவராயின், அவர்கள் தாழ்ந்துவிட்டார்கள் இனி, நமமைத் தாங்குகல் அவர்களால் இயலாது என்று எண்ணி, அவரைவிட்டுப் பிரிந்து வேற்றிடம் செல்லார் நம்புலவர். தம்மைப் பேணிய அப்பேரரசர்க்கு, அவர் பகைவராலோ, அலலது பிறவகையாலோ உண்டாம் கேடுகளைத் தமமால் இயன்றவரை போக்க முயல்வர். முடியாது போயின், அவர் அழியுங்கால், தாமும் அவரோடு உடன் அழிவர் 'கெட்டகாலே விட்டனர் என்னது, நட்டோர் என்பது நாட்டிம" நற்பண்பு, பழங்காலப் புலவர்கள்பால் பொருந்தி நின்ற பெரும் பண்பாகும்.

மூவேந்தர் முற்றுகையால் பாரியும், அவன பறமபரணும் பாழுறுவண்ணம் காக்க எவ்வளவோ முயன்றார், அப்பாரியின ஆருயிர நண்பர் கபிலர்; ஆனல், முடியவில்லை; மூவேந்தர் சூழ்ச்சியால் பாரி இறந்துவிட்டான், அவனை இழந்து வாழ எண்ணுத கபிலர், அவன் மக்கள் மணவினையை முடிக்கும் தம கடமை கழிந்தவுடனே, நண்பனை எண்ணி வடக்கிருந்து உயிர நீத்தார் கோபபெருஞ சோழனைப் பாதததுப் பழகியறியாதவர் புலவர பிசிராநதையார்; ஆயினும் அவனைத தம் உயிரொத்த நண்பனகக் கொண்டு வாழ்ந்திருநதார்; அநதிலையில் தன் மக்கள்பால் கண்ட மாண்பிலாச் செயல்கண்டு மனம உடைந்து வடகிருந்து உயிர் துறந்தான் கோப்பெருஞ சோழன், தம் நண்பன் வடக்கிருக்கின்றனன் என்பதறிந்து ஓடோடி வந்து, அவனோடு தாமும் வடக்கிருந்து உயிர்துறநதார் புலவர் பிசிராந்தையார். கோப்பெருஞ் சோழனோடு வடக்கிருந்தார் பிசிராந்தையார் ஒருவர்மட்டு மல்லர்; பொத்தியார், பெருஞ் சதுக்கத்துப் பூதநாதனர் போலும் புலவர்களும் அவன் பிரிவாற்றாது வடக்கிருந்து உயிர் துறந்தனர் கரிகாற் பெருவளத்தானோடு மேற்கொண்ட போரில், தான் புறப்புண் பெற்றமைக்கு நாணி, வடக்கிருந்து உயிர்துறந்தான்

பெருஞ்சேரலாதன்; அஃதறிந்த, அவன் அவைக்களப் புலவர் பலரும், அவனோடு தாமும் வடக்கிருந்து உயிர் துறந்தனர்.

பழந்தமிழ்ப் புலவர்கள்பால் காணலாம் மற்றொரு பெரும்பண்பு, வறுமையிற் செம்மை; புலவர்கள், வறுமைத்துயர் வாட்டிய காலத்தும், அது குறித்துத், தம்மை மதியாதார் மனைசென்று பொருள்பெற எண்ணுவாரல்லர். அரசரையடைந்து பொருள்வேண்டி நிற்கும அவர்கள், அளிக்கும் அரசர்கள், தமபால அன்பும, ஆர்வமும் காட்டி அளித்தல் வேண்டும; தம தகுதிகேற்பப் பெரும்பொருள் அளித்தல் வேண்டும் என்றே விருமபுவர். அதற்கு மாறாக, அவ்வரசர்கள், அன்பும, ஆர்வமும இலராய்க் கடன் எனக் கருதிக் கொடுக்கும பொருளையும, தம் வரிசை நோக்கி வாரி வழங்காது, சிறிதே கொடுக்கும பொருளையும பெற்று மீள்வாரல்லர் மறுதலே மீளவா பிறபுலவாக்கு அளிப் பதைப்போன்றே, பெரும் புலவராய தமக்கும் ஒபப வழங் கிய மலையமான் திருமுடிக்காரியின் செயல்கண்டு நாணிய புலவர் கபிலர், "பொதுநோக்கொழிமதி புலவர்மாட்டே" என, அவனுக்கு அறிவுரை கூறினர். அதியமான் நெடுமான ஞஞ்சி, தன் அரசியல் அலுவலகளால், கண்டு அளவளாவி அளிக்க இயலாது, காணுதே பொருள கொடுததாலைக் "காணுது ஈதல இப் பொருட்கு யானோர் வாணிகப் பரிசிலேன் அல்லேன்" என்று வெறுத்துரைதது வேற்றிடம் சென்றூர் புலவர் பெருஞசிததிரனார், அவரே, வெளிமான் தம்பி, தம் வரிசையறியாது சிறிதே வழஙகினன் எனக் கண்டு சினஙகொண்டு, குமணனைப் பாடிபபெற்ற யானையை அவ்வெளிமான காவன் மரததில்கட்டி, வெளிமானை அழைத்துக் காட்டி, "இரவலர் உண்மையும் காண்; இரவலர்க்கு ஈவோர் உண்மையுமை காண்," என உரைத்து உயர் புகழ் பெற்றூர்; அதியமான் நெடுமானஞசியைக் காணச் சென்ற ஔவையாரை, அவன் விரைநதுவந்து வரவேற்காணுகவே, அதனால் கடுஞசினம கொண்ட ஔவையார், "பெரிதே உலகம், பேணினர் பலரே; எத்திசைச் செலி

னும், அத்திசைச் சோறே," என்றுரைத்துத் திரும்புவாராயினர்.

இவ்வாறு நாடுவாழ நல்லறிவூட்டியும், தம் நேரிய வாழ்வால் நன்னெறி காட்டியும் வாழ்ந்தனர் புலவர் நானூற்று அறுபத்தெண்மர். தமிழகம், பண்டு தான் பெற்றிருந்த செல்வச் சிறப்பை இழந்துவிட்ட இக்காலத்திலும், தமிழரும், தமிழகமும் உலக அரங்கில் உயர்நிலை பெற்றுத்திகழ்வதற்குக் காரணமாய் விளங்குவன, தமிழ் மொழி பெற்றிருக்கும் தனிச சிறப்புடைய இலக்கியச் செல்வங்களேயாம். ஆகவே, அவ் விலக்கியச் செல்வங்களை ஆக்கி அளித்து, அதன வழியாகத் தமிழாக்குந் தாழ்வினைச் சிறப்பளித்த அப் புலவர் பெருமக்கட்குத் தமிழ் நாட்டார் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர். ஆனால், பெறுதற்கரிய பேரிலக்கியப் பெருஞ் செல்வங்களைப் படைத்தளித்த அப் புலவர்களின் வரலாற்றினை அறியும் வாய்ப்பினைத் தமிழகம் இழந்துவிட்டது. புலவர்கள், இலக்கிய வளாகத்திலேயே கருத்தூடையராய் நின்றுவிட்டனரே ஒழிய, தங்கள் வரலாற்றைத் தங்கள் வாயிலாகவே அளிக்கத் தவறி விட்டனர். இதனால், அப் புலவர்களுடைய வரலாற்றினை அறிய இயலாமற் போனதோடு, அவர்களிற் பலருடைய இயற்பெயர்தாமும் அறிய இயலாமற் போய்விட்டது. தமக்கு உலக அரங்கில் உயர் இடம் தேடித்தந்த புலவர் பெருமக்கட்குத் தமிழ்மக்கள் அளித்த கைம்மாறுதான் என்னே!

இவ்வாறு புலவர்களின் வாழ்க்கையினை அறிய மறந்த நன்றிகெட்ட தமிழரிடையே, நன்றி மறவாத் தமிழர்களும் சிலர் இருந்துள்ளனர். அவர்கள், அப்புலவர்களின் வரலாற்றினை அறியப் பெரிதும் முயன்று, முடியாமற்போகவே, அவர்கள் பெயரையாவது அறிந்து அறிவிக்க முயன்றுள்ளனர். அம்முயற்சியில், ஓரளவு வெற்றியும் பெற்றனர். புலவர் ஒருவருடைய ஊரும், அவர் மேற்கொண்டிருந்த தொழிலும், அவர் இயற்பெயரும் அறியப்பெறின், உறையூர் மருத்துவன் தாமோதரனார், மதுரைக் கூலவாணிகன்

சித்தலைச் சாத்தனார் என்றும், ஊரும், பெயரும் அறிந்த தோடு அவர் தந்தை பெயரையும் அறியப்பெறின், மதுரை ஆளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் என்றும், ஊரும், தொழிலும் அறிந்து, இயற்பெயர் அறியப்பெறுதொழியின் உறையூர் இளம்பொன் வணிகனார், வெண்ணிக்குயத்தியார் என்றும், புலவர் பிறந்த ஊர்மட்டும் அறியப்பெறின், கல்லாடனார், கழாத்தலையார் என்றும், அறிந்த வரலாறுகளே அப்புலவர் பெயரோடு இணைத்து வழங்கிய தமிழுலகம் அறிய வகை செய்தனர். அவ்வளவோடு நில்லாமல், ஊரோ, பெயரோ, உற்ற தொழிலோ அறியமாட்டாப் புலவர்களையும், அவர் தம் பாக்களைப் பயின்று, அப் பாக்களில் அவர் ஆண்ட அழகிய உவமைகள் அரிய சொற்றொடர்களால், ஒரேருழவன், செம்புலப் பெயல் நீரார் எனவும், கங்குல் வெள்ளத்தார், பதடி வைகலார் எனவும் பெயரிட்டு அறிமுகமாக்கியுள்ளனர். இவ்வாறு அறிந்த புலவர்களின் சிறுவரலாறுகளையும், தமிழுலகம் மறந்துவிடாது போற்றிக்காத்தல் வேண்டும் என்னும் பேருள்ளம் கொண்டு, கபிலர் முதலாக பேயனார் ஈறாக உள்ள, சங்கப் புலவர் வரிசை நூல்கள் பதினெண்மர் வரலாறு, அவர் பாக்களின் துணைகொண்டே ஓரளவு விரித்துரைக்கப்பட்டுளது.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகையாகிய அப்பழம் பெரும் நூல்களைப் பாடித் தந்தவர் அப்புலவர்கள் நானூற்றுறுபத்தெண்மரே யெனினும், அவர்கள் அப் பாக்களைப் பாடப் பெருந்துணை புரிந்தவர், அக்கால அரசர்களேயாவர். நிரம்பிய வாழ்க்கையும், நிறைந்த உள்ளமும் நிலவும் நாட்டிலேயே, நல்ல இலக்கியங்கள் தோன்றக்கூடும். அந்நாட்டில் வாழ்பவரே, பொருள் வளத்தைப் போற்ற வேண்டிய கவலையற்றவராய்ப் பேரிலக்கியம் போலும் பொன்றாக் கலை வளத்தைப் போற்றி அளிப்பர். "வேந்தனும் அல்லவை செய்யான் காக்கும்," என அப்புலவருள் ஒருவரேகூறுவதும் காண்க. அத்தகைய நல்லாட்சி, தமிழ் நாட்டிலும் நிலவச்

செய்து, தமிழிலக்கியம் தோன்றத் துணை புரிந்ததோடு, அப் புலவர் வேண்டும்போதெல்லாம், வரையாது வழங்கி, அப்புலமையுள்ளம், வறுமையால் வாடிக் கருகிவிடாது, பொருள் நிறைந்த பாக்கள் பல பாடிப் பயன் விளைக்கப் பெருந் துணை புரிந்தவர் அக்கால அரசர்களே யாவர். ஆகவே, அப் பாக்களின் இயற்றும் வீணை முதல்வராகிய அப் புலவர்களைக் கண்டு பாராட்டிய நாம், அப் பாக்களின் ஏவும் வீணை முதல்வராகிய அவவரசர்களைக் கண்டும் பாராட்டக் கடமைப்பட்டவரன்றே!

நல்ல இலக்கியங்களை நமக்களித்த புலவர்களை நாம் மறந்து விட்டோம்; ஆனால், தமக்குப் பொருள் அளித்துப் புரந்த அரசர்களை அபபுலவாகள் மறந்தாரல்லர், தாம் பாடிய பாக்கள் இடையிடையே, அவ்வரசர்களின் குணஞ் செயல்களை எடுத்துக் கூறிப் பாராட்டி, அவர்தம வரலாற்றிணை ஓரளவு உணர்தறிசை சென்றுளனர் இவ்வாறு, அப் பாக்கள் துணை கொண்டு நோக்குவார்க்கு நூற்று அறுபதின்மர்க்கும மேற்பட்ட அரசர்களின் வரலாறு விளங்கித் தோன்றும். அவ்வாறு அறிந்த அவ்வரசர் வரலாறுகளையும், ஓரளவு அறிந்து, தமிழகதார்க்கு அளிக்க எண்ணி, "எங்க கால அரசர் வரிசை" என்ற தொகுப்பின் கீழ்ச் சேரர், சோழர், பாண்டியர், வள்ளல்கள், அருநெறி, நிரையன் என்ற தலைப்புக்களைக் கொண்ட ஆறு நூல்களின் வழியாக, அளித்துள்ளோம் புலவர் வரலாறுகண்டு நன்றி பாராட்டிய தமிழகம், அப்புலவர்க்குப் பொருள் அளித்துப் பேணிய அரசர் வரலாறும் கண்டு நன்றி செலுத்துமாக.



# சங்கத் தமிழ்ப்புலவர் வரிசை

ஆசிரியர் : திரு. கா. கோவிந்தன், எம் ஏ.



| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| க. | கபிலர் | 1 | 12 |
| உ | பரணர் | 1 | 12 |
| ங. | நக்கீரர் | 1 | 12 |
| ச | ஔவையார் | 1 | 12 |
| ஞ. | பெண்பாற் புலவர்கள் | 1 | 12 |
| சு. | உவமையாற் பெயர்பெற்றோர் | 1 | 12 |
| எ | நாவல பாவலர்கள் | 1 | 12 |
| அ. | இழார்ப் பெயர்பெற்றோர் | 1 | 12 |
| கூ | வணிகரிற் புலவர்கள் | 1 | 8 |
| கo | மாநகரப் புலவர்கள் I | 1 | 8 |
| கக. | மாநகரப புலவர்கள் II | 1 | 8 |
| கஉ. | மாநகரப் புலவர்கள் III | 1 | 8 |
| கங. | உறுப்பாலும் சிறப்பாலும் பெயர்பெற்றோர் | 1 | 8 |
| கச | அரியனை விண்ணத்தனார் முதலிய கூடு புலவர்கள் | 2 | 4 |
| கஞ | குட்டுவன் கண்ணனார் முதலிய அo புலவர்கள் | 2 | 0 |

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,

தலைமை நிலையம் :
24, கீழைத் தேர்த்தெரு,
திருநெல்வேலி

கிளை நிலையம் :
1/140, பிராட்வே,
சென்னை - 1.



ரூ. 5-00.